சுடர்



972

வளர் தமிழ் மலர்



மலர் 21

தில்லித் தமிழ்ச் சங்கம்

ரூ. 1/=



தில்லித் தமிழ்ச் சங்கம்

1972 ஆம் ஆண்டுச் செயற்குழு

தலைவர்
திரு. சி. வி. நரசிம்மன்

துணைத்தலைவர்
திரு. ஏ. ஜி. வி. சுப்பிரமணியம்

பொதுச் செயலாளர்
திரு. எஸ். ரங்கராஜன்

இணைச் செயலாளர்
திரு. பி. ஆர். வேங்கடகிரி

பொருளாளர்
திரு. சி. இராகவன்

உறுப்பினர்கள்
திரு. ஏ. வி. குப்புசாமி
குமாரி சி. எஸ். விஜயம்
திரு. ஆர். எஸ். வேங்கடேசன்
திருமதி எஸ். தருமாம்பாள்
திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி
திரு. வி. சந்தானகோபாலன்

வட்டாரச் செயலர்கள்
திரு. ஆர். விசுவநாதன்
திரு. எஸ். வைத்தீஸ்வரன்
திரு. என். ஆர். நாராயணன்
திரு. என். வேணுகோபாலன்
திரு. எஸ். ஸ்ரீநிவாசன்

நூலகர்கள்
திரு. ஜி. சுவாமிநாதன்
திரு. எஸ். வேங்கடராமன்
திரு. ஆர். எஸ். ஐயப்பன்

தமிழ் வகுப்பு நடத்துநர்கள்
திரு. சி. என். ரங்கநாதன்
திரு. எச். பாலசுப்பிரமணியன்

சிறப்பு உறுப்பினர்கள்
திரு. கே. வி. வெங்கடாசலம்
திரு. எம். பாலசுப்பிரமணியம்
திரு. ஆர். ஆர். சாரி

தணிக்கையாளர்
திரு. ஆர். சுப்பிரமணியம்

சென்னைப் பிரதிநிதி
திரு. வீ. செ. கந்தசாமி

வாழ்க தில்லித் தமிழ்ச் சங்கம்!
வளர்க அதன் புகழ்!

"தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்"
என்று பாடினுர் மகாகவி பாரதியார்.

வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து
வளர்மொழியாம் தமிழ் மொழியின்
பெருமையை, நாட்டின் தலைநகராம் தில்லியில்
பரப்புவதுடன் தனது கலை, சமூகப் பணிகள்
மூலம் கடந்த கால் நூற்ருண்டுக் காலத்திற்கும்
அதிகமாகவே சிறந்த சேவை செய்துவரும்
தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு எமது பாராட்டுகள்!

— ஈசன் தொழிற் குழு: —

ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிமிடெட்
ஹாக்பிரிட்ஜ்-ஹிவிடிக் அண்டு ஈசன் லிட்.,
ஈஸ்வரன் அண்டு ஸன்ஸ் இன்ஜினீயர்ஸ்
(பி) லிமிடெட்
ஈசன் பிராடக்ஸ் ஆப் இந்தியா (பி) லிமிடெட்

பதிவு அலுவலகம்:
5-7, செகன்ட் லைன் பீச், சென்னை-1.
கிளைகள்:
லண்டன், டெல்லி, பம்பாய், கல்கத்தா

look—it shows...
Tinopal® whitens best!

Results tell. Just a little Tinopal in the final rinse—and what brilliant whiteness! Tinopal whiteness! It shows on your shirts, sarees, sheets, towels—everything!

And what does it cost? Not even a paisa per garment! Buy Tinopal. Regular Pack. Economy Pack. Or Packet-for-a-Bucket.

® Tinopal is the registered trademark of J.R. Geigy S.A., Basle, Switzerland

Suhrid Geigy Ltd., P.O. Box 11050, Bombay 20 BR

Shilpi I-A/6

ORWO

In many countries round the world ORWO stands for excellence in films.

CINE, PHOTO & X-RAY FILMS

Distributors:

ORWO FILMS EASTERN UNIT, Madras and Calcutta
ORWO PRIVATE LIMITED Bombay and Delhi

ORWO Film

VEB FILMFABRIK WOLFEN, FOTOCHEMISCHES KOMBINAT

THE GERMAN DEMOCRATIC REPUBLIC

JAISONS-250

With best compliments from

MASCHMEIJER AROMATICS (INDIA) PRIVATE LTD.,

C. S. T. Road, Chromepet,
MADRAS-600044

Manufacturers of :

Synthetic Musks & Fragrances

Phones : 89645 (3 lines)

Grams : Synthese—Chromepet.

வாய்மையே வெல்லும்

முதலமைச்சர்

தில்லி நகர் வாழ் தமிழர்களின் நிறுவனமான 'தில்லித் தமிழ்ச் சங்கம்' — தமிழின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமாக ஆர்வத்தோடும் ஆக்கப் பூர்வமாகவும் தொடர்ந்து பணியாற்றி வருவதும் தில்லி வாழ் தமிழ் மக்களிடையே தமிழுணர்வை வளர்த்துப் போற்றிக் காத்து வருவதும் பெரிதும் பாராட்டுக்குரியன. அந்நிறுவனம் வெளியிட்டுவரும் 'சுடர்' டிசம்பர்த் திங்கள் இதழ் 'வளர்தமிழ் மலர்' ஆக வெளிவர இருப்பதறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மலர், வளர் தமிழுக்கு மேலும் வளமூட்டும் எழில் குலுங்கி மணங்கமழ மனமார வாழ்த்துகிறேன்.

(மு. கருணாநிதி)

திரு சி. வி. நரசிம்மன்,
தலைவர்,
தில்லித் தமிழ்ச் சங்கம்,
புது தில்லி-22.

As Durable and Traditional as

"CHARMINAR"

Charminar Asbestos Cement Products

- ★ *NEWKOR CORRUGATED SHEETS*
- ★ *SANATILE SEMI-CORRUGATED SHEETS*
- ★ *FLEX-O-BOARD* } *FOR CEILING AND PARTITIONING*
- ★ *WOODBESTOS* }
- ★ *PRESSURE PIPES FOR WATER SUPPLY AND DISTRIBUTION*
- ★ *CABLE DUCTS*
- ★ *GUTTERS AND ACCESSORIES*

"SPECIFY CHARMINAR A. C. PRODUCTS AND ENSURE QUALITY AND PERMENANCE"

Manufactured to the relevant I. S. I. Specifications by:

Hyderabad Asbestos Cement Products Limited

Regd. Office:
SANATNAGAR, HYDERABAD-18. (A. P.)

Factories at:
HYDERABAD A. P.   BALLABGARH, (Haryana)

வணக்கம்

தில்லித் தமிழ்ச் சங்கம் தனது இருபத்தொன்றுவது "சுடர்" மலரை வளர் தமிழ் மலராக வெளியிடுவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறது. பல நூற்றுண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட திருக்குறளையும், கம்பராமாயணத்தையும், சிலப்பதிகாரத்தையும் மற்றைய இலக்கியங்களையும் இன்று எண்ணி எண்ணிப் பெருமையடைகிறோம். பழைய இலக்கியங்களின் பெருமைகளை ஓங்கிப் பேசுவதோடு, 'இன்றைய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நாம் என்ன செய்தோம், செய்கிறோம்?' என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? இலக்கியத்தில் பல துறைகள் இன்று புதிது புதிதாக வடிவெடுத்துள்ளன. தமிழ் இலக்கியத்தில் இத்துறைகள், குறிப்பாக, கடந்த 25 ஆண்டுகளாக எவ்வாறு வளர்ந்துள்ளன என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாண்டுச் சுடரை 'வளர் தமிழ் மல'ராகக் கொண்டு வரவும் தில்லித் தமிழ் அறிஞர்களைக் கொண்டே இம்மலரை உருவாக்கவும் செயற்குழு எண்ணியது. அந்த எண்ணத்தின் விளைவுதான் இன்று "சுடர்" ஒரு சிறந்த மலராக உங்கள் முன் உள்ளது. இம்மலரில் உள்ள கருத்துக்களே முடிவான கருத்துக்கள் என்று எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதில்லை. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இன்றைய தமிழர்களின் கடமையும் இருக்கிறது, புதுமைகள் பலவற்றை நம் இலக்கியத்தில் படைக்கவேண்டும், இன்றைய இலக்கிய உலகத்தில் தமிழ் இலக்கியமும் சிறந்து தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்கின்ற எண்ணத்தைத் தமிழர்களிடையே இந்தக் கட்டுரைகள் எழுப்புமானல், அதுவே இம்மலரின் வெற்றி என்று தமிழ்ச் சங்கம் கருதிப் பெருமை கொள்ளும்

மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி எங்களை ஊக்குவித்த தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர். மு. கருணநிதி அவர்களுக்குத் தில்லித் தமிழ்ச் சங்கம் பணிவோடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. மலருக்குக் கருத்தோவியங்கள் தந்து உதவிய

தில்லித் தமிழ் அறிஞர்களுக்குத் தமிழ்ச் சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. மலரைச் சிறப்பான முறையில் வெளிக் கொண்டுவர இலைமறைகாயாக இருந்து உதவிய அன்பர்கள், அறிஞர்கள் அனைவருக்கும் சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது. சங்கத்தின் பணிகளைப் போற்றி விளம்பரங்கள் கொடுத்து உதவிய தொழில் நிறுவனங்களுக்கும் மற்றைய அன்பர்களுக்கும் சங்கம் நன்றி செலுத்துகிறது. அட்டைப்படம் வரைந்து தந்து உதவிய தில்லி அன்பர் மணி அவர்களுக்கும் மலரைச் சிறப்பான முறையில் குறிப்பிட்ட காலத்தில் அச்சிட்டுத் தந்து உதவிய அப்பர் அச்சகத்தார்க்கும் சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

மலர் பூத்துக் குலுங்கி மணம் பரப்ப அயராது பணிபுரிந்த "சுடர்க்குழு" உறுப்பினர்களான திரு. அ. வே. குப்புசாமி (அமைப்பாளர்), திரு. ரா. விசுவநாதன், திரு. என். வேணு கோபால் ஆகியோருக்கும், திரு. பி. ஆர். வெங்கடகிரி, திரு. சி. இராகவன், திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. சி. என். ரங்கநாதன், திரு. எம். பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கும், சங்கத்தின் சென்னைப் பிரதிநிதியான திரு. வி. எஸ். கந்தசாமி அவர்களுக்கும் சங்கம் தனது நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

செயற்குழு
தில்லித் தமிழ்ச் சங்கம்

சுடர்

பரிதாபி ஹூ மலர் 21 1972

பொருளடக்கம்

	பக்கம்
சுதந்திரத்துக்குப் பிறகு தமிழ் இலக்கியம்	9
சுதந்திரத்துக்குப் பிறகு உரைநடை வளர்ச்சி	25
சுதந்திரத்துக்குப் பிறகு மொழிபெயர்ப்புகள்	41
சுதந்திரத்துக்குப் பிறகு சாகித்திய அகாதமியின் பரிசுபெற்ற ஒரு தமிழ் நூல்	47
சுதந்திரத்துக்குப் பிறகு ஒரு சிறந்த இலக்கிய ஆசிரியர் ...	57
சுதந்திரத்துக்குப் பிறகு தமிழ் உரையாசிரியர்கள்	67
சுதந்திரத்துக்குப் பிறகு தமிழ்க் கவிதை	85
சுதந்திரத்துக்குப் பிறகு தமிழ் நாவல்கள்	103

சுதந்திரத்துக்குப் பிறகு
தமிழ்ச் சிறுகதை 113

சுதந்திரத்துக்குப் பிறகு
தமிழ் நாடக வளர்ச்சி 131

சுதந்திரத்துக்குப் பிறகு
தமிழிசை வளர்ச்சி 141

~~சுதந்திரத்துக்குப் பிறகு~~
"உரிமைக்கு உழைத்து உயர்ந்தோர்" ... 149

~~சுதந்திரத்துக்குப் பிறகு~~
கதியும், விதியும் 153

~~சுதந்திரத்துக்குப் பிறகு~~
சிலப்பதிகாரத்தில் ஊழ் 161

~~சுதந்திரத்துக்குப் பிறகு~~
பழக்கம் மடிவதில்லை 167

~~சுதந்திரத்துக்குப் பிறகு~~
நான் ஒரு மூடன் 179

~~சுதந்திரத்துக்குப் பிறகு~~
குழப்பம் 183

குறிப்பு: கட்டுரை கவிதைகளில் வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு அவற்றின் ஆசிரியர்கள் பொறுப்பாளர்கள்.

தில்லித் தமிழ்ச் சங்கம்

சுதந்திரத்துக்குப் பிறகு

தமிழ் இலக்கியம்

[சாலினி இளந்திரையன்]

ஆசியா 72 பொருட்காட்சியைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். முதல் நாளில் எவை எவை எங்கெங்கே இருக்கின்றன என்று பார்த்து வைத்துக்கொண்டால், அடுத்த நாளில் ஒரு வகைமையோடு பார்க்கலாம் என்பது எங்கள் திட்டம். அந்த வகையில், எந்த ஓர் அரங்கினுள்ளேயும் நுழையாமல் சுற்றி வந்து கொண்டிருந்தோம். 3 மணி நேரத்திற்குப் பிறகு நாங்கள் பாதிப் பகுதிகூடச் சுற்றவில்லை என்று தெரிந்தது. எனவே, அடுத்த நாள் போனவுடன் கண்காட்சியினர் ஏற்பாடு செய்திருந்த வண்டியில் ஏறி முழுமையாக ஒரு சுற்றுச் சுற்றி வந்தோம். அதன் பிறகும், வண்டி செல்லாத பாதையில் சில அரங்குகள் இருப்பதையும், வண்டி சென்றுகொண்டேயிருக்க எங்கள் கண்கள் இருபுறக் காட்சிகளையும் முழுமையாக உள்வாங்கிக் கொள்ள முடியாமல் இருப்பதையும் உணர்ந்து திகைத்தோம். 1947க்குப் பிறகு தமிழ் இலக்கியம் என்ற தலைப்பிலே கட்டுரை எழுத உட்காரும் இந்த நேரத்திலும் அந்தத் திகைப்பே ஏற்படுகிறது. இந்த 25 ஆண்டுகளில் பல்வேறு துறைகளாகப் பிரிந்து விரிந்து தமிழ் இலக்கியம் வளர்ந்து செழித்திருக்கின்றது. ஒவ்வொரு துறையிலும் எத்தனை எத்தனையோ வகைமைப்பாடுகள். ஒவ்வொரு வகையிலும் எத்தனை எத்தனையோ ஆசிரியர்கள். அத்தனையையும் தொட்டுக் கொண்டு போவதற்குக்கூட இடமும், காலமும் போதா.

பண்ணையில் ஆயிரம் பேர்

1930 வாக்கில் இங்கே ஏற்பட்ட ஓர் அரசியல் வேகம் சமுதாயத்தின் அனைத்துத் துறைகளையும் வெகுவாகப் பாதித்தது. சுதந்திரம் என்ற குறிக்கோளை நோக்கித் தம்தம் அளவில், முறையில் நாட்டின் அறிவுநிலையினரும் உணர்வு நிலையினரும் செயல்பட்டனர். 1947ல் சுதந்திரம் பெற்றதும்,

ஒரு பெருஞ் சாதனைக்குப் பிறகு வழக்கமாக ஏற்படும் ஒரு தளர்ச்சி மக்களிடையே ஏற்பட்டது. 1950ஆம் ஆண்டு இந்தியா குடியரசு ஆகியதும் அதைத் தொடர்ந்து மொழிவாரி மாநிலங்கள் ஏற்பட்டதும் நாடெங்கிலும் ஒரு புதிய சுறு சுறுப்பை ஏற்படுத்தின. உலகெங்கும் ஏற்பட்டு வரும் அறிவியல் முன்னேற்றமும் நாட்டின் அரசியல், பொருளாதார மாற்றங்களும் அந்தச் சுறுசுறுப்புக்கு மேலும் வேகம் ஊட்டின. பத்திரிகைகளின் பெருக்கம், வாசிப்போரின் பெருக்கம், உலகைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பு ஆகியவை தமிழ் இலக்கியத்தின் அளவையும் வகைமையையும் பெருக்கியுள்ளன. "இத்தொகுப்பில் இன்றுள்ள தமிழ் எழுத்தாளர் அனைவரும் அடங்கிவிட்டனர் என்று கூறுவதற் கில்லை" என்ற குறிப்புடன், 1143 எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்களைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் யார் எவர்? என்ற தொகுப்பில் 1966இல் தந்துள்ளது. இவர்களுள் ஓர் 1000 பேராவது சுதந்திரத்துக்குப் பின் ஏற்பட்ட பெருக்கத்திற்குத் துணை நின்றவர்களே. இவர்களின் இலக்கியப் பணி நாவல்க ளாகவும், சிறுகதைகளாகவும், நாடகங்களாகவும், கவிதை, கட்டுரை, திறனாய்வு, மொழிபெயர்ப்பு முதலிய துறைகளாகவும் வளர்ந்து செழித்துள்ளது.

நாவல்கள்

1947இல் திரை தூக்கப்பட்டபோது, தமிழ் நாவல் மேடை யிலே, கல்கியும் இலக்ஷ்மியும் பத்திரிகைத் தொடர்கதை ஆசிரியர்கள் என்ற முறையில் வெற்றி நடை போட்டுக் கொண் டிருந்தனர். கல்கியின் அலை ஓசையும் பொன்னியின் செல்வரும், இலக்ஷ்மியின் பெண்மனம், காஞ்சனையின் கனவு, நாயக்கர் மக்கள் ஆகியவையும் மக்களின் உள்ளம் கவர்ந்த தொடர்கதை நாவல்கள். சரித்திரமும் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளின் திருவிளையாடல்களும் நாவல்களாகிக் கொண் டிருந்த இக்காலத்திலேதான், சாதாரண மனிதர்களின் வாழ்க்கை மேடுபள்ளங்களைத் தத்தமக்கு உரிய வகையில் தீட்டி வெற்றி பெற்றனர் சில ஆசிரியர்கள். மு வ. வின் மலர்விழி, கரித்துண்டு ஆகிய நாவல்கள் நடைப் புதுமை யாலும், ந. சிதம்பரசுப்ரமணியனின் இதயநாதம் நிகழ்ச்சி அமைப்பாலும், சிதம்பர இரகுநாதனின் பஞ்சும் பசியும் புதுயுக மாறுதலை விவரிக்கும் முறையாலும் தனித்துவம் காட்டிச் சிறந்தன. பி. எம். கண்ணனின் நாகவல்லி, இராஜம் கிருஷ்ண

னின் பெண்குரல், அநுத்தமாவின் மணல்வீடு, ஜீவாவின் தியாகத்தழும்பு என்று தொடர்ந்து வந்த வரலாற்றில், அகிலனின் பாவைவிளக்கு, நா. பார்த்தசாரதியின் குறிஞ்சி மலர், ஜானகிராமனின் மோகமுள் போன்றவை புதிய மலர்ச்சியை ஏற்படுத்தின. ஜெகசிற்பியன், வ. வேணு கோபாலன், கோவி. மணிசேகரன், சாண்டில்யன் முதலி யோர் கல்கியைப் பின்பற்றி வரலாற்றுக் கதைகளை எழுதி னார்கள். க. நா. சுப்பிரமணியன் தமது பொய்த்தேவுடனும் செல்லப்பா தமது ஜீவனும்சத்துடனும் நாவல் மேடையில் நிமிர்ந்தார்கள். காதல் என்ற நிலைக்களனில் ஒருவகையான அதீதவாதப் போக்குடைய நாவல்களைப் படைத்தார் சோமு. எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத நேரத்தில் கருணை வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்து மனிதனிடத்தில் நம்பிக்கை ஏற்படுத்துவதும் இதற்குமுன் தமிழ் நாவலாசிரியர்கள் காட்டாத களங்களையும் பாத்திரங்களையும் சித்திரிப்பதும் ஜெயகாந்தனின் தனித்தன்மைகள். வாழ்க்கை அழைக்கிறது, கைவிலங்கு, உன்னைப் போல் ஒருவன் ஆகியவை இவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள். இவருடைய பிந்திய நாவல்கள் பாரீசுக் குப் போ, சில நேரங்களில் சில மனிதர்கள் முதலியன சமுதாய எல்லையை விட்டு நகர்ந்து, எங்கோ மிக அருகிக் காணப்படுகிற சில தனிமனிதர்களின் வக்கிரப் போக்குகளைச் சித்திரிப்பவை.

அண்மைக்காலத்தில் வெளிவந்த நாவல்களுள், இராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித்தேன், எம். கல்யாணசுந்தரத்தின் இருபது வருஷங்கள். ஹெப்சிபா ஜேசுதாசனின் புத்தம் வீடு, டாக்டர் செல்லப்பா டி. செல்வராஜின் மலரும் சருகும், செ. கணேசலிங்கனின் தரையும் தாரகையும், நல்லபெருமாளின் கல்லுக்குள் ஈரம், நீல. பத்மநாபனின் தலைமுறைகள் ஆகியவை குறிப்பிடத் தகுந்தவை. இந்த நாவல்கள் கதையின் புதுமை யாலும் சூழ்நிலைச் சித்திரிப்பாலும் சிறந்து நின்றாலும், கலைத் தன்மையில் முழுமை பெற்றவை என்று சொல்ல முடியாது. சில நாவல்கள் படிக்கும் போதே கட்டுரை படிக்கும் உணர்வை எழுப்புகின்றன. சில வட்டார வழக்குகளை மிக அதிகமாகக் கொண்டு "குழுஉக்குறி" போல அமைந்து விடுகின்றன. தலைமுறைகள் சமுதாய இயல் பாடப் புத்தகம் ஒன்றை படிப்பது போன்ற நினைவை உண்டாக்குகிறது. அதே போல கல்லுக்குள் ஈரம், பல இடங்களில் தேசிய வரலாற்றுப் பாடப் புத்தகம் போலவே உள்ளது.

சிறுகதைகள்

புதுமைப்பித்தன், கு. ப. ரா., பிச்சமூர்த்தி ஆகியோரால் பீடும் பெருமையுமாக வளர்ந்த சிறுகதைத் துறை, பி. எஸ். இராமையா, தி. ஜானகிராமன், விந்தன், ஜெயகாந்தன் ஆகியோரால் மேலும் அழகுபடுத்தப்பட்டது. உருக்கமாகக் கதையை உருவாக்கி, படிப்போர் நெஞ்சில் ஒரு திட்டுமுட்டலை யும் விழிவிளிம்பில் ஒரு துளிக் கண்ணீரையும் வரவழைக்கும் ஆற்றல் பெற்றவர் பி. எஸ். இராமையா. தி. ஜானகிராமனிடம் நசிக்கும் உயர்பண்புகளுக்காகக் கசிந்துருகும் ஒருவகைச் சோகம், விந்தனிடம் நீறு பூத்த நெருப்புப்போல் குமுறலை மூடி மின்னும் நகைச்சுவை; ஜெயகாந்தனிடம் பிறர் கண் டறியாதவற்றைத் துருவித் தேடிக் கண்டு கூறும் ஒரு துறு துறுப்பு ஆகியவை உண்டு. இவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட லா. ச. இராமாமிர்தத்தின் பாணி தனிவகை: அவருடைய கதைகள் பல சமயங்களில் சிறுகதைக் குவளையை மீறிப் பொங்கி வழிபவை. சில கதைகளில் வெறும் சொல் விளையாட்டுக்களைத் தவிர வேறு ஒன்றுமே இராது. கு. ப. ரா. வின் வாரிசு போல விளங்கியவர் ஈழத்து இலங்கையர்கோன்.

இந்த உணர்ச்சிநிலை, உத்திநிலை வேறுபாடுகளை வெவ் வேறு அளவுகளில் பெற்றுத் தனித்தன்மை காட்டியவர்களில் கு. அழகிரிசாமி, ஆர். சூடாமணி, மகுதும், ஜே யெம், பி. சி. கணேசன், சுந்தரராமசாமி, கோமகள், இலட்சுமி சுப்பிரமணியம், இலங்கை கே. வி. நடராசன் இராஜநாராயணன், கிருஷ்ணன் நம்பி ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். ஆயினும், நடையாலும், கருத்தாலும் கலைத்தன்மையாலும் புதுமைப் பித்தனுக்கு ஈடுகொடுத்தும், சில ஆற்றல்களில் அவரினும் மேம்பட்டும் சிறுகதைத் துறையில் வெற்றிக்கொடி நாட்டி யிருப்பவர் இலங்கை எல். பொன்னுத்துரை அவர்கள். அவருடைய தேர் தமிழ்ச் சிறுகதை உலகுக்குக் கிடைத்த ஓர் ஒளிமணி. பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் வீணையும் நாதமும் போலப் பின்னிப் பிணைந்த அழகை அக்கதையில் காணலாம். ஒரு சிறுகதையும் மாபெரும் இலக்கியமாக உருவாக முடியும் என்பதற்குத் தமிழைப் பொறுத்த அளவில் சரியான எடுத்துக்காட்டாக இருப்பது இந்தக் கதை.

நாடகங்கள்

நாவலும் சிறுகதையும் படர்ந்து வளர்ந்ததைப் போல் நாடகத்துறை வளர்ந்து செழிக்கவில்லை. கிடைத்துள்ள சில

நாடகங்கள் பன்முகக் கோலம் காட்டுகின்றன என்பதே இன்று அத்துறையின் தனிச்சிறப்பு. அரு. இராமநாதனின் இராசராச சோழன் களத்துக்கும் பாத்திரத்துக்கும் ஏற்ற கம்பீரத்துடன் அமைந்த சரித்திர நாடகம்; பி.எஸ். இராமையாவின் தேரோட்டி மகன், ஒரு சிறுகதையின் கட்டுக்கோப்புடன் இயங்கும் புராண நாடகம்; எஸ்.டி. சுந்தரத்தின் மனிதனும் மிருகமும், மனிதனுக்குள்ளே இருக்கும் மிருகக் குணத்தை விளக்கும் குணச்சித்திர நாடகம்; தி. ஜானகிராமனின் நாலுவேலி நிலம் கிராமியப் பண்புகளைச் சித்திரிக்கும் சமுதாய நாடகம். சுகி சுப்பிரமணியனின் வானொலி நாடகங்கள் பெரும்பாலும் மெல்லிய நகைச்சுவையாலேயே சிறப்படைபவை. என். எஸ். கிருஷ்ணனின் அங்கத நாடகங்கள் சமுதாயத்தைக் கேலியும் கிண்டலுமாக விமர்சித்து ஆக்கச் சிந்தனைகளை ஊட்டுபவை.

சில நாடகங்கள் அழுத்தமான வசனத்தாலும், காட்சியமைப்பாலும், புதுமையான கருத்தாலும், பாத்திர வார்ப்பாலும் சிறந்து படிக்கவும் நடிக்கவும் ஏற்றவையாக உள்ளன. சக்தி கிருஷ்ணசாமியின் வீரபாண்டிய கட்டபொம்மன், தூயவனின் தீர்ப்பு, துறையூர் மூர்த்தியின் இலங்கேஸ்வரன், பாலசந்தரின் நீர்க்குமிழி, ப. கண்ணனின் குன்றுடையான், இரா. பழனிச்சாமியின் கவிச்சக்கரவர்த்தி; கம்பர் டி. செல்வராஜின் யுகசங்கமம், தி. ஜானகிராமனின் வடிவேலு வாத்தியார் பிலஹரியின் நெஞ்சே நீ வாழ்க ஆகியவை அவற்றுள் சில. சோவும் முரசொலி அடியாரும் கலையழகு நாடகக் கட்டுக்கோப்பு, கருத்தாழம் ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்படாது, அன்றாட அரசியலை தத்தம் நோக்கில் கிண்டல் செய்து சிரிப்பு ஊட்டும் பிரச்சார நாடகங்கள் எழுதியவர்கள்.

கவிதைகள்

சுதந்திரம் வருவதற்கு முன்பே தம் கவிதைத் தொகுதியாலும் அழகின் சிரிப்பாலும் கவிதைத் துறையில் தடம்பதித்த பாரதிதாசன் அவர்கள் தம்முடைய ஒப்புயர்வற்ற காவியமாகிய குடும்பவிளக்கையும், வேறு சில கவிதைக் கதைகளையும் சுதந்திரத்திற்குப் பின்னரே படைத்துள்ளார். அவர் எடுத்து முழக்கிய தமிழ்புகழ்ச்சி, காதலின் உயர்நிலை, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம், பொதுமானுட வீறு ஆகியவற்றுள் தமிழ்ப் புகழ்ச்சியே அடுத்து வந்த கவிஞர்களைப் பெரிதும் கவர்ந்தது. முடியரசன், சுரதா, வாணிதாசன், சாமி பழநியப்பன் நா. ரா. நாச்சியப்பன், கண்ணதாசன் ஆகியோர் இந்த மரபிலே வந்த

வர்கள். நளினமான சொல்லாட்சியுடையோராய்த் திகழ்ந்த கலைவாணன், தமிழ்ஒளி, கண்ணதாசன் ஆகிய மூவரில் கண்ணதாசன் குழப்பமான கருத்துக்களால் சர்ச்சைக்கு உரியவராகிறார்; கலைவாணனிடம் வாக்குவளம் உள்ள அளவுக்குப் புதுமை மணம் இல்லை; சமயவழிப் பழமரபு வழிச் சிந்தனைகளை அவரால் கைவிட முடியயவில்லை. தமிழ்ஒளியின் விதியோ வீணையோ, கண்ணப்பன் கிளிகள் வாழ்க்கைச் சோகத்தில் அழுந்திய விரக்தித் துணுக்குகள்.

ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம், பொதுமானுட வீறு ஆகிய கருத்துக்களைத் தனித்தன்மையோடும் அழுத்தத்தோடும் வெளியிடும் கவிஞர்களுள் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், கே சி. எஸ் அருணாசலம், குலோத்துங்கன், சாலை இளந்திரையன் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். கே. சி எஸ். அருணாசலமும், பட்டுக்கோட்டையாரும் கட்சிக்கண்ணோட்டத்தோடு எழுதுபவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாவதுண்டு. இந்தத் துறையில் சாலை இளந்திரையனின் பூத்தது மானுடம் குறிப்பிடத் தக்கதோர் முயற்சி.

ஆங்கிலத்தில் அமைந்த லிமெரிக் என்னும் கவிதை அமைப்பைத் தழுவி, இலங்கை மகாகவி எழுதிய குறும்பா என்னும் அங்கதக் கவித்தொகுதி தமிழில் கவிதைத் துறையில் மற்றொரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். நாடெங்கிலும் நடைபெறும் கவியரங்கங்கள் காரணமாக எளிமையும் சொல் விளையாட்டும், சிலேடையும், கிண்டலும் அமைந்த கவிதைகள் வளர்ந்து வருகின்றன. இரகுநாதன், கண்ணதாசன், பொன்னிவளவன், ஈரோடு தமிழன்பன், அப்துல் இரகுமான், சிற்பி பாலசுப்பிரமணியன் ஆகியோர் இத்தகைய கவிதை படைப்போரில் சிலர்.

கட்டுரைகள்

கட்டுரை இலக்கியம் பொதுக் கட்டுரைகளாகவும், பயணக் கட்டுரைகளாகவும், வாழ்க்கை வரலாறுகவும், திறனாய்வுக் கட்டுரைகளாகவும் விரிந்து சிறக்கிறது. கட்டுரை இலக்கிய முதல்வராகிய வீராசாமிச் செட்டியார் வருணனைக்கட்டுரை, ஆய்வுக்கட்டுரை, நகைச்சுவைக் கட்டுரை என்று பல வடிவங்களைத் தந்திருந்த போதிலும், தமிழ்நாட்டில் பலகாலமாகக் கட்டுரை என்றால் இலக்கியக் கட்டுரை என்ற எண்ணமே நிலவி வந்துள்ளது; பொதுவான கட்டுரைகள் இலக்கியமாகி உள்ள

நிலை மிக அருகியே காணப்படுகிறது. மகிழ்நன் கட்டுரைகள் நகைச்சுவையையும் வ. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியின் மீண்டும் வாழ்ந்தால் வருணனையையும் தி. ஜ. ர. வின் நடைவண்டி பொழுதுபோக்காகவே சிந்தனையைத் தூண்டும் விதத்தையும் கொண்டு திகழ்கின்றன.

சுதந்திரத்துக்குப் பின் இந்தத் துறையில் உழைத்து வருபவர்கள் டாக்டர் மு. வரதராசன், மகரம், பெ. தூரன், சாலை இளந்திரையன் ஆகியோராவர். மகரத்தின் கறுப்புச் சர்க்கரை பொழுதுபோக்குக்கு ஏற்ற முறையில் அமைந்தது; மு. வ வின் கட்டுரைகள் இலக்கியம், கல்வி, சமுதாயம் ஆகிய வற்றை ஒரு நோக்கில் அலசும் ஆய்வுக் கட்டுரைகளாக மலர்ந்தன; பெ. தூரன், சாலை இளந்திரையன் ஆகிய இருவருடைய சிந்தனைக் கட்டுரைகளே இத்துறையில் ஆழ மாகத் தடம் பதித்துள்ளன. முன்னவரின் சிந்தனையில் வருணனை இணைந்திருப்பதை அவரின் தேன்சிட்டு, பூவின் சிரிப்பு முதலிய நூல்களிலும், பின்னவரின் சிந்தனையில் புதிய சமுதாய நோக்கும் நகைச்சுவையும் இழைந் தோடுவதை அவருடைய சிந்தனைக்கு... உலகம் ஒரு குடும்பம், கூட்டின் அமைதி குலைகிறது முதலிய நூல்களிலும் காணலாம். இத்துறையில் இறங்கியவர்கள் திறம்படச் செய்திருக்கிறார்கள் என்றாலும் கட்டுரை இலக்கியம் படைக்கும் பணியில் பலர் ஈடுபடவில்லை என்பது ஒரு குறையே.

பயண நூல்கள்

பயண நூல்கள் இதனினும் சிறிது வளர்ந்த துறை. உலகம் சுற்றிய தமிழன் என்று போற்றப்படும் ஏ. கே. செட்டியார் தமது பிரயாண அனுபவங்களை நகைச்சுவை கலந்து அருமையாக எழுதியுள்ளார். பகீரதனின் வட இந்திய யாத்திரை, சி. சுப்பிரமணியத்தின் நான் சென்ற சில நாடுகள், சோமலெயின் அமெரிக்காவைப் பார், ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம், சிவபாதசுந்தரத்தின் கவுதம புத்தர், அடிச்சுவட்டில் முதலியனவும் இத்துறையில் சிறந்த நூல்கள். சோமுவின் அக்கரைச் சீமையில், தி. ஜானகிராமனின் நடந்தாய் வாழி காவேரி ஆகியவை இத்துறையில் வேறு சில நூல்கள். சிலருடைய பயணக் கட்டுரைகளைத் தொகுத்து பிரயாண இலக்கியம் என்னும் புத்தகமாக வாசகர் வட்டம் வெளியிட்டுள்ளது.

வாழ்க்கை வரலாறுகள்

சுதந்திரத்துக்கு முன் கணிசமான இலக்கியங்களைப் படைத்த வாழ்க்கை வரலாற்றுத் துறை, தமிழ்ப்புலவர் வரிசை, சங்ககால அரசர் வரிசை, தானியக் கலைஞர்கள், மேதைகள் வாழ்விலே என்ற முறையில் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புத் தொகுப்புக்களுக்கே அதிக இடம் கொடுக்கத் தொடங்கியது. ஆயினும் தமிழின் சிறந்த வாழ்க்கை வரலாற்று நூல்களுள் ஒன்று என்ற பெருமைக்கு உரிய புதுமைப்பித்தன் வரலாறு (இரகுநாதன்) 1951ல் வெளிவந்துள்ளது அதைத் தொடர்ந்து வெளிவந்த சிந்தனையாளர் வரிசை என்னும் சுருக்கமான வாழ்க்கை வரலாறுகள் தனிச்சிறப்புக்கு உரியவை. பண்டித மணி (சோமலெ), கட்டபொம்மன், வ. உ. சி. (ம. பொ. சி.), மறைமலையடிகள் வரலாறு (மறை திருநாவுக்கரசு), திருச்சி விசுவநாதம் (மா. சு. சம்பந்தன்) மைசூர் சௌடையா (எல்லார்வி) முதலியன சிறந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள். ரா அ. பத்மநாபன் அவர்கள் தயாரித்து வெளியிட்டுள்ள "சித்திரபாரதி" புதிய முறையில் அமைந்த வாழ்க்கை வரலாறு.

அண்மைக் காலமாக, சில அரசியல் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் அவர்கள் பெரும்பதவிகளில் இருக்கும் காலங்களில் வியாபார நோக்கோடு வெளியிடப்படுகின்றன. எனவே, அவை இலக்கியமாக உருப்பெற முடிவதில்லை. அறிஞர் அண்ணா, இந்திராகாந்தி, இலால்பகதூர் சாஸ்திரி, பக்தவத்சலம் முதலியோரின் வரலாறுகள் இத்தகையவை. மு. நமசிவாயம் எழுதிய காமராஜ் வரலாறு மட்டுமே இதற்கு விதிவிலக்காக அமைந்துள்ளது. தன்வரலாற்று நூல்களுள் பம்மல் சம்பந்தனாரின் என் சுயசரிதை, கண்ணதாசனின் வனவாசம் என்னும் இரண்டும் குறிப்பிடத் தகுந்தவை.

இலக்கியத் திறனாய்வு

டாக்டர் மு. வ. வின் இலக்கிய மரபு, இலக்கிய ஆராய்ச்சி ஆகியனவும், அ. மு. ப. வின் கவிதையும் வாழ்க்கையும் என்பதும் இலக்கியத்தை அனுபவிக்க ஒருவாறு துணைசெய்யும் நூல்கள். இரகுநாதன் (இலக்கிய விமர்சனம்), அ. ச. ஞான சம்பந்தன் (இலக்கியக் கலை) ஆகியோரால் வளர்க்கப்பட்ட திறனாய்வுத் துறையில் க. நா. சுப்பிரமணியனின் படித்திருக்கிறீர்களா ? சாலை இளந்திரையனின் புரட்சிக்கவிஞர் கவிதை

வளம் ஆகிய இரண்டு நூல்களும் தனிச் சிறப்புக்கு உரியவை. ப. கோதண்டராமனின் சிறுகதை ஒரு கலை, க. நா. சு. வின் விமரிசனக்கலை, கைலாசபதியின் தமிழ் நாவல்கள், ஒப்பியல் இலக்கியம், சாலை இளந்திரையனின் சிறுகதைச் செல்வம், புதிய தமிழ்க் கவிதை, புதுத்தமிழ் முதல்வர்கள் ஆகியவை இத்துறையில் குறிப்பிடத்தக்க சில முயற்சிகள். செந்தில் நாதனின் தமிழ்ச் சிறுகதை ஒரு மதிப்பீடு, சிவத்தம்பியின் தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், எழில் முதல்வனின் தமிழ்நாவல் இலக்கியம், சுகி சுப்பிரமனியனின் ஆயிரங்கால் மண்டபம் ஆகிய புத்தகங்களும், வல்லிக் கண்ணன், சி. சு. செல்லப்பா, தி. க. சிவசங்கரன் ஆகியோரின் சில கட்டுரைகளும் இத்துறைக்கு வளம் சேர்த்துள்ளன.

மொழிபெயர்ப்புக்கள்

மொழிபெயர்ப்பு நூல்களுக்குத் தமிழில் என்றுமே பஞ்சம் இருந்ததில்லை. எழுதுகோல் பிடித்த தமிழர்களில் ஒருசாரார் எப்போதும் மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபட்டே வந்துள்ளார்கள். 1947க்கு முன்பே வங்கமொழி நாவல்கள் பல தமிழில் வந்துவிட்டன. இந்தக் காலக்கட்டத்தில் பல கதை நூல்களும் கட்டுரை நூல்களும் இந்தி, மராட்டி, வங்காளி, ஆங்கிலம், மலையாளம், கன்னடம், ஜெர்மன், இரஷ்யன் முதலிய மொழிகளிலிருந்து தமிழுக்கு வந்துள்ளன. இப்பணியில் ஈடுபட்டோரில் கா. ஸ்ரீ. ஸ்ரீ., க. நா. சுப்பிரமணியன், ரா. வீழிநாதன், சண்முகசுந்தரம், தி. ஜானகிராமன், சுந்தர ராமசாமி, த. நா. குமாரசாமி தி. ஜ. ர., அளகேசன், இரகு நாதன், நம்பி, பூ. சோமசுந்தரம் முதலானோரை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இவர்களால் சில மேனாட்டு அறிஞர் களையும் காந்தியடிகள், தாகூர், நேரு, காண்டேகர் முதலிய இந்தியப் பெருமக்களையும் தமிழ்மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

சில துணைப் பணிகள்

இவ்வளவு பெருக்கத்தை வளர்த்துக் கொண்ட தமிழ் இலக்கியம் தன்னுடைய தனித்தன்மையை ஆழமாகப் பதிக்க வில்லை என்பதே இக்காலத்தின்மீது சொல்லப்படும் குறை. பெரும்போக்கான நோக்கில் இந்தக் குறை தென்பட்டாலும், தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதற்குரிய துணைப்பணிகள் இந்தக் காலக்கட்டத்தில் சற்று மிகுதியாகவே மேற் கொள்ளப்

பட்டுள்ளன. தமிழ்க் கலைக்களஞ்சியத்தைப் பத்துத் தொகுதிகளாக வெளியிட்ட தமிழ் வளர்ச்சிக்கழகம், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் துணையாகும் வேறு சில பணிகளையும் மேற்கொண்டது. பழமையும் புதுமையுமான இலக்கியங்களை மக்கள் மத்தியில் பரப்பும் வகையில், புத்தகக் கண்காட்சி முதலியவற்றோடு தமிழ்விழாக்களை நடத்தியமை அவற்றுள் ஒன்று. மற்றொன்று புதிய தமிழ் இலக்கியங்களில் சிறந்தவற்றை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்துப் பரிசளித்தது.

1954இல் உருவான சாகித்திய அகாடெமியும் சென்னையில் தோன்றிய தமிழ் எழுத்தாளர் சங்கமும் புதிய தமிழ் இலக்கிய முயற்சிகளுக்குத் தூண்டுகோலாகவும், அவை பற்றிய ஓர்மையை எழுத்தாளர்களிடையேயும் மக்களிடையேயும் ஏற்படுத்தும் நிறுவனங்களாகவும் அமைந்தன, சாகித்திய அகாடெமி ஆண்டுதோறும் ஒரு நூலுக்கு 5000 ரூபாய் பரிசு வழங்கியும், எழுத்தாளர் சங்கம் ஆண்டுதோறும் கேடயங்களும் பதக்கங்களும் வழங்கியும் இலக்கிய ஆசிரியர்களைச் சிறப்பித்தன. பரிசுகளும் பாராட்டுக்களும் எழுத்தாளர்களுக்கு அறிமுகத்தையும் எழுச்சியையும் தந்தன. சாகித்திய அகாடெமியைப் போலவே தொகுப்பு நூல்களை வெளியிட்ட தென்னிந்திய புத்தக டிரஸ்ட் என்ற நிறுவனத்திற்கும், இலக்கியவட்டம், எழுத்து போன்ற பத்திரிகைகளுக்கும் புதிய இலக்கிய முயற்சிகளை ஊக்குவித்ததில் கணிசமான பங்கு உண்டு.

சில தீங்குகள்

பரிசுகளும் கேடயங்களும் எழுத்தாளர்களுக்குச் சமுதாய மதிப்பை ஏற்படுத்திய அதே வேளையில் தீய பிற்போக்குச் சக்திகளுக்கும் அவை ஒருவகையில் ஆதரவாயின. குழுச் சேருகின்ற மனப்பான்மையும், செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்கள் ஒருவருக்கொருவர் முதுகு சொறிந்து கொள்ளுகின்ற தன்மையும் தலையெடுக்கலாயின. நம்முடைய நாட்டுச் சாதிப் பிரிவினைகளும், கட்சி அரசியலும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் குழு மனப்பான்மைக்கு உரம் சேர்த்தன. அதனாலேயே பல்வேறு வகைமைப்பாட்டுடனும் இலக்கியச் செறிவுடனும் நூல்கள் தோன்றியும் அவை மக்களிடையே செல்வாக்குப் பெறத் தவறிவிட்டன. இன்றளவும் அந்த நிலை நீடித்தே வருகிறது. இலக்கியத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. அது தேவையானதும் கூட; ஆனால், கருத்து வேறுபாடுகள் ஒருவனின் சிந்தனையாலும் பட்டறி

வாலும் ஏற்பட வேண்டியவை; சாதி, மதம், கட்சி என்ற புறக் காரணங்களால் அவை ஏற்படும்போது, நற்போக்கு இலக்கியங்கள் செல்வாக்கு இழந்து இலக்கியத்தின் பொதுவளர்ச்சியே குன்றிப்போகிறது.

குழு மனப்பான்மை இன்று புதியதொரு வடிவமெடுத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு பெருந் தடையாக அமைந்து நிற்கிறது: புதிய சிந்தனை, தனித்தன்மை இவற்றோடு தோன்றும் எந்த எழுத்தாளரையும் வானொலி, பத்திரிகை, வாசகர் வட்டக் கூட்டங்கள் இவற்றின் மூலமாகக் கவர்ந்திழுத்து, ''மூளைக்கழுவல்'' செய்து தங்கள் அணியிலே இருத்தி, அவர்களின் வளர்ச்சியையே மழுங்கடித்து விடுவது அல்லது அவர்களின் போக்கையே திசைதிருப்பி விடுவது குழு மனப்பான்மையின் பெரிய கேடாக உள்ளது. இவற்றை மீறி, மக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்றுவிட்ட எழுத்தாளர்களைக் கூடியவரை புறக்கணிப்பதும், புறக்கணிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டால், அவர்களிடத்திலே தங்கள் அணியைச் சேர்ந்த எழுத்தாளர்களைப் பற்றி மட்டும் அபிப்பிராயங்கள் கேட்டுத் தங்கள் இதழ்களில் வெளியிட்டுக் கொள்வதும் அதன் மூலம் தங்கள் குழுவினரின் பெயர்களை மட்டுமே அந்தத் துறையிலும் ஒலிக்கச் செய்வதும் ஆகிய தன் ஒரு தன்மை உருவாகி வளர்கிறது. அஃதாவது, திரும்பத் திரும்ப ஒரே கருத்தைச் சொல்லி அதை நிசமாக்க முயலும் கோயபல்ஸ்தனம் அரசியல் உலகம், சமய உலகம் என்பவற்றைக் குழப்பிவிட்டு இப்போது இலக்கிய உலகிலும் புகுந்துவிட்டது. தங்கள் அணியினரின் பெயர்கள் இடம் பெருத எந்த இலக்கிய முயற்சியையும் அதன் அடிப்படை நோக்கத்தைக் கூடப்புரிந்துகொள்ளாமல் தாக்கி, தவருன எண்ணத்தையும் அரைகுறைச் செய்திகளையும் மக்கள் மத்தியிலே பரப்புவது இந்த மனப்பான்மையின் மற்றொரு விளைவாகும். சிறிய இலக்கியப் பத்திரிகைகள் என்னும் பெயரில் வெளிவரும் பல தமிழ் இதழ்கள் இந்தக் கேடுகளையே முதன்மைப் பணிகளாகக் கொண்டிருக்கின்றன. இதனுல் இன்று சில சாதாரணமான புத்தகங்களே பலரால் படிக்கவும் எடுத்துப் பேசவும் படுகின்றன; பல நல்ல புத்தகங்கள் சிலரால் கூடப் படிக்கப்படுவதில்லை.

இந்தப் பிரச்சாரங்களுக்கு ஆட்படாமல் நேரடியாக நல்ல புத்தகங்களைத்தேடிப் படிக்கும் இலக்கிய வாசகர்கள், ''இவை ஏன் பத்திரிகைகளிலோ வாசகர் வட்டங்களிலோ இடம் பெறுவதில்லை?'' என்று வியப்பும் திகைப்பும் அடைகிருர்கள். இத்தகை

யவர்கள் மிகச் சிலராகவும் பத்திரிகை போன்ற பிரச்சார சாதன பலம் இல்லாதவர்களாகவும் இருப்பதால், "நல்லவை இவை" என்னும் இவர்களின் குரல் இலக்கியச் சந்தையில் மேலோங்க முடியவில்லை.

மக்களிடையே இலக்கிய நூல்களைப் பரப்ப வேண்டிய வெளியீட்டகங்களும் நூலக இயக்கமும் வேறுவகையான குறைகளுக்கு ஆளாகித் தமிழ் இலக்கிய முயற்சியையும் வளர்ச்சியையும் பாதித்துள்ளன. பல வெளியீட்டாளர்கள், வியாபார நோக்கோடு, தங்கள் எழுத்துக்களை ரூ. 200க்கும் ரூ, 300க்கும் விற்றுவிடுகிற மூன்றாந்தர எழுத்தாளர்களையே நோக்கி நிற்கிறார்கள். சில நல்ல வெளியீட்டாளர்களும் நூலகங்களை நம்பியே தொழில் நடத்த வேண்டியிருப்பதால், நூலகங்களில் நூல் வாங்கும் முறையில் ஏற்படும் வளர்ச்சி, தளர்ச்சிகளுக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ள வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகிறார்கள். அருமையாகத் தொடங்கிய தமிழக நூலக இயக்கம் கட்சி அரசியல் என்னும் சூறாவளியிலும், இலஞ்சப் பேயின் கோரப்பிடியிலும், தனிமனிதர்களின் ஆசாபாசங்களிலும் சிக்கி, சுற்றிச் சுழன்று, தட்டுத் தடுமாறி இப்போது இயக்கமற்று நின்றுவிட்டது.

சிப்பிகளும் நண்டுகளும்

சுதந்திரத்துக்குப் பின் எழுந்த தமிழ் இலக்கியப் பரப்பையும் அதற்குத் துணையான பணிகளையும் காணும்போது, அது ஒரு பெரும் கடற்கரையாகக் காட்சியளிக்கிறது. பல்வேறு அலைகளாலும், சூறாவளிக் காற்றாலும் இலக்கியக் கடலின் மேற்பரப்பு கொந்தளித்துக் காணப்படுகிறது. இலக்கியக் காற்றை நுகரச் செல்வோருக்கு ஒருவிதச் சுகம் ஏற்படுகிறதென்றாலும் சிப்பிகளும் நண்டுகளுமே அவர்களின் கண்களின் மிகுதியாகத் தென்படுகின்றன. பலரும் மேற்பகட்டான நண்டுகளிலும் சிப்பிகளிலும் திருப்தியடைந்து விடுகிற சிறு பிள்ளைகளாகவே இருக்கிறார்கள்.

புதிய சோதனைகள் என்ற பெயரில் நாவல், சிறுகதை, கவிதை ஆகிய துறைகளில் சில முயற்சிகள் செய்யப்படுகின்றன. சிலருக்கு மட்டுமே விளங்கும்படியாகத் தமிழும் ஆங்கிலமும் கலந்த நடையில் அல்லது தமிழும் இந்தியும் கலந்த நடையில் எழுதுவது ஒரு "நாகரிகமாகி" வருகிறது. இந்திரா பார்த்தசாரதி, சுஜாதா, முத்துசாமி, கந்தசாமி முதலியோரின் படைப்புக்கள் இந்த வர்க்கத்தைச் சார்ந்தவை. இடைக்காலத்தில்

சமஸ்கிருதம் படித்த பண்டிதர்கள் அந்த மொழியின் சொற்களை யும் தொடர்களையும் தமிழில் புகுத்தியதுபோல இந்தப் புதிய பண்டிதர்கள் செய்கிறார்கள். ஒரு மொழியின் வட்டாரமொழி களைப் பயன்படுத்தினால், படிப்போர், சிறிது சிரமப்பட்டாலும் விளங்கிக் கொள்வார்கள். அதற்கும்கூட ஓர் அளவு வேண்டும். மக்களுக்குத் தெரியாத அயல்மொழிகளைக் கலந்து எழுதினால் ஆங்கிலம் இந்தி தெரிந்த ஒரு சிலர் மட்டுமே படிப்பார்கள். மற்றவர்கள்?

யதார்த்த இலக்கியம் என்ற பெயரில் சமுதாயப் பொறுப் புணர்ச்சி இல்லாது மனித இயல்பின் சில வக்கிரங்களைப் பச்சை யாகவும் அருவருப்பின் எல்லைக்கே கொண்டு சென்றும் சித் திரிக்கும் போக்குகளையும் இவர்களில் சிலருடைய நாவல், நாடகம், சிறுகதை முதலியவற்றில் காணுகிறோம். புதுமை என்பது ஏற்கெனவே இருந்து வரும் இலக்கிய மரபுகளை மீறிச் செய்கின்ற ஒன்றுதான். ஆனால், அது மொழியையோ சமுதா யத்தையோ மறந்ததாகவும் அவற்றின் வளர்ச்சியில் அக்கறை காட்டாததாகவும் இருக்க முடியாது. இத்தகைய கோளாறுகள் தமிழுக்குப் புதியன அல்ல; உலா, தூது, மடல் போன்ற வடிவங் களில் இவற்றைப் பலர் முன்பே செய்து பார்த்துள்ளார்கள். ஆனால், அவை எல்லாம் இன்று எங்கே?

புதுக் கவிதையா ?

எதையும் எளிமையாகவும் நேராகவும் சொல்லுவதே இன்றைய கவிதையின் போக்கு. திறமான கவிஞர்கள் இந்தப் போக்கைக் கையாளும்போது கவிதையின் கட்டுக் கோப்பு சிதைவதில்லை. ஆனால், மொழிமரபையும் இலக்கிய வடிவ மரபுக ளையும் அறியாத சிலர் இப்போது "புதுக்கவிதை" என்ற பெயரில் எழுதுபவை கவிதையுமல்ல; சரியான உரைநடையு மல்ல. அவற்றை ஒருவகையான உரைவீச்சுக்கள் என்றே சொல்ல வேண்டும். கவிஞர் என்ற சொல்லுக்கு உள்ள மதிப்பைக் கருதி, அத்துறையில் சிறக்க முடியாத சிலர் கண்ட புதிய வடிவம் இஃது என்றே நினைக்கத் தோன்றுகிறது. படைப் பாளிகள் புதிய வடிவத்தை ஏற்படுத்துவதில் ஒரு தவறும் இல்லை. புதுக்கவிதை என்ற பொருளற்ற பெயரை அதற்குச் சூட்டுவதுதான் பொருத்தமாக இல்லை. இவற்றிற்கு உரை வீச்சு என்றோ நடைஉரை என்றோ புதிய பெயர் ஒன்று தந்து இவற்றுள்ளே கருத்துவளம் உடையவற்றை இலக்கியமாகக் கொள்ளலாம். இந்தப் படைப்புக்கள் முன்பு நாம் குறிப்பிட்ட புதிய முயற்சிகளின் குறைகளுக்கும் விரக்தி மனப்பான்மை

என்ற குறைக்கும் ஆளானாலும் இவற்றில் சில நல்ல படைப்புக்கள் உண்டு. ந. பிச்சமூர்த்தி, வைத்தீசுவரன், ஞானக்கூத்தன், காமராசன், அக்னிபுத்திரன், க. நா. சுப்பிரமணியன் முதலியோர் இத்துறையில் குறிப்பிடத் தக்கவர்கள்.

முடிவுரை

சுதந்திரத்துக்குப் பின்தோன்றிய தமிழ் இலக்கியங்களை ஒட்டு மொத்தமாகக் காணுகிறபோது நல் இலக்கிய ஆர்வமும், வெற்றிபெற்ற படைப்புக்களும் ஒவ்வொரு துறையிலும் இன்முகம் காட்டி நிற்பது தெரிகிறது. ஆயினும் இலஞ்சவெறி, எதையும் தனக்குச் சாதமாக்கிக் கொள்ளும் தன்மை முதலிய சமுதாயக் கேடுகளும், சிலரிடத்திலேயே பத்திரிகைச் செல்வாக்கு குவிந்து கிடக்கும் நிலையும், குழு மனப்பான்மையும், தமிழ் மரபை ஒட்டிப் பிறக்காத வம்புகளும் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பல சமயங்களில் ஊடறுத்தும் திசைதிருப்பியும் வந்துள்ளன. இந்தக் குறைகளைக் களைவதும், நேர்மையும் துணிவுமுள்ள இலக்கியத் திறனாய்வாளர்களை ஊக்குவிப்பதுமே தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நாட்டங் கொண்டோர் உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகள்.

நமது சமுதாயக் கேடுகள் மூத்து வயிரமேறிப் போனவை; அவற்றுள் பலவற்றுக்கு மதம், பாரம்பரியம் பண்பாடு என்பவற்றின் மறைமுகமான அரவணைப்பும் இருந்து வருகிறது. ஒரு துறையில்தான் இந்தக் கேடுகள் உள்ளன என்று தனிப்பிரித்து உணரமுடியாதபடி, அவற்றின் கொடிகளும் விழுதுவேர்களும் பல துறைகளையும் ஊடுருவிக் கிடக்கின்றன. ஆனாலும், நேர்மையான சிலர் ஒன்றுசேர்ந்து துணிவாகக் காரியங்களைச் செய்யப் புறப்பட்டால், தமிழ் இலக்கியத் துறையைக் கவிந்துள்ள இருட்டு விலகி அதிலே முகங்காட்டும் நற்பயிர்கள் வளர்ச்சியடையும் என்பது திண்ணம். எழுதுகோல் வாணர்களின் கவனம் இந்தத் திசையில் திரும்ப வேண்டும்.

With

best

compliments

from

Garware Nylons Limited

'Chander Mukhi' . NARIMAN POINT

Bombay-1.

With best compliments from

WARNER-HINDUSTAN LIMITED

WARANGAL ROAD, UPPAL,

HYDERABAD-39.

For Better Complexion Use

REMY SNOW

REMY POWDER

With the best compliments from

REMY PERFUMES Pvt. LTD.,

Madras-1.

சுதந்திரத்துக்குப் பிறகு

உரைநடை வளர்ச்சி

[டாக்டர். க. ஆறுமுகன்]

செய்யுள் நடையும் உரைநடையும்

பேசுதல் யார்க்கும் எளிது. அப்பேச்சினைத் தொகை வகைப்படுத்திக் கேட்போர் விரும்பும் வண்ணம் பேசுதல் அரிது. அதனையே கற்றோரும் மகிழும் கட்டுரையாக்கி அழகிய உரைநடை வடிவம் கொடுத்து எழுதுதல் அதனினும் அரிது. அக்கட்டுரைக் கருத்தினையே அறிஞர் பலரும் நுவல்தொறும் நுவல்தொறும் நூல்நயம் புதிது புதிதாகக் கண்டு உவக்கும் வண்ணம் கற்பனை பலவற்றுடன் ஓசை நயம் சிறக்கும் கவிதை நடையில் படைத்தல் அரிதினும் அரிதாகும்.

பழங்காலத் தமிழறிஞர் தம் கருத்துக்களை உயரிய செய்யுள் நடையிலேயே நமக்குத் தந்து சென்றனர். பழந் தமிழ்ப் புலவர் செய்யுள் நடையிலேயே பேசிக்கொண்டனரோ என்று எண்ணவும் தோன்றுகின்றது. வினவிடைகளால் அமைந்த உரையாடலும் செய்யுள் நடையிலேயே நிகழ்ந் தமைக்குச் சான்று பலவுள. இவ்வுரையாடல் செய்யுள் நடையை,

> *"வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
> *தீமை யிலாத சொலல்."*

என்னும் வள்ளுவர் குறளாலும் அறிகிறோம். வாய்மையைப் பற்றி ஒருவர் கேட்ட வினவிற்குக் கூறும் விடைபோன்று அமைந்துள்ளது இச்செய்யுள் நடை. இப்பாவில் உள்ள பேச்சு நடைக்குரிய ஒலியைச் செப்பலோசை என்று வழங்கினர். உரைநடை போன்று தெளிவாக, வெள்ளையாக அமைந்த இச்செய்யுளை வெண்பா என வழங்கினர் அக்கால அறிஞர்.

செய்யுள் நடை குறைந்து உரைநடை பெருகி வளரும் காலம் இது. பேச்சு நடையும் செய்யுள் நடையாய்த் திகழ்ந்த

காலம் பழங்காலம். செய்யுள் நடையும் பேச்சு நடையாய் மாறும் காலம் இக்காலம். பேச்சு நடை அல்லது உரைநடை என்பது ஓசைநயம் குறைந்து வருவது. செய்யுள் அல்லது பாநடை ஓசைநயம் நிறைந்து பரந்துபட்டு வருவது. இக்கால எழுத்தாளர் சிலர் தம் உரைநடையில் காணும் ஒலிநயம்கூட, அவர்தம் செய்யுள் நடையில் காண்டல் அரிதாகிவிட்டது. இன்று உரைநடையும் செய்யுள் நடையும் தத்தம் இயல்புகளை மாற்றிக்கொண்டு இக்கால எழுத்தாளர்களிடம் இயங்கு கின்றன போலும். சுருங்கக் கூறின் பழங்கால அறிஞர் பேசுவதும் பாட்டாய் ஒலித்தது. இக்கால அறிஞர் பாடுவதும் பேச்சாய் அமைந்துவிட்டது.

உரைநடையில் பல நடைகள் பெருகி வளர்ந்து வருதல் காண்கின்றோம். அறிஞர் தாம் பயின்ற கலைக்கு ஏற்பவும், அன்னார்தம் மொழியறிவிற்குத் தக்கவாறும் அவரவர்தம் உரை நடையும் வேறுபட்டுப் பலப்பல நடையாகிப் பயில்கின்றன எனலாம். இவ்வகையில் இன்று தமிழ் இலக்கிய உலகில் நடமிடும் உரைநடையை இலக்கிய நடை, வரலாற்று நடை, அறிவியல் நடை, அரசியல் நடை, பல்கலை நடை முதல் பல வேறு நடைகளாகப் பகுத்துக் கண்டு மகிழலாம். இந்நடைகள் அனைத்தையும் ஆய்ந்து காண்பது பெரியதோர் ஆராய்ச்சி யாகும். ஆதலின் ஈண்டு தலைசிறந்த ஒரு சில எழுத்தாளர் களின் நடைகளை மட்டும் சுருங்கிய அளவில் ஆய்ந்து காணலாம்.

இலக்கிய நடை

சங்க இலக்கியங்களும் பிற பல பழைய இலக்கியங்களும் செய்யுள் நடையிலேயே உள்ளன. நன்கு கற்றோரன்றி மற்றோர் இவ்விலக்கியங்களின் சுவையை உணர்தல் அரிதாகி விட்டது. இவ்விலக்கியங்களைச் செய்யுள் நடையினின்றும் உரைநடைக்குக் கொணர்ந்து பாமரர்க்கும் அறிமுகம் செய்யும் பணியில் தமிழ் வல்ல பேராசிரியர் பலர் ஈடுபட்டுள்ளனர். சங்க இலக்கியச் சுவைகளை இனிய உரைநடை நூல்களாக்கி அளித்த பெருமை பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களைச் சாரும். பேராசிரியரைப் பின்பற்றி அறிஞர் பலர் இத்துறையில் ஈடுபட்டுத் தமிழ் இலக்கியக் கருத்துக்களை இனிய எளிய உரைநடை நூல்களாகப் படைத்துத் தந்து வருகின்றனர்.

சங்கப் புலவர்கள் இயற்கைப் பொருள்களின் இயல்பு பலவற்றில் தம் கண்ணையும் நெஞ்சையும் பறிகொடுப்பவராவர். சங்கப் புலவர்களின் இவ்வீடுபாட்டைப் புலப்படுத்துவதில் பேராசிரியர் வரதராசனாரவர்கள் இணையற்றவராவர். இக் காலத்தில் அத்தகைய இயற்கை ஈடுபாடு மிகக் குன்றிவிட்டது. இது குறித்துப் பேராசிரியரவர்கள் வருந்திக் கூறும் இயல்பு அவர்தம் உரைநடையியல்புகளில் ஒன்றாகும். இவ்வுரைநடை யியல்பினைக் காட்டும் ஒரு பகுதி இதோ.

"பழங்காலத்தில் தலைவன் ஒருவன் மனைவியை விட்டுப் பிரியும்போது இளவேனில் காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றான். முற்றத்தில் இருந்த வேப்பமரத்தைச் சுட்டிக்காட்டி, 'இது மலரும்போது வந்துவிடுவேன்' என்றான். சில திங்கள் கழிந்தன. சென்றவன் வரவில்லை. அந்த வேப்ப மரமோ பூத்துவிட்டது. மனைவியின் வருத்தம் மிகுந்துவிட்டது. வேப்பமரத்திலிருந்து பூக்கள் உதிர உதிர, அதனடியில் உள்ள மணலில் அந்தப் பூக்கள் பரந்து கிடப்பதைக் காணக் காண, அவள் துயர் மேலும் வளர்ந்தது. "சென்ற ஆண்டில் இந்தக் காலத்தில் இதனடியில் மணல் பரப்பில் இந்தப் பூக்களின் சூழலில் யானும் அவரும் இருந்து பேசி மகிழ்ந்தோமே. இந்த ஆண்டில் இந்தக் காலத்தில் அவர் இங்கு இல்லையே. சென்றவர் வாராத காரணம் என்னவோ?" என்று வருந்தினாள். "இந்த வேப்பம் பூ இந்த ஆண்டில் அவருக்கும் (எனக்கும்) பயன்படாமலே கழியுமோ?" என்று உருகினாள்."

"கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ"

—குறுந்தொகை, 24.

"கோழி கூவும் நேரம், வெள்ளி முளைக்கும் நேரம், பிச்சிப் பூ மலரும் நேரம் என்றெல்லாம் இயற்கைக்கும் நாளுக்கும் உள்ள உறவைப் போற்றுவது அரிதாகி விட்டது. முல்லை மலரும் பருவம், வேம்பு பூக்கும் பருவம், பனை பழுக்கும் பருவம் என்றெல்லாம் ஓர் ஆண்டை இயற்கை கொண்டு அளந்து பார்க்கும் மரபும் போய்விட்டது."

"திங்களும் கிழமையும் நாளும் (தேதியும்) தெரிவிக்கும் நாள்காட்டி (காலண்டர்) வீடுதோறும் சுவரில் தொங்கி நிற்க, அவற்றைக் கண்டு கண்டு எண்களை அறியும் பழக்கமே மிகுந்து விட்டது. சிறுபொழுதையும் பெரும்பொழுதையும் இயற்கையின்

மாறுதல்களைக் கண்டு அளந்து கூறும் நிலைமை போய், இயற்கையை மறந்து எண்களை அறிந்து கூறும் நிலைமை வந்துவிட்டது.''

"ஒன்றை இழந்தோம், மற்றொன்றைப் பெற்றோம் என்று ஆறுதல் அடைய முடியும். ஆயினும், இழந்தது இயற்கையின் உறவு என்று நினைக்கும்போது வருந்தாமலிருக்க முடியாது. மனிதன் வாழ்நாள் முழுதும் ஓடி ஆடி எவ்வளவு அலைந்தாலும் அவனுக்கு அமைதி நல்க வல்லது இயற்கையின் உறவே. அவனுக்கு ஆறுதல் நல்க வல்லதும் இயற்கை பண்படுத்தும் நெஞ்சமே. ஆகையால் சந்திர மண்டலத்தைத் தாவி முற்றுகை யிட்டு வெற்றி பெற்றாலும் என்ன, மனிதன் இயற்கையின் உறவை இழந்து வருந்துகின்றானே என்று வருந்த நேர்கின்றது. பழங்காலத்துப் பாடல்களைப் படித்து, அக்கால மக்கள் பெற்றிருந்த இயற்கையின் உறவை நினைக்கும் போது இந்த வருத்தம் மிகுதியாகின்றது.''

—இலக்கியக் காட்சிகள்.

உரைநடையின் பல வகைகளில் ஒன்றாகிய இலக்கிய நடையில் பேராசிரியர் மு. வரதராசனார்தம் உரைநடையியல்புகளில் ஒன்று இது. இன்னும் அவர்தம் இலக்கிய நடையில் காணும் இயல்புகள் பல. இங்ஙனமே சிறந்த எழுத்தாளர்களின் இலக்கிய உரைநடையில் காணும் இயல்புகளை ஆய்ந்து, கண்டு இன்புறுவது இலக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

வரலாற்று நடை

தமிழ் நாட்டின் வரலாறும், தமிழ் இலக்கிய வரலாறும், தமிழ்மொழி வரலாறும் இன்ன பிற வரலாறுகளும் எழுதுதற்கு உரைநடையே பெரிதும் துணைபுரிகின்றது. பல வகை வரலாறுகளுக்கேற்பவும், அவ்வரலாறுகளை எழுதும் அறிஞர்களின் மொழிநடைக்கேற்பவும் உரைநடை வேறுபடுதல் இயல்பாகும். இவ்வகை உரைநடையை வரலாற்று உரைநடை எனக் குறிப்பிடலாம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையிற் பணி புரிந்து மறைந்த பேராசிரியர் டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்களைத் தமிழக வரலாற்றுத் துறையின் வழிகாட்டி எனலாம். பாண்டியர் வரலாறு, சோழர் வரலாறு போன்ற பல வரலாற்று உரைநடை நூல்களை எழுதித் தமிழுலகிற்கு வழங்கிய அவர்தம் தமிழ்ப்பணி போற்றத் தக்கதாகும். இவர்களைப் பின்பற்றிப் பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் தமிழ் வரலாற்றுத்துறையில் பெரும்பணி

ஆற்றியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையிற் பணிபுரியும் டாக்டர். மு. கோவிந்தசாமி அவர்கள் இலக்கிய வரலாற்றின் காலத்தை ஆய்ந்து எழுதியிருக்கும் வரலாற்றுநூல் மிகச் சிறந்த ஒன்றாகும். டாக்டர். சி. பாலசுப்பிர மணியன், திரு. அடைக்கலசாமி முதலிய இளைஞர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பணியிற் குறிப்பிடத்தக்கவர்கள்.

டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர்களின் வரலாற்று உரைநடை எளிமையும், தெளிவும், இனிமையும் உடையது. சான்றுகள் நிரம்பியது. ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் துணைபுரிவது. சொற்பொழிவு செய்வது போன்ற அமைப்பினை உடையது. ஒவ்வோர் ஆராய்ச்சியின் முடிவிலும் தாம் கூறிய கருத்துக்களை மீண்டும் நினைவூட்டுவது போன்று தொகுத்தும் வகுத்தும் கூறுதல் அவர்தம் வரலாற்று நடையின் சிறந்த இயல்பாகும். திருக்குறள் நூலைப் பல கோணங்களில் ஆய்ந்து கூறிய அப் பேராசிரியர் அக்கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்தும் வகுத்தும் கூறும் முடிவுரை ஆராய்ச்சியாளர் கண்டு பின்பற்றுதற்குரியது. இதோ அம்முடிவுரை.

"இதுகாறும் பேசப்பட்ட உண்மைகளால், (1) தொல் காப்பியத்துக்குப் பின்பு எழுந்த நூல் திருக்குறள் என்பதும், (2) தொல்காப்பியர் காலம் ஏறத்தாழக் கி. மு. 4ஆம் நூற் றாண்டு என அறிஞர் கருதுவதால், திருக்குறள் கி. மு. 4ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்பதும், (3) கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவாகச் சிலரால் கருதப்படும் பெரும்பாலான தொகை நூற்பாக்களிலும் சிலப்பதிகாரம் மணி மேகலை எனப்படும் காவியங்களிலும் குறட்பாக்களின் சொற் களும் தொடர்களும் கருத்துக்களும் ஆளப்பட்டிருத்தலின், அப்பாக்களுக்கு (கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகட்கு) முற்பட்டது திருக்குறள் என்பதும் தெளியலாம். தெளியவே, வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், திருவள்ளுவர் காலம் ஏறத்தாழக் கி. மு 1 முதல் 300க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடையதாகும்."

இலக்கிய வரலாறு போன்று மொழி வரலாறு தமிழில் மிகுதியாக வெளி வரவில்லை. பேராசிரியர். வி. கோ. சூரிய நாராயண சாத்திரியாரை மொழி வரலாற்றின் முன்னோடி எனலாம். அவர் எழுதிய தமிழ் மொழி வரலாறு என்னும் உரை நடை நூலே மொழி வரலாற்றில் முதலிடம் பெறுவதாகும். அவர்களுக்குப்பின் பிறநாட்டு அறிஞர்களின் மொழிக் கொள்கை

களை நன்கு ஆய்ந்து மொழிவரலாறு எழுதியவர் டாக்டர். மு. வரதராசனர் ஆவர். பிறநாட்டு மொழிக்கொள்கைகளைத் தமிழ் மொழியுடன் பொருத்திக் காட்டுவதுடன் அக்கொள்கைகளோடு தமிழ் மொழி வேறுபடும் இடங்களையும் சுட்டிக்காட்டிச் செல்லும் இயல்பினை அவர்தம் மொழிவரலாற்றில் பல இடங்களில் காணலாம்.

மொழி வரலாற்றுத்துறையில் டாக்டர். எஸ். அகத்திய லிங்கனர் எழுதிய உலக மொழிகள், டாக்டர். முத்துச்சண் முகனர் எழுதிய இக்காலத்தமிழ் முதலான நூல்கள் சிறப்பிடம் பெறுவன எனலாம். டாக்டர். மு. கோவிந்தசாமி அவர்கள் எழுதிய இலக்கியத் தோற்றம் என்னும் தமிழ் இலக்கிய வரலாற்று நூல் பல புதிய ஆராய்ச்சிக் கருத்துக்கள் நிரம்பிய தாகும். முச்சங்கம் என்னும் பழைய வழக்கிற்கும் மேலாக நான்காம் சங்கம் ஒன்றையும் இந்நூல் ஆய்ந்து கூறுகின்றது.

அறிவியல் நடை

அறிவுத்துறை பல துறைகளாக விரிந்து செல்கின்றது. அரசியல், அறிவியல், உளவியல், பொருளியல், முதலான எத்துணையோ துறைகள் வளர்ந்து வருகின்றன. பல்வேறு துறைகளிலும் அறிஞர் பலர் உள்ளனர். அவ்வறிஞர்கள் தாம் தாம் காணும் உண்மைகளை உரைநடை நூல்களாக்கி உலகுக்கு வழங்குகின்றனர். பல்வேறு துறைகளுக்கேற்ப உரை நடையும் பல்வேறு வகையினவாக வெளிவருகின்றன. அறிவியல் கருத்துக்களை ஆங்கிலத்திலன்றிப் பிற மொழிகளில் கூறுதல், எழுதுதல் அரிது என்பர் ஆங்கிலமன்றிப் பிறமொழி அறியாத அறிவியலறிஞர். பிறமொழியறிஞர்கள் அறிவியலறிவும் சான்ற வராயின் அவர் காணும் அறிவியலுண்மைகளைத் தத்தம் மொழி யில் இனிய உரைநடை நூல்களாக எழுதி வழங்க இயலும்: தமிழறிவு சான்ற அறிஞர்களில் அறிவியலறிவும் பெற்றவர் சிலர் உளர். அறிவியல், ஆங்கிலம் கற்றோர் மட்டுமே அறியும் அரிய இயலாகாது பிறரும் அறியும் எளிய இயலாக்கி உரை நடை நூல்கள் சிலவற்றை இக்கால அறிஞர் எழுதி வருகின் றனர்.

"Liquid cannot be compressed" என்னும் அறிவியலுண்மை ஒன்று உண்டு. இதனைப் பாமரரும் உணரும் வகையில் எளிய இனிய தமிழ் உரைநடையின் வாயிலாக உணர்த்துகின்ருர் பேராசிரியர். திரு கே. எஸ். மகாதேவன் அவர்கள்.

பொருள்களை அவை காணப்படும் உருவ நிலைக்கு (State of existence) ஏற்பத் திண்பொருள் (solid), நீர்ப்பொருள் (liquid), ஆவிப்பொருள் (gas) என்று பிரித்துப் பேசுகின்றோம். திண்பொருளுக்கும் ஆவிப்பொருளுக்கும் இல்லாத சில சிறந்த இயல்புகள் நீர்ப்பொருளுக்கு இருப்பதை இன்றைய அறிவியல் நமக்கு அறிவுறுத்துகின்றது. பொதுவாகத் திண்பொருளையும் ஆவிப்பொருளையும் அழுத்தத்தினால் (pressure) அளவில் சுருங்கும்படி செய்யலாம். அரிசி, உமி, தவிடு போன்ற பொருள்களை அழுத்தி அழுத்தி அளந்து, ஒரு படியை முக்காற் படியாகக் காட்டலாம். அதேபோன்று ஓர் உதைபந்தில் (foot-ball) இயல்பாக அது கொள்வதைப் போன்று மூன்று மடங்கு அளவிற்கு வேண்டுமானாலும் காற்றினை அடைத்து வைக்கலாம். ஆனால் எவ்வளவுதான் அழுத்தி அழுத்தி அளந்தாலும், ஒரு படி பாலையோ, எண்ணெயையோ அல்லது நீரையோ குறைத்து அளந்து காட்ட முடியாது. இதிலிருந்து அழுத்தத்தினால் நீர்ப்பொருள்கள் (liquids) அளவில் சுருங்குவதில்லை என்பது விளங்குகிறது. இவ்வியல்பை நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு (non-compressibility of liquids) என்று அறிவியல் குறிப்பிடுகிறது. இவ்வுண்மையைக் கண்டுபிடித்தவர் கி. பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாஸ்கல் (Pascal) என்று சொல்வர். ஆனால் இதே உண்மையைக் கம்பர் காலத்தில் (12ஆம் நூற்றாண்டில்) தமிழ்நாட்டில் வாழ்ந்துவந்த ஔவையார் அழகாக எடுத்துக்கூறியுள்ளார். இயல்பாக நிகழ்ந்து வருவதை யாரும் எளிதில் மாற்றிவிட முடியாது என்ற கருத்தை வலியுறுத்த விரும்பிய அவர், நீர்ப்பொருளின் இந்தச் சுருங்கா இயல்பை,

> "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
> நாழி முகவாது நால்நாழி—தோழி
> நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்
> விதியின் பயனே பயன்"

என்ற பாடலில் விளக்கமாக வெளியிடுகின்றார். மேலும் "ஆழ்கடல் நீர்", "ஆழ அமுக்குதல்" ஆகிய தொடர்கள் அறிவியல் நுட்பம் வாய்ந்தவை...........

—தமிழன்—அறிவியல் முன்னோடி.

இப்பகுதியில் அறிவியல் உண்மைகளை அறிவிக்கும் ஆங்கிலச்சொற்கள் இனிய எளிய தமிழ் வடிவம் பெற்று உள்ளத்திற்கு உவகை தருகின்றன உருவநிலை, திண்பொருள், நீர்ப்பொருள், ஆவிப்பொருள், அழுத்தம், நீர்ப்பொருளின்

சுருங்கா இயல்பு என்பன பொருட் செறிவு மிக்க தூய தமிழ்ச் சொற்களாய்த் திகழ்தல் பேராசிரியரின் தமிழ்ப் புலமையையும், அறிவியல் அறிவையும் ஒருங்கு காட்டுவதாகும். அறிவியல் அறிவுள்ள தமிழ் அறிஞர் மகாதேவனைப்போன்று அறிஞர் பலர் முன்வரின் ஆங்கில மொழியிற் காணும் அறிவியல் நூல்கள் அனைத்தும் இனிய எளிய தமிழ் உரைநடை நூல் வடிவு பெற்றுப் பாமரரும் அறிவியலறிவு பெறுதற்குத் துணை புரியும் எனலாம்.

அரசியல் நடை

மக்கள் பலர்முன் பேசும் உரைநடை, மக்கள் பலருக்கு எழுதும் உரை நடை என உரைநடையை இரண்டாகக் கூறலாம். இவ்விருவகை உரைநடையும் உணர்ச்சி மிக்கன வாதல் வேண்டும். கேட்போரையும், படிப்போரையும் அவை தம்பால் பிணிக்கும் தகையனவாதல் வேண்டும். பகைவரும் விரும்பிக் கேட்கும் பண்பினவாதலும் வேண்டும்.

> "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாம் சொல்"

எனப் பேசும் உரைநடைக்கு இலக்கணம் வகுப்பார் வள்ளுவர். இவ்விலக்கணம் எழுதும் உரைநடைக்கும் முற்றிலும் பொருந்தும்.

கேட்டாரைப் பிணித்துக் கேளாரையும் தம்பால் இழுக்கும் சொல்வன்மை அரசியல் தலைவர்களுக்கு இன்றியமையாத தாகும். இன்று அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோரில் பலர் பேச்சு வன்மை வாய்ந்தவராய் விளங்குகின்றனர். பேச்சு வன்மையாலேயே அரசியலில் வெற்றி பெறும் கட்சிகளும் சிலவுள. ஆயினும் கருத்து வன்மையுடன் கூடிய பேச்சு வன்மை ஒரு சில அரசியல் தலைவரிடம் மட்டுமே காண முடிகிறது. அத்தகைய அரசியல் தலைவர்கள் பேசும் உரை நடை கேட்போரைப் பிணிக்கும் ஆற்றல் வாய்ந்தது. அன்னார் எழுதும் உரைநடை படிப்போரைக் கவரும் பான்மை மிக்கது. காலம் சென்ற அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சும், எழுத்தும் இத்தகைய ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தமை அறிகிறோம். பட்டம் பெறும் மாணவர்களின் கடமையை அவர் தம் நெஞ்சில் பதியும் வண்ணம் அவர் பேசிய எழுதிய உரைநடை இதோ.

தந்தையின் கழுத்தில் பூட்டிடவோ கத்தும் கடல் மூழ்கி முத்தெடுப்பீர் : ? தனக்கென வந்துள்ள தையல் அன்றோ அதற்கு உரியவள் ?

அரைத்தெடுத்துப் பூசி மகிழ்தற்கன்றோ சந்தனம், அடுப்பு எரிப்பதற்கோ ?

பட்டம் பெறுவதும் பயிற்சி பெறுவதும். நாட்டினருக்கு நல்வாழ்வு தந்திட, எனக்கென்ன தருகின்றனர் ஏன் இந்தத் தாமதம் என்ற கணை தொடுக்க மட்டுந்தானே ?

அறிவும் அறியாமையும் எல்லா நாட்டுக்கும் உரிய பொதுவுடைமை. அறிவுச் செல்வம் நம் நாட்டதெனினும் சரி, பிற நாட்டதெனினும் சரி இரண்டையும் ஏற்றுப் போற்றுதலே ஏற்புடையது. அறியாமை நல்கும் கருத்தாயின் அது நமதாயி னும் பிறரதாயினும் அவற்றை ஒழித்து வாழ்தலே உயர்வு தருவதாகும். நமது முன்னோர் கூறிய கருத்தனைத்தும் மிக மிக உயர்ந்தனவெனக் கோடலும் பொருந்தாது.

"முன்பிருந்ததோர் காரணத் தாலே
மூடரே பொய்யை மெய்யென லாமோ?
நீர்பி றக்குமுன் பார்மிசை மூடர்
நேர்ந்த தில்லை எனநினைந் தீரோ?"

என்பன பாரதியின் கவிதை நடை. இக்கவிதை நடைக்கு மெருகுதருவது போன்று கூறும் அறிஞர் அண்ணா அவர்களின் அழகிய உரைநடைத்திறனைக் காண்க.

"இந்நாட்டுத் தேள் எனின், கொட்டிடின் குளிர்ச்சியோ காண்போம்? பிற நாட்டுத் தேன் எனின் பருகிடிற் கசப்போ இருந்திடும்?

"எங்கிருந்து கிடைத்திடினும் ஏற்புடையதெனின் எம தாக்கிக் கொள்வோம் என்ற நோக்கம் தேவை. அதனைத் தந்திடவும், அதன் பயன் கண்டிடவும் முனைந்து பணியாற்ற வேண்டும்.

கருத்தளவில் அமைந்த பாரதியின் கவிதைநடை, உள்ளத்தில் பதியும் உவமைகளுடன் கூடிய உரைநடையாகி மிளிர்தலை அண்ணா அவர்களின் எழுத்து வன்மையிற் கண்டு மகிழ்கின்றோம்.

அரசியல் என்பது யாது? அவ்வரசியலுக்குரிய கோட்டையும் கொடி மரமும் பிறவும் எங்கிருந்து வந்தன? அவ்வரசியல் நடத்தும் அதிகாரிகளின் வாழ்வும் அவர்தம் அறிவியற் பெருங் கூடங்களும் எவற்ருல் அமைந்தன? இவற்றிற்கெல்லாம் விடை காண வேண்டும். விடை கூறுதற்கு வெறும் அரசியல் அறிவு மட்டும் போதாது, சொல் வன்மையும் கலந்த அரசியல் அறிவு மிக மிகத் தேவை. பேச்சு வன்மையும் எழுத்து வன்மையும் சான்ற அரசியல் அறிஞர் அண்ணு அவர்களின் விடை இதோ.

"முழு வயிறு காணுதார்,
முதுகெலும்பு முரியப் பாடுபடுவோர்,
வாழ்வின் சுவை காணுர்,
வலியோரின் பகடைச் சாய்கள்,
ஓடப்பர்

இவரெல்லாம் தருகின்ற வரிப்பணமே,

கோட்டையாய், கொடிமரமாய், பாதையாய், பகட்டுக்களாய்,
அமல்நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும்
கூடங்களாய்த் திகழ்கின்றன,"

—அறிஞர் அண்ணு அவர்களின் பட்டமளிப்பு விழாப்பேருரை.

அரசியல் உண்மையைத் தமது அழகிய சொல்வன்மையால் அமிழ்தனைய உரைநடையாக்கி இங்ஙனம் வழங்குகின்ருர் இரண்டும் வல்ல அறிஞர் அண்ணு அவர்கள்.

பல்கலை நடை

எல்லார்க்கு ஒவ்வொன் றெளிது. ஒருவர் ஒரு கலையை மட்டும் பயின்று அக்கலைச் செல்வத்தை நூலாகவும் கட்டுரையாகவும் வழங்கும் கலைச் செல்வங்களில் சிலவற்றைக் கண்டோம். இனிப் பல கலைகளையும் பயின்று அப் பலப்பல கலைச் செல்வங்களையும் உரைநடையில் அமைந்த கட்டுரையாகவும், நூல்களாகவும் வழங்கிவரும் அறிஞர் மிக மிகச் சிலரேயாவர். அவருள் தலைசிறந்த அறிஞர் பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனட்சி சுந்தரனுர் எனலாம். இவர்களால் நாம் பெற்ற உரைநடைச் செல்வங்கள் பலப்பல. இவர்தம் உரைநடையில் சமுதாயக் கருத்துக்கள் ஒளிவிடும். சமயக் கருத்துக்கள் நடமிடும். மொழியியற் கருத்துக்கள் திகழும். பொருளியல் உண்மைகள் தவழும். இலக்கிய ஆராய்ச்சி இடையருது செல்லும். இன்னும் பலப்பல கலைகள் ஆங்காங்கு மிகுதியாகக் காணப்பெறும்.

ஆங்கிலம் வேண்டுமா வேண்டாமா? எந்த அளவு வேண்டும்? எந்த அளவு வேண்டாம்? இவை இன்று நம் அனைவர்தம் மூளையையும் குழப்பும் கேள்விகள். இக்கேள்விகளுக்குப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அளிக்கும் விடை நமக்குத் தெளிவு தருவதாகும். இதோ அவர்தம் தெளிவுரை.

"ஆங்கிலம், நம் மாணவர்கள் அறியவேண்டும். ஆனால் ஒரு மொழியை அறிவதில் இரண்டு வேறு நிலையுண்டு. ஒன்று அந்த மொழியிலுள்ள நூல்களை விரும்பிக் கற்று அறிந்து

கனவு

சின்ன இளமைப் பருவத்தில்
சிரித்து மகிழ்ந்த இளையோரும்
பின்னர் பள்ளி நாட்களுடன்
பிரிந்து போன நட்பினரும்
எண்ண வளரும் கொள்கைகளால்
இதயம் கலந்த தோழர்களும்,
வண்ண நிழல்போல் வருவார்கள்
விடியும் முன்னர் பிரிவார்கள்!

நீண்ட வாழ்க்கைப் பயணத்தில்
நாளும் நாளும் சந்தித்தே
தூண்டும் இன்பம் தந்தவர்கள்
துயரைப் பங்கிச் சென்றவர்கள்
மாண்டு மண்ணில் மறைந்தார்கள்;
மறைந்தும் நெஞ்சக் கூட்டிற்கு
வேண்டும் இரவில் வருவார்கள்;
வாழ்த்துக் கூறி மறைவார்கள்;

—பழமன்.

கொள்ளும் அளவு கற்பது. மற்றொன்று, அதிலேயே எழுதும் அளவு கற்பது. எனக்கு வடமொழி வரும். வடமொழி நூல்களை நான் படிக்க முடியும். ஆனால், அதிலே நான் எழுத முடியாது. எழுத முயல்வது வீணேயாம். நம்முடைய மாணவர்களும் ஆங்கில நூல்களைக் கற்றறியக் கூடிய அளவு ஆங்கிலம் அறிந்தால் போதும். ஆங்கிலம் பேச்சு மொழியாதலின் சிறிதளவு முயன்றால் எழுதவும் வரலாம். மிக மிக முயன்று இரண்டோர் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிவிடலாம். ஆனால், எல்லாவற்றையும் ஆங்கிலத்திலேயே எழுதவேண்டும் என்று வற்புறுத்துவது பொருளற்ற பயனற்ற முயற்சியேயாம்."

பல்கலைச் செல்வர் ஆய்ந்து கூறும் சமய உண்மையைக் காட்டும் உரைநடை இதோ.

''போதியார் எனச் சம்பந்தர் பௌத்தர்களைக் குறிக்கின்றார். ஆதலால், இளம்போதியார் என்ற சங்கப் புலவர் பௌத்தப் பாவாணரே ஆவர். சங்கப் பாக்களில் பௌத்தக் கொள்கைகள் பாவடிவம் பெற்று மக்கள் மனத்தினைக் கவர்ந் திருத்தல் வேண்டும். இளம்போதியார் என்ற பெயரே மற்றொரு மூத்த தமிழ்ப் பாவாணர் இருந்ததனை நிலை நாட்டுகிறது. சங்கப் புலவராம் சீத்தலைச் சாத்தனாரும் மணிமேகலை என்ற பௌத்தப் பெருங்காப்பியத்தினைப் பாடிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் ஒருவரே என்ற கொள்கையும் உண்டு. அப்படியானால், அவரும் பௌத்தரே யாவர். பௌத்த மதக் கொள்கைகளைப் பரப்பவும் புத்தர் பெருமைகளைப் பேசவும் எழுந்தது அந்தக் காப்பியம்.

"எல்லாம் வடமொழியிலிருந்தே வந்தன'' என்று கூறி மகிழும் பித்தர் சிலர் உளர். வடமொழியையும் கற்றுத் தமிழ்க் கருத்துக்களை ஆராயும் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் ஆராய்ச்சியுரை அப்பித்தர்களுக்குத் தெளிவு தருவதாகும்.

வடமொழியில் உள்ளன எல்லாம் முதல் என்றும், தமிழில் உள்ளன எல்லாம் வடமொழியின் மொழிபெயர்ப்பே என்றும் கூறும் மனப்பான்மை பிற்காலத்தே எழுந்து பேயாட்டம் ஆடிக் கொண்டிருக்கிறது. கைவல்லிய நவநீதம் என்ற தமிழ் நூலைச் சங்குகவி வடமொழில் மொழிபெயர்த்துள்ளார் என்பர். ஆனால் உள்ளிருக்கும் ஆன்மாவைக் குகேசன் என்று நெஞ்சக் குகையில் உள்ளதனை விளக்குவார் போலத் தமிழ் ஆசிரியர் கூற, அதனை வல்லீசன் என அவ்விடத்திற்கு ஒரு தொடர்புமின்றி மொழி பெயர்ப்பது ஒன்றுமே எதுமுதல் நூல் என்பதனை விளக்கிவிடும்.''

—தமிழ்மணம்

இங்ஙனம் விடுதலைக்குப் பின்னர் எழுந்த உரைநடை நூல்கள் பல. அவை உணர்த்தும் கலைகள் பல. அவற்றில் காணும் நடைவேறுபாடுகள் பலப்பல. உலகியல் கலைகள் அனைத்தும் தமிழ் உரைநடை நுல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவரும் நாள் விரைவில் வரும்.

———

தமிழ் நாட்டில் திருச்சி மாவட்டத்தில் 8,28,800 ஹெக்டேர் நிலப்பரப்பில் தற்போது 81,000 வாடிக்கையாளர்களுக்கு மின்விசை வழங்கும் அனுமதியாளர்.

சௌத் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிமிடெட்,

தென்னூர், திருச்சிராப்பள்ளி-17.

★

மின்விசை வேண்டுவோர் விண்ணப்பிக்கலாம். அவர்களது கோரிக்கைகள் உடனடியாக கவனிக்கப்பெறும்.

With Best Compliments
from

ALL INDIA CRIMPERS ASSOCIATION

SILK HOUSE - SILK BAZAAR

BOMBAY-2

Telegrams : CRIMPASSO

ENFIELD SERVES YOU IN ALL FIELDS

In transport
Through its superb
Motorcycles

BULLET
&
CRUSADER

In Agriculture & Industry
Through its renowned
'VILLIERS' agro industrial engines

And

An efficient after sales service
Through a net work of
Dealers throughout India

ENFIELD Stands for SERVICE

The Enfield India Limited

MADRAS-600019

With Best Wishes and Compliments of

Endee Woollen & Silk Mills Private Limited

14/4, Milestone, Mathura Road
Faridabad (HARYANA)

With compliments of

SHALIMAR INDUSTRIES Private LTD.,

25, GANESHCHANDRA AVENUE,
Calcutta-13.

SILVER JUBILEE YEAR
1947–1972

Manufacturers of :

JUTE AND TEXTILE MILLS ACCESSORIES, CARD/GILL PINS
HIGH CARBON AND MILD STEEL WIRES UPTO 36 S W G,
MILD GALVANIZED AND COPPER WIRES

Telegram : CUTSIZE Telephone : 23-7721

தில்லித் தமிழ்ச் சங்கம்
வெள்ளி விழா
(1946 - 1971)

அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வெள்ளி விழாவைத் துவக்கிவைத்து உரையாற்றுகிறார்கள். புலவர் கீரன், திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், சிறப்பு விருந்தினர் (தலைமை ஆட்சி உறுப்பினர், தில்லி மாநில அரசு) திரு. விஜயகுமார் மல்ஹோத்ரா, சங்கத்தின் தலைவர் திரு. சி. வி. நரசிம்மன், வெள்ளிவிழா மலர் ஆசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன், சங்கத்தின் துணைத் தலைவர், திரு. ஏ. ஜி. வி சுப்பிரமணியம் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

வெள்ளிவிழா மலரின் முதல் பிரதியை அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடமிருந்து சிறப்பு விருந்தினர் திரு. விஜயகுமார் மல்ஹோத்ரா அவர்கள் பெற்றுக் கொள்கிருர்கள்.

சங்கத்தை வளர்த்துதவிய அறிஞர் பெருமக்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. சங்கத்தின் முன்னுள் தலைவர் திரு. கே. வி. வெங்கடாசலம் அவர்களுக்கு விழாத் தலைவர் நினைவுப் பரிசிலை வழங்குகிருர்.



விழாவில் கலந்து கொண்ட தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் வெள்ளி விழா நினைவாக நினைவுப் பரிசில்கள் அளிக்கப்பட்டன. இப் படத்தில் வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பரிசிலைப் பெற்றுக் கொள்கிறார்கள். அமர்ந்திருப்பவர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்.

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு சங்கச் செயலாளர் திரு. எஸ். ரங்கராஜன் மலர் மாலை அணிவிக்கிறார்.



திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பேசுகிறார்கள். தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் கே. ஆறுமுகம், திருமதி செல்லபாப்பா கீரன் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்.

புலவர் கீரன் அவர்கள் சொற்பொழிவாற்றுகிருர்கள். அமர்ந்திருப்பவர்கள் திரு. ஏ. வி. குப்புசாமி (சங்கத்தின் முதல் செயலாளர்), திரு. சி. வி. நரசிம்மன், திரு. கி. வா. ஜகந்நாதன், அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், மத்திய கல்வித்துறை துணை அமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி, திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர்.

இசைமணி திரு. சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின்
இன்னிசை நிகழ்ச்சி.



வெள்ளிவிழாவுக்கு வருகைதந்த பெருமக்களின் ஒரு பகுதி.

சுதந்திரத்துக்குப் பிறகு

மொழிபெயர்ப்புகள்

[க. நா. சுப்ரமண்யம்]

தமிழிலக்கியத்தில் போதுமான அளவுக்கு இலக்கிய பூர்வமான மொழிபெயர்ப்பு நூல்கள் வந்துள்ளனவா என்று கேட்டால், இல்லை என்றுதான் பதில் சொல்ல வேண்டும். அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்கிற அளவுக்குக்கூட மொழிபெயர்ப்புகள் வெளியாகவில்லை. அதுவும் சமீப காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவில் எந்த மொழி பெயர்ப்பும் என் கண்ணில் படவில்லை.

1935க்குப் பிறகு 1950 வரையில் சரசரவெனப் பல உலக இலக்கிய நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று ஓரளவுக்கு வாசகர்களிடையே ஓர் ஆர்வத்தையும் தூண்டின. அப்போதுங் கூட இலக்கிய வேகத்தை உண்டாக்கித் தாங்கக் கூடிய அளவுக்கு மொழிபெயர்ப்புகள் வந்ததாகச் சொல்வதற்கில்லை. அந்தக் காலக் கட்டத்தில் மொழிபெயர்ப்புகள் செய்து வெளியிட முன்வந்தவர்கள் ஓரளவுக்குத் தங்கள் இரசனையினுல் தூண்டப் பெற்றவர்களாக, இந்த நூல் தமிழில் இருந்தால் நன்ருக இருக்குமே என்று எண்ணி, அதனுல் தங்களுக்கு இலாபம் என்ன கிடைக்கும் என்கிற எண்ணத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு மொழி பெயர்ப்பதில் ஈடுபட்டனர். அந்த அளவுக்குச் சுதந்திரத்திற்குப்பின் ஓர் உந்துதல், ஈடுபாடு இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

பிளேட்டோ, ரூஸ்ஸோ, டால்ஸ்டாய் மற்றும் பங்கிம் சந்திரர், ரவீந்திரநாத தாகூர், பிரேம்சந்த், சரத் சந்திர சட்டர்ஜி, வி. ஸ. காண்டேகர் முதலியவர்களுடைய நூல்கள் தமிழில் மளமளவென்று இலாபத்தைக் கருதாமல் மொழி பெயர்க்கப் பெற்றுத் தமிழ் இலக்கியத்துக்கு வலிமை தந்தன. 1950லும் அதற்குப் பின்னரும் சோவியத் அரசாங்க ஸ்தாபன மும், அமெரிக்க அரசாங்க ஸ்தாபனமும் ஏற்பட்டு, போட்டி போட்டுக் கொண்டு அதன் விளைவாக, மொழி பெயர்ப்பாளரின்

இரசனையின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களுக்குப் பதிலாக, பணம் தரக்கூடிய நூல்களை மொழி பெயர்ப்பதில் ஈடுபட்டனர். இதுவே, நல்ல தரமான இயக்கம் என்று சொல்லும்படியான அளவுக்கு 1956க்குப்பின் சாகித்திய அகாதெமி, இந்திய அரசாங்கத்தின் சார்பில் ஏற்பட்டு, மொழி பெயர்ப்பில் செயல் படத் தொடங்கியது. அதுவரை இலக்கியத் துறையில் மொழி பெயர்ப்பு என்பதிலே நம்பிக்கையே வைக்காத பலரும், மொழி பெயர்ப்பாளராஞர்கள். அவர்கள் செய்த மொழி பெயர்ப்புகளும் குப்பை கூளங்களாகத் தமிழ் வாசகர்கள்மேல் ஏற்றப்பட்டு மொழி பெயர்ப்பு என்றுலே இலக்கியத் தரமில்லாதுதான் இருக்கும் என்கிற எண்ணம் பலருக்கும் ஏற்படக் காரணமாகி விட்டது.

மூல(Original)எழுத்துப்போல, நாவல், கவிதை, நாடகம், விமரிசனம் போன்ற துறைகள் போல இலக்கியத்தில் மொழி பெயர்ப்பும் ஓர் அவசியமான துறை. மொழி பெயர்ப்பு வேகம் அதிகமாக இருக்கும் கால கட்டத்தில்தான் இலக்கிய வேகமும் ஒரு மொழியில் சுத்தமாக இருக்கும் என்பதற்கு உதாரணமாக உலக இலக்கியச் சரித்திரத்தில் பல பகுதிகளைச் சொல்லலாம். குறிப்பாக ஆங்கில இலக்கியத்தின் ஷேக்ஸ்பியர் காலத்தையும் இரண்டாவது எலிஸபெத் காலமான இந்தக் காலத்தையும் சொல்லலாம். 1945 இல் தமிழ் இலக்கியம் ஓரளவுக்குத் தேக்கம் பெற்றது. அதன் விளைவாக 1950 முதல் சுமார் 1965 வரையில் மொழி பெயர்ப்பும் தேக்கமுற்றது. இந்தப் பதினைந்து ஆண்டுகளில் பிற நாட்டு அரசியல் ஸ்தாபனங்களும், இந்திய மத்திய அரசாங்க, மாகாண அரசாங்க ஸ்தாபனமும் மொழி பெயர்ப்புகளின் தரத்தைக் குறைக்கவே உபயோகப்பட்டன. இந்தக் கால அளவில் வெளி வந்துள்ள தமிழ் மொழி பெயர்ப்பு நூல்களில் எஸ். மகராஜன் செய்த ஷேக்ஸ்பியர் ஹாம்லெட் நாடகத்தையும், சித்த லிங்கய்யாவின் கரந்த் நாவல் மொழி பெயர்ப்பும் தவிர, வேறு ஒரு மொழிபெயர்ப்பு நூல்கூடத் தமிழில் இலக்கியத்தரமான தாக வெளிவரவில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஓர் ஆண்டில் பத்திருபது நூல்களாவது உலக இலக்கிய வரிசையிலிருந்தும் ஒரு பத்திருபது நூல்கள் இந்தியப் பிற மொழிகளிலிருந்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டி யிருக்கின்றன. அப்படி ஓர் ஆண்டில் முப்பது நாற்பது இலக் கிய நூல்கள் பிறமொழிகளிலிருந்து வந்துகொண்டேயிருந்தால் தான், அதன் பாதிப்பினுலும் விளைவாலும் தமிழிலும் ஒரு பத்துப் பன்னிரண்டு நூல்கள் வெளிவர முடியும். அதில்லாமல்

எங்ளுகக்கு முன்னேயே எங்கள் புதுக்கதைகளேயும் பழங்கதைகளேயும் பேசிக்கொண்டே பொழுதைப் போக்கி வருகிறோம். எங்களுக்குக் கல்கி போதும், சாண்டில்யன் போதும், அகிலன் போதும்—இதற்கெல்லாம் மேலே இலக்கியமா, அது எங்கே இருக்கிறது என்று நமக்குள்ளேயே சொறிந்து கொடுத்துக் கொண்டே இருந்துவிட்டால் இலக்கியம் தேங்காமல் என்ன செய்யும் ?

மொழிபெயர்ப்புகள் படிக்கிற மனப்பான்மை வளர வேண்டும். தமிழர்களிடையே இந்த மனப்பான்மை வளர வில்லே. தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த இலக்கியப் பிராந்தியத்தையும் பற்றி நினேவேயில்லாதவர்களேப் பற்றி நாம் பண்டிதர்கள் என்று அபிப்பிராயம் கொண்டிருக்கிறோம்.

பத்திரிகை

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னே மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்;
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம்காணர் ஞாலம் காணர்!

சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே;
அறைதனில் நடந்தவற்றை
அம்பலத் திழுத்துப் போட்டுக்,
கறையுளம் தூய்மை செய்வாய்;
களேப்பிலே ஊக்கம் பெய்வாய்;
நிறைபொருள் ஆவாய், ஏழை
நீட்டிய வெறுங்க ரத்தே! —பாரதிதாசன்.

தமிழில் உள்ளது போதும் வேறு எதுவும் நமக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லே என்கிற ஒரு மனப்பாங்கு நமக்குள்ளே பெருமளவிற்கு வளர்ந்து வந்திருப்பது கண்கூடு. டால்ஸ்டாய் நிறையத் தமிழில் படிக்க வேண்டும், ஷெரிடனேப் படிக்க வேண்டும், அல்டேர்கேடுவைப் படிக்கவேண்டும், ஃபாகனரைப் படிக்கவேண்டும் என்று எந்த விதமான ஆர்வமும் காட்டாமல் மு. வ., மு. கருணாநிதி என்று சிந்தனேகளேத் தேக்கிவிடுகிற காரணமாகத்தான் தமிழில் மொழிபெயர்ப்புகள் அதிகமாகத் தோன்றவில்லே என்று எனக்குத் தோன்றுகிறது.

இதற்கிடையில் சிறிது சிறிதாக இரஷ்ய, அமெரிக்க அரசாங்கங்கள் மொழி பெயர்ப்புகள் வெளியிடும் பாணியைச் சுருக்கிக்கொண்டார்கள். 1960க்குப் பின் அவர்கள் நூல்கள் அதிகமாக வெளிவரவில்லை. சாகித்ய அகாதெமியும் ஆரம்பத் துரைத்தனமாகப்பல ஐரோப்பிய, இந்திய நூல்களையும் மொழி பெயர்த்து வெளியிட்டுவிட்டு அவை வெற்றி பெறவில்லை யென்று சொல்லி மேலே ஏற்றுக்கொண்ட மொழி பெயர்ப்பு களையும் நிதானமாகச் செய்யத் தொடங்கியது. புதிதாகத் தோன்றிய நேஷனல் புத்தக டிரஸ்ட் தாங்களே எழுதி வெளி யிட்ட பல நிபுணர்களின் நூல்களைத் தமிழிலும் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறது. இந்த நிபுணர்களின் முதல் நூல்களே சரிவர அமையவில்லை. உதாரணம் கோபால் சிங்கின் 'குரு கோவிந்த சிங்,' பி. சாம்பமூர்த்தியின் 'ஸ்ரீ தியாக ராஜா', திலீப் முகர்ஜியின் 'சைதன்யா' இவற்றைச் சொல்ல லாம். நிபுணர்களைத் தேர்ந்தெடுத்ததில் தவறில்லை; அவர் களுக்கு ஜீவிய சரித்திரங்கள் எழுதிக் கைவரவில்லை. சைதன் யாவும், குரு கோவிந்த சிங்கும், தியாகராஜாவும் பிறவிக் கடல் நீந்திக் கரையேறப் பிறந்தவர்கள்; அவர்களைத் தங்கள் நூல்களிலேயே பல பக்கங்களில் பிறக்க வைக்கிறார்கள் இந்த நூல்களின் ஆசிரியர்கள்.

ஆதான் - பிரதான் என்று ஒரு திட்டத்தையும் மேற் கொண்டுள்ளது. நேஷனல் புக் டிரஸ்ட் நூல்களைத் தேர்ந் தெடுத்து மொழி பெயர்க்கின்ற காரியத்தை அது மிகவும் தரமற்ற வகையில் செய்கிறது என்றுதான் சொல்லவேண்டும். பகவத் சரன் வர்மாதான் ஹிந்தியில் ஆலோசகர்: தமிழில் மீ. ப. சோமசுந்தரம் ஆலோசகர். அவர்களுடைய இலக்கியம் சுவர்களைத் தாண்டி வெகுதூரம் சென்றுவிட்டது. அவர்கள் பத்தாம்பசலி நூல்களை, இந்திய இலக்கியம் என்று ஆதான் - பிரதான் வரிசையில் வெளியிட்டு வருகிறார்கள். மொழி பெயர்க்கத் தேர்ந்தெடுக்கப்படும் முறையும் பெயர்களும் தரமாக இல்லை என்று சொல்லவேண்டுவதேயில்லை. ஸ்தாபனத்துக்கோ, அதன் ஆலோசகர்களுக்கோ வேண்டியவர் களாக இருந்தால் போதும் - மொழி பெயர்க்கத் தகுதி வந்து விடும் என்று அவர்கள் நினைக்கிற மாதிரி தெரிகிறது.

அரசாங்க அல்லது அரை அரசாங்க மொழி பெயர்ப்பு முறைகள் சிரிப்புக்கிடமாக இருக்கின்றனவே தவிர மொத்தத்தில் இலக்கியத்துக்கு இடமாக இல்லை. உதாரணமாகச் சாகித்ய அகாதெமி தயவில் வங்க இலக்கிய வரலாறு என்று ஒரு மொழி பெயர்ப்பு தமிழில் வந்துள்ளது. இதில் ஒரு வாக்கியம் "கவி

ரவீந்திர நாத தாகூரின் சகோதரியின் மகளை அவர் திருமணம் செய்துகொண்டார்; அவர் சகோதரரும் அவ்வாறே செய்தார்'' என்று இருக்கிறது. இந்த நூலை மொழி பெயர்த்தவர் பழைய இலக்கியக் குடியைச் சேர்ந்த பெரும்புலி - பல மொழி பெயர்ப்புக் கருத்தரங்குகள் நடத்தியவர் - ஆனல், அவை Southern Languages Books Trust சார்பில் நடந்தவை - ஆகவே, இலக்கியத் தரமானவை அல்ல என்று திடமாகச் சொல்லலாம். இந்த மொழி பெயர்ப்பு சரியாக இருக்கிறதா என்று சரிபார்த்து, இந்த வாக்கியம் உண்மையில் சரியென்று சொன்னவர் புதுப் புலி பேராசிரியர், டாக்டர், இத்யாதி. இந்த மொழி பெயர்ப்பு சரியாக இருக்கிறதா என்று அவர் பார்த்துக்கொள்வதற்காக அவர் சாகித்ய அகாதெமியிலிருந்து பெற்றுக்கொண்ட கூலி ஓர் ஆயிரம் ரூபாய். மொழி பெயர்ப்பாளருக்கு அதிகம் கிடைத்திருக்கும்.

தமிழில் அதே நேரத்தில் சற்றுத் தரமான முயற்சிகளும் நடைபெருமல் இல்லை. ஆனல், அவை கண்ணுக்கெட்டாமல் பசியும் பரிதவிப்புமாக ஏதோ சிலரால் தங்கள் தங்களுக்கெட்டிய வகையில் செய்யப்பட்டு வருகிறது. ஐரோப்பிய, ஜப்பான் கவிதைகளில் சிலவற்றைச் சில இளங் கவிஞர்கள் மொழி பெயர்த்து வெளியிட்டு இருக்கிருர்கள். சில சிறுகதைகள் வெளியிடப்பட்டுள்ளன. சில இலக்கியக் கட்டுரைகளும் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன. இவையெல்லாம் தமிழில் இந்தக் காலக் கட்டத்திலும் மொழி பெயர்ப்புக் கலை இறந்துவிடவில்லை என்பதைக் காட்டவே போன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளியாகியுள்ளன. ஆனல், ஒட்டு மொத்தமான இலக்கியப்படைப்பு ஏற்படுத்தக் கூடிய அளவில் மொழி பெயர்ப்புகள் வந்துகொண்டிருக்கவில்லை என்பதுதான் விஷயம்.

தமிழ் இலக்கியத்தில் ஒரு புது வேகம் 1965க்குப்பின் ஏற்பட்டு ஒரு புதிய ஞானக்கூத்தன், ஷண்முக சுப்பையா, அம்பை, எஸ். ராமகிருஷ்ணன், கா. கந்தசாமி என்று பலரும் பலவிதங்களில் சிறப்பாக எழுதி வருகிருர்கள். இந்தத் தலை முறைக்கு இரண்டொரு நல்ல மொழி பெயர்ப்பாளர்கள் தேவை - சாமிநாதன் என்றவர் சில மொழி பெயர்ப்புகளை எழுதிச் சிறு பத்திரிகைகளில் வெளியிட்டு இருக்கிருர். எழுத்துக் களில் மொழிபெயர்ப்புகளுக்குத் தமிழில் ஒரு வேகம் ஏற்படலாம்-ஏற்படவேண்டும். இந்த வேகம் எத்தனை நாள் நீடிக்கும் என்பது தமிழர்கள் மொழி பெயர்ப்புகளுக்குத் தரும் ஆதரவைப் பொறுத்தது.

With Best Compliments from

ESSO EASTERN INC.,

New Delhi

சுதந்திரத்துக்குப் பிறகு

சாகித்திய அகாதமியின் பரிசு பெற்ற ஒரு தமிழ் நூல்

[தி. இரா. பஞ்சாபகேசன்]

சாகித்திய அகாதமி 1954 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அகாதமியால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பிரதான பாரத மொழிகள் (அரசியல் சாசனம் குறிப்பிடும் 15 மொழிகள், 1966 இலிருந்து மைதிலி, 1970 இலிருந்து டோக்ரி) ஆங்கிலம் ஆகியவற்றில், இலக்கியத் தரத்தில் ''மிகவும் தன் சிறந்த'' நூல்களுக்கு ஐயாயிரம் ரூபாய் தொகையுள்ள பரிசுகளை அகாதமி ஆண்டு தோறும் வழங்கிவருகிறது. செப்பேடு அடங்கிய பேழை ஒன்றும் பரிசுடன் அளிக்கப்படுகிறது.

1955 இல் வழங்கப்பட்ட முதற் பரிசுகள், அதற்கு முந்தைய ஏழு ஆண்டுகளில் (நாட்டு விடுதலைக்குப் பிந்தைய ஏழு ஆண்டுகள்) வெளியிடப்பட்ட நூல்களுக்கானவை. அதன் பிறகு, முந்தைய மூன்று ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நூல்கள் மட்டுமே பரிசுக்குரியவையாகும்.

1955 முதல் 1971 முடிய 17 ஆண்டுகளில் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதில், 1957, 59, 60, 64 ஆகிய நான்கு ஆண்டுகள் நீங்கலாக 13 ஆண்டுகளில் தமிழ் எழுத் தாளர்கள் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பரிசு பெற்ற 13 தமிழ் நூல்களில் நாவல்கள் நான்காகும். மற்றும் வாழ்க்கை வரலாறுகள் 2, கவிதை 1, நாடகம் 1, சிறுகதை நூல் 1, கட்டுரை நூல்கள் 2, பயண நூல் 1, வேறு வகை உரைநடை நூல் 1, ஆகியவையும் பரிசு நூல்களில் அடங்கும். அந்த நூல்களின் விவரங்கள் வருமாறு :

ஆண்டு	நூல்	துறை	ஆசிரியர்
1955	தமிழ் இன்பம்	கட்டுரைகள்	(காலம் சென்ற) ரா. பி. சேதுப் பிள்ளை
1956	அலை ஓசை	நாவல்	(காலம் சென்ற) ரா. கிருஷ்ண மூர்த்தி- 'கல்கி'
1957	—	—	—
1958	சக்கரவர்த்தித் திருமகன்	உரைநடை யில் இராமா யணம்	சி. ராஜகோபாலாச்சாரி
1959	—	—	—
1960	—	—	—
1961	அகல் விளக்கு	நாவல்	டாக்டர் மு. வரதராசன்
1962	அக்கரைச் சீமையில்	பயண நூல்	மீ. ப. சோமசுந்தரம்
1963	வேங்கையின் மைந்தன்	நாவல்	''அகிலன்'' (பி. வி. அகி லாண்டம்)
1964	—	—	—
1965	ஸ்ரீராமானுஜர்	வாழ்க்கை வரலாறு	பி. ஸ்ரீ. ஆச்சாரியா
1966	வள்ளலார்கண்ட ஒருமைப்பாடு	வாழ்க்கை வரலாறு	ம. பொ. சிவஞானம்
1967	வீரர் உலகம்	பழந்தமிழ்இலக் கியத்தில் வீரம் கட்டுரைகள்	கி. வா. ஜகந்நாதன்
1968	வெள்ளைப்பறவை	கவிதை	அ. ஸ்ரீநிவாச ராகவன்
1969	பிசிராந்தையார்	நாடகம்	(காலம் சென்ற) பாரதிதாசன்
1970	அன்பளிப்பு	சிறு கதைகள்	(காலம் சென்ற) கு. அழகிரிசாமி
1971	சமுதாய வீதி	நாவல்	நா. பார்த்தசாரதி

சாகித்திய அகாடெமிப் பரிசு பெற்றுள்ள திரு. நா. பார்த்தசாரதி அவர்களுக்கு வரவேற்பு

திரு. நா. பார்த்தசாரதி அவர்கள் உரையாற்றுகிறார்கள். மேடையில் அமர்ந்திருப்பவர்கள் : திரு. சுந்தா, திரு. பி. பாலசுப்பிரமணியம், திரு அகிலன், டாக்டர் கே. ஆறுமுகம், திரு. சி. வி. நரசிம்மன், திரு. ஆர். எஸ். நல்லபெருமாள், திரு. ஜெகசிற்பியன்.

தேசிய விருது

பெற்றுள்ள

தமிழ்ப் பெருமக்களுக்கு வரவேற்பு

நாள் 26-3-72

வரவேற்பு விழாவில் திரு. பாபநாசம் சிவன் அவர்கள் உரை யாற்றுகிறுர்கள். மேடையில் அமர்ந்திருப்பவர்கள் (இட மிருந்து வலம்) திரு. லால்குடி ஜயராமன், ம. பொ. சி.யின் துணைவியார், திரு. ம. பொ. சிவஞானம், திரு. பாபநாசம் சிவன், வழுவூர். திரு. பி. இராமையா பிள்ளை, திரு. நெ. து. சுந்தரவடிவேலு, திரு. சி. வி. நரசிம்மன், திரு. பேராசிரியர் கே. சுவாமிநாதன்.

தெரிவு முறை: பரிசுக்குப் பரிசீலனை செய்யத் தகுந்த நூல்களைச் சமர்ப்பிக்குமாறு ஆசிரியர்களையோ வெளியீட்டாளர்களையோ அகாதமி வேண்டுவதில்லை. பரிசு நூலைத் தெரிந்தெடுப்பதற்கான வழிமுறை வருமாறு:

ஒவ்வொரு மொழியிலும் பரிசுக்குத் தகுதியுள்ள நூல்களைச் சிபாரிசு செய்யுமாறு, அந்தந்த மொழியைச் சேர்ந்த பல சிறந்த எழுத்தாளர்கள், கல்விமான்கள், மதிப்புரையாளர்கள் ஆகியோர் கோரப்படுவார்கள். அவர்கள் பரிந்துரைக்கும் நூற்பெயர்களின் மொத்தத் திரட்டு ஒன்று அந்த ஒவ்வோர் ஆலோசகருக்கும் அனுப்பப்படும். இந்தப் பட்டியலிலிருந்து பரிசுக்கு மிகவும் தகுதியுள்ளது எனத் தாம் கருதும் ஒரு நூலின் பெயரைச் சிபாரிசு செய்யுமாறு அவர்கள் மீண்டும் கோரப்படுவார்கள். இவ்வாறு சிபாரிசு செய்யப்படும் நூல்கள் ஒவ்வொரு மொழியிலும் மூன்று அறிஞர்கள் கொண்ட ஒரு குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். ஒவ்வொரு நூலையும் ஆய்ந்து படித்து தத்தம் மதிப்பீடுகளைத் தெரிவிக்குமாறு இவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள். பிறகு இந்தச் சிபாரிசுகளும் மதிப்பீடுகளும் சாகித்திய அகாதமியின் செயற்குழுவின் முன் வைக்கப்படும். பரிசுக்குரிய நூல்களைச் செயற்குழு முடிவு செய்யும். குறிப்பிட்ட ஒரு மொழியில் எந்த நூலும் பரிசுக்குரிய சிறப்புடையது அன்று என்றும் செயற்குழு முடிவு செய்யலாம்.

பரிசு சம்பந்தமான சில முக்கிய விதிகள் வருமாறு:

இலக்கியத்தில் குறிப்பிட்ட எந்த ஒரு துறைக்கு மட்டுமே பரிசு உண்டு என்ற நியதி கிடையாது. எத்துறையிலாயினும் இலக்கியத்திற் சிறந்த நூலுக்குப் பரிசு அளிக்கலாம்.

ஒரு நூலின் இலக்கியத் தகுதியே பிரதான அளவுகோலாகும். ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் கிட்டத்தட்ட சமத் தகுதி உள்ளவையாயிருந்தால், ஆசிரியரின் மொத்த இலக்கியப் பணியும் தகுதியும் கருத்தில் கொள்ளப்படலாம்.

மொழி பெயர்ப்புகளுக்குப் பரிசு கிடையா.

காலம் சென்ற ஆசிரியர் ஒருவரின் நூல்கள் அவரது மறைவுக்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்குள் வெளியிடப்பட்டிருந்தால் அவை பரிசுக்கு உரியனவாகும்.

சாகித்திய அகாதமியின் செயற்குழு உறுப்பினர்களின் நூல்கள் பரிசுக்கு உரியன அல்ல.

ஓர் ஆசிரியர் ஒருமுறைதான் பரிசு பெறலாம்,

ஓர் ஆசிரியர் தம் நூலுக்காக முனைப்புடன் பிரசாரம் செய்ததாகச் செயற்குழு தீர்மானித்தால், அந்த நூல் பரிசுத் தகுதியை இழக்கும்.

அரசினுல் நிறுவப்பட்டது என்ருலும் சாகித்திய அகாதமி ஒரு சுயேச்சை நிறுவனமாக இயங்குகிறது. பரிசு பற்றிய விதிகளும் மிகவும் கடுமையானவையே. எனினும், அரசுச் சார்புடையதோ, அற்றதோ நிறுவனம் என ஒன்று அமைக்கப் பட்டுவிட்டால், அது ஒரு "நிலை பெற்ற சக்தி" (Establishment) ஆகிவிடுகிறது. சுதந்திரப் பிரியர்களான அறிவு ஜீவிகள் அதற்கெதிராகக் கிளர்ச்சி செய்துகொண்டுதான் இருப்பார்கள். அப்படித்தான் இருக்கவேண்டும், அது அவர்களுடைய உரிமை.

வான்புகழ் கொண்ட திருவள்ளுவரே சங்கத்தால் ஏற்கப் படுவதற்கு உள்ளாகிய அல்லல் பற்றிக் கதை உண்டு. சங்கப் பலகை அவரை மூழ்கடித் திருந்தாலும் - சங்கம் என்பதொன்றே இல்லாதிருந்திருப்பினும் கூட - திருக்குறள் கால வெள்ளத்தில் கட்டாயம் மிதந்திருக்கும் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

நம் காலத்தில் வாழும் இலக்கியப் பெரியோர்களில் அநேகமாக அனைவரையும் சிறப்பித்து நாம் மகிழவேண்டுமென்ருல், பரிசளிப்பிற்கான நிபந்தனைகளில் சிறிது மாறுதல் செய்வது நலம் எனத் தோன்றுகிறது. உதாரணமாக, முந்தைய மூன்று ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நூல்களே பரிசுக்கு உரியன என்ற நிபந்தனையை மாற்றலாம். சங்கீத நாடக அகாதமி அளிக்கும் விருதுகளுக்கு இந்தக் கட்டுப்பாடு கிடையாது; தம் வாழுளில் ஒருவர் கலைத்துறைக்குச் செய்த பணியே கருத்தில் கொள்ளப்படுகிறது. ஒரு சிறந்த படைப்பிலக்கியத்திற்குக் குறிப்பிட்ட ஓர் ஆண்டில் பல்வேறு காரணங்களால் பரிசு அளிக்கப்படாமற் போகலாம். அதற்காக அந்த நூலுக்குப் பின்னெந்த ஆண்டிலுமே பரிசு கிடையாது என்ற நிர்ப்பந்தம் வேண்டியதில்லை. அந்த நூலாசிரியர் பிந்தைய ஆண்டுகளில் பேரிலக்கியம் ஏதும் படைக்காமற் போகக்கூடும். அவரைச் சிறப்பித்து மகிழும் வாய்ப்பு நமக்கு இனி வேண்டவே வேண்டாம் என்று நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வானேன்? 1955 ஆம் அண்டில் அளிக்கப்பட்ட துவக்கப் பரிசுகளையே எடுத்துக் கொள்வோம். அவை நாட்டு விடுதலைக்குப்பின் வெளியிடப்பட்ட நூல்களுக்கானவை. நம்மிடையே ஒரு 'கம்பர் இருந்து, 1946 இல் அவர் இராமகாதை எழுதியிருந்தால்'

பிந்தைய ஆண்டுகளில் அவர் இன்னொரு இராமகாதை எழுதினால்தான் அவரைக் கவுரவிப்போமா?

மற்றும், 'மிகவும் தன் சிறந்த, (Most outstanding) நூலுக்குப் பரிசு என்பதை 'ஒருசிறந்த' நூலுக்கு என்று வைத்துக்கொண்டு விட்டால் ஒவ்வொரு பரிசளிப்பின்போதும் வெளியாகும் கண்டனங்களின் கடுமை சற்றுக் குறையக்கூடும்.

பரிசு பெற்ற தமிழ் நூல்களில் ஒன்றின் சிறப்பை இங்கு சற்று எடுத்துக்கூறுவது பொருத்தமாயிருக்கும். "பாரத நாட்டு இலக்கியங்களின் வளர்ச்சிக்கும், உயரிய இலக்கியத் தரங்களை ஸ்தாதபிப்பதற்கும், எல்லா பாரத மொழிகளிலும் இலக்கியப் பணிகளைப் பேணி ஒருங்கிணைப்பதற்கும், அவை அனைத்தின் மூலமுமாக நாட்டின் கலாசார ஒற்றுமையை வளர்ப்பதற்கும் தீவிரமாகப் பணியாற்றுவதற்கான, ஒரு தேசிய நிறுவனம்" என்பதாகச் சாகித்திய அகாதமி அமைக்கப்படுவதற்கு ஏதுவாயிருந்த பாரத அரசின் தீர்மானம் அவ்விலக்கியச் சங்கத்தை வருணிக்கின்றபடியால், திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் இயற்றிய "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்னும் நூலுக்கு 1966 ஆம் ஆண்டில் அகாதமிப் பரிசளிக்கப்பட்டது தனிச் சிறப்புடையதாகிறது. "இந்தப் பரிசின் விளைவாகப் பாரத மொழிகள் அனைத்திலும் இந்நூல் மொழி பெயர்க்கப்படுவதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது," என்று நூலின் நான்காம் பதிப்பின் முன்னுரையில் ஆசிரியர் கூறுகிறார். இது நிகழுமாயின், பாரத கலாசார ஒற்றுமையைப் பேணி வளர்க்கும் இலட்சியம் மகத்தான அளவில் ஈடேறும் என்பதில் ஐயமில்லை. இதோடு இன்னொன்றும் நிகழும் என நம்புவோம். பிற நாட்டவர் உட்படப் பல இலக்கிய மேதைகளின் நூற்றாண்டு விழாக்களை அகாதமி கொண்டாடிவருகிறது. குருநானக், நாம தேவர் போன்ற சமயப் பெரியார்களும் அப்பட்டியலில் உள்ளனர். இதுவரை தமிழ்ப்பெரியார் எவரது நூற்றாண்டும் கொண்டாடப் பட்டதாகத் தெரியவில்லை. சாதி சமய வேற்றுமையை அகற்ற, ஏழை - பணக்காரர் என்ற வர்க்கப்பாகுபாடற்ற, சகல ஆன் மாக்களிடமும் சம அளவில் அன்பு செலுத்துகின்ற ஆன்ம நேய ஒருமைப்பாட் டுரிமையைப் பாரதம் மட்டுமின்றி பார் முழுவதும் காண உழைத்த நம் அருட்பிரகாச வள்ளலார் மறைவுற்ற நேரம் 1874 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணியாகும். (காந்தியடிகள் மறைந்த நாளும் ஜனவரி 30 வெள்ளிக் கிழமைதான்.) அதன் முதல் நூற்றாண்டிற்கு இன்னும் சுமார் ஓராண்டுதான் உளது.

தித்திக்கும் செந்தமிழ்ப்பாக்களில் அந்தக் கொள்கைகளை எடுத்தியம்பிய அருளாளரின் நூற்றுண்டைத் தேசிய விழாவாக சாகித்திய அகாதமி கொண்டாடும் என்று நம்புவோம். ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனத்துடன் பல திட்டங்களில் சாகித்தியஅகாதமி ஒத்துழைப்பதால், அந்த உலக ஸ்தாபனமும், "நீங்கள் நான் சொல்வதைக் கேட்பதில்லை........ ருஷ்யாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் இன்னும் இதர நாடுகளிலிருந்தும் அறிவாளிகள் இந்தியாவிற்கு வந்து இதே அகில சகோதர ஒற்றுமையின் கொள்கைகளைப் பிரசங்கிப் பார்கள்", "அகிலமாம் சகோதரத்துவத்தின் மூலக்கருத்தின் சாரத்தை ஒத்துக்கொண்டுஇந்தியாவில் சகோதர அறம் நிலை நாட்டப்பெறல் வேண்டும்" என்றெல்லாம் கூறிச்சென்ற அந்த மாபுருடரின் புகழ் உலகெலாம் பரவ விழாவெடுக்கும் என நம்புவோம். சென்ற நூற்றுண்டில் பழந்தமிழ் இலக்கியங்களின் பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்ல முற்பட்ட மேனுட்டு அறிஞர்கள் தம் காலத்தில் நடமாடிய இந்தப் புரட்சிகரமான சீர் திருத்தவாதியாகிய புனிதரைக் காணுமற் போனது விந்தையே. ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனம் சாகித்திய அகாதமியின் ஒத்துழைப்புடன் வெளியிட்டுள்ள நூல்களின் பட்டியலிலும் இராமலிங்கரின் நூல்களைக் காணேம். நூற்றுண்டு விழாச் சமயத்திலாவது இந்தக் குறை நீங்கும் என்று நம்புவோம். பத்தொன்பதாம் நூற்றுண்டில் தென்னிந்தியாவில் ஒரு மூலையில் பிறந்த சிற்றுருவத் துறவி ஒருவர் இருபதாம் நூற்றுண்டுக் கருத்துக்களைத் தேனெழுகும் தமிழ்ப் பாக்களில் வாரி வழங்கிய விந்தையை உலகமறிந்தால் உவப்பும் வியப்பும் கொள்ளும் என்பது உறுதி.

சங்கரர், இராமானுசர் போன்ற சில உதாரணங்களை விட்டால், தென்னுட்டிற்கும் வடநாட்டிற்குமிடையே கலாசாரத் தொடர்பு சாதாரணமாக "ஒருவழிப்போக்கு" ஆக இருப் பதையே காண்கின்றேம். கபீர், மீராபாய் போன்ற இறையடி யார்களின் பெயர்கள் தமிழ்நாட்டில் வீட்டில் சாதாரணமாய் வழங்கும் சொற்களாய் உள்ளன. நம் பெரியார்களைப் பற்றி வடக்கே அறிவாளிகள்கூடக் கேட்டதில்லை. இதுபோல் இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம். சென்ற நூற்றுண்டில் கூட நம் முத்துசுவாமி தீட்சிதர் வடக்கே சென்று சில இந்துஸ்தான் இராகங்களைக் கருநாடக இசையில் கலந்து அதைப் பரிமளிக்கச் செய்தார். இதே மாதிரி நம் இராகங்களும் சென்றுள்ளனவா எனத் தெரியவில்லை. இந்த நூற்றுண்டின் அரசியல் தீரர்கள் பற்றிச் சொல்லவே

வேண்டாம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிப்படையே அதன் கப்பற்படைதான் என்று இருந்த காலத்தில், அதை ஒடுக்கு வதற்கு, அணில் கல்போட்டதுபோல, கப்பல் ஓட்டுவேன் என்ற அசாதாரணத் துணிச்சலுடன் புறப்பட்ட வீரர் சிதம்பர னாரின் பெயர் பாரதமெங்கும் எதிரொலிக்கவேண்டாமா?

உலகெங்கிலுமிருந்த கலைகளைக்கொண்டு வருவதும் பிற பெரியார்களையெல்லாம் பாராட்டுவதும் நம்முடைய செல்வங் களையும் பெரியார்களையும் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளாம லிருப்பதும் சாதாரணமாக நமது பண்பாயிருப்பதே இந்த நிலைக்கு ஓரளவு காரணம் எனலாம். சிதம்பரனாரையும் நாம் மறந் திருந்த காலையில் அவரது வரலாற்றை நூல்வடிவில் வழங்கிய ம. பொ. சி. யே இராமலிங்க அடிகளின் வரலாற்றையும், மறைக்கப்பட்ட புதையலைக் கண்டுபிடித்துத் தோண்டியெடுத்து எல்லாருக்கும் வழங்குவதுபோல் வழங்கியிருப்பது பொருத்த மாகும். தமிழகம், பாரதம், உலகமே அவருக்குக் கடமைப் பட்டிருக்கிறது எனலாம். அடிகளாரின் அருள்வாக்குகளை உடனே படித்திடவேண்டும் என்ற அவா கிளர்ந்தெழும் வகையில் அழகிய நடையில் எழுதியுள்ளார்.

சென்ற நூற்றாண்டில் வடக்கே தோன்றிய பெரியார் களுக்குச் சற்றும் குறைந்தவர் அல்லர் நம் வெள்ளாடைத் துறவி என்று நிறுவும் ஆர்வத்தில், இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி (ஆரிய சமாஜத்தை நிறுவியவர்), இராம கிருஷ்ண பரமஹம்சர் ஆகியோருடன் அருட் செல்வரை ஆசிரியர் ஒப்பிட்டு, அவர்களுடைய இயக்கங்களைச் சென்ற நூற்றாண்டின் பேரியக்கங்களாகக் குறிப்பிடுகிறார். அவ்வியக்கங் களில் ''சமூகத் தீமைகளை எதிர்க்கும் போராட்ட உணர்ச்சி மிக நன்றாகப் புலப்படுகின்றன'' என ஆசிரியர் கூறுவது உண்மையாயினும், இராம மோகனரும் தயானந்தரும் சீர் திருத்தவாதிகள் மட்டுமே என்பது கவனிக்கத்தக்கது. இராம கிருஷ்ணரும் இராமலிங்கருமோ, இறையருள் பெற்று இறை தரிசனமும் கண்ட மகாத்மாக்கள். பழைய அடியார் மரபில் "வாழையடி வாழையென வந்த திருக்கூட்டமதில் யான் ஒருவன் அன்றோ'' என்று பாடும் அருட்பிரகாச வள்ளலார் தெய்வ தரிசனம் பெற்றவர். தாம் பெற்ற இன்பம் ''சத்தியம் சத்தியம்'' என்று சாற்றுகின்றார். தாம் பெற்ற இன்பம் ஒவ்வோர் ஆத்மாவும் பெறவேண்டும் என விரும்பினார். தமக்குக் காட்சி யளித்துத் தம்மிற் கலந்த அருட்சோதிக் கடவுள், அனைத் துயிர்களுக்கும் காட்சியளிக்க வல்லது'' என்றும் கூறினார்.

''சித்திவளாகத்திலமர்ந்து தம்மை அணுகும் அடியவர்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புத்தர் பெருமானாகிய அடிகளார்'' என்று ஆசிரியர் கூறுமிடத்தும் உவமை அழகாக உள்ளதாயினும், ஓரளவிற்கே அது பொருந்தும். புத்தரும் வேத சாத்திரச் சடங்குகளையும் சாதிசமய வேற்றுமைகளையும் சாடியவர், புது மார்க்கம் கண்டவர் என்றாலும், கடவுளைப்பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. கடவுளை அவர் நேரில் கண்டார் என்ற பேச்சே எழவில்லை.

கூடுமானவரையில், தற்காலத்துக்குரிய வரலாற்று நோக்குடனும், திறனாய்வு நோக்குடனும் நூல் எழுதப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ''கடை விரித்தேன், கொள்வாரில்லை'' என்ற அடிகளாரின் ஏக்கத்தை எப்படியாவது போக்கிவிட வேண்டும், என்ற ஆவேசத்துடன் ம. பொ. சி. எழுதியிருப்பதால் அவரது முயற்சியை அனைவரும் வரவேற்றுப் பாராட்டவேண்டும். ''உரிமையும் திறமையு முடையோர் இந்தப் பணியில் ஏற்கெனவே ஈடுபட்டிருப்பின், யான் பெரிதும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். அப்படி எதுவும் நிகழாமையால் எனக்குள்ள சொற்ப அறிவைக் கொண்டு தொண்ணூறு ஆண்டுகளாய் யாரும் தொடாத ஒரு பணியை யான் துணிவுடன் மேற்கொண்டேன்'' என்று அவரே முன்னுரையில் அடக்கத்துடன் கூறுவதை அறிஞர்கள் மனத்தில் கொள்ள வேண்டும். அவர் மீண்டும் விரித்த கடை உலகச் சந்தையில் தழைத்து வளரும் என்று பிரார்த்திப்போம்.



Our Chemicals for Industry & Agriculture

- ★ Caustic Soda Lye
- ★ Liquid Chlorine
- ★ Hydrochloric Acid (Commercial)
- ★ Stable Bleaching Powder
- ★ Benzene Hexa Chloride (Technical)
- ★ Quick & Slaked Line (Chemical purity above 90%)

Enquiries to:

KANORIA CHEMICAL & INDUSTRIES LIMITED

Head Office:

9, BRABOURNE ROAD, CALCUTTA-1.

Phone: 22 - 9121-26 Telex: 021-611

Works P.O. RENUKOOT Dist. MIRZAPUR: U P.

with best compliments
from

Alembic Chemical Works Company Ltd.,

Baroda-3.

With Best Compliments
From

Kailash Silk Mills
BOMBAY

சுதந்திரத்துக்குப் பிறகு

ஒரு சிறந்த இலக்கிய ஆசிரியர்

[மோகூர் வாசுகி]

சுதந்திரத்திற்குப்பின் தமிழ்நாட்டில் பலவகையான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எழுத்து, பேச்சு, கலை முதலியன பெரிதும் வளர்ந்து வந்துள்ளன. உரைநடை நூல்களும், கட்டுரைகளும் பல்கியுள்ளன. இந்தக் கட்டுரையில் ஓர் இலக்கிய ஆசிரியரைப் பற்றிக் காண்போம்.

'கங்கைக் கரையில் காவிரித் தமிழ்' என்ற சிறப்புச் செந்தமிழ் நூலாகும். கங்கைக்கரை கோதுமைக்குக் காவிரி வெற்றிலை மாறுகொள்வோம் என்ற கருத்துக்கிணங்க 'கங்கைக் கரையில் காவிரித் தமிழ்' என்று அழகிய தலைப்பால் தமிழின் சிறப்பைக் காட்டியுள்ளார். கன்னித் தமிழ் காவிரித் தமிழ் வேங்கடத்திற்கு வடக்கே உள்ள பம்பாய், கல்கத்தா ஆகிய இந்தியத் தலைநகரங்களில் பலமுறை சொற்பொழிவு ஆற்றியதன் தொகுதியே நூலாக வந்தது. அந்த நூலின் பெருமையைக் காணவே, அந்த ஆசிரியரைப் பற்றி யமுனை நதிக் கரையில் உள்ள தில்லித் தமிழ்ச் சங்க மலரில் காண்போம்.

அவர் யார்?

அங்கம்பாக்கம் என்ற கிராமத்தில் 1914 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் நாள் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை அந்த ஊரின் பெயரை விளங்கச் செய்ய வந்தது என்று அப்போது யார் அறிவார்? அந்தக் குழந்தை வளர்ந்து மொழி பயின்று பள்ளியில் படிக்க ஆரம்பித்தது. கிராமத்திலேயே இளமையில் கல்வி கற்றுப் பின்னர் மூன்று ஆண்டுகள் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் 6, 7, 8 வகுப்புகளில் படித்தது. பின்னர்ச் செங்கற்பட்டில் உயர் நிலைப்பள்ளியில் படித்துப் பள்ளிப் படிப்பைச் சிறுவன்

முடித்தான். அறிவையும், ஆற்றலையும் ஆக்கித்தந்த அந்த வாலாஜாபாத் பள்ளியிலேயே மாதம் பதினைந்து ரூபாய் வருவாயில் ஆசிரியப் பணியும் ஏற்றான் அவ்விளைஞன். அந்தச் சூழலில் எளிய, இனிய, தூய்மையான தொழிலில் புகுந்த அந்த ஆசிரியரின் உள்ளம், படைப்பிலும் ஈடுபட்டது. அந்த உள்ளம் படைத்த படைப்பே 'பாரதி வாழ்வு' ஆகும். இயற்கையில் ஈடுபட்ட உள்ளம் இலக்கியச் சூழலில் ஈடுபட்டதற்கு இஃது ஓர் எடுத்துக் காட்டாகும்.

உழைப்பின் வன்மையால் உயர்கல்வியை ஆர்வமுடன் கற்றுப் பல பட்டங்கள் பெற்று மேலும் மேலும் உயர்ந்து கொண்டே சென்றார் அவர். தொண்டுள்ளம் படைத்த அந்த இளைஞர் காஞ்சிபுரம் அண்டிரசன் பள்ளியில் எட்டாண்டுகள் இனிய தமிழ்த் தொண்டாற்றினார். அந்த இளைஞர் அறிவாலும், அனுபவத்தாலும் விரைவாக முன்னேறி உயர்ந்தார். அப்படி உயர்ந்ததன் காரணமாகப் பதவிகளும் அவரை நாடின. உண்மையான உழைப்புக்குப் பரிசு எப்பொழுதும் உண்டு. அவர் உழைப்பும், ஒழுக்கமும், அடக்கமும், இறையுணர்வும் சேர்ந்து வளர்ந்தன. உச்சிமீது புகழ் கொள்ளும் சென்னை பச்சையப்பன் கல்லூரியில், பேராசிரியர் மோசூர். கந்தசாமி முதலியார் தமிழ்த்துறைத் தலைவராக விளங்க, அவர்கீழ்த் தமிழ் விரிவுரையாளராக 1942இல் பணியேற்றார். அங்குப் பல்லாண்டுகள் பணியாற்றி, இப்போதும் தமிழ்த்தொண்டு தொடர்ந்து செய்துவருகின்றார் அவர்.

பல ஆண்டுகளாக அஃதாவது முப்பது ஆண்டுகளாகத் தமிழ்த்துறையில், பச்சையப்பனில் இருந்துவரும் இந்தத் தமிழ்ப் பேராசிரியர், இடையில் ஓராண்டு மதுரை தியாகராசர் கல்லூரியிலும் மற்றும் ஐதராபாத் பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகளும் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். எங்குச் சென்றாலும் தாமரை இலைமேல் நீர்போல் இருந்துவிட்டு மறுபடியும் பச்சையப்பனையே தன் மனமுவந்த இடமாகக் கொண்டு அங்கு அவர் பணியாற்றி வருகின்றார்.

அங்கம்பாக்கம் கிராமத்தில் பிறந்து வளர்ந்த அப்பெருந் தகை, பல நூல்களின் ஆசிரியர், இலக்கிய ஒளியாக விளங்கும் அறிவுக் குன்று, யார்? அவர்தாம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், அ.மு. பரமசிவானந்தம் அவர்கள். அருட்செல்வமும், பொருட்செல்வமும், கல்விச் செல்வமும் ஒருங்கே அமையப்பெற்ற, அடக்கத்தின் இருப்பிடமாய்த் தோன்றும் பேராசிரியப் பெருந்தகை பரமசிவானந்தம் அவர்கள்.

நலம் கனிந்த நாற்பது நூல்கள்

இப்பேராசிரியர் ஆசிரியத் தொழிலின் அனுபவத்தாலும், இலக்கிய நுண்ணறிவு முதிர்ச்சியாலும் பல சிறப்பான நூல்களைத் தமிழ் உலகிற்கு, இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார். அவருடைய அரிய உழைப்பின் ஆற்றலால் வெளிவந்த செல்வங்கள் அவை. ஏறக்குறைய நாற்பதுக்கு மேற்பட்ட பல்வேறு நூல்களை அவர் படைத்துள்ளார். பல நூல்கள் பாராட்டிற்கும், பரிசுக்கும் உரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுகளும் பெற்றுள்ளன.

பேராசிரியரின் நூல்களுள் சிறப்பானவற்றைக் குறித்து இரண்டொரு சொற்கள்: முதலாவது, 'கவிதையும் வாழ்க்கையும்' என்ற ஓர் இலக்கிய ஆராய்ச்சி நூல் கட்டுரை வடிவில் 1959 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்நூல் தமிழ் வளர்ச்சிக்

அண்ணாவின் மதுரை

விழுப்புண்கள் பெற்றநகர்;
இலக்கி யத்தில்
விழாதபுகழ் பெற்றநகர்;
தொன்று தொட்டுச்
செழித்துவளர் தமிழ்மரபைக்
கட்டிக் காக்கும்
சிறப்பான வேலிநகர்;
சங்கச் சான்றோர்
எழுத்துக்கள் எழுந்துவந்து
தமிழ்ச் சிறப்பை
ஏற்றுமதி செய்யுநகர்;
வெற்றி யாலே
கொழுத்தபுகழ்ப் பாண்டியர்கள்
கொலுவி ருந்த
கடல்நகர், பாடல்நகர்
வெற்றிக் கோட்டம்;

—முருகுசுந்தரம்

கழகத்தின் பரிசு பெற்ற தனிச் சிறப்பு வாய்ந்தது. இரண்டாவது, 'சமுதாயமும் பண்பாடும்'. இது வளர்ந்துவரும் சமூகவியலைப் பற்றித் தமிழில் வெளிவந்துள்ள முதற் பெருநூல். இது 1962இல் வெளிவந்தது. மூன்றாவது, 'தமிழ் உரைநடை' என்ற தனிச்சிறப்பு வாய்ந்த நூல். இதை, உரைநடை

வரலாறு பற்றித் தமிழில் இல்லாத குறையை நிரப்ப வந்த ஒரு பெருநூல் எனலாம். இது 1959இல் வெளிவந்தது. நான்காவது 'தமிழ் உரைநடை வளர்ச்சி' என்ற நூலாகும். இது மேற் கூறிய உரைநடை நூலுடன் தொடர்புகொண்ட பொருளுடையது. இப்பேராசிரியரின் ஆராய்ச்சித் திறனை உயர்வாகக் கருதிய சென்னைப் பல்கலைக் கழகம், "கல்கி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழி"வை 1965ஆம் ஆண்டு நிகழ்த்துமாறு அவரை வேண்டியதன் விளைவே, இந்நூல் உருப்பெற்றதாகும். ஐந்தாவது, 'வாய்மொழி இலக்கியம்' என்னும் நூல். இஃது ஒரு நூதன முயற்சியாகும். ஆனால் தீஞ்சுவைக் கரும்பாக அமைந்துள்ளது. இது 1965இல் வெளியிடப்பட்டது. ஆறுவது, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி' என்ற நூல். உலகியல்-பொருளியல்-ஈடுபாட்டை, நடைமுறை ஈடுபாட்டைச் சிறப்பாக விளக்குவது. 1964இல் வெளிவந்தது. ஏழாவது நூல் 'வழுவிலா மாணிக்கவாசகர்.' இது 1966இல் வெளிவந்த நாடக நூலாகும். இந்நூல் மணிவாசகரை மாசிலா மணியாகக் காட்டும், ஓர் புதிய முயற்சி; பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளது. இது வரை யாரும் எடுத்துக் காட்டாத சிறப்புத் தன்மைகள் படைத்த நூலாகும். இந்த நாடகம் சென்னை வானொலியில் இடம் பெற்றதையும் பலர் அறிவர்.

ஆங்கிலத்திலும் அரும்பணி

தமிழில் உள்ள சிறப்பைப் பிறர் அறியவேண்டுமென்று ஆங்கிலத்தில் சில நூல்கள் எழுதியிருக்கிறார் இப்பேராசிரியர். அவை Gleanings of Tamil Culture, (1958); Tamilnad Through The Ages, (1960). இந்த அரிய நூல்கள் ஆங்கில மொழி வாயிலாகத் தமிழின் பெருமையைத் தழைக்கச் செய்வனவாக விளங்குகின்றன.

சிறந்த நூல்களுள் மற்றும் சில :

'கூடிவாழ்' என்ற நூல் 1956இல் வந்தது. இந்நூல் முதியோர் கல்வியில் உள்ள ஈடுபாட்டைக் காட்டும். இஃது இந்திய அரசின் பரிசு பெற்ற நூல். இந்நூலின் பத்தாயிரம் படிகள் பாரத அரசினரால் வாங்கி விற்பனை செய்யப்பெற்றன.

'ஒரு குலத்துக்கு ஒரு நீதி', 'அறிவு வளர', 'அவை பேசினால்' ஆகிய நூல்கள் ஆசிரியரின் உள்ளம் எந்த அளவுக்குக் குழந்தை இலக்கியத்திலும் ஈடுபட்டு உள்ளது என்பதைத் தெளிவாக்குகின்றது.

'சாதி வெறி' என்ற நூலில் ஆசிரியரின் சீர்திருத்த மனப்பான்மையைக் காணமுடிகின்றது.

இப்பேராசிரியர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகிய பல இலக்கியத் துறைகளிலும் புலமை உடையவர் என்பதை அவர்தம் இந் நூல்களின் பட்டியல் காட்டுகின்றது.

'இந்திய முதற்சட்டம் (நாடகம் - 1951), 'வேள் பாரி' (நாடகம் - 1951) 'பாசம்' (நாடகம் - 1957) 'தமிழன் கண்ட மலேயா' (கட்டுரை - 1949) 'சமயமும் சமூகமும்' (கட்டுரை-1954) என்ற அவரது படைப்புகள் வாழ்க்கைக்குத் தேவையான பல கட்டுரைத் தொகுதிகள் அடங்கியனவாகும். 'பெண்' என்ற நூல் கட்டுரை வடிவில் 1956இல் உருப்பெற்றது. 'மணிபல்லவம்' (கட்டுரை) - 1957இல் வந்த ஓர் அரிய தொகுப்பு நூல். 'தமிழக வரலாறு' (1958) கட்டுரைகளடங்கிய ஒரு வரலாற்று நூல். 'இளமையின் நினைவுகள்' (கட்டுரை - 1958) 'தாயின் மணிவயிற்றில்' (முதியோர் கல்வி - கட்டுரை - 1960) ஒரு நாளைக்கு ஒரு நீதி' (குழந்தை இலக்கியம் - 1960) 'பாட்டும் பயனும்' (கட்டுரைத் தொகுதி - 1966) 'மானுடம் வென்றது' (இலக்கியக் கட்டுரைகள் அடங்கிய பெருநூல்-1965) 'மலேயா சொற்பொழிவுகள்' (சொற்பொழிவுகளின் தொகுதி - 1949) 'கறைபடிந்த உள்ளம்' (சிறுகதைகள் அடங்கியது - 1954) 'வரலாற்றுக்குமுன் வடக்கும் தெற்கும்' (வரலாற்றுநூல் - 1962) 'மலைவாழ் மக்கள் மாண்பு' (U. G. C. ஆராய்ச்சியின் பொருட்டு - 1967) 'வள்ளுவர் வகுத்த வாழ்க்கைநெறி' (சிறந்த ஆராய்ச்சி நூல் - 1969) இவற்றைப் போன்ற இன்னும் பல நூல்கள் இந்தப் பேராசிரியரின் ஆராய்ச்சித் திறனையும், அரிய உழைப்பினையும் கொண்டுவெளிவந்துள்ளன.

பல பேரறிஞர்களின் தொடர்பு

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், திரு. சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமிநாட்டார், திரு. சர்க்கரைப்புலவர், திரு. பொன்னோதுவார், பேராசிரியர் மோசூர் கந்தசாமி முதலியார், டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் மொ. அ. துரைஅரங்கனார் போன்ற பல பேரறிஞர்களின் தொடர்பு கொண்டவர் நமது பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம். பல அறிஞர்களின் கருத்துக்களைத் தமதாக்கிக்கொண்டு ஆங்காங்கே அவர் அறிவு முதிர்ச்சியும்,

ஆசிரியத் தொழிலின் அனுபவமும் ஒளிவிட்டுத் திகழும்படி தம் நூல்களில் அரிய - பெரிய கருத்துக்களை வெளியிட்டுச் செல்லும் அழகும், படிப்போரின் பாராட்டுகளைக் கவர்கின்றன.

பலதுறைகளிலும், பலவகைகளிலும் கருத்துக்கள் செறிந்த பொன்னான பாங்கினைப் பயன்பெறப் படித்து நாம் இன்புறுதல் வேண்டும். இந்தப் பெருமகனாரின் கருத்துக்கள் இளமை உள்ளங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உயர்ந்த குறிக்கோள்கள் பூண்ட சிறந்த பல ஆசிரியர்களை உருவாக்கும் சக்தி படைத்தவை. பாரத நாட்டில் மட்டுமன்றி, பாரெங்கும் தமிழ்மணம் கமழ, அவர் தொண்டும் புகழும் மேலும் மேலும் பரவுமாக.



புரட்சித் திட்டங்களுக்கு ஒரு பொன்னடு!

★ எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்

★ ஆதரிப்பாரற்றுக் கிடந்த
பிச்சைக்காரர்க்கு மறுவாழ்வு இல்லங்கள்.

★ சமதர்மச் சமுதாயம் செழிக்க
பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கியமை

★ சேரிகளை ஒழித்துக் கட்டிச் சிறந்த கட்டடம்
வழங்கக் குடிசை மாற்று வாரியம்

★ கைத்தறி வளர்ச்சிக்காக நான்காவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் ரு. 10.60 கோடி திட்டம்

★ இளைஞர்கள் ஆற்றலை—அறிவைப் பயன்படுத்த
இளைஞர் அணி

★ வாழ வழிகாட்டி வளம்கூட்டும்
பசுமைப் புரட்சி

★ ஒளிமயமாய்த் திகழ
எங்கணும் மின்வசதி

★ அறியாமை இருள் நீங்க
புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி

—: மற்றும் மாபெரும் திட்டங்கள் :—

ஆசிரியர்களுக்குச் சலுகைகள் — வேலை வாய்ப்புக்கள், எளிய குழந்தைகளுக்குச் சத்துணவுத்திட்டம், வேளாண்மை வளம் கொழிக்க ஏராளப் பம்பு செட்டுகள், குடிநீர் வடிகால் வாரியம், தாழ்த்தப் பட்டபிற்பட்டோருக்குத்தனிச்சலுகைகள்.

அண்ணாவின் கனவை நனவாக்கும்
அரும்பெரும் புரட்சித் திட்டங்கள் இன்னும் உள.
அத்தனைக்கும் கைகொடுப்போம்!

அரசின் அரும்பணிகளுக்கு
உறுதுணையாய் இருப்போம்!

செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

"QUALITY"
PROCESS EQUIPMENT

We provide Tailormade Process Equipment in Stainless Steel and Mild Steel for Chemical, Pharmaceutical and Food Industries. Also for Beverages, Breweries and Wineries and Dairies.

XL Equipments Pvt. Ltd.,

13/1, RASULPURA, SECUNDERABAD-3.

Phone : 73206

Why women choose PRESTIGE :

★ For more space for cooking than in cookers of other designs, thus saving time and fuel.

★ For safety,—incorporating thermal and pressure release devices.

★ For service.

PIONEERS IN THE FIELD

PRESTIGE	Pressure Cookers (For Home Market)
PREETT	Pressure Cookers (For Export)
& PREETT	Modern Kitchenware.

Manufacturers : **TT. (PRIVATE) LIMITED,**

Dooravaninagar, BANGALORE-16.

Save For Your Children's Future

Education Expenses

Join IOB's Unique

Education Deposit Scheme

You are invited to approach any of our branches in India for further details

OUR BRANCHES IN DELHI

1. DARYA GANJ
2. DEFENCE COLONY
3. GOLF LINKS
4. KAROL BAGH
5. JANPATH (Main Branch)
6. MODEL TOWN
7. RAJOURI GARDEN

With compliments

from:-

NIRLON

Synthetic Fibres & Chemicals Ltd.,

115, Mahatma Gandhi Road,

Fort, BOMBAY—1.

Tel: No. 317473-74.

சுதந்திரத்துக்குப் பிறகு

தமிழ் உரையாசிரியர்கள்

[செ. இரவீந்திரன்]

நாடு விடுதலையடைந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இவ்விருபத்தைந்து ஆண்டுகள் என்பது தனி மனிதனின் வாழ்வில் மிகப் பெரிய காலகட்டமாகும். அதுவே நாட்டு வரலாற்றில், மொழி இலக்கியவரலாற்றில் மிகச் சிறியதொரு காலத்தின் பகுதியேயாகும். எண்ணியலான மாற்றங்களே பண்பியலான மாற்றங்களாகின்றன என்னும் பண்பிற்கேற்பச் சமூக வாழ்வில் ஏற்படுகின்ற மாற்றங்கள் வரலாற்றில் புதியதொரு பண்பினைத் தோற்றுவிக்கின்றன. சமூகத்தின் பண்பியலான மாற்றங்கள் நாட்டின் அரசியல் பொருளாதாரத் துறைகளில் புதியதொரு பண்பின ஏற்படுத்துவதுபோலக் கலை, இலக்கிய உலகிலும் புதிய போக்குகளைத் தோற்றுவிக்கின்றன. விடுதலைக்குப்பின் சமூக அரசியல் பொருளாதார மாற்றங்களை ஒட்டி ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ப வளர்ந்துள்ள இலக்கிய வளர்ச்சியில் தமிழ் உரையாசிரியர்களின் பங்கு என்ன என்பதை வரலாற்றுப் பின்னணியில் அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உரையாசிரியர்கள் காலம்

வெவ்வேறு காலத்திற்கேற்ப வெவ்வேறு சமூகத்திற்கேற்ப, வாழ்க்கை பற்றிய கருத்துக்களும் வெவ்வேருக அமைகின்றன. வாழ்க்கைநெறி ஒவ்வொன்றிலும் சிறப்புக்களுமுண்டு, குறைபாடுகளுமுண்டு. காலத்தின் போக்கில் வாழ்க்கை நெறியும் வாழ்க்கை பற்றிய கருத்துக்களும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மாறிக்கொண்டிருப்பதையே தன் இயல்பாகக் கொண்ட உலகத்தில் இத்தகைய மாற்றம் தவிர்க்க இயலாதது. உலகப் பொது நியதிக்குத் தமிழ்ச் சமுதாயம் விதிவிலக்கல்ல.[1] பத்தி நெறிக்காலம் எனப்படும் பல்லவப் பேரரசின் காலத்தே சைவ சமய நாயன்மார்களாலும் வைணவ ஆழ்வார்களாலும்

---

1. டாக்டர். ஆ. வேலுப்பிள்ளை: தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் (1969), பக்-1.

மக்களிடையே புதியதொரு எழுச்சி ஏற்படுத்தப்பட்டது. இவ்வெழுச்சியின் வேகம் மக்களின் மதம், மொழி, கலை, இலக்கியம் இவற்றில் ஊடுருவிச் சென்று, தமிழர்தம் பழம்பெருமையினைப் படம்பிடித்துக் காட்டும் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் போன்ற இலங்கியங்களை நாடும் பழைமை திரும்பல் (Return to classics) என்னும் பண்பினைச் சோழப் பேரரசின் தொடக்கத்தே மக்களிடையே உண்டுபண்ணிற்று. அவிநயனார் போன்றவர்களின் புகழ் தொல்காப்பியரின் புகழை மங்கச் செய்தது என்று சொல்லலாம். பஞ்ச இலக்கண மரபும் தோற்றுவிக்கப்பட்டது. பல்வேறு இலக்கண இனக்குழுக்கள் தோன்றியபொழுது ஒருசிலர் ஒல்காப்புகழ்த் தொல்காப்பியத்துக்கு உரையியற்றுவதில் முனைந்தனர். இதற்குக் கால்கோள் இட்டவர் உளங்கவர் கேள்வி இளம்பூரணர் என்னும் ஏதமில் மாதவராவர். நச்சினார்க்கினியரின் காலத்தோடு இளம்பூரணர் ஆரம்பித்துவைத்த உரையாசிரியர்கள் காலத்து இலக்கிய இலக்கணங்களுக்கு உரையெழுதுதல் என்னும் இலக்கியப் போக்கின் வேகம் ஒருவாறு குறைந்தது எனலாம்.

ஒன்ற உரைப்பது உரை

பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் எனத் தொல்காப்பியரால் சுட்டப்படும் எழுவகையான இலக்கிய வகைகளுள் உரையென்று சொல்லப்படுவது தற்கால உரைநடையே (Prose) ஆகும். உரைநடை வகை நான்கனுள் ஒன்றான பாவின்றெழுந்த கிளவி எனப்படுவதே நூல்களுக்கு எழுதப்படும் உரையாகும். (Commentary) ஒரு காலத்தே நூல் எனப்படும் சூத்திரயாப்பால் இயன்ற இலக்கண நூல்களுக்கு மட்டுமே உரைகள் எழுதப்பட்டுவந்தன என்பது தொல்காப்பியம் கொண்டு அறியலாகும் செய்தியாகும். தொல்காப்பிய மரபியலில் கூறப்படும் காண்டிகை, உரை யென்னும் இருவகையான உரைகள் பொழிப்பு, அகலம், நுட்பம், நூல், எச்சம் என்னும் சூத்திரவுரையின் பொதுவிலக்கணமாக நாலடியார் காலத்தே மாறிற்று என்று சொல்லலாம். நாலடியாரின் 319ஆம் பாடலால் சுட்டப்பெறும் உரையின் பொதுவிலக்கணமே உரையாசிரியர்களால் தத்தம் மேற்கோள் பாடல்களில் சுட்டப்பெறும் உரை இலக்கணத்தின் மாற்று வடிவம் என்று கொள்ளலாம். "முத்திறத்தானும்" என்று தொடங்கி "யாப்புறுத்து உரைப்பது சூத்திரவுரையே" என்று முடியும் யாப்பருங்கல விருத்தியுரையுள் காணப்படும் மேற்கோள் விளக்கச் சூத்திரம் மூலம் அறியலாகும் பதின்மூன்று வகையான உறுப்புக்

களையுடைய உரையானது "பாடங்கருத்தே......ஆசிரிய வசனமென் றீரே ழுரையே" என்னும் நன்னூல் பொதுப் பாயிரச் சூத்திரத்து (20) கூறப்படும் பதினான்கு வகையான உரை உறுப்புக்களுக்குள் அடங்கும் என்பது மயிலைநாதர் துணிபாகும்.[1] தொல்காப்பியம் மரபியலில் கூறப்படும்,

"சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே" (தொல். மர. 103)

என்னும் உரைவகை நடை நான்கனுள் ஒன்றான உரையின் உரையிலக்கணக் கொள்கையின் (Organic Theory of Commentary) வளர்ச்சியானது நன்னூலார் காலத்தோடு முற்றுப்பெற்றது என்று சொல்லலாம்.

இலக்கிய மறுமலர்ச்சி

16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தின் இந்து சமய மறு மலர்ச்சியின் பேரால் தோற்றுவிக்கப்பட்ட விசயநகரப் பேரரசின் எழுச்சி, தமிழகத்தில் நாயக்கர்களின் ஆட்சி இவற்றினால் தமிழ் மக்களிடையே பழைமை பாராட்டும் பண்பினை வளர்த்தது எனலாம். புராணங்களும், தலபுராணங்களும், மடங்களும் தோன்றி வளர்ந்த காலமாகும். 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களோடு ஏற்பட்ட தொடர்பால் விளைந்த ஆங்கிலக் கல்விமுறை, கிறித்தவ மதப்பிரசாரம் போன்றவை தமிழர் களிடையே புதுமை போற்றும் பண்பினை வளர்த்தன. 1807இல் நடந்த வேலூர்க்கலகம் போன்ற தமிழக விடுதலை இயக்கத்தின் தனிக் குரலானது 1857இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்தின் மூலம் விளைந்த அடிமைத் தளையகற்றும் உயிர்க் குரலோடு இணைந்து நாடெங்கும் ஒரு விடுதலை இயக்கத்திற்குத் தோற்றுவாய் செய்தது. கிறித்தவ மதப் பிர சாரங்களுக்காக மேனாட்டுப் பாதிரிமார்களால் எழுதி அச்சிட்டு வெளியிடப்பெற்ற உரைநடைத் துண்டுப் பிரசாரங்கள் தமிழர்களிடையே உரைநடையிலக்கியங்களுக்குப் 'புதுத் தமிழ் முன்னோடிகளைத்' தோற்றுவித்தன. மேனாட்டாரின் வருகையையொட்டி எழுந்த உரை நடையிலக்கியங்களான சிறு கதை, நாவல், நாடகம் போன்றவை தமிழில் வளரத் தலைப் பட்டன. இவ்விலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தவை அச்சியந்திரங்களாகும். கி. பி. 1835க்குப் பிறகுதான் நம்மவர்

1. மயிலைநாதர்: நன்னூல். பொதுப்பாயிரம். 20. உரை பக்.8

அச்சியந்திரங்களை அமைத்து 'எழுதா எழுத்தினால்' அச்சுப் புத்தகங்களை அச்சிடத் தொடங்கினார்கள். இந்த நூற்றாண்டில் தான் நெடுங்காலமாக ஏட்டுச் சுவடியாகக் கிடந்த பழைய தமிழ் நூல்களும் புதிய தமிழ் நூல்களும் அச்சிடப்பட்டு வெளி வரலாயின.[1] இதையொட்டித்தான் இலக்கியங்களை அச்சிற் கொணரும் வேலையும் நடைபெற்றது. தொல்காப்பியம் முதன் முதல் அச்சில் ஏற்றப்பட்டது. சங்க இலக்கியங்கள் தேடிப் பிடித்து அச்சிடப்பட்டன. சி. வை. தாமோதரனார், பவானந்தம் பிள்ளை, தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், அ. கோபாலையா, சௌரி அரங்கப் பெருமாள், செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், கணே சய்யர் போன்றவர்களால் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் அச்சில் ஏறத் தொடங்கின. டாக்டர். சாமிநாதய்யர் போன்ற வர்களால் சங்க இலக்கியங்கள் திருத்தமுறப் பதிப்பிக்கப் பெற்றன. அப்படிப் பதிப்பிக்குங்கால் மூலமும் உரைகளும் உள்ளவற்றை முதலில் பதிப்பித்தனர்.

1872 இல் இந்தியப் பழஞ் செய்திகளின் முதல் தொகுதி யும் (Indian Antiquary), 1890 இல் தென்னிந்திய சாசனங் களில் (South Indian Inscription) முதல் தொகுதியும், 1892 இல் இந்திய சாசனங்களின் தொகுதியும் (Epigraphica Indica) வெளிவந்தன. இத்தொகுதிகளின் இதழ்கள் வெளிவரு முன்பே சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இலக்கியங்கள் கொண்டு அறியலாகும் செய்திகளைத் தொகுத்து "ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்" (The Tamils–1800 Years Ago) என்னும் நூலாக வெளியிட்டார் வி. கனகசபைப் பிள்ளை. 19 ஆம் நூற்றாண்டிலே தமிழ்ச் சாசனங்கள் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகள் வரவில்லையாயினும் 20ஆம் நூற்றாண் டிலே பல வெளிவரத் தொடங்கின.[2] 1856இல் கால்டுவெல் ஐயரால் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் அல்லது தென்னிந்திய மொழிகளின் குடும்பம் என்னும் நூல் அச் சேறியது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த நாடு நம் தமிழ்நாடு, உயர்தனிச் செம்மொழி நம் தமிழ்மொழி என்னும் உணர்வு தமிழ் மக்களிடையே வளரத் தலைப்பட்டது.

மேனாட்டுப் பாதிரிமார்களால் தங்கள் மதத்தைப் பரப்பு வதற்காகக் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டதன் காரணமாகத் தமிழ்க் கல்வித்துறையில் சில புதிய மாறுதல்களும் உண்

1, 2. மயிலை சீனி. வேங்கடசாமி: *பத்தொன்பதாம் நூற்றாண் டில் தமிழ் இலக்கியம் (1962), பக். 17., பக். 45.*

டாயின. ஆங்கில அரசாங்கத்தாரும் பாடசாலைகள் மட்டும் அல்லாமல் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் அமைத்தார்கள். பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆங்கிலத்துக்கு இணையாகப் போற்றப்பட்டது. சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் போன்றவை மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. கற்பிக்கப் படும்பொழுது ஏற்படும் புதிய விளக்கங்கள், உரையாசிரியர் களின் விளக்கங்களைவிட மூல நூலின் கருத்துக்கு அரண் செய்கின்றன என்னும் உணர்வும் இவற்றை வெளியிடவேண்டும் என்னும் தூண்டுதலும், கற்றவர்க்கே பயன்படக்கூடிய உரைச் செல்வங்களைப் பாமரமக்களும் அனுபவிக்க வேண்டுமென்ற வேணவாவும் பொதுவாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தே தோன்றியுள்ள உரைகளுக்கெல்லாம் தோற்றுவாயாய் இருந்தன. 1947 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் இதே எண்ணம்தான் நிலவியது என்று சொல்லலாம்.

பழைய உரைகளும் புதிய விளக்கமும்

இந்நாளைய அரசியல் இயக்கத்தின் விளைவாகத் தமிழகம் தமிழர்க்கேயுரிய தனியுரிமை நாடாகும் தகுதிபெற இருக்கிறது. அத்தகுதியைப் பெறுதவாறு தடுக்கும் தடைகளைத் தகர்த்தெறிதற்கும் பண்டைத் தொகை நூலறிவு பெருந் துணையாகும் என்பது பெரிதுபடுத்தப்பட்ட கூற்றாக இருப்பினும் அதுவே ஒருவகையில் உண்மையுரையுமாகும். முன் வெளிவந்துள்ள தொகை நூல்களின் பழைய உரைகள் கற்றவர்க்கே பெரிதும் விளங்கும் தன்மையனவாகவும், கணித நூல்களின் குறியீட்டுச் சொற்களாகவும் காட்சியளித்தன. பழைய உரைகள் மூல நூலின் கருத்துக்கு மாறுபட்ட முறையில் இருக்கின்றன என்பதும் அவை கொண்டு கூட்டு முறையில் பொருள் தடுமாற்றத்தினைத் தந்து நிற்கின்றன என்பதும் மறைமலையடிகளின் பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையையும், முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையையும் பயில்வார்க்கு நன்கு புலனாகும். நூல் முழுமைக்கும் பழைய உரைகளின் நயத்தோடு புதிய உரைகள் எழுதி வெளியிடவேண்டும் என்னும் விருப்பினால் வெளி வந்துள்ள உரைகளுள் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை எழுதிய புறநானூற்று உரை (1947), பதிற்றுப்பத்து உரை (1949), ஐங்குறுநூறு உரை, நற்றிணை உரை ஆகிய உரைகள் சிறப்பிடம் பெறுவனவாகும். ஒவ்வொரு பாட்டுக்கும் முன்னால் பாடினோர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு, பாட்டின் கருத்து, பிறவும் கூறப்பட்டுள்ளன. பழையவுரை மிகச் சிறந்தவுரையாதலின், அதனைச் சிறிதும் மாற்றாது

தமிழக ஆளுநர்
திரு. கே. கே. ஷா
அவர்களுக்கு 28-11-'71 அன்று வரவேற்பு



திரு. கே. கே. ஷா அவர்களைச் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. ஏ. ஜி. வி. சுப்பிரமணியம் வரவேற்கிறார்.

திரு. எம். பாலசுப்பிரமணியம், திரு. என். ஆர். நாராயணன், திரு. ஆர். ஆர். சாரி, திரு. சி. என். ரங்கநாதன் ஆகியோர் திரு. ஷா அவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றனர்.

திரு. ஷா அவர்களுக்குச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களை, சங்கத் தலைவர் அறிமுகப்படுத்தி வைக்கிறார். படத்தில் (இடம் இருந்து வலம்) திரு. சி. என். ரங்கநாதன், திரு. எஸ். ரங்கராஜன் (செயலாளர்), திரு. ஆர். விசுவநாதன், திரு. ஏ. வி. குப்புசாமி ஆகியோரைக் காணலாம்.

திரு. கே. கே. ஷா. அவர்களைச் சங்கத் தலைவரும், செயற்குழு உறுப்பினர்களான திரு. ஆர். எஸ். வெங்கடேசன், திரு. ஆர். விசுவநாதன் ஆகியோர் விழாவுக்கு அழைத்து வருகின்றார்கள்.

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்று அடிகள் ஆணையிட்டருளியபடி, அவனருளே கண்ணாகக் கொண்டும், அடிகள் திருவுருவத்தை இடையறாது நினைவு கூர்ந்தும் கூடியவரை பொருள் கண்டு எழுதிய பண்டிதமணி யாரின் கருத்துரைபாட்டைத் தெளிவுபடுத்துகின்றது; பதவுரை, சொல்லின் பொருளை எடுத்துக்காட்டுகின்றது; விளக்கவுரை சொல்லின் நலத்தையும் பொருளின் நுட்பத்தையும் விளக்கிக் காட்டுகின்றது என்னும் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியாரின் கூற்று உண்மையே என்பது அவருரையைப் படிப்பார் அறிந்துகொள்ளலாம்.[1] சு. அ. இராமசாமிப் புலவர் எழுதிய பிரபுலிங்கலீலையின் உரையும் (1954), தி. பட்டுச்சாமி ஓதுவார் எழுதிய ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இவற்றின் தெளிவுரையும் சைவசமயவுரை களுள் ஓரிடத்தைப் பெறுவனவாகும். மாணிக்கவாசகரின் திருக்கோவையாருக்கு எழுதப்பட்ட பழையவுரை, போலிவுரை முக்குணவயத்தால் முறைபிறழ எழுதப்பட்டவுரை யெனினும் கலைத்திறமிக்க உரையாகும் என்று கூறி, பழையவுரைக்குப் புதிய விளக்கம் எழுதியுள்ளார் பொ. வே. சோமசுந்தரனார்.[2] உரைக்கு உரையெனினும் பலவிடங்களில் ஆசிரியர் பழைய வுரையாசிரியரின் தவற்றினையும் சுட்டியிருக்கின்றார் என்பது பாராட்டுக்குரியதாகும். 1957ஆம் ஆண்டு வெளிவந்த திருமந்திரம் விளக்கவுரையின் புதிய பதிப்பு புதிய முயற்சி யென்று சொல்லலாம். ப. இராமநாத பிள்ளை எழுதிய விளக்கமும், துடிசைகிழார் அ. சிதம்பரனார் எழுதிய குறிப்பும் திருமந்திரப் பதிப்பைப் பெரிதாக்கியிருக்கின்றன. வைணவ நூல்களுக்கு உரையெழுதுவதில் பிரதிவாதி பயங்கர அனங்காச் சாரியாரும், ஸ்ரீ. ஸ்ரீயும், திருப்பாவைக்கு உரை எழுதிய அ. சீனிவாச ராகவன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்க ளாவார்கள்.

உரைப்போன் உள்ளக் கருத்தின் அளவே பெருக்கம்:

உரை பெருகுமென்பதனைக் கருதி எல்லாவற்றுக்கும் உரை எழுதாமல் தேவையானவற்றுக்கு மட்டும் உரை கண்டதற்கு அக்காலத்தில் உள்ள போதிய வசதியின்மையே ஒரு காரணம் என்று கொள்ளலாம். ஆனால் இக்காலத்து எவ்வளவுதான்

---

1. பண்டிதமணி கதிரேசன் செட்டியார்—திருவாசகம்—நீத்தல் விண்ணப்பம்·கதிர்மணி விளக்கம். பகுதி - *2; 1950.*

2 பொ. வே. சோமசுந்தரனார்—திருக்கோவையார் பழைய உரையும் புதிய விளக்கமும்—*1970*—பக்கம்—*18*—*19;*

எழுதிக் குவித்தாலும் அச்சியந்திரங்களின் மூலம் அச்சிட்டுக் காண்கின்ற வாய்ப்பு இருக்கும்பொழுது உரைப்போன் உள்ளக் கருத்தின் அளவே பெருக்கம் என்பதற்கேற்பப் பல உரைகள் நீண்ட விளக்கவுரைகளாகி வருகின்றன. இந்த வகையில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையவர்கள் முப்பால் ஒளி என்னும் பெயரில் எழுதி வந்து தற்போது நூலுருவில் கிடைக்கும் திருக்குறள் உரையினைச் சொல்லலாம். ஒவ்வொரு குறளுக்கும் மிக நீண்டதோர் அனுபவ விளக்கம் இவ்வுரையின் மூலம் கூறப்பட்டது என்பதே இவ்வுரையின் சிறப்பெனலாம். பாலூர் கண்ணப்ப முதலியார் சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கு எழுதியுள்ள விளக்கவுரை (1964) இதன்பாற்படும்.

திருந்திய பதிப்புக்களும் புதிய வுரைகளும்

திருந்திய பதிப்புக்களினால் புதிய உரைகள் தோன்று வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. ஆராய்ச்சிப் பதிப்புக் களால் உரைகள் பெருக வாய்ப்பு ஏற்பட்டன. இந்த வகையில் உண்மையான கம்பராமாயணத்தை இன்னும் உலகு காணவில்லை என்னும் குறைபாட்டினை நீக்கும் பொருட்டு 1952ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் ஆரம் பித்த கம்பராமாயணப் பதிப்புக்களும் அதற்காக எழுதப்பட்ட குறிப்புக்களும் சான்றுகள் எனலாம். கம்பராமாயணத்திற்கு உரை காண்பதெனின் அஃது எளியதொரு செயலன்று பழைய வுரைகள் உள. ஆகவே புத்துரை வரைதல் வேண்டா என்னும் பிரதி பேதங்களும் சிறந்தனவென்று மூலத்துள் இப்பதிப்பின் உரை மாற்றியமைத்த பகுதிகளையும், பாடம் மாறாத நிலையினும் சிறந்த பொருணயமுடைய படிப்போர் அவற்றின் பொருளை எளிதின் உணர்ந்து இன்புறுதற்கு ஒரு குறிப்புரை இன்றி யமையாததாயிற்று.[1] இவ்வுரை முயற்சியினால் ஒவ்வொரு பதிப்பிலும் குறையாமல் நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் புதிய விளக்கம் பெற்றன. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையத்தில் வெளியிடப்பட்ட கம்பராமாயண உரைப் பதிப்புக்களை இந்தவகையில் சேர்க்கலாம். பல புதிய பதிப் புக்கள் பழந்தமிழ் இலக்கியங்களுக்குத் தோன்றுமானால் பல புதிய வுரைகளும் புதிய உரையாசிரியர்களும் தோன்று வார்கள் என்பதில் ஐயமில்லை. திருக்குற்றாலநாதருலா விற்குக் குறிப்புரை (1952) எழுதிய ஸ்ரீநிவாஸ ஐயரும்,

---

1. கம்பராமாயணம்: அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழா மலர், 1968; பக்கம் 15.

நந்திக்கலம்பகத்திற்கு விளக்கவுரை (1963) எழுதிய சோ. அருணசல தேசிகரும், தண்டலையார் சதகத்திற்கு உரையெழுதிய (1954) புலவர் அரசும் விக்கிரம சோழனுலாவிற்கும் (1960) குலோத்துங்க சோழனுலாவிற்கும் (1964) உரையெழுதிய சங்குப் புலவரும், முக்கூடற் பள்ளுவிற்கு (1957) உரையெழுதிய ந. சேதுரகுநாதனும் சிற்றிலக்கியங்களுக்கு உரையெழுதியவர்களுள் குறிப்பிடத் தக்கவர்களாவார்கள்.

பழந்தமிழ்ப் பெருமையும் உரையும்

அரசியல் இயக்கத்தின் விளைவால் நாடு விடுதலையடைந்த பிறகு தமிழ்நாடு தமிழர்க்கு உரியது என்னும் கொள்கையும் மக்களிடையே பரவத் தொடங்கியது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பு தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வு எப்படி அமைய வேண்டுமென்ற நோக்கில் ஏற்பட்ட வேறுபாடுகள் அரசியற் கட்சிகள் தோன்றி இயங்கக் காரணமாயின. இந்திய விடுதலை இயக்கமான காங்கிரஸ் ஆட்சி பொறுப்பை ஏற்றது. விடுதலையை இலக்காக வைத்து வளர்ந்து வந்த காங்கிரஸுக்கு விடுதலைக்குப்பின் இலட்சியம் இல்லாது போயிற்று. சமூகத்தின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு வர்க்க பேதங்களைப் பொதுவுடைமைக் கட்சியானது காரணங்காட்ட, திராவிட கழகத்திலிருந்து பிரிந்த திராவிட முன்னேற்றக் கழகம் வடவரின் சுரண்டுதலே காரணம் எனவும் பார்ப்பனியத்தை எதிர்ப்பதையும் திராவிட நாடு நிறுவுவதையும் இலட்சியங்களாகக் கொண்டு பணியாற்றியது.[1] தமிழ் நாட்டிலேயே பிறந்து வளர்ந்தும் அம்மொழி தெரியாவிட்டாலும் வடமொழியே தமக்குத் தாய் மொழி என்று பேசியும் நடந்தும் வந்த பிராமணர்களை எதிர்த்துக் கட்சி ஒன்று செயல்படத் தொடங்கியது.[2] இதே நேரத்தில் மறைமலையடிகளின் தூய சமய வாதத்தாற்கூட வருணசிரம ஒழுக்க முறையைக் கண்டிக்க முடிந்ததே தவிர அழிக்கமுடியவில்லை. ஆகவே இடைக்காலச் சாதி, புராண அடிப்படையிலமைந்த போலிச் சமயத்தையும் சாதியையும், அவற்றினடிப்படையிலமைந்த போலி ஒழுக்கக் கருத்துக்களையும் ஒருங்கே எதிர்த்தாலன்றி புதிய சமூகத்தையோ சமய வலுவையோ அரசியல் மனப்பான்மையையோ உண்டு பண்ண

---

1. டாக்டர் அ. வேலுப்பிள்ளை—“காலமும் கருத்தும்—*1969*; பக்கம் *164*.

2. அ. ச. ஞானசம்பந்தம்—“இன்றைய இலக்கியம்”—*1971*; பக்கம்—*92*.

முடியாது.[1] இந்த எண்ணம் அரசியல் சார்புள்ள தமிழ்ப் புலவர்களிடையே இருந்தது எனலாம். பழந்தமிழ் நூல்களான தொல்காப்பியம் திருக்குறள் போன்றவைகள் மதுரைபாரத்து வாசி நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றவர்களால் வடவர் நாகரீகத்திற்கேற்பத் திரித்துக் கூறப்பட்டிருக்கின்றன என்னும் எண்ணமே இக்காலத்தில் இத்தகைய நூல்களுக்குப் புதியதொரு உரையினைத் தோற்றுவிக்கத் துணைபுரிந்தது. மேலும் அரசியல் வாழ்வில் காந்தியடிகள் கடைப்பிடித்த நெறி முறைகள் பலரைக் கவரவும் அவ்வழியில் ஈடுபட்ட சிலர் தங்கள் வாழ்க்கையில் கண்டறிந்த அனுபவ உண்மைகளைப் பொருத்திப் பார்த்துத் தெளிவுரைகளை எழுதத் தலைப்பட்டனர். திரு. வி. க. போன்றவர்கள் இதற்குச் சொல்லலாம். அறிஞர்களால் அதிகமாக உரையெழுதப் பெற்ற பெருமையையுடையது திருக்குறள் எனலாம். டாக்டர் சி. இலக்குவனர் எழுதிய திருக்குறள் உரையும் (1957), ந. சி. கந்தையாப் பிள்ளை எழுதிய திருக்குறள் (1949), டாக்டர் மு. வரதராசன் எழுதிய திருக்குறள் தெளிவுரையும் உரையாசிரியர்களுடைய வாழ்க்கை யனுபவத்தையொட்டி யெழுதப்பட்ட உரைகள் என்று சொல்ல லாம். ஒவ்வொருவரும் தத்தம் உளப்பாங்கிற்கேற்பப் புது உரைகளைப் படைக்க முயன்றிருக்கிறார்கள். இந்த வகையில் டாக்டர் மு. வ. அவர்களின் திருக்குறள் தெளிவுரை முதலிடம் பெறுவதாகும் பல பதிப்புக்கள் கண்டது. அதிக விற்பனையுடையது.

இன்றியமையாச் சிறப்பினையுடைய தமிழ்க் கருவூலமாகிய திருக்குறளை இக்காலத் தமிழ் மக்கள் எல்லோரும் கற்றுப் பயன் பெற முடியாத வகையில் அதன் உரை அமைந்துள்ளது; வள்ளுவர் கருத்துக்குமாறாக அயற்கொள்கைகள் பல வலிந்து புகுத்தப்பட்டுத் தமிழ்ப் பண்பாடு மறைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் காலத் தமிழர் வாழ்வை நினைவு கூர்ந்தே குறளின் பொருட் பயன் கொள்ளுதல் வேண்டும் என்னும் கருத்தின் நிறைவேற்றமே இவ்வுரையாகும் என்பது புலவர் குழந்தை யின் முகவுரையாகும்.[2] இவ்வுரையில் தற்கால எடுத்துக் காட்டுக்கள் பல பயின்று வரக் காணலாம். "கேட்டார்ப் பிணிக்கும்" என்னும் குறளுக்கு "நேரில் கேட்டவரேயன்றிக் கேட்டார்வாய்க் கேட்டாரும் கேட்க விரும்பும்படி பேசுவதே

---

1. கா. அப்பாதுரை— இந்தியமக்கள் விடுதலை இயக்க வரலாறு 1953; பக்கம் 413.

2. புலவர் குழந்தை— "திருக்குறள் குழந்தை உரை" முகவுரை- 1968; பக்கம் 23–26; பக்கம் 202; பக்கம் 12; பக்கம் 230.

சொல்வன்மையாகும். 6-3-67 இல் பதவியேற்ற, தமிழக முதலமைச்சர், அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சு இதற்கு எடுத்துக்காட்டாகும்'' எனவும், [1]''செயற்கரிய செய்வார் பெரியார்'' என்னும் குறளுக்குத் ''தன்மானத் தந்தை பெரியார் தம் சமூகப் புரட்சி போன்ற செயற்கரிய செயல்களுமாம்'' எனவும் [2]''பல்குழுவும்'' என்னும் குறள் உரையில் ''பல்குழு செல்வாக்குள்ள சிலர் தங்கள் தலைமையின்கீழ் ஊர் மக்களை வெவ்வேறாகப் பிரித்து வைத்து ஊரைக் கெடுக்கும் ஊர்க் கட்சிகள். இவை இன்றுள்ள அரசியல் வகுப்புக் கட்சிகள் போல நாட்டுக்குக்கேடு சூழ்வன எனப்படும்'' இன்னோரன்ன உரைகள் குழந்தையுரைகளேயாகும்.[3] கட்சிக் கண்ணோட்டத்துடன்

அணுவின் ஆற்றல்

காலம் நமக்குக்
கதைசொல்லப் போகிறது;
ஓலம் இடாதீர்;
உதயம் பிறக்கிறது!...
நோய்வென்று வாழ்வின்
நொடிவென்று மண்ணுலகத்
தாய்வென்று வாழும்
தருமம் அணுசக்தி!
ஆழியைப் போய்நீந்த
ஆகாயம் கையேந்த
வாழிய வையம்;
வளர்க அணுவாற்றல்!...

—தமிழ் ஒளி.

எழுதப்பட்ட உரைகளும் தோன்றியுள்ளன. புலவர் குழந்தை, பாரதிதாசன் இருவரும் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பவும் வடமொழிக் கொள்கையை எதிர்க்கவும் திருக்குறளுக்குப் புதிய உரைகள் எழுதினர் என்னும் மு. வை. அரவிந்தன் கூற்று மேலே சொன்ன எடுத்துக்காட்டுக்களுக்கு அரண் செய்வதைக்

1, 2, 3. புலவர் குழந்தை—'திருக்குறள் குழந்தை உரை'—முகவுரை 1968. பக்கம். 23-26; பக்கம் 202; பக்கம் 12; பக்கம் 230.

காணலாம்.[1] இதேபோன்றுதான் புலவர் குழந்தையின் தொல்காப்பியம் பொருளதிகாரவுரையும் பழையவுரைகளின்றி எல்லோருக்கும் எளிதில் புரியும்படியான நிலையில் எழுதப்பட்டுள்ளது. செய்யுளியல் 186ஆம் சூத்திரம் களவியல் 406ஆம் சூத்திரமாகவும், செய்யுளியல் 187ஆம் சூத்திரம் கற்பியல் 347 ஆம் சூத்திரமாகவும் மாற்றிவைத்தும், அகத்திணையியல் 41 ஆம் சூத்திரத்தை இரண்டாக்கிப் பொருளதிகாரத்தின் சூத்திரங்களின் எண்ணிக்கையில் ஒன்றினைச் சேர்த்ததும் இவ்வுரையில் காணக்கூடிய மாற்றமாகும். இயல்வைப்பு முறையிலும், அகத்திணையியல், பொதுவியல், களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல், புறத்திணையியல், உவமயியல், செய்யுளியல், மரபியல் எனப் புதியதொரு மாற்றமும் செய்யப்பட்டிருக்கிறது.[2] பல மாற்றங்களுக்குச் சான்றுதாரங்கள் காட்டினரில்லையெனச் சொல்லலாம்.

மலிவுப் பதிப்புக்களும் உரைகளும்

மலிவு விலையில் மக்கள் எல்லோரும் படித்து இன்புறத் தக்கவகையில் வெளியிடப்பட்டுள்ள உரை நூல்களுள் புலியூர்க் கேசிகன் தெளிவுரை நூல்கள் குறிப்பிடத்தக்கவைகளாகவும் வித்துவான் ந. தேவநாதனும் அரு. ராமநாதனும் சேர்ந்து விளக்கக் குறிப்புக்களுடன் வெளியிட்ட சித்தர் பாடல்களும் (1959), சிரஞ்சீவியின் வசன விளக்கங்களுடன் வெளிவந்துள்ள கூளப்ப நாய்க்கன் காதல் விறலி விடுதூதும் (1958) ரகுநாதனின் ஆராய்ச்சியுரையோடு வந்த சமுதாய இலக்கியமும் மலிவுப் பதிப்பு நூல்களில் திருந்திய முறையில் பதிப்பிக்கப்பட்டவைகள் ஆகும்.

விளக்கவுரையும் திறனாய்வும்

உரையாசிரியர்கள் உரையால் தீர்க்கமுடியாத சிக்கல்களுக்கு விடைகாணும் சூழ்நிலை, பல்வேறு மொழிகளின் இலக்கியத் தொடர்பாலும் மேனாட்டுத் திறனாய்வுப் பயிற்சியாலும் ஏற்பட்டது. வாழ்க்கையின் அனுபவப் படிப்பும் இதற்குத் துணை செய்தது. விளக்கவுரையின் தன்மையைக் கொண்டு, உரையாசிரியர்களின் கருத்தின் வன்மை மென்மை

---

1. மு. வை. அரவிந்தன்—"உரையாசிரியர்கள்—1968—பக்கம் 370.

2. புலவர் குழந்தை—"தொல்காப்பியம்" - பொருளதிகாரம் குழந்தையுரை 1968—முகவுரை பக்கம் 8–10,

களை ஆராய்ந்து உண்மை முடிவு இதுவென நினைவூட்டும் முகத்தான் பல கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நூல்களுள் டாக்டர் மொ. அ. துரையரங்கனர் எழுதியுள்ள அன்புநெறியே தமிழர்நெறி (1960), கருவிலே திருவுடையான் என்னும் நூல்களும் செ. வேங்கடராமச் செட்டியாரின் புனையா ஓவியம், பெறலரும் பரிசில் என்ற நூல்களும், கி. வா. ஜகந்நாதனின் வழிகாட்டியும் (1961) சிறந்தவைகளாகும்.

ஒரு பாட்டை உணர்தல் என்பது அதன் சொற்களைப் பிரித்துப் பதப்பொருளோ பொழிப்புப் பொருளோ காணும் அளவில் நிற்பது அன்று; அதைப் பாடிய புலவரின் உணர்வைப் படிப்பவரும் பெறுதலும் பாட்டை உணர்தலாகும்.[1] இதனை நன்குணர்ந்தவர்கள் பழந்தமிழ் உரையாசிரியர்கள். அவர்கள் உரைகளெல்லாம் புலவரின் உள்ளம் உணர்ந்த குறிப்புரைகள் என்று சொல்லலாம். பாட்டின் பயனை உணர்வதற்குச் சமூக உளவியல் அறிவும், வாழ்வின் அடிப்படையை மையமாகக் கொண்டும் செயல்படும்பொழுது புதிய விளக்கங்கள் பெறப் படுகின்றன. இத்திறனய்வு விளக்கங்கள் உரைகளைப் போலில் லாமல் விரிந்துபட்டதொரு அனுபவ நிலையினையூட்டுவனவாக வுள்ளன. இம்முறையில் தெ. பொ. மீனட்சிசுந்தரனரின் கானல்வரியும், டாக்டர் மு. வரதராசனின் ஓவச் செய்தி, இலக்கியக் காட்சிகள் என்ற நூல்களும் உதாரணங்களாகச் சொல்லலாம். தமிழண்ணல் எழுதியுள்ள குறிஞ்சிப்பாட்டு இலக்கியத் திறனய்வு விளக்கம் (1961) குறிப்பிடத்தக்கது.

பள்ளி நூல்களும் பாட உரைகளும்

எளிதில் படித்துப் பயன்பெறக்கூடிய வகையில் பாட உரை நூல்களைத் தயாரித்து வெளியிடுவதில் முதலிடம் பெறு பவர் ஐயன் பெருமாள் கோனராவார். எளிதில், தேர்வுக்காக இலக்கணத்தை மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் தொல்காப்பியம் நன்னூல் போன்ற இலக்கண நூல்களுக்கு இக்காலத்தே உரைகள் வெளிவருகின்றன. க. வெள்ளை வாரணரின் தொல்காப்பியம்-நன்னூல், எழுத்ததிகாரம் உரைத் தொகுதிகளும், மோஸஸ் பொன்னையாவின் நன்னூல் தெளி வுரையும் எடுத்துக்கூறத் தகுதி வாய்ந்தவைகளாகும்.

---

1. டாக்டர் மு. வரதராசன்—"ஓவச் செய்தி"—1963; பக்கம் 74.

உரைக்கு உரை

காலத்திற்கேற்ற வகையில் ஞாலமுழுமைக்கும் ஒன்ருய் எந்த நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லையென்பது பாரதியாரின் துணிபாகும். பழந்தமிழ் இலக்கியங்களுக்கு மட்டுமல்லாமல் பழந்தமிழ் உரைகளுக்கும் திருந்திய பதிப்புக்கள் வரின், புதிய கருத்துக்களுக்கேற்பப் புதியவுரைகளும் தோன்றும். இந்த வகையில் இப்பொழுதுதான் மூலபாடத் திறனய்வு (Textual Criticism) முறையில் திருத்தம் பெற்ற பல பதிப்புக்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன; வரவிருக்கின்றன; அவைகள் வரும். அப்படியாயின் புதிய உரையாசிரியர்கள் தோன்றுவார்கள். புதியவுரைகள் எழுதப்படும். அதுவே இலக்கிய வளர்ச்சியின் அடையாளமுமாகும்.



With
the
Best
Compliments
of

A WELL WISHER

With the best compliments from

ICI

Group of Companies

WITH BEST COMPLIMENTS FROM

Phone: 564234

MEHTA OFFSET WORKS

308A/1, SHAHZADA BAGH

OLD ROHTAK ROAD,

DELHI-7.

With best
compliments from

The Makers of:

**SILVER PRINCE
STAINLESS STEEL
BLADE**

With best compliments
from

Chloride India Limited

EXIDE HOUSE

3-E/1, Jhandewala Extension, Link Road,
NEW DELHI-55.

DINAMANI

The most authentic Tamil Daily
Published simultaneously from

MADRAS & MADURAI

Present Print Order exceeds
1,72,00 copies

DINAMANI KADIR

Tamil weekly, the popular
week end magazine.

சுதந்திரத்துக்குப் பிறகு

தமிழ்க் கவிதை

[டாக்டர் சாலை இளந்திரையன்]

1947 இல் இந்த நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் வந்தது. வந்த சுதந்திரம், வகையாக வளர்ந்து மக்களுக்கெல்லாம் நல்வாழ்வு தரத் தவறிவிடவே, இங்கே, எல்லாவற்றிலுமே ஒரு குழப்பம் குடிபுகுந்துவிட்டது; ஒரு குறிப்பிட்ட வேலைக்குரிய தகுதியும் அதன் மீது ஓர் ஆர்வமும் இல்லாதவர்களும் அந்த வேலையில் ஒட்டிக்கொண்டு, ஆசிரியர், மருத்துவர், அமைச்சர், அதிகாரி என்ற பெயர்களில் வீண் காலம் தள்ளும் ஒருநிலை இங்கே ஏற்பட்டு விட்டது. எப்படியாவது பேரும் புகழும் பெற வேண்டும் என்ற ஓர் ஆர்வ எழுச்சி கரைகடந்து பொங்கும்போது, அந்த எழுச்சிக்குத் தேவையான வாயில்களும் இல்லாதபோது, அது தாறுமாறுகப் பாய்வது இயல்பே அல்லவா ?

இப்படிச் சொன்னவுடன், சுதந்திரத்துக்குப் பிற்பட்ட தமிழ்க் கவிதைப் பண்ணை வெறும் குப்பைக் காடாகிப் போய் விட்டது என்று எண்ணிவிடக் கூடாது; அங்கே நற்பயிர்கள் முளைக்கின்றன, கிளைக்கின்றன; ஆனல் அவை தலையெடுக்க முடியாதபடி, காட்டாற்று வெள்ளமான போலிகள் வந்து விழுந்து மூடுகின்றன என்பதே பொருள்.

இங்கும் அங்குமாக...

இந்த நூற்ருண்டின் மாபெரும் கவிஞராகத் தலையோங்கிய பாரதிதாசன் 1938இல் தமது முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டார்; 1964இல் அவர் காலமானது வரை, அவருடைய கவிதைப் பேனு இயங்கிக் கொண்டே இருந்தது. வயதில் அவரை விட மூத்தவராயினும் வாக்கு வீச்சில் இவருக்கு இணை வர முடியாத கவிமணியின் கவிதைப்பணியும், சுதந்திரத்திற்கு முன்பும் பின்புமாக நடந்தது. சுத்தானந்த பாரதியார், நாமக்கல் ராமலிங்கம், ச. து. சு. யோகியார் போன்றவர்களும் இந்த இரண்டு காலப் பகுதிகளிலும் கவிதைப்பணி நடத்தியவர்களே.

இவர்களின் சுதந்திரக் காலக் கவிதைப் பணியில் ஏற்றமும் இறக்கமும், வளர்ச்சியும் தளர்ச்சியும் வெவ்வேறு அளவுகளில் காணப்பட்டாலும், இந்த நாட்டுக்குச் சுதந்திரம் என்னும் பெரிய நிகழ்ச்சியால் இவர்களின் பாட்டுப்பணியில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அஃதாவது, சுதந்திரத்துக்கு முன்பே, தங்களுக்கென்று இவர்கள் வகுத்துக் கொண்ட கொள்கைப் பாதையை அங்கங்கே சிறிதே செப்பஞ் செய்து புதுக்கிக் கொண்டது தவிர, அதை நீட்டி வளர்த்து விரிக்கும் திசையில் இவர்கள் நடை போடவில்லை. இது நமக்குப் பெரிய வியப்பை அளித்தாலும், இவர்களைப் பொறுத்த அளவில் இதுவே உண்மை.

அமைதியும் சோகமும் கலந்த ஒரு நோக்குக்கு அப்பால் கவிமணியார் வளர்ந்ததில்லை; இளமையில், மருமக்கள் வழி மான்மியம் என்னும் அங்கதப்பாடல் இசைத்த கவிமணி, அங்கதத்தொனி மிகுந்த உமார்கய்யாம் பாடல் (மொழி பெயர்ப்பு) களிலே கூடப் போதிய வேகம் காட்டவில்லை. ஆசிய ஜோதியும் ஒரு மெல்லின நடையிலேயே அமைந்தது.

''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' என்று தொடங்கி, ''தமிழன் என்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நில்லடா!'' என்று குரல் கொடுத்து, சாந்திக் கடவுளின் பக்தராக நின்ற நாமக்கல் கவிஞர் அந்த எல்லைகளுக்கு அப்பால் கவிதை பாடவே இல்லை. அவர் இயற்றிய ''அவளும் அவனும்'' காவியமாகவோ கவிதைக் கதையாகவோ சிறப்படையவில்லை.

''வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா?'', ''அன்றந்தலங்கையினை ஆண்ட மறத்தமிழன்...என் தமிழர் மூதாதை என்தமிழர் பெருமான், இராவணன் காண்!'', ''மக்கள் உழைக்காமுன் மேலிருந்து வந்திடுமோ?'' என்பன போன்ற கருத்துக்களுடன் மக்களுக்கு (1938இல்) அறிமுகமான பாரதிதாசன், இவைகளுக்கு விளக்கமான சில கவிதைக் கதைகளை யாத்தார்; நாள் செல்லச் செல்ல ஆரிய எதிர்ப்பு, தமிழ்ப்பண்பாட்டு மோகம் என்பவைகளே அவரிடம் மிஞ்சின.

சிறந்த புதுமைக் கருத்துக்களையும் நகை, அவலம், வீரம் போன்ற சுவைகளையும் கவிதையில் திறம்படக் கையாளக் கூடியவர் என்பதற்கு இவருடைய பாண்டியன்பரிசே போதிய சான்று; காலத்தோடு பொருந்திய தமிழ்க் குடும்பவாழ்வே அவருடைய நெஞ்சை ஆண்டுகிடந்த எண்ணம் என்பதை,

இவருடைய குடும்பவிளக்கு பெற்றுள்ள வெற்றியே முழக்க மிட்டுச் சொல்லுகிறது. இவை தவிர, தமிழ்ப் புகழ்ச்சியை ஒரு பெரிய கலையாகவே வளர்த்துவிட்ட பெருமையும் இவருக்கே உரியது.

பாரதிதாசன் பரம்பரை

இந்த மூன்று சாதனைகளாலேயே இவருடைய பரம்பரை ஒன்று தமிழ்க் கவிதையில் உறுதியாக ஏற்பட்டது. இந்தப் பரம்பரையே 1950 முதல் 1965 வரையுள்ள தமிழ்க்கவிதை உலகை ஆண்டுவந்தது. இப்போதும் (1965க்குப் பிறகும்), அந்தப் பரம்பரையின் செல்வாக்கு ஓரளவு இருந்து வந்தாலும், தமிழ்க்கவிதையில் புதிதாக முனைப்புற்ற சில கருத்துக்களாலும் உத்திப் புதுமைகளாலும், பாரதிதாசன் பரம்பரையின் செல்வாக்கு சரியத் தொடங்கியுள்ளது.

வாணிதாசன், முடியரசன், சுரதா, கண்ணதாசன் முத லான சிலரே பாரதிதாசன் பரம்பரையில் முக்கியமானவர்கள். இவர்களுள் முதல் இருவரும் பாரதிதாசனின் கருத்துக்களை அப்படியே திருப்பிச் சொல்லி வருவதால், அவர்களின் கவிதை களில் ஒரு புத்தெழுச்சியும் துடிப்பும் இல்லை. மற்ற இரண்டு பேரும் பாரதிதாசனின் கருத்துக்களுக்கு முதன்மை கொடுக் காமல் கவிதை உத்திகளில் நாட்டம் செலுத்தியதால், அந்த வகையிலான ஒரு புதுமையைக் காட்டுகிறார்கள்.

சுரதாவின் அணி

சுரதாவின் பாடல்களில் சில சமுதாயக் கருத்துக்கள் தென்பட்டாலும், அவை முனைப்புற்று எழுச்சி ஊட்டுவதில்லை. ஆனாலும், இலக்கணச் செய்திகளை உவமைகளாகச் சொல்லு வது, பழையவர்களையும் நிகழ்ச்சிகளையும் மேற்கோளிகள் (allusions) ஆக்குவது, சில செய்திகளை ஒரேவிதமாக அடுக்கு வது என்னும் ஒருவகைப் புதுமை இவருடைய கவிதைகளில் உண்டு.

''வேற்றுமையை வினைச்சொற்கள் ஏற்பதில்லை; வெறும் பாட்டைத் தமிழ்ச் சங்கம் சேர்ப்பதில்லை.'', ''பொழிப்பு அகலம் நுட்பம் எச்சம் நான்கும் பொருந்தியதோர் உரைநூல் போல் சிறந்த சேனை'' என்பவை இவருடைய சில இலக்கண உவமைகள். பாரதிதாசன் விருத்தப்பாடலில் வெற்றி பெற்றார் என்று சொல்லவரும் இவருடைய பாடல், ''திருத்தத்தில்

வெற்றி பெற்ருன் ஒட்டக்கூத்தன்; தீர்ப்பளித்து வெற்றி பெற்ருன் கரிகால் சோழன்; நிருத்தத்தில் வெற்றி பெற்ருன் ஆட்டனத்தி; நிதியளித்து வெற்றி பெற்ருன் பாரிவள்ளல்!'' என்னும் பழஞ்செய்திகளை அடுக்குகிறது.

"குழந்தையோ பெற்ருேர் எச்சில்; கூடையோ குறத்தி எச்சில்; பழங்களே பறவை எச்சில்; பால் தயிர் இடைச்சி எச்சில்; மழைஎலாம் முகிலின் எச்சில்; மதுவெலாம் வண்டின் எச்சில்; எழில் மிகு புடைவை, வேட்டி எல்லாமே நெய்வோன் எச்சில்.'' இதுபோல் ஒரு சொல்லைப் பலவற்ருேடு கூட்டி ஒரு மெல்லிய கவர்ச்சி ஊட்டுவதும் இவருடைய வழக்கம். பின்னுல் வந்து, கவியரங்கங்களின் சிறப்புற்றுள்ள முருகுசுந்தரம், தமிழன்பன், அப்துல்ரகுமான் போன்றவர்கள் சுரதாவின் இந்த மூன்று உத்திகளையும் அப்படியே பின்பற்றி வருகிருர்கள். முனைப்புற்ற சமுதாய எண்ணம் எதுவும் இல்லாமல், பின் இயைபுச் சந்தப் பாடல்களால் ஓர் இனிமை தோன்றுமாறு பாடும் தமிழழகனையும் இந்த அணியிலேயே சேர்க்க வேண்டும்.

கண்ணதாசன் அணி

கண்ணதாசன் கருத்து வகையில் ஒரு நிலையில் நில்லாதவ ராளுலும், அழகான சொற்சேர்க்கைகளால் மனங்கவரும் ஆற்றல் பெற்றவர்; அந்தச் சொற்சேர்க்கைகளில் சிலபோது ஆழமான கருத்துவளம் பொதிந்திருப்பதும் உண்டு: "காலமெனும் காட்டாற்றில் கரையேறி வந்தவளே;—காவியப் பூங்காவினிலே ஓவியமாய் வளர்ந்தவளே! தொல்காப்பியன் மனத்தில் தொட்டில் கட்டிக் கொண்டவளே; பல்காப்பியங்களிலும் பருவமகள் ஆனவளே!'' என்றெல்லாம் தமிழைப் பற்றி இவர் பாடும்போது,—இஃது ஒருவகையான கற்பனுவாதம் என்று தெரிந்தாலும்,—தாய்மொழியையே தெய்வமாக்கி வழிபட்டு வரும் மக்களுக்கு இது மிக உவப்பாகவே இருக்கிறது. "போதிமரப் புத்தன் போய்விட்டான் என்றிருந்தோம்;—பாதிவழி போன அவன், பண்டிதராய்த் திரும்பிவந்தான்; ஆதிமகன் ஏசுபிரான் அடங்கிவிட்டான் என்றிருந்தோம்;—தாவியவன் பாரதத்தில் ஜவகர்லால் ஆக வந்தான்;'' என்னும் இவருடைய பாட்டடிகளில், நேருவைப் பற்றிய மக்களின் எண்ணம் இனிய கற்பனை புனைந்து எழுந்து படர்கிறது. இவருடைய வழியைப் பின்பற்றி அதில் பலவேறு அளவுகளில் வெற்றி பெற்றவர்களாக சிற்பி பாலசுப்பிரமணியன், குருவிக் கரம்பை சண்முகம்,

மோகனரங்கன் முதலியோரைக் குறிப்பிடலாம். கே. சி. எஸ். அருணாசலத்தின் சில கவியரங்கப் பாடல்களிலும் மலேசியக் கவிஞர் அய். உலகநாதனின் பாடல்களிலும் இதன் சாயல் உண்டு. தேசீயம் என்னும் ஒரே கருத்துத் தளத்தில் நின்று, கண்ணதாசனைப் போன்ற வளமான தொடர்களால் பாட்டிசைப்பவர் எஸ். டி. சுந்தரம். இவர் கண்ணதாசனைப் பின்பற்றியவரல்லர் என்றாலும் இருவரின் பாடல்முறையும் ஒரேவிதமானதே.

வடிவப் புதுமை அணி

கவிமணியின் அமைதிநெறியையும் அழகுநெறியையும் ஒருவாறு தழுவிச் சிலர் பாட்டிசைத்தார்கள். அவர்களுள் தூரன், சோமு, கலைவாணன், திருலோகசீதாராம் முதலியோர்

நேரு வந்தார்

ஊரு திரண்டது சேரி திரண்டது
　　உலகந் திரண்டோடி வந்ததடா;—
நேரு வலம்வரும் நேர்த்தியைப் பார்த்திட
　　நீளத் தெருவெல்லாம் நின்றதடா!
குஞ்சு நடந்தது பிஞ்சு நடந்தது
　　கூனும் நிமிர்ந்து நடந்ததடா;—
பஞ்சுப் பொதிபோலத் தொஞ்சி வளைந்து
　　பழுத்த பழமும் நடந்ததடா!...
ஆளுந் திருக்கரம் அத்தனை பேருக்கும்
　　அஞ்சலி செய்து மகிழ்ந்ததடா!
தோளில், தொடுகழல் தாளில், தடக்கையில்
　　சொக்கினர் நெஞ்சம் நெகிழ்ந்ததடா!

—சுரபி.

முக்கியமானவர்கள். பாரதி, பாரதிதாசன், கவிமணி போன்றவர்களின் கவிதைப் பண்புகளை ஏற்றவர் போலவும், அதே சமயம் ஒரு தனித்தன்மை கைவரப் பெறுதவராயும் உள்ள சுத்தானந்த பாரதியாரையும் இந்த அணியிலேயே சேர்க்கவேண்டும். இவர்களில் பெரும்பாலோர் அழகை அழகுக்காகவே பாடி, ஒருவகையான விரக்தித் தத்துவத்தைப் பரப்புகிறவர்கள்.

சேரி விளையாட்டு போன்ற கவிதைகளில் சமுதாய உணர்வு காட்டிய தூரன், நாளடைவில் பக்திநெறி இசைப்பாடல்களிலும் பரம்பொருள் தத்துவங்களிலும் ஈடுபட்டு விட்டார்:

''மனமென்ற பாதையிலே மயிலெண்ண முடியவில்லை;— நினைவென்ற சாலையிலே நின்நயர நேரமில்லை!'' என்று 'ஆன்மக்கனவு' காண்கிறது சோமுவின் மனப்பறவை; ''மூலக் கருத்தின் மோனச் சிறையுள் முடமாய்க் கிடந்தேனைக், கோலச் சுடரிற் கோணமெலாம் ஏன் கொண்டு திரிய விட்டாய்?'' என்று இறைவனைக் கேட்கிறார் திருலோக சீதாராமன்.

இவர்களுள் தூரனும் சோமுவும் பல புதிய, மெல்லிய பாட்டு வடிவங்களை உண்டாக்கியவர்கள். இவர்களைப் பின்

> ''குடும்பம் ஒரு பாற்கடல். அதிலிருந்துதான் லட்சுமி, ஐராவதம், உச்சஸ் ரவஸ் எல்லாம் உண்டாயின. அதிலிருந்து முளைத்துதான் எனக்கு நீங்கள் கிட்டினீர்கள். ஆலஹால விஷமும் அதிலிருந்துதான் உண்டாகிறது; உடனே அதற்கு மாற்றான அம்ருதமும் அதிலேயேதான்......''
>
> ''பாற்கடல்''—லா. ச. ராமாமிருதம்.

பற்றித் தமிழோவியன், இராஜேஸ்வரன், வல்லம் வேங்கடபதி போன்றோர் பாடி வருகிறார்கள். கண்ணதாசனும் சிலபோது இந்தத் தடத்தில் நடப்பது உண்டு. இளந்துறவி என்பவரின் பாடல்களிலும் பல சமயங்களில் இந்தப் போக்கே படர்கிறது.

புதியதோர் அணி

பாரதிதாசனின் கவிதைப்பாணியால் எழுச்சி பெற்று, நாளடைவில் தத்தமக்கு ஒரு தனி வழியை அமைத்துக் கொண்டவர்கள் சிலர் உண்டு. அவர்களுள் தமிழ் ஒளி, பட்டுக் கோட்டை கலியாணசுந்தரம், பெருஞ்சித்திரன், கே. சி. எஸ். அருணாசலம், வெள்ளியங் காட்டான், குலோத்துங்கன், சாலை இளந்திரையன் ஆகியோர் முதன்மையானவர்கள்.

தமிழ்ஒளி வேகமான கருத்துக்களோடு தொடங்கி, இலக்கிய அழகு என்னும் தடத்தில் மூழ்கி, சோகச்சுவையில்

முடித்தார். இவருடைய விதியோ வீணையோ?, கண்ணப்பன் கிளிகள் என்னும் பாட்டுக்கள் சோகத்தின் முழுவடிவங்கள். பெருஞ்சித்திரன் என்னும் துரைமாணிக்கம் தனித்தமிழ், இறுக்கமான பழந்தமிழ்ப் பாட்டுநெறி என்ற தடத்தில் திரும்பி, ஒருவிதமான தெளிவற்ற கவிதைகளைப் பாடத் தொடங்கி விட்டார். இவருடைய அய்யை, பாவியக் கொத்து, எண்சுவை என்பது போன்றன எல்லாம் இந்த இயல்பு கொண்டவைகளே. வெள்ளியங்காட்டான் வேகமான எண்ண வீச்சுக்கள் உடையவரென்றாலும், அவற்றுக்கு ஏற்றதான ஒரு புதிய நடை அவருக்கு அமையவில்லை. அவருடைய சில தனிப் பாடல்களில் காணும் வேகவீறு, 'கவிஞன்' என்னும் கவிதைக் கதையில் இல்லை. நடைத் தெளிவின்மையே அதற்குக் காரணம்.

பட்டுக்கோட்டை கலியாணசுந்தரமும், கே. சி. எஸ். அருணசலமும் பொது உடைமைக் கட்சியோடு ஒன்றிவிட்டவர்கள். காலத்துக்கேற்ற கருத்துவீச்சுக்களும் அதற்கேற்ற பாட்டுநடையும் கைவரப் பெற்ற இவர்களின் பாடலில் கட்சி வேலிக்குள் முடக்கப்பட்ட ஒரு தன்மை அங்கங்கே தெரியவே செய்கிறது. ஆனாலும், இவர்கள் தற்காலப் பாட்டுக்கே சுறு சுறுப்பு ஊட்டும் கணீரென்ற குரல் உடையவர்கள்.

வெற்று ஓசைக்கும் இசைக் கட்டுப்பாடுகளுக்குமே களமாக உள்ள திரைப்படப் பாடல் துறையிலும் அற்புதமான பொருள் நலத்தை ஊடாட விட்டு, அந்தப் பாடல்களையே கவிதைகளின் தரத்துக்கு உயர்த்தியவர் பட்டுக்கோட்டை: "ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அதுதான்டா வளர்ச்சி!" "அன்பை வளர்க்கப் பாடுபடுவோர்க்கு அதிகம் கிடைப்பது சிறைவாசம்!" "அறிவுக் கதவைச் சரியாய்த் திறந்தால் பிறவிக் குருடனும் கண்பெறுவான்" என்பன கருத்துச் செறிவுள்ள இவரது கவிதை அடிகள். "அன்பு மயில் ஆடலுக்கு மேடை அமைத்தான்,—துன்பமென்னும் நாடகத்தைக் கண்டு ரசித்தான்!" என்பது கற்பனை வளஞ்செறிந்த அவலப்பாட்டு.

மனிதன் விண்வெளியில் நிகழ்த்திய அறிவியல் புதுச் சாதனையைக் கண்டு,

"சந்திரனைத் தொட்டுநின்று
மனித சக்தி;

சரித்திரத்தை மாற்றியது
மனித சக்தி;
இந்திரன்தான் விண்ணுட்டின்
அரசன் என்ற
இலக்கணத்தைத் திருத்தியது
மனித சக்தி !''

என்று போற்றிய பாட்டும், இந்த உலகின் எதிர்கால நடையை அறுதியிட்டு,

''வசதி இருக்கிறவன் தரமாட்டான்—அவனை
வயிறு பசிக்கிறவன் விடமாட்டான் !''

என எழுப்பிய உறுதிக் குரலும் தமிழ்க் கவிதையில் இவருடைய தனிச் சிறந்த சாதனைகள்.

பட்டுக்கோட்டையாரின் குரலுக்கு அமைந்த புதிய வடிவமாக,—ஆனால் கட்சிக் கட்டுப்பாட்டு வேலிகளுக்கு உட்படாத குரலாக,—எழுந்திருப்பது சாலை இளந்திரையனின் 'பூத்தது மானுடம்'. மனிதச் சாதனைகளைப் பாடுவதிலும், அறிவியல் ஓர்மையால் துயில் நீங்கி எழுந்துள்ள மனிதச் சக்தியை ஊக்குவதிலும் தனிநெறி கண்டவை இவருடைய குரல்கள். "நீ புதுமானுடன் நேற்றை முடத்தை நிமிர்த்திய மானுடவன், —மாபெருந் தீரர்கள் போட்ட தடத்தை வளர்த்த புதியவன் நீ !'' என்று தற்கால அறிவியல் சாதனை மனிதனைப் பாராட்டும் பூத்தது மானுடம், ''ஏனடா தம்பி, இருட்டர் பெருந்தடை எத்தனை வைத்தனர்கள் !—அவை எட்டி உதைத்து இவன் கண்ட புதுமைகள் எத்தனை எத்தனைகள் !'' என்று மனித வரலாற்றின் போராட்டங்களையும் நினைவுபடுத்துகிறது முக்கியமாக.

''மானுட வாழ்க்கையின்
எல்லைப் பரப்பு
வளர்ந்து விரிகிறது—முன்பு
வைத்த வெளிப்புற
மண்சுவர் வேலி
மடிந்து சரிகிறது.... !

....

நான்கு சுவருக்குள்
இல்லறம் வைத்தவன்
நான்முழ மானுடவன்—அந்த
நண்டுக் குடிசையில்
தன்னை முடக்குவனோ,
புது மானுடவன்?''

என்னும் சிந்தனைகளை எழுப்பி,—மனித வாழ்வின் புதுமையையும் அதன் விளைவானதொரு மாறுதல் தேவையையும் தமிழ் மக்களிடையே பாய்ச்சி வருவதை இவருடைய தனிச் சாதனையாகக் குறிப்பிட வேண்டும். மானுட மேன்மை என்பது, பாரதிதாசனிலேயே முகம் காட்டிய ஒரு கருத்துத்தான் என்றாலும், சாலை இளந்திரையனிடம் அது முழுமையும் புதிய வீறு பெற்றுள்ளது.

ஈழத்து அணி

இந்தக் காலக்கட்டத்தில் ஈழநாடும் பல நல்ல கவிஞர்களைத் தந்தது. அவர்களுள் நாவற்குழியூர் நடராசன், அல்வாயூர் மு. செல்லையா, மகாகவி, இ. முருகையன், காசியானந்தன் முதலானோர் சிறப்புக்கு உரியவர்கள். காலத்துக்கு ஏற்ற எளிய நடையும் ஒருவிதமான அங்கதப் பார்வையும் ஈழத்துக் கவிஞர்களுக்கெல்லாம் பொதுவான பண்புகள். அவர்களுக்குள்ளே, அங்கதச் சுவைக்கே ஒரு நூல் செய்து புகழ் சிறந்தவர் மகாகவி. குறும்பா என்னும் அந்தப் பாத் தொகுப்பு, குறும்பா என்னும் மூன்றடிப் புதுப்பாடல் வகை ஒன்றை உண்டாக்கியதோடு, இன்றையச் சமுதாயத்தின் பல கேடுகளைக் கூர்மையான நகைச்சுவையோடு வெளிப்படுத்துகிறது:

''வல்லரசின் செய்கையினைக் கண்டு
வல்லரசு வீசியதோர் குண்டு;
நல்லபடி நம்மவிதர்
நச்சரிப்புத் தீர்ந்துவிட,
தொல்லுலகை ஆள்றகிது நண்டு!''

அணுக்குண்டு என்னும் அழிகருவி பயன்படுத்தப்பட்டால் உலகம் என்ன ஆகும் என்பதை மிகுநயமாக எடுத்துக் காட்டும் நகைப்பாட்டு இது. இப்படி நூறு பாடல்களைக் கொண்ட "குறும்பா" என்னும் நூல் தமிழுக்குக் கிடைத்த ஒரு புதிய பாட்டாயுதம்.

கவியரங்கக் கவிதை

இந்தக் (1947—1972) காலக்கட்டத்தின் பிற்பகுதியில் கவியரங்கம் புதியதொரு செல்வாக்கைப் பெற்றது. இலக்கிய விழாக்களிலும் வானொலியிலும், ஏதோ இருந்து வந்த கவியரங்கம், அரசியல் மேடைக்கும் தலைவர்களைப் பாராட்டுகின்ற மேடைக்கும் வந்தபோது தமிழ்க் கவிதையில் ஒரு புதிய எழுச்சி உண்டாயிற்று. அதனோடு தமிழ்க் கவிதைக்கு ஓர் எளிமையும் வர வேண்டியதாயிற்று.

சி. ரகுநாதன், கண்ணதாசன், தமிழன்பன், அப்துல் ரகுமான், முருகுசுந்தரம், கே. சி. எஸ். அருணாசலம் போன்றவர்களும்; ஈழத்து முருகையன், வி. கந்தவனம், சில்லையூர் செல்வராசன் ஆகியவர்களும் இந்தப் புதிய நிகழ்ச்சிக்குத் தங்கள் உத்திகளால் விறுவிறுப்பு ஊட்டினார்கள். மேடைப் பேச்சுக் கலையின் ஓர் உத்தியான நகைச்சுவை, நாடோடிப் பாடல்களின் எளிமை, அரசியல் மேடைக்குரிய கண்டனக் கிண்டல், பொருளற்ற புலமையின் ஓர் அங்கமாகிய சொல் விளையாட்டு முதலான அணிகள் பூண்டு மேடையேறிய கவியரங்கக் கவிதை வெகு விரைவிலேயே செல்வாக்குப் பெற்றுவிட்டது.

"படுக்கவைக்கப் பட்டிருந்த நாடு—பகையின்
படைவுடைத்துக் கொண்டிருந்த காலம்
மடக்கி வைக்கப் பட்டிருந்த வீரம்—பொங்கி
மடைவுடைத்துக் கொண்டிருந்த நேரம்
அடக்கி வைக்கப்பட்டிருந்த தேசம்—அடைத்த
கடைவுடைத்துக் கொண்டிருந்த வேளை
தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்கள்—அடிமைத்
தடைவுடைத்துக் கொண்டிருந்த நாட்கள்..."

வ. வே. சு. அய்யரின் புகழ் பாடவரும் அப்துல் ரகுமான், அக்காலப் புரட்சிநிலையைச் சித்திரிக்கிருர் இப்படி. நாட்டுப் பாடல் கதைகளில், உவமை என்ருலும் நிகழ்ச்சி என்ருலும் அடுக்கி அடுக்கிப் பலமுறை சொல்லுவது ஒரு வழக்கம். (பன்முறை சொல்வதால்) சொல்லப்படும் செய்திக்கே ஓர் அழுத்தம் ஏற்படுவதற்காகக் கவியரங்கில் இந்த உத்தி கையாளப் படுகிறது.

பாரதியாருடைய பணியின் இரண்டு அம்சங்களைப் பின் வருமாறு அடுக்குகிருர் சிற்பி: ''வான மணியரங்கில் வட்ட மிட்ட கற்பனையைக் கூனித் திரிவோர் தம் குடிசைக்கிழுத்த கவி; மானம் இழந்தடிமை வாழ்வொன்று வாழ்ந்ததனை ஏனென்று கேட்டே இதயம் வெடித்த கவி!''

"அன்னை இயற்கை மிகப் பெரியாள்; அவள்
அன்பில் அருளினில் எல்லையில்லாள்!
தென்னை மரத்தை வளர்த்திடுவாள்—ஒரு
சின்னப் பசுங்கிளி ஆடுதற்கே"

"அன்னை நீ ஆடவேண்டும்."

—சாலை இளந்திரையன்.

ஒரு சொல்லையோ சொல்லின் பகுதியையோ இரண்டு பொருள்படுமாறு சொல்லிச் சுவை உண்டாக்குவது பாட்டிலே ஓர் உத்தி. சிலேடைப் பாடல்கள் பெருக்கெடுத்த இடைக் காலத்தில் வளர்ந்திருந்து பிறகு அழிந்துபோன இந்த உத்தி, இப்போது கவியரங்கங்களால் புத்துயிர் பெறுகிறது: ''எளிமை யின் பெருமைக்கே எடுத்துக்காட்டானவன்; துளியிருமாப் புங்கூடத் தோன்றக்காட் டானவன்! இடிப்பினும் கடிப்பினும் இன்கற்கண் டானவன்; வடித்தறம் வழங்குவதந் நெறியெனக் கண் டானவன்!'' ''காட்டான் அவன்'' என்பதை எடுத்துக் காட்டு ஆனவன் என்ற சொல்லாக்கியும், கண்டான் அவன் என்பதைக் கற்கண்டு ஆனவன் என்ற சொல்லாக்கியும் இசைக் கையில், அந்தச் சொற்சிலம்பம் நமக்கு ஒரு மகிழ்ச்சியைத் தருகிறதல்லவா?

தமக்குப் பிடிக்காத கட்சிக்காரர்களையும் கருத்துக்காரர் களையும், சொல்லாலும் தொனியாலும் குத்திக் குதறிக் களிக்கும்

போக்கையும் கவியரங்கினர் சிலர் பயின்றிருக்கிறார்கள். இவர்களுள் ரகுநாதன், கண்ணதாசன், பொன்னிவளவன், தமிழன்பன், முடியரசு போன்றவர்கள் நல்ல ''தேர்ச்சி'' பெற்றுள்ளார்கள். அவையெல்லாம் ''அவையல் கிளவிகள்'' ஆதலால் இங்கே எடுத்துத் தரப்படவில்லை.

கவிதைக் கதைகள்

நமது சிறுகாப்பிய மரபும் மேலைநாட்டுக் கதைப்பாட்டு மரபும் இணைந்து பிறந்ததுதான், இக்காலத்தார் காவியம் என்ற பெயரில் படைத்துவரும் கவிதைக் கதை. பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, குடும்பவிளக்கு என்னும் கவிதைக் கதைகளைப் பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளோம். அவர் வளர்த்த கவிதைக் கதை மரபு தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

வாணிதாசனின் தீர்த்தயாத்திரை சில கவிதைக்கதைகளைக் கொண்டது; ஆனந்தனின் பூக்காடும் சின்னஞ்சிறு கவிதைக் கதைகளைக் கொண்டதே. ஆனந்தம் கவிதைகளில் வேகமும் தெளிவும் உண்டு. கண்ணதாசனின் மாங்கனி, குறுங்காவியங்கள், காசியானந்தனின் தமிழன் கனவு, முடியரசனின் பூங்கொடி என்பன எல்லாம், அவ்வப்போதைய அரசியல் கிளர்ச்சிகளை விளக்க வந்த கதைகள். இவற்றுள் சிலவற்றில் அங்கங்கே சுவையான சில பாடல்கள் உண்டு; கவிதைக் கதைகளாக இவை முழுவெற்றி பெறவில்லை.

தமிழ்ஒளியின் கோசலைக்குமரி, வீராயி, விதியோ வீணையோ?, கண்ணப்பன் கிளிகள் ஆகியவற்றில் (இசைநாடகமாக அமைந்த) விதியோ வீணையோ? கருத்துவளமும் கவிதை அழகும் சான்றது முடியரசனின் வீரகாவியமும் சிற்பியின் சிரித்த முத்துக்களும் பழம்பாணிக் கதைகள். பழைய வரலாற்று நிகழ்ச்சிகளின் மீது, 1965 இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒடுக்க அந்நாள் தமிழக அரசு கடைப்பிடித்த கொடுமுறையைக் கண்டிக்கும் உணர்ச்சி உந்துதலால் எழுந்த சில கதைப்பாடல்களைக் கொண்டது சாலை இளந்திரையனின் காலநதி தீரத்திலே. பெரியார் ராமசாமியின் வாழ்வில் ஒரு நிகழ்ச்சியை உருக்கமாக விவரிக்கும் ஒரு கதையும் இதிலே உண்டு. சிலம்பின் சிறுநகை, கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே என்பவை இவருடைய ஏனைய கவிதைக் கதைகள்.

இலங்கை முருகையனின் நெடும்பகல் மனிதக்குல வளர்ச்சி வரலாற்றைச் சுருக்கமாகச் சித்திரிப்பது. எனினும் இதன் தொனி, போதிய வீறு கொண்டதாக இல்லை. கலைவாணனின் உதயம் இந்திய விடுதலையையும் காந்தி அடிகளின் வரலாற்றையும் இணைத்துப் பாடும் ஒரு கவிதைக் கதை. இதன் நடையிலோ நோக்கிலோ எதிர்காலந் தழுவிய புதுமை எதுவும் இல்லை, திருலோகசீதாராமின் கந்தருவாகனம், குயில் பாட்டின் அருட்டுணர்வால் பிறந்தது போலத் தோன்றுகிறது. அவருடைய வேறு சில கதைப் பாடல்களும், இவ்வாறே பழமை நிழலில் வளர்ந்தவைகளே.

எளிய நடை, தட்டுத் தடங்கலற்ற கதையோட்டம் என்பவைகளுக்கு எடுத்துக் காட்டாக அண்மையில் படைக்கப்பட்டிருப்பது சுரதாவின் வன்னிய வீரன். ஆயினும், "காமத்தால் அழிந்தான் வீரன்" என்னும் பழங்கருத்தையே பேசுவதன் மூலம், இது, காலத்தோடு ஒட்டிய தன்மை காட்டாமல் போகிறது. எளிமை, இனிமை, கருத்து நலன், எதார்த்த நெறி என்னும் பல சிறப்புக்களும் அமைய 'ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்' என்னும் கவிதைக் கதையை யாத்துள்ளார் ஈழத்து மகாகவி.

> "மனுஷன் நினைக்கிறான். செய்கிறான். நல்லதை நினைக்கும் போது அதை நல்லதுன்னு பாராட்டறதுக்கும் கெட்டதை நினைக்கும் போது அதைக் கெட்டதுன்னு எச்சரிக்கிறதுக்கும் ஒவ்வொரு மனுஷனுக்கும் மனசாட்சிங்கற ஒன்னை கடவுள் கொடுக்காமே இல்லை. கெட்டவை நடக்கும்போது மனசாட்சி அங்கே மதிக்கப் படலைன்னுதாம்மா அர்த்தம்... தெய்வம் உணர்த்தும், ஆனா தடுக்காது."
>
> "தீர்ப்பு" (நாடகம்)—தூயவன்.

பொதுவாகவே இந்தக் காலத்துக் கவிதைக் கதைகளில் ஓர் எளிமை நிறைந்திருப்பினும், இக்காலத்து மக்களை இக்காலச் சமுதாயப் பின்னணியில் சித்திரிக்கும் போக்கு மிகக் குறைவாகவே உள்ளது. தனிக் கவிதைகளாக உருவாகியுள்ள

இக்காலக் கருத்துக்களில் ஒரு பகுதி கூட, இன்னமும் கவிதைக் கதைகளாகவோ காவியங்களாகவோ உருவம் பெறவில்லை.

பெருமை தர வேண்டும்

பாரதிதாசனோடு ஒரு புதிய தடத்தில் திரும்பிய தமிழ்க் கவிதை, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நிகழ்த்தியுள்ள சாதனை கணிசமானதுதான் என்றாலும், போதியதாகாது. கவியரங்கக் கவிதை செழித்திருக்கிறது; அங்கதப்பாட்டு சிறந்திருக்கிறது; சில உத்திகளால் புதிய கவிதை கவர்ச்சி பெற்றுள்ளது. மார்க்சீய எண்ணங்கள், மானுடச் சாதனை வீறு, இக்காலச் சமுதாயப் பின்னணியில் நடுத்தர வகுப்பு மனிதன் என்னும் பொருள்களில் நல்ல கவிதைகளைச் சிலர் படைத்திருக்கிறார்கள்.

இவை எல்லாம் தமிழுக்குப் பெருமையே என்றாலும்,—தமிழ்ப்பற்று என்னும் உணர்ச்சி மிதமிஞ்சிய பக்தி உணர்ச்சியாக வளர்க்கப்பட்டு, தமிழ்க்கவிதைப் பண்ணையே மூழ்கும் அளவுக்குப் பெருகி நிற்பது மகிழ்ச்சி தரவில்லை. சிந்தனை முனைப்பால் எல்லோருக்கும் வழிகாட்ட வேண்டிய கவிஞர்கள், ஏதாவது ஒரு கட்சியைச் சார்ந்து அதன் கொள்கைகளுக்கே பாட்டுக் கட்டிவரும் நிலையும் விரும்பத் தக்கதாக இல்லை. இந்தக் குறைகள் தவிர்க்கப்பட்டால், தமிழ்க்கவிதை இன்னும் பெரிய வளங்களைக் காட்ட வாய்ப்பு இருக்கிறது: இந்த நிலை விரைவிலேயே ஏற்பட்டுத், தமிழ்க்கவிதை நமக்கெல்லாம் மேலும் பெருமையைத் தரவேண்டும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
உற்பத்தி செய்யும் உயர்ந்த ரக சிமெண்ட்.

மிகச் சிறந்த மூலப் பொருள்களையும்
நவீன தொழில் நுட்பத் திறனையும்
கொண்டு உற்பத்தி செய்யப்பெறும்
அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்.

வலிவும்
வனப்பும்
வாய்ந்தது.
எளிதில் கிடைப்பது.
சிக்கனமானது.
முழு திருப்தியும்
உங்களுக்கு
அளிக்கவல்லது.

தமிழ்நாடு
தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)

(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)

150, 3-வது மாடி, எல். எல். ஏ., கட்டிடம்,
த. பெ. எண் : 5205
மவுண்ட் ரோடு, சென்னை-2.

தொழிற்சாலை : தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

With Compliments

from

THEMIS

PHARMACEUTICALS

38, Suren Road,

Andheri (East)

Bombay-29.

With Compliments
From

TATA STEEL

With Best Compliments
from

CRIMPLON

PRIVATE LIMITED

Manufacturers of

NYLON STRETCH YARN

Sales Office :

16, Manu Mansion, Opp. Old Custom House,

BOMBAY-1.

Phone : 252275 Gram : 'CRIMPYARN'

Factory & Registered Office :

25, Chitalsar Manpada, Ghodbunder Road,

THANA, BOMBAY (India)

Phone : 592913

சுதந்திரத்துக்குப் பிறகு

தமிழ் நாவல்கள்

[ஆர். பார்த்தசாரதி]

இந்திய மொழிகளில், தமிழ் மொழிக்கு இன்று ஒரு தனிச் சிறப்பு உண்டு. லட்சக்கணக்கில் விற்கும் பத்திரிகைகள் தமிழில்தான் அதிகம். சுதந்திரத்துக்குப்பின் பிரபலமடைந்துள்ள தமிழ் நாவல் ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் இந்த ஜனரஞ்சகமான பத்திரிகைகளில் தொடர்கதைகள் எழுதி விளம்பரம் பெற்றவர்கள்; பரிசுக் கதைகள் எழுதி அறிமுகமானவர்கள் முழு நாவலைப் புத்தக வடிவில் எழுதி வெளியிட்டவர்கள் மிகக் குறைவு. இந்தக் கால்நூற்ருண்டில் (1947-72) இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட எண்ணிக்கை நவீனங்கள் பிரசுரமாயிருக்கின்றன. பிரமிப்பைத் தருகின்றது......வெறும் எண்ணிக்கைதான்.

அரசியல் மாற்றத்திஞல் ஏற்பட்ட சமூக விழிப்புணர்ச்சி, தமிழில் எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்தவர்களை அதிகமாக்கியது. அரை குறைப் படிப்புடைய சராசரி வாசகர்களின் கொச்சை ரசனைப் பசிக்குத் தீனி போடும் பொறுப்பைப் பிரபலப் பத்திரிகைகளாயிருந்த இவ்விலக்கிய மழலைகள் ஏற்றுக் கொண்டன. காதல், தியாகம், தமிழ்ப் பண்பாடு, சரித்திரப் பொற்காலம் என்ற வெறும் கோஷங்கள் இலக்கியங்களாயின.

தமிழ் இலக்கிய வளர்ச்சியை வரலாற்றுப் பின்னணியில் பார்க்கும்போது, சங்ககாலத்தைத் தவிர, மற்றையக் காலங்களில், யதார்த்தத்தினின்றும் தப்பித்துக்கொள்ளுவதற்கான ஒரு சாதனமாகத்தான் இலக்கியத்தைத் தமிழ்மக்கள் கருதினுர்கள் என்று நினைப்பதற்கு இடமிருக்கிறது. சுதந்திரத்திற்குப்பின் தோன்றிய பல நாவல்களை ஆராயும்போது, இக்கருத்து வலியுறுகின்றது. மேலைய நாட்டுச் சிந்தனை இயக்கங்களும், அரசியல் சமூகப் பொருளாதார மாற்றங்கள் உண்டாக்கிய புதிய அமைப்பும், இவ்வாசிரியர்

களில் அநேகம் பேரை எந்த அளவிலும் பாதித்ததாகத் தெரிய வில்லை. 'நம் கதாசிரியர்களுக்கு நிலவும், தென்றலும் இல்லா விட்டால் கதையே வராது,' என்று புதுமைப்பித்தன் ஒரு சமயம் குறிப்பிட்டதை மனத்தில் கொள்ளவேண்டும்.

இரக்கமற்ற, ஒரு குரூர நியதிக்கு உட்பட்ட இப்பிர பஞ்சத்தில், சிந்தனையாளர்களின் அறிவைக் கவருவது மனிதனின் 'தனிமை'. இத்தனிமையினின்றும் தப்பித்துக் கொள்ளவே, குடும்பம், சமூகம் என்ற கோட்பாடுகள் உண்டாயின. ஆனால் நாளாவட்டத்தில் இவை நியதிகளாய் மாறி, தவிர்க்க முடியாத நிர்ப்பந்தங்களாக உருப்பெற்று, ஸ்தாபன அமைப்பில் ஒன்றிவிட்டன. தனிமையைக் கண்டு அஞ்சிய மனிதன், கடவுள் என்ற கருத்தையும் தனக்குப் பாதுகாப்பாகக் கொண்டான் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இயற்கைக்கும் உயிரூட்டிக் காண்பதும் இக்காரணம் பற்றியே. அந்தந்தக் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப உருவான இக்கருத்துக்கள், காலங் கடந்து நிற்கக்கூடிய தகுதி வாய்ந்தன அல்ல என்று சமூகம் உணர மறுக்கும் நிலையில்தான் முரண்பாடுகள் தோன்று கின்றன. தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் போராட்டம் நிகழ்கின்றது. தனிமனித மனோதத்துவ ரீதியாகவும், சமூகப் பிரச்னை அடிப்படையிலும் இவற்றை ஆராய்வதுதான் இலக்கியத்துக்குக் கருவாக அமைகின்றது வாழ்க்கையைப் பற்றிய நேரடியான, தனித்வம் வாய்ந்த அபிப்பிராயத்தைச் சொல்லின் அடிமையாக மாறுமல், உபாசகனாக இருந்து கூறும் ஆற்றல் பெற்றவனே ஒரு சிறந்த இலக்கிய ஆசிரியன். சொல், இலக்கிய கர்த்தாவை வெளி உலகுடன் தொடர்பு கொள்ளச் செய்கிறது. சொல்லைச் சோதித்து அவன் ஆளும் போதுதான் அச்சொல்லுக்கென்று இருக்கக்கூடிய இயற்கை ஒளியை அவனால் உணர முடிகின்றது. ஆனால் சொல்லும் கருத்தும் இணைந்து ஒன்றுக்கொன்று தடையாக இல்லாமல், ஒன்றையொன்று இன்றியமையாமையைப் பெறும்போதுதான், உண்மையான இலக்கியம் பிறக்கின்றது.

ஆகவே மேலே குறிப்பிட்ட இலக்கியத் தரம் ஒன்றையே அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, சுதந்திரத்துக்குப் பின் தோன்றிய நாவலாசிரியர்கள் மிகக் குறைவு. இவர்களில் முக்கியமானவர்கள் க. நா. சுப்ரமணியன், தி. ஜானகி ராமன், சி. சு. செல்லப்பா, ராமாமிருதம், கு. அழகிரிசாமி, சிதம்பர சுப்ரமணியன், ஷண்முக சுந்தரம், ஜெயகாந்தன்,

சுந்தர ராமசாமி, ராஜம் கிருஷ்ணன், சூடாமணி, நீல பத்மநாபன், ஹெப்ஸிபா ஜேசுதாசன், அசோக மித்ரன், செல்வராஜ், கந்தசாமி ஆகியோர். இலக்கியக் கொள்கைகளைப்பற்றி இவர்களுக்குள் வேறுபாடு இருக்கலாம் ஆனல், ஏதேனும் ஒருவகையில் வாசகனுடைய சிந்தனையைத் தூண்டும் வகையில் இவர்கள் நாவல்கள் எழுதியிருக்கின்றூர்கள் என்பதனல் இவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டேன்.

தூய இலக்கியவாதியான க. நா. சுப்ரமணியன் நாவல்களை முழுக் கலை வடிவங்களாகத்தாம் கொண்டார். இலக்கியப் பிரக்ஞையும், அதற்கேற்ப முதிர்ந்த பயிற்சியுமுடைய இவர் நாவலை ஓர் அறிவு சாதனமாகப் பயன்படுத்தியபோது,

> "பாட்டு மனித வாழ்க்கையைத் துலக்கி ஒளியும் உயர்வும் தரவேண்டும். வீட்டுக்கு ஒளி கொடுக்கும் மனை விளக்கைப்போல. பாட்டு மனித வாழ்க்கையின் கீழ்த்தர உணர்வுகளைக் கொட்டி வைக்கும் இருட்டறையாக இருக்கக் கூடாது. அசந்தர்ப்பத்தால் வீட்டை ஒளி செய்த விளக்கே வீட்டுக் கூரையை எரித்து விடுவது போல."
>
> "மொழியின் வழியே"—**நா. பார்த்தசாரதி.**

நாவலின் கலை வடிவம் பறிக்கப்படாமல் எழுதியிருப்பது ஒரு சிறப்பு. கதைக்கரு, அமைப்பு ஆகிய இரண்டும் ஒன்றின் தன்மையால் இன்னென்றுக்கு இலக்கணம் தந்து இரண்டும் ஒரு சீராக இயங்குகின்ற போக்குதான் இவர் நாவல்களுக்கு ஒரு தனித்தன்மையைத் தருகிறது. 'பொய்த் தேளிலிருந்து 'அசுர கானம்' வரை ஒரு தீர்மானிக்கப்பட்ட இலக்கியக் கொள்கையுடன் இவர் எழுதியிருப்பதுதான் இலக்கியம் பற்றிய இவருடைய ஆழமான, இலக்கிய ஈடுபாட்டை வலியுறுத்தும். கதையைச் சொல்லும் விதத்தில் இவர் பரிசோதனைகள் செய்திருப்பதையும் குறிப்பிடவேண்டும். 'ஒரு நாள்' இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. நனவோட்ட யுத்தியில் ல. சா. ராமாமிருதத்தைப்போல் தம்மை அதை வெறும் கருவியாக இவர் பயன்படுத்தி இருக்கிறூர் என்பதுதான் குறிப்பிடத்தக்கது.

1947க்குப் பிறகு தோன்றிய நாவலாசிரியர்களில் தலை சிறந்தவர் தி. ஜானகிராமன். 'வட்டாரக் கதைகள் எழுது

வதில் வல்லுநர்' என்று இவரை ஒரு குறுகிய எல்லேக்குள் அடைக்க முயல்வது இலக்கிய அறியாமை. தஞ்சாவூர் வட்டார வழக்கை இவர் வெற்றிகரமாகக் கையாண்டார் என்பது குறிப்பிடத்தக்கது என்றாலும், வாழ்க்கையின் சில அடிப்படை நியதிகள், கோட்பாடுகள் ஆகியவற்றைப்பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டிய அவசியத்தை இவர் நாவல்கள் வற்புறுத்துகின்றன என்பதுதான் இவற்றின் தனிச் சிறப்பு. பெண் விடுதலையைப் பற்றிக் காலம் காலமாக நாம் பேசிக்கொண்டு வந்தாலும் (தற்சமயம் நமக்கு ஒரு பெண் பிரதம மந்திரி இருந்தாலும்) பெண்களை நாம் இன்னும் உடைமைப் பொருள்களாகத்தாம் நடத்தி வருகின்றோம் என்பது இவர் கட்சி. அதனால்தான் இவர் நாவல்களில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் இன்னும் வலுவான கதாபாத்திரங்களாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். மோகமுள்ளில் 'ஜமுனா', 'அம்மா வந்தாளில்', 'அலங்காரம்', 'இந்து', 'உயிர்த்தேனில்' 'செங்கம்மா' ஆகியோரை மறக்கமுடியாது.

'மோக முள்' பல இலக்கியச் சர்ச்சைகளுக்குக் காரணமாக இருந்தது. ஒரு கிழவரின் இரண்டாந்தாரம் பக்கத்துவீட்டு இளைஞனுடன் படுத்துறங்குவதை இப்படிப் பச்சையாகச் சொல்லுகிறாரே என்பது சிலருடைய குற்றச்சாட்டு. தன்னை விடப் பத்து வயது மூத்தவளை ஓர் இளைஞன் காதலிக்கலாமா என்பது இன்னும் சிலருடைய வேதனை.

'பூமி வானைத் தொட்டது; வானம் பூமியைத் தொட்டது.' இந்த ஒட்டுறவைத் தெரிந்துகொள்ள முயல்வதுதான் கலை ரசனை. பூமியில் பாதங்கள் படியாமல், வானத்தில் சஞ்சரிக்க வேண்டுமென்று எண்ணுவது இயலாத காரியம். பூமியிலே உழன்று வானத்தைப் பற்றி அறியாமலிருப்பதும், 'உயிரினங்களின் மனிதன்' என்ற கருத்துக்குச் செய்யும் அவமானம் யமுனா, உடல் சம்பந்தம் ஏற்பட்ட அடுத்த நாள், பாபுவைக் கேட்கிறாள், "இதுக்குத்தானா இவ்வளவு வருஷமா காத்திருந்தே?" உடலுறவு முடிவு அல்ல; அங்குதான் எல்லாமே தொடங்குகின்றன. பாபு மங்கல் வாடிக்குப் புறப்பட்டுச் செல்ல, 'அது' காரணமாகின்றது.

மனிதனுடைய சுதந்திரத்தின் வரையறை என்ன? இது ஒரு சுவைமிக்க கேள்வி. வைத்தி மலைப் பெரியவர், 'இந்தப் பிரபஞ்சத்திலே ஒண்ணுமே புதுசு இல்லே' என்கிறார். ஆனால், அவர்கூட ஜமுனா-பாபு உறவைப் பற்றிக் குறிப்பிடும்போது,

இது குடும்பத்தைப் பாதிக்கின்ற விஷயமோ என்று பயப்படுகிருர். தன்னைச் சுற்றி வேலிகளையும், குறுக்குச் சுவர்களையும் எழுப்பிக்கொண்டு, அவற்றில் அடங்கிவிட்ட பாவனையைத் தோற்றுவிக்கும் வேஷத் தனத்திலோ அல்லாது அடங்காமல் சீறும் இயற்கையான சினத்திலோ மனித வாழ்க்கையின் சுவாரஸ்யம் இழைந்தோடுகின்றது. வல்லான் வகுத்ததுதான் வாய்க்கால் என்ருல், கல்யாணம் என்ற சமூகக் கட்டுப்பாட்டுக்காக ஆயிரக்கணக்கான தங்கமானவர்கள் எரிந்து சாம்பலாளுலும் கவலையில்லை; காலெண்டர் கணக்கைப் பார்க்காமல் பாபு காதல் புரிந்ததுதான் மகத்தான குற்றம்! வேஷம் போட்டு போட்டு இந்த நாகரிகத்தையும், பண்பாட்டையும் காப்பாற்றிக் கொண்டு வருகின்ருேம். —'சீலைப்பேன் வாழ்க்கையை' யாராவது எடுத்துச் சொல்லிவிட்டால், வேஷம் கலைந்து விட்டதே என்ற ஆத்திரம், எரிச்சல்!.

> "காதலைப் பிடிக்காதவர்களைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? மணத்தை உணர முடியாதவர்கள் இருக்கிருர்கள் என்பதால் மல்லிகை பூத்துச் சொரியாமல் நின்று விடுகிறதா?"
>
> "அவளுக்கு"—அகிலன்.

நாற்றங்களோடு பழகிவிட்ட சமூகத்தில், ஓர் அறிவாளியின் 'தனிமை' தான் பாபுவின் 'தனிமை'; ஏசுநாதரின் 'தனிமை'; காந்தியடிகளின் 'தனிமை'....... ஒரு சாதாரண மனிதனின் கதை காவிய ரசத்தை எட்டிப் பிடிக்கவும் காரணமாகின்றது. ஜானகிராமன் பல நூற்ருண்டுகளுக்கு முன்பு இருந்திருந்தால் இதை ஒரு காவியமாக எழுதியிருக்கக் கூடும்; இது கலைப்பூர்வமாக மகத்தான வெற்றி. ஓர் ஆசிரியரின் எண்ணத்துக்கும் எழுத்துக்குமிடையே 'பொருள் பொதிந்த நிழல்கள்' படிகின்றன. இந்நிழல்களை அழுத்தமான அமைதியான சாயைகள் மூலம் வெளிப்படுத்துவதில் ஜானகிராமன் இணையற்றவர். நம் அறிவோடு பேசுகிற வெறும் புத்திசாலித்தனமான பாஷை மட்டுமல்ல இது; இதயத்தோடு உறவாடி ஐக்கியமாகிற பாஷை.

ஜெயகாந்தன் நாவல்துறையில் புதிய எல்லைகளைத் தொடுகிருர். அவருடைய 'பாரிசுக்குப் போ' இதற்குச் சான்று. கலைஞன் சாரங்கன் பல ஆண்டுகள் மேல் நாட்டில்

இருந்தவன். தமிழகத்தை விட்டு நீண்டகாலமாகப் பிரிந்திருந்த காரணத்தால், 'வேரின்றித் தவிக்கும் ஓர் அறிவு ஜீவியாக' அவன் இருக்கிருன். தமிழகம் மீண்டும் வந்து சுற்றியுள்ள, சமுதாயத்தைப் பார்க்கும் போது இவனுடைய 'தனிமை' (Alienation) இன்னும் நன்கு புலனுகின்றது. தமிழ்ச் சமூகத்தின் குறுகிய வரையறைகளைத் தாண்டி எழுதப்பட்ட முதல் நவீனம் இது. மேல் நாட்டுக்குச் சென்று வந்தவனுகச் சாரங்கன் படைக்கப்பட்டிருந்தாலும், தமிழ் நாட்டிலுள்ள (மேல் நாடு போகாமலேயே) அறிவு ஜீவிகள் அனைவருமே சாரங்கர்கள். ஜெயகாந்தன் பாலுணர்வைச் சிந்தனைப் பூர்வமாக 'சமூகம் என்ருல் நாலுபேர்', 'ரிஷிமூலம்' போன்ற குறு நாவல்களில் அணுகியிருக்கிருர். காதல் என்று அசட்டு உணர்ச்சியை அரியாசனம் ஏற்றும் பல எழுத்தாளர்களைப் போலல்லாமல், பாலுணர்விஞல், தொடர்பினுல், ஏற்படக் கூடிய மன உளைச்சல்களை மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். மன உளைச்சல், தனி மனிதனுடைய வாழ்க்கை மதிப்புக்கள், சமூக தர்மத்தோடு முரணும்போது உண்டாகிறது. பாலுணர்வைப் பாலுணர்வுக்காக எழுதுவது இலக்கிய வியாவாம்........இஃது ஓர் ஆழமான பிரச்னையைத் தொட முயலும்போதுதான் இது கலை அநுபவமாக மாறுகின்றது.

> மக்களை நல்வழிப்படுத்துவதையே இலக்காகக் (குறிக்கோளாகக்) கொண்டது இலக்கியம் எனப்படும். அறிவு வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, முதலிய நல்ல அடிப்படைகளைப் புகுத்தவே பெரும்பாலும் இலக்கியம் தோன்றும். எனவே மனிதர் வாழ்வைச் செம்மைப் படுத்தும் இலக்கு ஒன்றினையே கொண்டு செய்யப் பெறுவதுதான் இலக்கியம்.
>
> —டாக்டர் மா. இராசமாணிக்கஞர்
> "தமிழர் வாழ்வு"

ஜெயகாந்தன் 1960 க்கு முன்பே பிரபலமாகிவிட்ட எழுத்தாளராக இருந்தாலும், அவர் இளைஞர். ஜானகிராமன், ஜெயகாந்தன் போன்றவர்கள் எழுத்தில் விரக்தி உணர்வு கிடையாது; வாழ்க்கையில் அசாத்திய நம்பிக்கை கொண்டவர்கள். ஆனுல், 1960 க்குப் பின் வந்த எழுத்தாளர்கள்,

சுதந்திரம் எதையும் சாதித்துவிடவில்லை என்ற காரணத்தால் கோபம் மிகுந்தவர்கள். காந்தீயம் ஒரு பெரிய தொழிற்றுறையாகி ஒரு சிலர் மட்டும் அதன் பலன்களை அனுபவித்தது அவர்களுக்கு எரிச்சலைத் தந்தது. பழைய, புதிய வாழ்க்கை மதிப்புக்களைச் சுயநலத்துக்காக, சொந்த சௌகரியங்களுக்காக மேற்கொண்ட இலட்சியப் பிடிப்பில்லாத வேஷதாரிகளைக் கண்டு அவர்கள் சீறினர்கள். இந்தப் போக்கு 1960 க்குப் பின்வந்த எழுத்தில் வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்தத் தலைமுறை ஆசிரியர்களில் குறிப்பிடத் தக்கவர் நீல பத்மநாபன். இவருடைய 'தலைமுறைகள்' ஓர் ஒப்புயர்வற்ற நவீனம். தலைமுறைகளுக்கிடையே நிகழும் கருத்துப் போராட்டம், சமுதாயப் பின்னணியில் மிக அழகாகச் சொல்லப்படுகிறது. புதிய தலைமுறையின் பிரதிநிதியாக இருந்தாலும், அவன் கதையைச் சொல்லும் நாவலாக இது மாறிவிடவில்லை. பாத்திரங்களுக்கும், சமுதாயத்துக்கும் சம அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதுதான் இந்த நாவலின் விசேஷம். தனது ஆண்மையில்லாத் தன்மையை மனைவிமீது ஏற்றி அவளைத் தள்ளிவைக்க முயலும் மூக்கன் என்ற கதாபாத்திரத்தைக் கலா நுண்ணறிவோடு வளர்த்

> "சேற்றிலே முளைத்து நிற்பது செந்தாமரை. சேற்றிலும் உயர்ந்து நிற்பது செந்தாமரை. சேறு படியாதது செந்தாமரை. சேற்றையும் மறக்க வைப்பது செந்தாமரை. செந்தாமரையின் வண்ணமும் வடிவும் அப்படி. வறுமைச் சேற்றிலே முளைத்தது ஆசிரியர் இனம். வறுமைத் தீமை பற்றுதது ஆசிரியர் இனம். வறுமைச் சிறுமையையும் மறக்கவைப்பது ஆசிரியர் பண்பும் தொண்டும்."
>
> "எண்ண அலைகள்"
>
> —நெ. து. சுந்தரவடிவேலு.

திருக்கிருர் பத்மனுபன். மூக்கனுடைய செல்வந்தான் நாகம்மையின் மனத்தைக் கவர்ந்ததே தவிர, அவனுடைய குறையைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. இது நம் சமுதாய மதிப்புக்களின் போலித்தன்மையைத் தெளிவாகக் காட்டுகிறது. தெர்வி நாகம்மைக்குப் புதிய வாழ்வு தேடுகிருன். ஆனல், மூக்கன் தன்

பண பலம் கொண்டு, நாகம்மைக்குக் கணவனாக வர இருக்கும் குற்றாலத்தைக் கொன்றுவிடுகிறான். தெர்வி ஊரைவிட்டுச் சென்றுவிடுகிறான் என்று கூறுவதில் விரக்தி புலப்படுகிறது. ஸ்தாபனம் என்ற ப்ராங்கன் ஸ்டீன் அரக்கனுக்கு முன்னால் தெர்வி தோல்வியடைகிறான்.

இக்கட்டுரையில், சுதந்திரத்துக்குப்பின் வந்த எல்லா நாவலாசிரியர்களைப் பற்றியும் நான் ஆராயவில்லை. குறிப்பிடத் தக்க ஆசிரியர்களில், ஒவ்வொரு கால கட்டத்திலும் தோன்றிய பிரதிநித்வம் வாய்ந்த நாவலாசிரியரைப் பற்றித் தான் எழுதியிருக்கிறேன். மற்றைய இந்திய மொழிகளைப் போலல்லாமல், தமிழில் மிகச் சிறந்த நாவலாசிரியர்களைப் பற்றித் தமிழர்களே நன்றாக அறிந்துகொள்ளவில்லை என்பது தான் இம்மொழியின் சாபக்கேடு. போலிகளுக்கு விளம்பரம் அதிகம்...... தமிழ் வாசகர்களுடைய ரசனையைப் பொறுத்த விஷயம் இது.



With the compliments of

COLOUR - CHEM LIMITED

Ravindra Annexe

Dinshaw Vachha Road

Bombay-20

Story of a Sage......
and a Scheme

Long, Long ago—so the story goes—
there lived a sage, Agasthya
Diminutive in form, but mighty in prowess.
Indeed, according to legend, he once
swallowed the ocean.
Small Savings too grow into a fortune.
Join right away our
AGASTHYA DEPOSIT SCHEME
You have right in your own home whether
you are a child or an adult.
You can open this account with an initial
deposit of Re 1/-
Call at any branch of INDIAN BANK
You have a pleasant surprise in store.

INDIAN BANK
Wholly owned by Government of India.
17, North Beach Road, Madras-1.
(346 Branches all over India.)

Our Branches in Delhi

1. New Delhi, 2. Karol Bagh, 3. Safdarjung Enclave,
4. Defence Colony, 5. D. B. Gupta Road, 6. Shanti Niketan

With best compliments from

THE ANDHRA SUGARS LTD

Registered Office:
VENKATARAYAPURAM,
TANUKU,
WEST GODAVARI DISTRICT,
ANDHRA PRADESH.

Telegrams: "SUGARS"

Manufacturers of:
Acetic Anhydride, Acetic Acid, Ethyl Acetate and Sodium Acetate, Industrial Alcohol and Denatured Spirits, Sugar, Superphos-Phate, Sulphuric Acid, Caustic Soda, Chlorine, Hydrochloric Acid.

தமிழ்ச் சங்கம் மார்க்
பெயர்ப் பலகைத் திறப்பு விழா
12-2-1972

சங்கத் தலைவர், துணைச் செயலாளர்

சுதந்திரத்துக்குப் பிறகு

தமிழ்ச் சிறுகதை

[பா. பா.]

என்ன, பலமா யோசனை பண்ணிகிட்டிருக்கிறீங்க ?

வாங்க, வாங்க ! ஒண்ணுமில்லே, நம்ம தமிழ்ச் சங்கத்திலெ சிறுகதையைப் பத்தி எழுதிக் கொடுக்கச் சொன்னுங்க. நாளைக்கித் தர்றேன்னு சொல்லிட்டேன். அதான் யோசனை பண்ணிகிட்டிருக்கறேன்.

என்ன, 'யோசனை பண்ணிகிட்டிருக்கறேன்னு' மெதுவா இழுக்கறீங்களே. எழுதிட வேண்டியதுதானே; இதுலே யோசனை பண்றதுக்கு என்ன இருக்குது ?

நிறைய இருக்குது. நான் நினைக்றதை அப்படியே எழுதினேன்னு ஒரு புயல் வீசப் போவுது.

என்ன, வெதர் ஃபோர்காஸ்ட் பண்ற மாதிரி என்னவோ புயல் வீசப்போவுதுன்னு பயமுறுத்தறீங்க? இன்னும் எழுத வேயில்லே; அதுக்குள்ளே புயல் வீசும்னு என்ன அர்த்தம்?

நான் எழுதினு, என்ன எழுதுவேன்னு எனக்குத் தெரியாதா ? அதனோட விளைவு என்னுகும்னு யோசிக்கிற சக்தி எனக்கில்லையா. அதனுலெதான் எழுதறதுக்கு முன்னுடியே சொல்றேன்.

நீங்க ஒண்ணுத்துக்கும் பயப்படாதீங்க. நான் பாத்துக் கறேன், சும்மாத் தைரியமா எழுதுங்க.

என்ன பாத்துக்கறேன்னு சொல்றீங்க. நான் அடி வாங்கறப்பொ பின்னுடி நின்னு வேடிக்கை பாக்கப் போறீங்களா ?

சே, சே! உங்களை அப்படித் தனியா விட்டுடுவேனு ? நானும் பக்கத்திலே வந்து நின்னு பாதி வாங்கிக்கிறேன். அது சரி, நீங்க அடி வாங்கருப்போல என்ன எழுதப் போறீங்க?

நான் வாயைத் திறக்க மாட்டேன். திறந்தேன்னு உண்மையைத்தான் - எனக்கு உண்மைன்னு பட்ற உண்மையைத்தான் -சொல்லுவேன் உண்மையைச் சொன்னு யாருக்குமே எரிச்சல்தானே வரும். அத்தோட இவங்க வேறெ இந்த இருவத்தஞ்சி வருஷமாத் தமிழ்லெ வர்ற சிறுகதையைப் பத்தி எழுதச் சொல்லியிருக்கிருங்க. ஏதோ பழைய காலத்தைப் பத்தி எழுதினுலும் அவ்வளவு ஆபத்தில்லே. அப்பொ எழுதனவங்கெல்லாம் போயிட்டாங்க. இப்போன்னு எழுதறவங்கெல்லாம் இருக்கருங்களே? சும்மா விடுவாங்களா?

எதுக்கு அவங்கெல்லாம் சண்டைக்கு வருவாங்கன்னு பயப்பட்றீங்க?

சில பேரைப் பத்தி எழுதனுத் தப்பு. அவர் என்ன எழுதிக் கிழிச்சிட்டார்னு அவரைப் பத்தி இவர் பெரிசாப் பேச வந்துட்டார்னு பிடிச்சிக்குவாங்க. சிலபேரைப் பத்தி எழுதாம விட்டாத் தப்பு. அவர் இதுவரையிலும் இருநூற்று ஐம்பது தலைசிறந்த சிறுகதைகளை எழுதியிருக்கிருர். அவரைப் பற்றி ஒரு சொல்கூடச் சொல்லலேன்னு சண்டைக்கு வருவாங்க. இந்தத் தர்மசங்கடமான நிலையிலே என்ன புண்றதுன்னு தெரியலே.

எதுக்கு இந்தச் சங்கடம். இந்த இருவத்தஞ்சு வருஷமா எழுதனவங்க, எழுதறவங்க பேரையெல்லாம் வரிசையாக் கொடுத்துட்டாப் போவுது.

ஆமா, அத்தோட 'இந்தப் பட்டியலில் யார் பெயராவது விட்டுப்போயிருந்தால், என் ஞாபகமறதியை மன்னிக்குமாறு மன்ருடிக் கேட்டுக்கொள்கிறேன்'னு சேத்து எழுதிட்டாச் சரியாப் போகும்.

ஆமா, நல்ல ஐடியா, அப்படியே பண்ணிடுங்க. ஒர்த் தரும் வம்புக்கு வரமாட்டாங்க.

அது சரி. ஆனு, இப்போ நான் 'தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர் "யார் - எவர்"' தயாரிக்கலே. சிறுகதையைப் பத்திதான் எழுதப்போறேன்.

அப்பொ ஒண்ணு பண்ணுங்களேன். எழுதனவங்க பேரை விட்டுட்டு, கதைப் பேரை வரிசையாச் சொல்லிடுங்களேன்.

எழுத்தாளர் பேரையே சொல்லி முடியாதுங்கறேன். நீங்க என்னடான்னு கதைப் பேரையெல்லாம் வரிசையாச் சொல்லச் சொல்றீங்க. தமிழ்லெ இந்த இருவத்தஞ்சி வருஷத்திலெ எத்தனைக் கதை வந்திருக்குது தெரியுமா? மாசத்துக்குச் சரா சரியா நூத்தி அம்பது கதை வீதம் இருவத்தஞ்சி வருஷத்திலெ நாப்பத்தஞ்சாயிரம் கதை வந்திருக்குது.

ஏ, அப்பா! இவ்வளவு கதை வந்திருக்குதா. எனக்குத் தெரியாமெ போச்சே.

பின்னெ என்ன; தமிழுன்னு என்னுன்னு நினைச்சிகிட்டீங்க? எத்தனைப் பத்திரிகைங்க வருது! என்னக் கதை! நீங்க டில்லியிலெ இருக்கறதனலெ உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா?

இல்லெ, இல்லெ; நானும் பாக்கறேன்; ஆனு இதை யெல்லாம் எண்ணிப் பாக்கலே....அது சரி, இவ்வளவு கதை இருக்கறப்பொ அப்பறம் எழுதறதுக்கு என்ன யோசனை? விளாசித் தள்ள வேண்டியதுதானே!

விளாசித் தள்ளிடலாம். ஆனு அதுலெ ஒரு தகராறு இருக்குது. இவ்வளவு கதை வந்திருக்குதே தவிர இதுலெ நல்ல கதைன்னு தேர்றது ரொம்பக் குறைச்சல். அதிலியும் 'இந்த மாதிரிக் கதை உங்க மொழியிலெ வந்திருக்குதா?'ன்னு மத்த மொழிக்காரங்க முன்னலெ நின்னு மார் தட்டிக் கேக்கற துக்கும் பத்துப் பன்னண்டு கதைகூடத் தேருது.

என்னங்க இது, நாப்பத்தஞ்சாயிரத்திலெயிருந்து இப்படி ஒரேயடியாத் தொப்புன்னு பத்துப் பன்னண்டுலெ கொண்டு வந்து போட்டுட்டீங்க? வருஷத்துக்கு ஒண்ணுன்னு வெச்சாக் கூட இருவத்தஞ்சாவது தேறணுங்களே.

வருஷத்துக்கு ஒண்ணுன்னு வெக்கற கதையைப் பத்தி நான் பேசலீங்க. இன்னும் நூறு, இல்லெ இருநூறு வருஷமானலும் நிக்கக்கூடிய கதைகளைப் பத்தித்தான் பேசறேன்.

ஓ, நீங்க அந்தக் கணக்கிலெ பாக்கறீங்களா?

அந்தக் கணக்கிலெதாங்க பாக்கணும். நம்ம திருவள் ளுவரும், ஔவையாரும், கபிலரும் எழுதி ரெண்டாயிரம் வருஷம் ஆகலே. இன்னும் அவங்க பாடினது உயிரோட இல்லே?

அதுமாதிரி இப்பொ நாம எழுதறது இன்னும் ஆயிரம் வருஷமானாலும் உயிரோட இருக்கணும். அதுதான் எழுத்து. மத்ததெல்லாம் குப்பை. குப்பை குப்பையிலெதான் போயிடும்.

ஆமா, அப்படி என்ன தமிழ்க் கதையிலெ குறை கண்டுட்டீங்க?

பொதுவாச் சொல்லணும்னா நம்ம தமிழ்க் கதையிலெ ஒண்ணை படிச்சா இன்னொண்ணு படிக்க வேண்டிய தேவையில்லே. எல்லாம் ஒரேமாதிரிதான் இருக்குது. ஒண்ணு, இடம் மாறிடும். சென்னையிலெ நடந்த கதையை டில்லிக்குத் தூக்கிட்டுப் போயிடுவாங்க. இல்லேன்னா பம்பாய்க்குப் போயிடும். ரெண்டாவது, காலம் மாறிடும். சங்க காலத்திலெ கொண்டுபோய் வெச்சிடுவாங்க. இல்லெ பல்லவர், சோழர் காலத்திலெ நிறுத்திடுவாங்க. ஆனா எல்லாத்துக்கும் அடிப் படை ஒண்ணுதான். காதல்....குடும்பத்திலெ தகராறு. ஒர்த்தரைப் பத்தி ஒர்த்தர் தப்பா நினைச்சிக்கறது. அப்பறம் திருந்திட்றது. இல்லேன்னா யாராவது ஒர்த்தர் செத்துப் போயிட்றது....ஒர்த்தன் ஒரேயடியா அயோக்கியனா இருக்கறது. இன்னொர்த்தன் அவனாலெ படாத கஷ்டமெல்லாம் பட்டுக் கடைசியிலெ அவனைத் திருத்திட்றது. இப்படி ஒரு நாலஞ்சி தீம். அதை வெச்சிகிட்டு எத்தனை ஆயிரம் கதைதான் படிக்கறது?

ஆமாங்க. இப்பொதான் ஞாபகம் வருது. நேத்து ஒரு கதை படிச்சேன். இருவது வருஷத்துக்கு முன்னாடி அதே மாதிரிக் கதையை அதே பத்திரிகையிலெ படிச்சிருக்கறேன். ஆனா எழுதனவர் பேர் வேறெ; கதாநாயகன் கதாநாயகி பேர் வேறெ; மத்தபடி நிகழ்ச்சி ஒண்ணுகூட மாறலே.

அத்தோட நம்ம தமிழ் எழுத்தாளருங்க ஏதோ ஒரு கற்பனை உலகத்திலெ வாழ்ந்துகிட்டிருக்கறாங்க....அவங்க வாழற இந்த உலகத்திலெ அவங்களைச் சுத்தி எவ்வளவு விஷயங்க நடக்குது அதுலெ ஒண்ணைக்கூட வெச்சி எழுதறதுக்குப் பயப்பட்றாங்க! சேரின்னாலும், நடுத்தரக் குடும்பம்னாலும், பணக்கார வீடுன்னாலும் - எல்லாம் இவங்க கற்பனையிலெயிருந்துதான் வருதே தவிர, ஒண்ணும் நாம பாக்கறா மாதிரி இல்லே.

நூத்துக்கு நூறு உண்மைங்க. சேரியிலெ வாழற குப்பனு யிருந்தாலும் சரி, பங்களாலெ வாழற கோடீஸ்வரனுயிருந் தாலும் - எல்லாரும் ஒரேமாதிரிதான் நடந்துக்கருங்க - ஒரே மாதிரிதான் பேசருங்க......

அங்கெதான் இருக்குது விஷயம். நம்ப தமிழ்லெ முக்கால்வாசி எழுத்தாளருங்க பேசரு மாதிரி எழுதறதில்லே. ரெண்டுபேர் பேசிக்கிறதைக்கூட ஒரு செயற்கைத் தமிழ்லெ தான் எழுதருங்க. என்னுன்னு கேட்டா மொழியோட தூய்மை கெட்டுப்போயிடுமாம். என்னமோ இவங்கதான் மொழியைக் காப்பாத்தரு மாதிரி. யார் யாரை வெச்சிக் கதை எழுதறமோ அவங்க அவங்க பேசற தமிழ்லியே எழுதனு எவ்வளவு இயற்கையா இருக்கும். அப்பொதான் பேசறவங்க இடையிலே நின்னுகிட்டு நேர்லெ கேக்கரு மாதிரியே இருக்கும்.

> கம்பராமாயணம் ஓர் இலக்கிய சமுத்திரம். சப்த சாகரங்களும் ஒன்ருகச் சேர்ந்தது போன்ற ஆழ முள்ளது. சமுத்திரத்தில் பலபேர் பலவிதமான பயன்களை அடைகிருர்கள். சிலர் அதன் விஸ்தார மான நீர்ப்பரப்பை வியந்து பார்த்து மகிழ்கிருர்கள். சிலர் அதில் புரண்டு வரும் அலைகளைப் பார்க்க ஆசை கொள்ளுகிருர்கள். பலர் அதன் உப்பங்காற்று உடல் நலத்துக்கு மிகவும் உகந்ததென்று நாடுகிருர்கள். ஆராய்ச்சிக்காரர்கள் சமுத்திரத்தில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன என்று முழுகிப் பார்க்கி ருர்கள். எண்ணிறந்த மக்கள் அதில் முழுகிக் குளித்து நீந்தி விளையாடுகிருர்கள்.
>
> "இலக்கிய இன்பம்"
>
> —நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை.

கதை நம்ம எதிரெ நடக்கரு மாதிரி நம்ம மனசிலெ ஒரு பாவனை ஏற்படும். அந்த மாதிரி இருக்கற கதைதான் உயிரோட நிக்கும். மத்ததெல்லாம் பட்பட்டுன்னு செத்துப் போயிடும். உண்மையிலெ சொல்றேன், நாம பேசற தமிழ். உயிருள்ள தமிழ். கதை எழுதறதோ கட்டுரையிலெ எழுத

வேண்டிய செயற்கைத் தமிழ். உயிருள்ள தமிழ்லெ எழுதற கதைதான் என்னைக்கும் நிக்கும். அந்த மாதிரித் தமிழ்லெ எழுதறவங்க ரொம்பக் குறைச்சல்.

அந்த மாதிரித் தமிழ்லெ எழுதறவங்க யாராவது இருக்கறாங்களா?

முன்னெ புதுமைப்பித்தன் அந்த மாதிரிதான் எழுதுகிட்டிருந்தாரு. திருநெல்வேலித் தமிழ் அவர் கதைகள்ளெ விளையாடும். இன்னைக்கும் அவர் கதைகளைப் பாராட்டறாங்க. அப்பறம் ஜெயகாந்தன் கதைகள்ளெ பேச்செல்லாம் கொச்சைத் தமிழ்லெதான் இருக்குது. முதல்லெ அவர் அந்த மாதிரி எழுதனதைத் திட்டினாங்க. இப்பொ இருக்கறவங்கள்ளெ அவர்தான் ரொம்ப நல்லா எழுதறார்னு புகழறாங்க. அதே மாதிரி ஜெகசிற்பியன் கதைகள்ளெ சென்னைத் தமிழ் கொஞ்சுது. அப்பறம் தி. ஜானகிராமன் கதைகள்ளெ தஞ்சாவூர்த் தமிழ் தவழுது. இன்னும் இந்திரா பார்த்தசாரதி கதைகள்ளெ இங்கிலீஷ் படிச்சவங்க இங்கிலீஷ் கலந்து பேசற தமிழ் வந்துவந்து போவுது. நீல பத்மநாபன் கதைகள்ளெ கன்யாகுமரித் தமிழ் வெள்ளம் பாயுது. இவங்களை மாதிரி இன்னும் சிலபேர் எழுதறாங்க. இவங்க கதையெல்லாம் உயிரோட இருக்கறதுக்கு இவங்க பேச்சுத் தமிழைக் கையாள்றது ஒரு முக்கியமான காரணம். உரையாடல் மாத்திரம் இல்லாம கதை முழுக்கவே பேச்சுத் தமிழ்லெயே இருந்தாக்கா இன்னும் நல்லா இருக்குமுங்கறது என் நம்பிக்கை. நம்ம நாட்லெ தமிழ் தவர மீதி எல்லா மொழியிலியும் கதையை அப்படித்தான் எழுதறாங்க. நாம மட்டும்தான் கதைக்குகூட இலக்கியத் தமிழை விடமாட்டோம்னு பிடிச்சிகிட்டு ஒத்த கால்லே நிக்கறோம்.

மத்த மொழிகள்ளெ பொதுவா எந்த மாதிரிக் கதைங்க எழுதறாங்க - கொஞ்சம் சொல்லுங்களேன். நான் தெரிஞ்சிக்கறேன்.

தமிழ்க்கதைகளைப் பத்திதான் நான் சொல்லணும். இருந்தாலும் நீங்க கேட்டதனாலெ மத்த கதைகள்ளெ ஒண்ணு ரெண்டு சொல்றேன். 'காலி புட்டிகள்' ஒரு கதை தெலுங்கிலெ படிச்சேன். ஒரு ஹாஸ்பிடல் வாசல்லெ புட்டி விக்கற ரெண்டு ஏழைப் பொம்பளைங்க சண்டையைப் பத்தி

வர்ணிக்கிற கதை அது. அவங்கவங்க மனசிலெ எப்படி எப்படி நினைக்கருங்களோ அதே பாணியிலெ எழுதியிருக் கருரு 'ஸ்மைல்' ங்கற ஆசிரியர். ஒர்த்திகிட்டெ புட்டி வாங்க வந்த ஒரு ஏழையைக் கூப்ட்டு அவனுக்கு ஒரு புட்டியை மலிவா வித்துட்ரு. அவன் போயிட்டப்பறம் அந்த ரெண்டு பொம் பளேங்களும் முட்டிக்கிருங்க. கன்னு பின்னுன்னு சேரி மொழியிலெ திட்டிக்கிருங்க. ஒர்த்தி மயிரை ஒர்த்தி இழுத்துச் சண்டை போட்டுக்கருங்க. சண்டை வேகத்திலெ தங்களே மறந்து, தங்களேச் சுத்தி நின்னு வேடிக்கை பாக்கற கூட்டத்தை மறந்து, ஒர்த்தி புடவையை ஒர்த்தி பிடுங்கிச் சாக்கடையிலெ எறிஞ்சிட்ற அளவுக்குப் போயிட்ருங்க. அதுலெ ஒர்த்தி தப்பிச்சிகிட்டு, சாக்கடையிலெ அடிச்சிகிட்டுப் போகாம கிடந்த ஒரே புடவையை எடுத்துச் சுத்திகிட்டு ஓடிப் போயிட்ரு. இன்னொர்த்தி அம்மணமா அந்தக் கூட்டத்து நடுவுலெ நின்னு தவிச்சிப் போரு. மானத்தைக் காப்பாத்திக் கறதுக்கு வேறெ வழி தெரியாம, தற்செயலா வர்ற பஸ்ஸுக்குக் கீழெ விழுந்து செத்துப் போயிட்ரு. ஆபாசமான விஷயத்தைப் பத்திச் சொல்ரு மாதிரி இருந்தாலும் அந்த நிகழ்ச்சிங்க எல்லாம் நம் கண் முன்னுடி நடக்கரு மாதிரியே இருக்குது. படிக்கறப்பொ நம்ம மனசு வேதனைப்படுதே தவிர அந்த ஆபாசத்தை பத்திய நினைப்பே வரல்லே......அப்பறம், மலையாளத்திலெ பஷீர்ங்கற, ஆசிரியர் 'பாத்துமையோட ஆடு'ன்னு, ஒரு நெடுங்கதை எழுதியிருக்கரூர். தன் வீட்லெ சுத்திச் சுத்தி வர்ற தன் தங்கையோட ஆட்டை மையமா வெச்சி, அன்ருட வாழ்க்கையிலெ தன்னுடை பெரிய குடும்பம் சுத்திச் சுத்தி வர்ற நிலையைச் சொல்லி அழகா எழுதியிருக்கரூர். அந்தக் கதையிலெ காதல் கிடையாது, கற்பனையிருக்கரு மாதிரியே தெரியலே. சாதாரணமாக் கிராமத்திலே ஒரு ஏழைக் குடும்பத்திலெ தினம் நடக்கற விஷயங்களேத்தான் சொல்லிகிட்டு போருர். ஆனு அதுலெ அந்தக் குடும்பத்தோட முப்பது வருஷத்துக் கதை வந்துடுது. தன் குடும்பத்தாரையும் தன்னேயும் அவர் பரிகாசம் பண்ணிக்கற முறை ரொம்ப ரசிக்கிரு மாதிரி இருக்குது. அத்தோட மாப் பிளாக்கள் பேசற மலையாளம் அந்தக் கதைக்கு உயிர்நாடியா அமைஞ்சிருக்குது.

நீங்க சொல்றதைப் பாத்தா எதைப்பத்தி வேணும்னுலும் கதை எழுதலாம் போல இருக்குதே.

அதான் நான் முதல்லியே சொன்னெனே. எதைப்பத்தி வேணும்னுலும் எழுதலாம். மொழியும் நடையும்தான் அதுக்கு

விருவிருப்பு கொடுக்குது. அத்தோட எழுதறவனுக்குக் கொஞ்சம் சொந்தமாச் சிந்திக்கிற திறமை இருந்து அந்தச் சிந்தனைகளே கதையோட ஒட்டு மாதிரி அதுலெ தெளிச்சிட்டான்னு, அப்பறம் அந்தக் கதைக்கு ஒரு கனம் வந்துடுது. அந்த மாதிரிக் கதையைப் படிக்கறதே ஒரு தனி அனுபவம். ஏதோ காமா சோமான்னு இல்லாமெ படிக்கிறவன் சிந்தனையே அது கிண்டிவிட்டுடும்.

இந்த மாதிரிக் கதைங்களும் தமிழ்லெ வருதுங்களா?

வருது, எதோ அத்தி பூத்தாப்பொல அங்கொண்ணு இங்கொண்ணு. இப்பொ கொஞ்சம் நாளா நிலைமை மாறிகிட்டு வருது. அசோகமித்திரன், கந்தசாமி, முத்துசாமி, நகுலன் பூமணி, ஆதவன், அம்பை, மாதவன், பிரகாஷ் இந்த மாதிரிச் சில எழுத்தாளருங்க கிளம்பியிருக்கருங்க. இவங்க கொஞ்சம் புதுசு புதுசா முயற்சிங்க பண்ணிகிட்டிருக்கருங்க. இவங்க முயற்சிகளைப் போட்றதுக்குன்னு சில பத்திரிகைகளும் உண்டாயிருக்குது. 'தாமரை'யும் 'கணையாழி'யும் கொஞ்ச வருஷமாவே இந்த நல்ல வேலையைச் செஞ்சிகிட்டிருக்குது இப்பொ 'கசடதபற', ஞானரதம்', '∴', 'வண்ணங்கள்' அப்படீன்னு சில பத்திரிகைங்க வர ஆரம்பிச்சிருக்குது. இதுகள்ளெ வர்ற சில கதைங்க என்னை மாதிரி ஆளுங்க, படிச்சி ரசிக்கிற மாதிரி இருக்குது. இந்த மாதிரிப் பத்திரிகைங்க வர்றதே பல பேருக்குத் தெரியாம இருக்குது. ஆனா அதைப் பத்திக் கவலைப்பட வேண்டியதில்லே.

என்னங்க, 'அதைப் பத்திக் கவலைப்படவேண்டியதில்லே'ன்னு அவ்வளவு லேசாச் சொல்லிட்டீங்க, பத்திரிகை நிறைய வித்து நிறையபேர் வாங்கிப் படிச்சாத்தானுங்களே அதுக்கு நல்ல எதிர்காலம் இருக்கும்?

இந்தப் பத்திரிகைங்க எல்லாத்தையும் இப்பொ பொது மக்கள் அதிகமா வாங்கிப் படிக்கறதில்லே. உண்மைதான். ஆனா இதுங்க எல்லாம் எழுத்தாளருக்குன்னு எழுத்தாளராலே நடத்தப்படற பத்திரிகைங்க. இன்னைக்கி அறிவாளிங்க போற வழியிலெதான் நாளைக்கிப் பொதுமக்கள் வருவாங்க. இது உலகத்திலெ எங்கெ திரும்பிப் பார்த்தாலும் இருக்கற யதார்த்த நெலெ. அதனாலே இதுகளுக்கு நல்ல எதிர்காலம் இருக்குதுன்னு தைரியமாச் சொல்றேன். மத்த மொழிக்காரங்க

The BSA DeLuxe - a better BSA than ever before!

BSA De Luxe, treasured the world over. Now vastly improved in looks and performance!

Have a look at it. Sterling silver! A real beauty. A bike you'll cherish with pride — for years.

For swinging young boys and girls, there's the sporty, young BSA Aristocrat.

BSA — the superior bicycle — the ultimate in cycling pleasure

Made in India by: TI CYCLES OF INDIA, Ambattur, Madras 53
Proprietors: Tube Investments of India Ltd., Madras
Registered users.

TIC/BSA-6782


India's strength lies not in numbers
but in healthier and better educated citizens
small families make for
HEALTHY CHILDREN
GREATER SHARE OF
PROSPERITY FOR EVERYONE
BETTER CHANCES OF
GOOD EDUCATION

Hoechst Pharmaceuticals Limited's modest contribution towards the nation's total research effort is to assist the Government of India in its policy of self-reliance in the pharmaceutical industry.

Aided by highly sophisticated equipment and backed by the world-wide experience of the Hoechst organisation, dedicated Indian Scientists at the modern Rs. 90 lakhs Hoechst Centre for Basic Research in Mulund, Bombay, work assiduously in the field of chemistry, microbiology & pharmacology to find newer and better ways to help improve the health of our people.

The Hoechst Research Centre was formally inaugurated by Shri H.R. Gokhale, Minister for Law and Judiciary, and Minister for Petroleum and Chemicals, Government of India, on 4th February, 1972.

HOECHST PHARMACEUTICALS LIMITED

HOECHST

HOECHST THINKS AHEAD





excellence is timeless

Our philosophy is not new. It is perhaps as old as time itself. It's a dedication to perfection. To doing the best that can be done. And then striving to make it better still. It's an endeavour that embraces every field of our activity. Whether it's textiles, jute, plywood, dyes, chemicals or petrochemicals.

MAFATLAL GROUP

MAFATLAL GROUP

முன்னுடித் தலை நிமிந்து நின்னு எங்க தமிழ்லியும் சிறப்பான கதைங்க வருதுன்னு மார்தட்டிச் சொல்ற நிலை கூடிய சீக்கிரத்திலெ வரப்போவுதுங்கற நம்பிக்கை எனக்கு இருக்குது.

கொஞ்ச நேரத்துக்கு முன்னுடி என்னமோ சோர்ந்து போய்ப் பேசிகிட்டிருந்தீங்க. இப்பொ என்னமோ தைரியம், நம்பிக்கைன்னு அடிச்சி அடிச்சிப் பேசறீங்களே. உங்களை என்னுலே புரிஞ்சிக்கவே முடியலியே.

பொதுவா இந்த இருவத்தஞ்சு வருஷத்து நிலையைக் கண் முன்னுடி நிறுத்திப் பாத்தப்பொ அப்படிக் கொஞ்சம் சோர்வு தட்டிப்போச்சி. ஆனு இப்பொ சில வருஷமா நடந்துவர்ற மாறுதலை நினைக்கறப்பொ கொஞ்சம் தெம்பு வருது. அத்தோட பரம ஏழைகூட நாளைக்கி நமக்கு நல்ல காலம் வரப்போவுதுன்னு நினைசிகிறப்பொ அவனுக்கு ஒரு தனி ஆனந்தம் ஏற்படுது. அந்த நம்பிக்கை யில்லேன்னு வாழ்க்கையிலே நிம்மதியே இருக்காது. சொல்லப்போனு இது என்னை நானே ஏமாத்திகிட்டு ஆனந்தப்படறதுக்கு உண்டாக்கிகிட்ட நம்பிக்கை இல்லெ. சில மாசத்துக்கு முன்னுடி 'கணையாழி'லெ குமாரி சூடாமணி எழுதன 'நாலாவது ஆசிரமம்'னு ஒரு கதை படிச்சேன். முதல் கல்யாணத்துக் கப்புறம் விதவையாயி, இரண்டாவது கல்யாணம் செஞ்சிகிட்டு ரெண்டு குழந்தைகளையும் பெத்தெடுத்து, வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்து, அதுலெ அலுப்புத் தட்டிப்போய், அதுலெ யிருந்து விடுதலை வாங்கிகிட்டு ஆத்ம திருப்திக்குன்னு மூணுவது ஒரு தத்துவப் பேராசிரியரைக் கல்யாணம் பண்ணிக் கிட்டு, அஞ்சு வருஷம் அவரோட மானசீக நிலையிலெ சந்தோஷமா வாழ்ந்துட்டு, அப்பறம் நாலாவது ஆசிரமத் தைத் தேடிப் போற முயற்சியிலெ ஏமாத்தம் குறுக்கிட்டுத் தற்கொலை பண்ணிக்கிட்ட ஒரு பெண்ணேட கதை அது. இந்தக் கதையை அவங்க எழுதியிருந்த முறை என்னைக் கவர்ந்துட்டுது. நான் மட்டுமில்லே, அதைப் படிக்கிற ஒவ்வொர்த்தரும், அந்தப் பெண் ஒவ்வொரு கட்டத்திலியும் செஞ்சது சரிதான்னு ஒத்துகிட்டாகணும். அந்த மாதிரிக் கதையை எல்லாரும் ஒத்துக்கருப்போல எழுதறதுக்கு ரொம்பத் துணிச்சலும் திறமையும் வேணும். அந்தக் கதையைப் படிச்ச அன்னைக்கித்தான் எனக்குத் தமிழ்க் கதைகளோடே எதிர்காலத்திலெ நம்பிக்கை வந்தது. அத்தோட இந்த மாதிரிக் கதையை உருவாக்கறதுக்கு உதவி

செஞ்ச அந்த மொழி மேலெயும் எனக்கு ஒரு அலாதி நம்பிக்கை ஏற்பட்டுது.

இப்பொ நீங்க விளக்கனப்புறம் எனக்கும் அந்த நம்பிக்கை வருதுங்க...ஆமா இவ்வளவு நம்பிக்கை இருக்க றப்பொ அப்பறம் ஏன் தயங்கறீங்க. தைரியமா எழுத வேண்டியது தானே.

We Make Products
Behind Productivity.

Greater Productivity is the Greatest Need of the Hour.

Behind Productivity lies Planning.

And, behind Planning, Papers and Boards!

Alive to this need, we produce quality papers and Boards, to provide the literal and figurative base for productivity.

SESHASAYEE
Papers And Boards Limited

CAUVERY R. S. P. O.

Erode-7.

Salem District.

The Indo-Swiss Synthetic Gem Manufacturing Company Limited

MAIN ROAD, METTUPALAYAM, Coimbatore Dist.,

Phone: Factory 127 Office: 136

Rough Synthetic Gem Stones (Spinel and Corrundum) in various colours and finished roundels in different sizes, used for the manufacture of Watch Jewels and Cup Jewels

Sole Distributors for Indian Union:

Messrs G. S. & COMPANY

No. 6, Jaffersha St., TIRUCHIRAPALLI-8.		Rastha Gopalji JAIPUR
4006	Phone	72814
'MANEK'	Grams	'INDOSWISS'

With Best Compliments

from

Messrs. Khanna Rayon Industries

Silk House, Silk Bazaar,

BOMBAY-2.

Manufacturers of:

KRIMPEX STRETCH NYLON YARNS.

With best
compliments from

PARLE BOTTLING CO. PVT. LTD.,

Registered Office:
WESTERN EXPRESS HIGHWAY
CHAKALA, ANDHERI (EAST)
BOMBAY-69-AS.

Regional Office:
60, SHIVAJI MARG,
NEW DELHI-15.
Grams: "PARLES" New Delhi-15.

For Healthy Vegetables in your Kitchen Garden

Use

NSC Quality Vegetable Seeds
Also available selected varieties of Flower Seeds

From

National Seeds Corporation Limited.
F-44/A, South Extension, Part-I,
Ring Road, New Delhi-49.

and

NATIONAL SEEDS CORPORATION LIMITED
Delhi Region, Central Stores & Supply Division
C. T. O. Buildings, Pusa
New Delhi-12.

and also from

N. S. C. SALES COUNTER
Krishi Bhavan (Main Gate)
New Delhi-1.

For Your Copy of
HINDU & DINAMANI
Please Contact

CENTRAL NEWS AGENCY

23/90, Connaught Circus

NEW DELHI-1.

Phone : 45942

சுதந்திரத்துக்குப் பிறகு

தமிழ் நாடக வளர்ச்சி

[சுப்புடு]

சுதந்திரத்திற்குப் பின் தமிழ் நாடகத்தின் வளர்ச்சி என்றவுடன் ஒரு கதை ஞாபகத்துக்கு வருகின்றது. ஒருவன் கண் வைத்தியரிடம் சென்றான். பரிசோதனை நடந்தது. பின்னர் ஒரு முக்காலியில் உட்கார வைக்கப்பட்டான். எதிரே கரும்பலகையில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. வைத்தியர் கட்டளையிட்டார்: "பலகையில் மூன்றாவது வரியிலுள்ள எழுத்துக்களைப் படியுங்கள்." பட்டென்று பதில் வந்தது. 'பலகை எங்கே?' ஏறக்குறைய இந்த நிலையில் இருக்கிறேன் நான்.

முதலாவது தமிழ் நாடகங்கள் எங்கே?

முழுக்க முழுக்க செந்தமிழில் பேசும் நாடகங்கள் இப்போது எங்கே? நாடகத் தலைப்புக்களே ஆங்கிலத்தில் மிளிர்கின்றன. 'தமிழால் முடியுமா என்றந்த மேதையுரைத்தான்' என்று பாரதியார் அங்கலாய்த்தார். முடியாது; எடுபடாது என்று இன்றைய நாடகவிற்பன்னர்கள் பதிலளித்து விட்டனர்.

பரிதாபத்திற்குரிய நிலைதான். என்ன செய்ய?

சென்னைப் பத்திரிகைகளைப் புரட்டினால் 'இன்றைய நிகழ்ச்சிகள்' பகுதியில் பத்தி பத்தியாய் நாடக விளம்பரங்கள் தென்படுகின்றன. ஒவ்வொரு நாடகமும் 100-வது நாள் கொண்டாட்டம் நடத்துகிறது. 'இது முன்னேற்றம்' இல்லையா? என்கிறார்கள் தமிழ் நாட்டுக் கலாரசிகர்கள்.

சில தலைப்புக்கள்:

'Madras by Night'
'Goodbye to Love'
'Flight No. 172'
'Quo Vadis'

போதுமா?

100 நகைச்சுவை வெடிகள் கிடைத்தவுடன் நாடகம் தயாராகி விடுகின்றது. அரசியல் நையாண்டி செய்தே வெற்றிகரமாக ஓடுகின்றது. இவைகளுக்குத் தற்காலிக மதிப்புத்தான்.

இன்றேல், பிராம்மணத் தமிழ் பேசப்படும் நாடகங்கள், புருசன்—பெண்சாதி சண்டை மலிந்து கிடக்கும் நாடகங்கள் ஒரு பக்கம். 'பொன் மொழிகள்' சம்பந்தா சம்பந்தமில்லாமல் பொழியப்படும் நாடகங்கள் மற்றொரு பக்கம்.

சுருங்கச் சொன்னால் இவையெல்லாம் வெறும் பொழுது போக்குக்காக நடத்தப்படுபவை தாம்.

தமிழில் பேச நாக்கு வழங்காது இருக்கும் நடிகர்களைத் தமிழ் நாட்டில்தான் காண முடியும். நம் நடிகர்கள் உடை அணிவதிலும் மேற்கத்திய பாணியைத்தான் கையாளு கிறார்கள். 'இரவு கோட்டு', புகைக்கப் பைப் இவை வில்லனின் அணிகலன்கள். வேலைக்காரர்கள் எல்லாரும் அபரிமிதமான எசமான விசுவாசம் படைத்தவர்களாக அமைகிறார்கள்.

சற்றே கூனிய முதுகு.

அளவுக்கு மீறிய தத்துவம் பேசுவார்கள்.

வசனம் செந்தமிழிலிருந்து சிந்தாதிரிப்பேட்டைக்குத் தாண்டிக் கொண்டே இருக்கும். சீரான குணச்சித்திரம் மருந்துக்குக் கூடக் கிடையாது. தமிழ்நாட்டில் தனிப்படை யான, தனித் தன்மையான கருத்துக்களே கிடையாது. நமது சமூக வாழ்வில் எவ்வளவோ பிரச்சினைகள் உள்ளன.

மாணவர்கள் சமூகத்திலுள்ள பிரச்சினைகள். அவர்கள் அரசியலில் ஈடுபட்டு அரை வேக்காடுகளாய் மாறுவது.

மத்தியதர வகுப்பினரிடையே ஏற்பட்டுள்ள, சமாளிக்க முடியாத பிரச்சினைகள்.

படித்த பெண்களின் மனோபாவ மாறுதல்களுள் மண வாழ்க்கையில் அவர்களுக்கு ஏற்படும் வெற்றி தோல்விகள்.

விவசாயிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியும், எழுச்சியும். அடுக்கிக் கொண்டே போகலாம்.

உண்மையிலேயே தமிழ் நாடகம் போடுபவர் ஒருவர் தான்.

அசாத்திய துணிச்சல் படைத்தவர்.

தெள்ளு தமிழ் பேசுபவர்.

அவர்தாம் மனோகர்.

எவ்வளவோ இன்னல்களுக்கிடையே, அவர் வைராக்கியத்துடன் தமிழ் நாடகங்கள் போட்டு வருகிறார். சினிமாத் துறையில் வரும் வரும்படியுடன் நாடகக் கலை உயிரோடு இருப்பதற்காகத் தம் உடல், பொருள், ஆவி அத்தனையும் சமர்ப்பித்து வரும் தியாகி அவர் ஒருவரே.

புராணக்கதைகளுக்கு மெருகு கொடுத்து, திருப்பங்கள் தந்து, நாம் இதுகாறும் கொடூரமானவர்கள் என்று ஒதுக்கியவர்களைப் புதிய நோக்கத்தில் கண்டு, புதிய குணச்சித்திரங்களை உருவாக்கி; அளிக்கும் அவருக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

"அதிகமாகப் படித்தவன் அதிகமாகப் பேசுவான் என்று பொதுவாக நினைக்கிறோம். கற்பதைவிடக் கற்றதை உணர்வது அருமை. உணர்ந்ததைவிட உணர்ந்ததைச் சொல்லுவது அருமை என்று புலவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் அதற்கு மேலே ஒரு படி இருக்கிறது என்றும் தெரிகிறது. விரிந்து பரவின ஞானத்துக்குப் பேச்சு ஓர் அடையாளமாக இருந்தாலும் ஞானத்தின் தலையளவுக்குப் பேசாமைதான் அடையாளமாம். ஞானத்தின் எல்லை மௌனம்."

"பேசாத பேச்சு"

—கி. வா. ஜகந்நாதன்.

'இலங்கேஸ்வரன்', 'சாணக்கிய சபதம்', 'துரோணர்', 'விசுவாமித்திரர்' போன்ற அவர் படைப்புகள் சரித்திரத்தில் இடம் பெறவேண்டியவை.

அவைகளில்,

தமிழின் வேகத்தைக் காணலாம்;

நடிப்பின் துடிப்பைக் காணலாம்;

ஒப்பனையின் உயர்வைக் காணலாம்;
காட்சிகளின் மாட்சியைக் காணலாம்;
கருத்துச் செறிவைக் காணலாம்;
மாயா ஜாலங்கள் காணலாம்;
மக்களின் ஈடுபாட்டைக் காணலாம்;

திரு. டி. கே. சண்முகம் உடல்நிலை காரணத்தாலும், அமெச்சூர் கும்பலின் போட்டியின் காரணத்தாலும் தமது குழுவையே கலைத்துவிட்டார்.

அது அவர் குற்றமாகாது.

அவரது ராஜ ராஜ சோழன் ஒரு மகோன்னதப் படைப்பு. நகரமாயினும், நாட்டுப் புறமாயினும் எடுபடும் தகுதி படைத்த தாகும். இந்த மகானுபாவரை மேடையிலிருந்து விரட்டிய பாவத்திற்குப் பிராயச்சித்தமே கிடையாது.

ஆனால் ஒன்று.

'நவீன நாடகங்கள்' என்ற போர்வை போர்த்திக் கொண்டு வரும் வகையினைப் பார்க்கும்போது, வெறும் ஆங்கிலம் கலந்த பொழுது போக்கு மலிந்த, நகைச்சுவை நாடகங்களே தேவலை என்று தோன்றுகிறது.

இந்த நாடகங்களில் எல்லாமே பச்சை. சேரிவாசிகள், குடியானவர்கள் கூடப் பேசக் கூச்சப்படும் வசனங்களை மேடையில் பேசி, அதை வெற்றியாகக் கருதித் தம்பட்டம் அடிக்கும் இந்தக் கூட்டம் இப்போது வலுத்து வருகிறது. 'நிர்வாணக் காட்சிகள்' கிட்டத்தட்ட விஷயத்திற்கு வரும் வர்ணனைகள் நிறைந்த சில நாடகங்கள் இப்போது மவுசுடன், நவீனப் போர்வையில் உலாவி வருகின்றன.

ஒன்று கவனிக்க வேண்டும். எதற்கும் இலைமறைவுகாய் வேண்டும். காளிதாசனும், கம்பனும் காணாத வர்ணிக்காத சிருங்கார ரசம் இவர்கள் கண்டுவிடவில்லை. ஆங்கில, ஃபிரெஞ்சுக் கதைகளை அரைகுறையாகப் படித்துவிட்டு, சீரணிக்காமல், அரைவேக்காடாய் அள்ளித் தெளிக்கிறார்கள் அவர்கள். அமெரிக்காவிலேயே, இந்த உத்தி, மவுசு குறைந்து வருகின்றது. ('Hair', 'Oh Calcutta') போன்ற மேடையேற்றங் களுக்குக் கூட்டம் குறைந்து வருகிறது.

விலங்குகள் நிர்வாணமாய்த் திரிகின்றன. நாம் கவனிக்கிறோமா? அதற்கேற்ப மனிதனும், அங்ஙனம் துவங்கினால் கொஞ்ச நாள்தான் பரபரப்பிருக்கும். அப்புறம் கடையைக் கட்ட வேண்டியதுதான். முக்காலே மூணுவீசம் கதைகள் அப்படியே ஆங்கிலக் கதைகளைத் தழுவியவை.

நாடகத்தில் பரபரப்பு ஏற்படுத்தி, விரைவில் முன்னுக்கு வந்து இப்போது வெள்ளித்திரைக்குப்பின் மறைந்து கொண்ட கே. பாலச்சந்தரும் இதற்கு விதிவிலக்கல்லர்.

சுயமாகச் சிந்திக்கும் தன்மையை இழந்தவர்கள் நாம். மறுபடியும் பெறுவோமா என்பதும் சந்தேகமே.

தமிழன் தமிழில் சிந்திப்பதில்லை; தமிழை எண்ணுவதில்லை; தமிழை ஜீரணிப்பதில்லை; இதற்கு யாரைச் சொல்ல?

நாடகத்தை வளர்த்தவர்களுள், தி. ஜானகிராமன், பி. எஸ். ராமையா போன்றவர்களுக்கும் அதிகப் பங்குண்டு. 'நாலு வேலி நிலம்', 'வாத்தியார் வடிவேலு', 'போலீஸ்காரன் மகள்' இவையெல்லாம் சுத்தத் தமிழ் நாடகங்கள். 'சுத்தமான' என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், இவை மொழி பெயர்ப்புமில்லை. தழுவலும் இல்லை. அயனான மூலக்கதை; இலக்கியத் தமிழ் இல்லை; எல்லாம் வழக்கு மொழிதான். ஆனால் இவர்கள் படைப்போ ஓர் இலக்கியம்; அதுதான் நாடக இலக்கியம்.

இத்தனை பேர் வித்திட்ட நாடகக்கலை செழித்து ஓங்கியதா? அதுதான் இல்லை; செழித்து ஓய்ந்தது. இந்தக் கலைகளுக்கே ஒரு தனி இயல்பு; அது சாபமோ அல்லது வரமோ எனக்கு விளங்கவில்லை. விதை விதைத்ததும், முளைத்து, வளர்ந்து ஆலம் விழுதாய்ப் பரந்து நிலைக்காது; நிலைக்கவும் கூடாது. அதுவும் காலப் பயிர் போல; காலம் மாற மாறப் புதுப்புதுச் சாகுபடி செய்தாக வேண்டும். புதுமை வேண்டுமென்றால் உரவகையை மாற்றிக் கொண்டு வரலாம். தமிழ்ப் பயிரை மாற்றக் கூடாது.

தமிழ் நாட்டில் நாடகம் பெருகியிருக்கிறது. அது இப்போது ஒரு குடிசைத் தொழில். ஆனால், வளரவில்லை. அதற்குக் காரணம், அர்த்தமில்லாப் போட்டி; நாடகக்கலையை வளர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு துணிந்து

நடத்தி வந்த டி. கே. எஸ்., மனோகர் போன்ற தொழில் முறை நடிகர்கள் ஒருபக்கம். ரசிகர்கள் மனத்திலும், கண் முன்னும் எப்பொழுதும் இருந்து ஆட்சி செய்து வரவேண்டும் என்ற ஒரே சுயநோக்குடன் நாடகத்துறையில் காலூன்றி, வேரூன்றி இப்பொழுது கிளையாய்ப் பரவி நிற்கும் பிரபல திரைப்பட நடிகர்கள் மற்றொரு பக்கம். இவர்களுக்கு உள்ள வலிமையோ, இவர்களைச் சுற்றியுள்ள மாயையோ, இறைவனுக்கும் இல்லை. இவர்கள் வலிமையின் முன் அசல் தோற்றுப்போய், நாடக வளர்ச்சி தடைப்பட்டதில் வியப்பில்லை.

> "தம்பி, ஒவ்வொருவருக்கும் அறிவு இருக்கிறது என்பதை நீ முதலில் ஒப்புக்கொள்! அந்த அறிவை பட்டை தீட்டப்பெறும் ஒரு வைரக் கல்லுக்கு ஒப்பிடு! அதை அவரவர் தம்தம் முயற்சியால் உலகமாகிய சாணைக் கல்லில் தீட்டி வருகிறார்கள் என்றும் நினை. எந்தப் பக்கத்தில் தீட்டுகிறார்களோ, எவ்வளவுக்குத் தீட்டுகிறார்களோ, அத்தனைப் பட்டைகளிலும் அவ்வளவுக்கவ்வளவு ஒளி வீசும் என்று கருது."
>
> "எண்ணக் குவியல்"
>
> —கி. ஆ பெ. விசுவநாதம்.

இவர்கள் யாரைக் கெடுத்தார்கள் தெரியுமா? இளம் நாடகாசிரியர்களை; 'திரையுலக மன்னர்கள்' என்றால், அவர்கள் போடும் நாடகங்கள் 100 காட்சிகளை விரைவில் எட்டிப்பிடித்தன. ஆகையால் நாடக உலகில் நிலைக்க வந்தவர்கள், இவர்களை நினைத்தே வந்தார்கள். செல்வங் கொழிக்கும் திரையுலகிற்குள் நுழைய இவர்களை நூலேணியாக ஏற்று வந்தார்கள். இதற்காக இவர்கள் செய்த தியாகங்கள் தாம் எவ்வளவு?

சுயமாகச் சிந்திக்கும், கற்பனையைச் சித்திரிக்கும் நயத்தைத் துறந்தார்கள். கற்பனையைத் தேடுவதற்குப் பதிலாகத் திரைப்படக் கதாநாயகர்களைத் தேடிப் பிடித்தார்கள். அவர்கள் தேவைக்கேற்பப் பாத்திரங்கள் அமைத்தார்கள். கதையம்சத்தைத் தவிக்க விட்டார்கள்; முக்கியப் பாத்திரத்தோடு, மற்ற பாத்திரங்களை ஒட்டவிடாமல், எட்டி நிற்க

வைத்தார்கள். கதாபாத்திரத்தில் Realismத்தை ஒதுக்கினூர்கள்; பிரசாரத்தையும், அரசியலையும் புகுத்தினூர்கள். அரசியல் எவ்வளவு நிலையற்றதோ அவ்வளவு நிலையற்றது அதைப் பற்றி நிற்கும் நாடகக் கலையும் என்பதையும் மறந்தார்கள்.

ரசிகர்களுக்கும் இந்தச் சீர்கேட்டில் பங்குண்டு. இத்தகைய 'திடீர் நாடகாசிரியர்களை'த் தூக்கி வைத்ததால் அவர்களும் ஒரு வழக்கமான Formulaவுடன் 'திடீர்'க் கதைகளைப் பெருக்கினூர்கள். கற்பனை வற்றிப்போனூல் பெயர் பெற்ற எழுத்தாளன்தான் என்ன செய்வான்? பெயரை முதலாக வைத்துப் பெயருக்கென்று எழுதி நாடகப் பெயரைக் கெடுக்கிருன். கதாநாயகர்களுக்கெழுதுவது போல், சில சமயம் ரசிகர்களுக்கென்றும் எழுதுவான். இந்த 'மாஸ் அப்பீலுக்கு' எழுதுவது நாடகக்கலையின் மற்ருெரு மாசு.

'சுதந்திரத்திற்குப்பின் நாடகக்கலையின் வளர்ச்சி' பற்றி வாய்விட்டழுதது போதும். 'பலமிக்க' சிறுபான்மையினர் (தங்கள் வளர்ச்சிக்காக) தங்கள் பாதுகாப்பிற்காக நாடகத்தைத் தடுப்புக் காவல் செய்துவிட்டார்கள். இதனின்றும் மீண்டு, செய்ய வேண்டியது என்னவென்று பார்க்க வேண்டும்.

முதலாவதாக, நாடகத்துறை வளரவேண்டுமானூல், ரசிகர்களும் அரசினரும் கலைக்காவலர்களும் 'அமெச்சூரிஸத்தை' வெகுவாக ஆதரிக்க வேண்டும். ஏனென்ருல், இங்குதான் பொது நோக்கு இருக்கிறது; கலையார்வம் ஓங்கி நிற்கின்றது.

இரண்டாவதாக, சிறந்த நாடக எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும்....பத்திரிகைகளுக்கு இதில் பெரும் பங்கு உண்டு...இதை அவர்களும் சமீப காலமாக உணர ஆரம்பித்து இருக்கிருர்கள்.

எழுத்தாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை; உங்கள் கற்பனையில் நம்பிக்கை கொள்ளுங்கள்; எடுத்து ஆளவும் வேண்டாம், தழுவவும் வேண்டாம். மாற்ருன் தோட்டத்து மல்லிகையும் மணக்கும். உண்மை, ஆனூல் அதைப் பறித்துத் தலையில் வைத்தால், தலையும் கனக்கும், மனமும் கனக்கும்.

நல்ல கதையம்சம் இருக்கட்டும். நீங்கள் பார்க்கும், கேட்கும் ஒவ்வொன்றும் ஒரு நிகழ்ச்சியே; சந்திக்கும் ஒவ்வொருவரும் ஒரு கதாபாத்திரமே....உங்களை ஒட்டி நின்றது, உங்களைவிட்டு எட்டி நின்றது எல்லாம் சூழ்நிலைகளே... நீங்கள் செய்வது, செய்யக் கூடாதது எல்லாம் வழி முறைகளே.... பேசுவது. கேட்பது, பேசாதது எல்லாம் மொழிநடைகள். இவை எல்லாம்தான் நாடக இலக்கணங்கள் - இவைகளை வைத்துச் சித்திரம் எழுதுங்கள்.

அரசியலை அண்டவிடாதீர்கள். அது நிலையற்றது. பிரசாரத்திற்கு இடங் கொடாதீர்கள், அது தேவையற்றது. ஒரு சார்புமற்ற கொள்கைகள் இருந்தால், தாராளமாக எடுத்துக் கூறுங்கள். உங்கள் எழுத்து சிந்தனையைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். சிந்தையை அலைக்கழிக்க வேண்டாம்.

> "அருந் தமிழ்க் கடலே! இன்று உன்னைக்காண ஏனோ என் உள்ளம் களிக்கின்றது! நீள நினைந்து நெஞ்சம் தழைக்கின்றது! 'எங்கள் அருமைத் தமிழகத்தை வாழ்விக்க வந்த வள்ளுவர் முன்னாளில் உன்னைக் கண்டார்; உன் காற்றை உண்டார்; உன் கரையில் உலாவினர்' என்று எண்ணும்பொழுது இன்பம் பொங்குகிறது என் உள்ளத்தில்"
>
> —"கடற்கரையிலே" ரா. பி. சேதுப்பிள்ளை.

நடிகப்பெருமக்களே! வார்த்தைகளைக் குறையுங்கள். உங்கள் நாவை அடக்கி, முகபாவத்தையும் கண்களையும் அதிகம் உபயோகியுங்கள். வசனங்களினால்தான் என்றால், உங்களுக்கு நாடகமேடை தேவையில்லை. ஆகாசவாணியே போதும்.

மிகைப் படுத்துவதுதான் நாடகம் (exaggeration); ஆனால், அதையும் அளவோடும் நயத்தோடும் கையாளவேண்டும்.

எழுத்தாளர்களும் கலைஞர்களும் கவனிக்க வேண்டியது உங்கள் பெயரும் புகழும் வளர வேண்டி, பத்திரிகைகளையோ,

விமரிசர்களேயோ தேடித் துரத்தாதீர்கள். அவர்களைச் சுயமாக எழுத விடுங்கள். தேடிக்கிடைப்பது செல்வம்; ஆனால் நாடி வருவது புகழ்!

நாடகம் ஓர் இயக்கம் (movement) அதனால் புதுமைகள் அவசியம்; இல்லையேல் அது ஒரு அடையாளச் சின்னம் (monument) ஆகத் தேங்கிப் போகும். ஆனால், எத்தகைய புதுமையாக இருந்தாலும், தமிழர் கலாச்சாரத்தோடு ஒட்டி நிற்க வேண்டும். தமிழனால் முடியாதது இல்லை இது! அவனுக்கும் முன்னேற ஆர்வம் இருக்கிறது; பாதையும் தெரிகிறது. ஆனால் 'அவசரமென்ன? பொறுத்துப் பார்ப்போமே!' என்ற பெரும்போக்கு அவனைக் கட்டிப் போட்டிருக்கிறது. இதனின்று மீளவேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு, கலைஞர்கள், எழுத்தாளர்கள், ரசிகப் பெருமக்கள் எல்லாரும் ஒன்றுபட இயங்கினால், தமிழ் நாடகம் இருக்கும் இன்றைய தேக்க நிலையிலிருந்து, நாடக உலகின் இமயமான வங்கத்தையும் எட்டிப் பிடிக்கலாம். இதை என் தலைமுறையில் செய்து, அதைக்கண்டு மகிழும் வாய்ப்பினை எனக்கு அளிப்பீர்களா?



TO SOLVE YOUR CLOTHING PROBLEMS

For all your requirements in Terene blended, Cotton and Silk Suitings, Shirtings, Sarees, Dress Fabrics, Readymade Garments, Uniform materials, Household Linen, etc.

Visit

BINNY'S SHOW ROOM

at

CONNAUGHT HOUSE, CONNAUGHT PLACE,
New Delhi-1

BINNY - A Name you can Trust

KNOW OUR CUMULATIVE CUM SICKNESS BENEFIT DEPOSIT SCHEME

Syndicate Bank's Cumulative cum Sickness Benefit Deposit is meant for your security in times of stress. Save just Rs. 100/- a month (or multiples of hundreds) and watch your money grow. And should you need money for any emergency like sickness, you can draw a loan of twice the amount in your credit not only to meet your medical bills but also for your family maintenance.

Save for security with the Syndicate Bank. The Bank that thinks ahead.

Every Man's Bank for Every Banking Need.

SYNDICATE BANK

Head Office:
MANIPAL (Mysore State)

K. K. PAI
Custodian

தமிழ் விழா

தமிழ்ச் சங்கத்தின் புதிய கட்டிடத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைக்கும் காட்சி. முதல்வர் அவர்களுடன் அமைச்சர் திரு. எஸ். மாதவன் அவர்களையும் சங்கத் தலைவர் திரு. சி. வி. நரசிம்மன் அவர்களையும் படத்தில் காணலாம்.

விழாவில் திரளான மக்கள்



சங்கத் தலைவர் விழாவில் கலந்துகொண்ட புலவர் பெருமக்களைத் தமிழக முதல்வர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் காட்சி.

சுதந்திரத்துக்குப் பிறகு

தமிழிசை வளர்ச்சி

[அ. வி. குப்புஸ்வாமி]

தமிழ் கூறும் நல்லுலகில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் தமிழ் இசையும், அதனுடன் கூடவே பரதமும், நாடகமும் சிறப்பான முறையில் வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த வளர்ச்சிக்கு முக்கியமான ஆதாரம் தமிழ் மக்களின் கலையுணர்வும் கலையார்வமுமேயாகும். தமிழர்கள் பெருமளவில் வசித்துவரும் தில்லி, கல்கத்தா பம்பாய், போபால், நாக்பூர், ரூர்கிலா, அம்பாலா, போன்ற பல வட இந்திய நகரங்களிலும், இசைச் சங்கங்களும், நாட்டிய மன்றங்களும், நாடகக் கழகங்களும் தோன்றி, பலவிதக் கலைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

தமிழன் வயிற்றுப் பசியையும் பொறுத்துக் கொண்டு விடுவான். ஆனால், அவனது இரத்தத்தில் ஊறியுள்ள கலைத் தாகத்தை அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆகவே, தமிழகத்தைத் தாண்டி, தமிழன் எங்கு சென்று குடி புகுந்திருந்த போதிலும், தமிழ்க் கலைகளைப் போற்றி வளர்த்துத் தானும் இன்பம் துய்க்க வேண்டித் தான் வசிக்கும் இடங்களில் கலைச் சங்கங்களைத் தோற்றுவித்து, வரும் தலைமுறைகளினிடையே கலைச் செல்வங்கள் மேலும், மேலும் உன்னதம் பெறுவதற்காக, ஓயா உழைப்பில் ஈடுபடுவது அவனது இயல்பாகிறது.

கலைகளினிடையே, அதிலும் முக்கியமாக, இசையிலும் நடனத்திலும், நாடகத்திலும், தமிழ் கூறும் நல்லுலகில் காணப்படும் ஆர்வம் போல், இந்திய நாட்டில் வேறெந்தப் பகுதிகளிலும் காண இயலாது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும், நகரத்திலும் பணியாற்றிவரும் சங்கீத சபைகள், இசைக் கல்லூரிகள், நாடக மேடைகள், பரத நாட்டிய அரங்குகள், ஒய்ச்சல் ஒழிவு இன்றிச் செயலாற்றி வருகின்றன என்பது எல்லாரும் அறிந்ததே.

முக்கியமாக, சுதந்திரத்திற்குப் பின்னர் இந்த வளர்ச்சி மிக்க வேகம் அடைந்திருக்கின்றது. இந்திய விடுதலைக்குப் பல ஆண்டுகள் முன்னரே செட்டி நாட்டரசர் ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியாரவர்களின் பெருமுயற்சியின் காரணத்தாலும், ஊக்கத்தாலும், தமிழ் இசை இயக்கம் தோன்றியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழிசையின் பெருமையை நிலைநாட்ட அரும் பணி புரிந்தது. ஒன்றன்பின் ஒன்ருகப் பல தமிழ் இசை நூல்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் தயாரித்து, வெளியிட்டனர்.

ராஜா ஸர். அவர்கள் சென்னை நகரத்தில் தமிழ் இசைச் சங்கத்தைத் தோற்றுவத்து அச்சங்கத்தின் முயற்சிகளின் மூலம் தமிழிசையின் சிறப்பைப் பரப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்தார். சென்ற கால் நூற்ருண்டில் இத்தமிழிசைச் சங்கம் சிறந்த சாதனைகளை மேற்கொண்டுள்ளது. ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் இசைப் பேரவைகள் கூட்டி நுண்ணிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு ஆராய்ச்சிகளின் முடிவை அச்சு ஏற்றி, பல நூல்களாக வெளியிட்டு வருகின்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்ற கால் நூற்ருண்டின் முற்பகுதியில் வெளியிட்டுள்ள தமிழிசை நூல்கள் பல.

1945 ஆம் ஆண்டில் அருணசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகக் கீர்த்தனைகள் சுவரப்படுத்தப்பட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசை நூல்களின் 8 ஆம் தொகுதியாக வெளிவந்தது. 1946 ஆம் ஆண்டில் தேவகோட்டை பாலகவி திரு. வே. ராமநாதன் செட்டியார் இயற்றிய கீர்த்தனைகள் 13 ஆம் தொகுதியாக வெளிவந்தது. 1948 ஆம் ஆண்டில், வெளியிடப்பட்ட 17 ஆம் தொகுதியில், வேதநாயகம் பிள்ளை, அச்சுத தாசர், கவிகுஞ்சர பாரதி, திரிகூடராசப்ப கவிராயர், பெரியசாமிதூரன், பாரதிதாசன், எம். எம். தண்டபாணி தேசிகர் முதலான பல இசைவாணர் களின் படைப்புகள் சுவரப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது. வள்ளல் அண்ணாமலை செட்டியார், தமிழிசை வளர்ச்சிக்கென ஒதுக்கிய பெரு நிதியின் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்ற கால் நூற்ருண்டின் முற்பகுதியில் இம்முறையில் தமிழிசைக்குச் செய்துள்ள ஆராய்ச்சியும், சேவையும் அளவிடற்கரியதாகும். மற்றும், சுதேசமித்திரன் வார இதழ், கல்கி வார

இதழ் முதலிய பத்திரிகைகளும் கருநாடக இசைக்கும் முக்கியமாகத் தமிழ் இசைக்கும் மகத்தான சேவை செய்துள்ளன. இசைக கச்சேரிகளைப் பற்றிய தரம் கூறும் விமரிசனங்கள், காணுமற் கிடந்த சாகித்தியங்களைக் கண்டுபிடித்து, அவைகளைச் சுவரப்படுத்தி அச்சிட்டு வெளியிட்ட பதிப்புகள் முதலியன இத்துறையில் பல பத்திரிகைகள் செய்துள்ள அரிய தொண்டாகும்.

பல இசை வல்லுனர்களும், சங்கீத விற்பன்னர்களும் தங்களது தனி முயற்சியில் பல இசை நூல்களைத் தயாரித்துப் பதிப்பித்திருக்கின்றுர்கள். அங்ஙனம் சென்ற இருபத்தைந் தாண்டுகளில் வெளிவந்துள்ள இசை நூல்களில் முக்கியமான பேரிடம், பத்மபூஷண் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்களைச் சாரும். இசைக் கலையின் நுண்ணியல் (Musicology) சம்மந்தமான பல நூல்கள் இவரால் எழுதப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு மூன்று மொழிகளில் இவரது பல ஆராய்ச்சி நூல்களும், பாட நூல்களும் வெளி வந்துள்ளன. இசைக் கலையை ஆழத்துடனும், அகலத் துடனும் கற்க விரும்புவோருக்கு இவரது இசைக் கலை நூல்கள் இன்றியமையாதவை. இவரது சீரிய சேவையைப் போற்றும் வகையில், சென்னை நகரத்தில் தற்போது சிகர ஸ்தாபனமாக விளங்கிவரும் மியூஸிக் அகடெமியார் "சங்கீத கலாநிதி" என்ற உயர்ந்த பட்டத்தைப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்களுக்கு இவ்வாண்டில் வழங்க ஏற்பாடு செய்திருக் கிருர்கள் இன்றைய சங்கீத உலகில் இசைப் பாட்டனுராக (சங்கீத பிதாமஹர்) விளங்கிவரும் இவருக்கு, பாரத நாட்டின் ராஷ்டிரபதி ஸ்ரீ. வி. வி. கிரி அவர்களைக் கொண்டு இந்தப் பட்டத்தை வழங்குவதற்கும் அகடெமி ஏற்பாடு செய்திருப்பது மிக மிகப் பொருத்தமாகின்றது.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் இசைக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிவரும் சங்கீத பூஷணம் வீணை எஸ். ராமநாதன் அவர்கள் சென்ற பதினைந்து ஆண்டுகளில் பல சிறந்த இசை நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிருர். 'சிலப்பதிகார இசை நுணுக்க விளக்கம்', என்னும் இவரது நூல் இன்னுரின் தமிழ்ப் புலமையையும், சிறந்த ஆராய்ச்சித் திறனையும் எடுத்துக் காட்டுகின்றது. 'காவடிச் சிந்து' - என்னும் இவரது மற்ருெரு நூல் பிரபலமான பல காவடிச் சிந்துப் பாடல்களைச் சுவரதாளக் குறிப்புகளுடன் தருகின்றது.

இதேபோன்ற இன்னும் பல இசை நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடுகளான, விபுலானந்த சுவாமிகள் எழுதியுள்ள 'யாழ்நூல்' (1947), 'பரத சாத்திரம்' (1952) என்பன சிறந்த ஆராய்ச்சி நூல்கள்.

"அட கடவுளே! பாலும் பாவையும் ஒன்றென்று எண்ணியா என்னை நீ படைத்தாய்? பால் பாவையாகி விடுமா. பாவைதான் பாலாகி விடுவாளா? என்று எண்ணி அகல்யா ஒரு கணம் திகைத்தாள். இயற்கை யாயிருந்தாலும் சரி. செயற்கையாயிருந்தாலும் சரி - மரணம் அவள் உடலை மாய்க்கலாம். உள்ளத்தை மாய்க்கலாம். உயிரைக்கூட மாய்க்கலாம்-நீதியற்ற சமூகத்துக்கு முன்னால் அவள் நெஞ்சறிந்து ஏற்றுக் கொண்ட பழியை அதனால் மாய்க்க முடியுமா?"

"பாலும் பாவையும்"

—விந்தன்

சென்ற இருபது ஆண்டுகளாகத் தமிழ்த் தேயத்தில் தலைசிறந்த சாகித்திய கர்த்தாவாகத் திகழ்ந்துவருகின்ற, பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனைகளின் சிறப்பை அறியாதவர் யாரும் இலர். சென்ற ஆண்டில் இவருக்கு சென்னை மியூஸிக் அகடெமியார் சங்கீத கலாநிதி என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். பத்மபூஷண் என்ற விருதும் சென்ற ஆண்டிலே அவருக்கு இந்திய ஜனாதிபதியால் வழங்கப்பட்டது. எளிய தமிழில், இனிய ஒலியைத் தனிப்பட்ட ஒரு புலமையுடன், பாபநாசம் சிவன் அவர்களுடைய கீர்த்தனைகள், இராக தாளங்களின் முழுப் பொலிவுடன் எடுத்துக்காட்டுகின்றன.

தஞ்சை சரஸ்வதி மஹால் நிருவாகிகள் பல பழைய ஓலைச் சுவடிகளை ஆராய்ந்து சிறப்பான சில இசை நூல்களையும் சமீபகாலத்தில் வெளியிட்டுள்ளனர். அவைகளுள் 'சாஸ்திரிய சங்கீதம்' (1954), தாள சமுத்திரம் (1955), முதலியன குறிப்பிடத்தக்க இசை ஆராய்ச்சி நூல்கள்.

கோபால கிருஷ்ண பாரதியார் இயற்றியுள்ள திருநாளைப் போவார் சரித்திரக் கீர்த்தனைகள், திருநீலகண்ட நாயனர் சரித்திரக் கீர்த்தனைகள் எனப்படும் மரபில், 'கண்ணப்ப சுவாமிகள் சரித்திரக் கீர்த்தனைகள்' என்ற நூல் கவிஞர் சா. நாராயணப் பிள்ளை அவர்களால் (1967) பாடப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது.

கவியோகி சுத்தானந்த பாரதி அவர்கள் சென்ற அரை நூற்றாண்டாக ஏராளமான கீர்த்தனைகளை இராக தாளங் களுடன் பாடி வெளியிட்டு வருகின்றார். இவைகளுள் 1951 இல் வெளிவந்த 'பாரத கீதம்', 1963 இல் வெளிவந்த 'சுத்தானந்த கீர்த்தனாஞ்சலி', என்பவை பிரசித்தமானவை.

சமீபத்தில் பல இசை வாணர்கள் பல புதிய வர்ண மெட்டு களுடனும், இசை அமைப்புகளுடனும் பல சாகித்தியங்களைத் தயாரித்துப் புத்தக வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள். அவை களில் குறிப்பாகச் சில கீழ் வருமாறு:

1. இசைப் பாமாலை - இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் இயற்றிய கீர்த்தனைகள்; (1967)

2. தென்னிந்திய இசை வரலாறு - (ஆங்கிலத்தில்) ஆர். ரங்க ராமாநுஜ அய்யங்கார் எழுதியுள்ளது. (1970)

3. அருளிசையமுதம். ஸ்ரீமதி ஹைமவதி தியாகராஜன் அவர்கள் பாடியுள்ளது (1971)

4. சங்கீத சாரம் ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணய்யர் தொகுத் துத் தயாரித்திருப்பது (1971)

5. கான பாஸ்கர மணிமாலை—(மறுபதிப்பு) ஸ்ரீ. ஜி. என். பாலசுப்பிரமணியம் அவர்கள் இயற்றியவை (1972)

இவைகளைத் தவிர மற்றும் ஏராளமான பல இசை நூல் களும் சென்ற பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வெளி வந்துள்ளன.

அருணகிரிநாதர் இயற்றியுள்ள திருப்புகழ் சந்தப் பாக் களையும், வகுப்பு, அலங்காரம், அந்தாதி, அநுபூதி என்ற தனி நூல்களையும் திரட்டி, ஆராய்ந்து அரும்பத உரையுடன், ஆறு

தொகுப்புகளாகக் காலஞ் சென்ற திரு. செங்கல்வராயப்பிள்ளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த வெளியீடு அரிய பெரியதோர் முயற்சியாகும். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளும், பல திருப்புகழ் சந்தப் பாக்களை, இசையுடன் பாடும் வழியை விளக்கிப் புத்தக வடிவில் அச்சிட்டு உதவியிருக்கிறார்கள்.

தேவாரப் பாடல்களை இசையுடன் பாடுவதற்குப் பண் விளக்கித் தருமபுர ஆதீனத்தார் பல கைப்புத்தகங்கள் தயாரித்து இலவசமாக வழங்கியுள்ளார்கள்.

கிராமபோன் ரிகார்டுகள் மூலமும், ரேடியோ ஒலி பரப்பு மூலமும், வருடாந்திர இசை விழாக்கள் மூலமும், நாடக மேடை மூலமும், திரை மூலமும், சென்ற கால் நூற்றாண்டில், தென்நாட்டு இசை வெகுவாக முன்னேறி வந்திருக்கின்றது. மேடை, திரை, நடன அரங்கு, வானொலி இவை மட்டுமேயன்றி முக்கியமாக நூல்கள் வாயிலாகத் தமிழ்கூறும் நல்லுலகில் தென் இந்திய இசை வளர்ச்சிபெற்று, பிரபலமாகியுள்ளதுபோலப் பரத கண்டத்தின் இதர மாநிலங்களில் உலவிவரும் இசை வகைகள் இப் பெருமளவுக்குப் பிரபலம் ஏற்கவில்லை என்பது கண்கூடு.

கிறிஸ்த்தவமத பிரார்த்தனைக் கீதங்கள் இஸ்லாமிய மதபிரார்த்தனைக் கீதங்கள் கொண்ட பல தமிழ் நூல்களும் சென்ற கால் நூற்றாண்டில் வெளிவந்துள்ளன.

வேதநாயக சாஸ்திரியார் எழுதியுள்ள தேவ தோத்திரப் பாடல்கள் (1957) பாப்டிஸ்ட்மிஷன் ஆராதனைக் கீர்த்தனங்கள் (1970) கன்வென்ஷன் கீர்த்தனைகள் (1971) ஒலிபுல்லா நாயகம் தயாரித்துள்ள குருமஹானந்த பாபாகீதம் (1958) முதலியன இவைபற்றியவை.

தமிழ் நாட்டின் தனி இசையும், பரதமும் திரைகடல் கடந்து வெளிநாடுகளிலும் சில ஆண்டுகளாய்ப் பிரபலமடைந்து வருகின்றன. சங்கீத கலாநிதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் லண்டன் எடின்பரோ விழாவிலும் உலக ஐக்கிய நாட்டு மேடையிலும் தமிழகத்தின் தனி இசையை இசைத்து, வெளி நாட்டவர்களின் பெருமதிப்பை நமது இசைக் கலைக்குக் கூட்டி வைத்துள்ளதை யாவரும் அறிவார்கள். பரத

நாட்டியத்தின் தனிப் பெருமையை அமெரிக்க நாட்டின் மக்களிடையே பிரபலப்படுத்தியுள்ள பெருமை ஸ்ரீமதி பாலசரஸ்வதி, ஸ்ரீமதி கமலா, ஸ்ரீமதி யாமினி கிருஷ்ணமூர்த்தி, குமாரி பத்மா சுப்பிரமணியம், போன்ற பல நடனக் கலைஞர்களைச் சாரும்.

பாரத பூமி தனது சுதந்திரத்தின் பொன்விழாவைக் கொண்டாடப்போகும் 1997 ஆம் ஆண்டுக்குள் இங்ஙனமாக வெகுவேகத்தில் முன்னேறிச் சென்று கொண்டுவரும் தமிழிசையின் இவ் வளர்ச்சி, வான் முகடுவரைக்கு மேலும் உயர்ந்து துலங்கப்போகிறது என்றால் அதில் ஐயமேற்படக் காரணமில்லை.



இன்றும்
என்றும்
புதுமை
செண்டெக்ஸ்
கைத்தறி துணிகள்
● படுக்கை விரிப்பு
● அலங்கார துணிகள்
● தலையணை உறைகள்
சென்னிமலை நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி &
விற்பனை சங்கம் லிமிடெட்..
சென்னிமலை தென் இந்தியா

Ele-88

சுதந்திரத்துக்குப் பிறகு

"உரிமைக்கு உழைத்து உயர்ந்தோர்"

[மதுரை தே. சீனிவாச ராகவன் எம். ஏ.]

(1) 'வ. உ. சி'

1. பறங்கியர்க்குப் போட்டியாகப் பரவை தன்னில்
        பாங்காகக் கலமதனை ஓட விட்டான் :
'பறங்கியரை ஓட்டிடுவோம் வாரீர்' என்றான்,
        பாரதத்தின் சீர்ப்பெயரை நிலைக்கச் செய்யச்
சிறைபுகுந்து 'செக்கிழுத்த செம்மல்' ஆன
        சிதம்பரனார் என்றவுயர் தமிழன் தானே :
நிறைகுணமே கொண்டவுயர் தமிழர் ஈட்டம்
        நீணிலத்தில் அவன்பணியை மறவார் தாமே.

(2) கொடி காத்த குமரன்

2. நன்னாட்டின் சின்னந்தான் கொடியே என்று
        நவின்றிடுவார் நல்லோர்கள் அறியார் யாரே?
தன்றலையில் அடிபட்டும் குமரன் என்னும்
        தன்கையில் கொடிபற்றிப் புகழே கொண்டான் :
இன்னுயிரை ஈந்தும்நம் கொடியைக் காத்தான்.
        இவ்வுலகோர் 'கொடிகாத்த குமர' னென்றே
பன்னாளும் உளமதனிற் பொதிந்து வைக்கப்
        பழகுதமிழ் நாடதனில் வாழ்வான் தானே!

(3) பாரதி

3. பாமரராய் விலங்குகளாய் இருந்த போது
பாங்காக மக்களுக் (கு) உணர்வு தந்து
“நாமமது தமிழரென இருத்தல் நன்றோ ?
நவின்றிடுவீர் வினவுகிறேன் அடிமை நீங்கிச்
சேமமுற வேண்டுமெனில் சேர்ந்தே நிற்பீர் !
செகந்தனிலே பாரதத்தாய் உயர்ந்தே காண
யாமறிந்த நெறிதனையே உரைப்பன் ஏற்பீர் :
யாண்டும்நீர் ‘வந்தேமா தர’மென் பீரே”

4. என்றுரைத்த பாரதியார் தமிழிற் சீராய்,
எவ்வெவரும் விருப்புகொண்(டு) எழுதற் காக,
தென்னகத்தின் உயிர்நிலையாம் மானம் காக்கத்
தெவிட்டாத இன்கவிதை இயற்றித் தந்தார் ;
“அன்னியர்க்கு யாமடிமை செய்யோம்” உண்மை
அவரெதிரில் அச்சநீங்கி நிற்போம், என்றார் ;
பன்னுடும் பாரதத்தைத் தொடரும் நாளும்
பார்தனிலே வந்துளதை மறுப்பார் யாரே ?

(4) அரவிந்தர்

5. மாரத வீரர் மிகுந்து பிறந்தநந் நாட்டினிலே
பாரத வன்னை அடிமைத் தளையை அறுத்தவருள்
ஈரம தேநிறை நெஞ்சினர் தாமுமே கொண்டவுயர்
பூரணமெய்ஞ் ஞானி அரவிந் தருமே உதித்தனரே.



With Best Compliments
From

BERTRAMS - SCOTT
(INDIA) LIMITED

PAPER MILL PLANT AND CHEMICAL ENGINEERS

P. O. Box No. 2812, **Calcutta-1.**

Works :

TITAGHUR
West Bengal
Tel: BARACKPORB-366

Regd. Office :

1/1, Kimber Street,
CALCUTTA-17.

Twins

to

serve

you

Lucas - TVS builds quality into automobile electrical equipment.

Lucas Indian Service maintains it.

LUCAS-TVS LIMITED
PADI, MADRAS-50

LUCAS INDIAN SERVICE LIMITED
MADRAS—BOMBAY—CALCUTTA
DELHI—BANGALORE

[redacted]

கதியும், விதியும்

[சி. வி. நரசிம்மன்]

பள்ளியிலும், கல்லூரியிலும் கணிதம் எனக்குச் சிறப்புப் பாடமாக இருந்தது. நான் படித்த கணிதம் பொதுவாழ்வில் நான் மேற்கொண்டுள்ள அரசாங்கப் பணிக்கு எவ்வாறுகிலும் உதவியாக இருக்கிறதா என்று பலர் கேட்டிருக்கின்றனர். மேல்நோக்காகப் பார்த்தால் படிப்பிற்கும் வாழ்க்கைப் பணிக்கும் சம்பந்தம் இல்லை என்றுதான் சொல்லத் தோன்றும். ஆனால், உள்நோக்கும்போது, கணிதப் படிப்பு எந்த அளவிற்கு என் பொது மனப்பான்மையை உருவாக்கி, சிந்தனையைத் தூண்டிவிட்டு, விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கும் ஆன்மீக உணர்ச்சிக்கு முள்ள நெருங்கிய தொடர்பை உணரச் செய்திருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன்.

பள்ளியில் ஒன்பதாம் படிவத்தில் "பிதகோரஸ்" விதியைத் (Pythagoras theorem) தெரிந்துகொண்டோம். ஒரு நேர்கோண முக்கோணத்தில் (Right angled triangle) நேர் கோணத்திற்கு எதிராக உள்ள கோட்டின் நீளம் "A" ஆகவும், பக்கத்திலுள்ள இடுகோடுகளின் நீளங்கள் 'B'யும் 'C'யுமாக இருந்தால், $A^2 = B^2 + C^2$ ஆக இருக்கும் என்பது அந்த விதி. எவ்வளவு பெரிய நேர்கோண முக்கோணம் யார் வரைந்தாலும் அதனுடைய மூன்று பக்க அளவுகள் இந்த விதிக்கு உட்பட்டிருக்கும் என்று கண்டபோது என் உள்ளத்தில் வியப்புணர்ச்சி ஏற்பட்டது. இவ்வாறே படிப் படியாக முக்கோணங்களைப்பற்றியும், வட்டங்களைப் பற்றியும் பல விதிகளைக் கல்லூரி இடைநிலை வகுப்பு (Intermediate) வரை படித்தோம். இவற்றைப் படிக்கப் படிக்க, நாம் கண்ணெதிரே பார்க்கும் பல அமைப்புகள், முக்கோணங்கள், வட்டங்கள் எல்லாம் சில விதிகளுக்கு உட்பட்டிருக்கின்றன, என்ற உணர்ச்சி என்னில் மேலோங்கியது கல்லூரியில் மேல் வகுப்பில் கணிதத்தைச் சிறப்புப் பாடமாக நான் கற்றபோது, இவ்விதிகளைப் பற்றிய அந்த அறிவு, மேலும் விரிவடைந்தது.

பரந்த வெளியில் கோளங்கள், ஒன்றையொன்று ஈர்க்கும் விதம், அதனுல் நிர்ணயிக்கப்பட்டுக் காலம் தவருமல் அவைகள் செல்லும் பாதை அப் பாதையின் அமைப்பு, அந்த அமைப்பின் விதிகள், இவைகளெல்லாம் என் மனத்தில் பரவசம் கலந்த வியப்புணர்ச்சியை மேலும் மேலும் உண்டு பண்ணின.

வான வெளியில் கோளங்களின் சலனத்தைப் பல விஞ்ஞானிகள் பல காலங்களில் ஆராய்ந்துள்ளனர். ஒவ்வொருவரும் தாங்கள் கண்ட சலனத்தை விளக்கும் விதி ஏதாவது இருக்கிறதா என்றுதான் ஆராய்ந்தார்கள். ஐஸக் நியூடன் என்ற விஞ்ஞான மேதை, 300 ஆண்டுகளுக்குமுன் கோளங்களின் ஈர்ப்புச் சக்தியைப்பற்றி ஒரு விதியை அறிவித்தார். அதாவது, அவருடைய ஊகத்தில், கோளங்களின் சலனம் அவர் குறிப்பிட்ட விதியைப் பின்பற்றித்தான் நடைபெறுகிறது என்று அவர் நம்பினர். அவருக்குப்பின் பல ஆண்டுகள் வானவெளி ஆராய்ச்சியாளர்கள் கண்ட சலனங்களெல்லாம்

> "போதுமடா போதுமிந்த
> போலி வாழ்க்கை
> பொய் விதைத்துப் பொய் அறுக்கும்
> கேலி வாழ்க்கை
>
> நீதியென்ற ஒளி தேடி ஓடுகின்றன்
> நெஞ்சை விட்டு வழக்கு மன்றில் தேடுகின்றன்.
> காதினிக்க, நெஞ்சினிக்கப் பேசுகின்றன்;
> கண் மறைந்தவுடன் நம்மை ஏசுகின்றன் !"
>
> —சிற்பி பாலசுப்ரமணியன்.

நியூடன் கண்டவிதியை ஒட்டித்தான் நடை பெறுகின்றன என்று நம்பும்படி இருந்தது. ஆனல், சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் விஞ்ஞான மகாமேதை ஐன்ஸ்டைன் என்பவர், பரந்த வெளியில் காணப்படும் சில அமைப்புகளுக்கும் சலனங்களுக்கும் நியூடன் விதியால் மட்டும் போதுமான விளக்கம் பெறமுடியவில்லை என்று கண்டு, ஒரு புதிய விதியை, "சார்புநிலை தத்துவம்" (Theory of Relativity) என்ற பெயரில் உலகுக்கு அறிவித்தார். இது ஒரு புரட்சிகரமான தத்துவம். பகல், இரவு, நாள், மாதம் என்றெல்லாம் நாம் நமக்காக வகுத்துக்

கொண்டுள்ள காலவரைகள் சூரியனைப் பூமி சுற்றுவதால் ஏற்படும் சூழ்நிலையிலிருந்து பிறந்தவை. ஆனால், பரந்த, முடிவில்லா தவானவெளியிலே. சூரியனே ஒரு நிலையிலில்லாமல், மிகவேகமாகத் தன் இடத்தை மாற்றிக்கொண்டேயிருப்பதால், வானவெளியில், காலத்தைத் தனிப்பட்ட முறையில் அளப்பதற்கு ஓர் நிலையான அளவுகோல் இல்லாமல் போய்விடுகிறது. இந்த நிலையில், காலத்தையும், தூரத்தையும் தனித்தனியாக

> "பச்சை இலைப்பொழி லூடவள் மேனி
> பளபளக் கும்; கடல் மேற்பரப்பில்
> உச்சியில் வானத் துயர்வினில் நீலம்
> ஒளிர்வ தவள் திரு மேனி வண்ணம்"
>
> —"ஜோதி"

அளவிட்டறிய முடியாதென்றும், அவை இரண்டும் பிரிக்க முடியாத ஒரு கூட்டமைப்பு என்றும், அண்டவெளிச் சலனங்களைப் பற்றிய விதிகளில் இவ்விரண்டுமே ஒன்று சேர இடம் பெற வேண்டுமென்றும் கருதி, 'சார்பு நிலைத் தத்துவத்தை' அறிவித்தார் ஐன்ஸ்டைன். இதைத்தொடர்ந்து இன்னும் புரட்சிகரமான பல கருத்துகள் பல விஞ்ஞானிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளன. வானவெளியில், தொலை தூரத்தில் விஞ்ஞானக் கருவிகளின் உதவிகொண்டு, ஊடுருவிச் செல்லச் செல்ல, எதிர்பாராத புதிய அமைப்புகளும், சக்திகளின் சான்றுகளும் தோன்றுகின்றன. இதுவரை விஞ்ஞானிகள் ஊகித்து வரையறுத்துள்ள விதிகளுக்கு விலக்காகவும் அவை தோற்றமளிக்கின்றன. பேரண்டத்தில் உள்ள கோளங்களின் சலனங்களுக்கும், ஓர் குறிப்பிட்ட நேரத்தில் அவைகள் இருக்கும் நிலை, அதாவது அவைகளின் "கதி"க்கும் காரணமாயிருக்கும் விதி என்ன, என்பதைத்தான் விஞ்ஞானிகள் தேடினார்கள்; தேடுகிறார்கள்; தேடிக்கொண்டேயிருப்பார்கள். எக்காலத்திற்கும், எந்த நிலைக்கும், எந்தக் கதிக்கும் சரியான விளக்கம் தரக்கூடிய விதியை அவர்கள் கண்டுபிடிப்பார்களா என்பதைப் பேரண்டவாசிகள், பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால், ஒன்று மட்டும் உறுதி. அவ்வகையான விதி ஒன்று இருக்கிறது. அதைத் தேடுவதில்தான் விஞ்ஞான அறிவு வளர்கிறது.

விஞ்ஞானத்திலிருந்து ஆன்மீகத்திற்கு வருவோம். ஆதிமனிதன், பேய்க் காற்றால், வெள்ளத்தால், தீயினால், இயற்

கையின் மற்ற பல அம்சங்களால் துன்பமடைந்தபோது, அச் சக்திகளுக்குப் பயந்து, அடங்கி, அவைகளுக்கு உருவமும் பெயரும் கொடுத்து அவைகளை வழிபடத் தொடங்கினன். மனித கற்பனையில் தேவர்கள் தோன்றினர்கள். பயத்துடன் பக்தி வளர்ந்தது.

காலப்போக்கில், மனிதனின் அறிவு வளர வளர, இயற்கையில் பல அம்சங்களை அவன் நன்கு அறியமுடிந்தது. அவைகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி மனித சமூகத்திற்கு உதவும் வகையில் அவைகளை அமைக்க முடிந்தது. இதன் விளைவாகப் பயம் குறைந்தது. தேவர்கள் மறைந்தனர். 'ஒருவனே தேவன்' என்ற மகாதேவன்மட்டுமே மிஞ்சினன்.

ஆனல், காலம் செல்லச் செல்ல, இந்த மகாதேவனின் அரசும் அமைப்பும் கூடப் பல ஐயங்களுக்கு இடங்கொடுக்கலாயிற்று. பிறவிக் குருடர்களும், ஊமைகளும், ஏழைகளும் தங்கள் அவல நிலைக்கு விளக்கம் தேடலாயினர் பல அக்கிரமங்களைக் கண்கூடாகச் செய்துவிட்டு, அமோகமாக வாழ்பவர்களைக் கண்டு, 'நல்லவர்கள்' மனம் நொந்தது. இறைவனின் சட்டம் இவர்களை ஏன் பாதிக்கவில்லை என்ற வினு எழுந்தது. இதற்குச் சமாதானம் தெரிவிக்கும் வகையில் முற்பிறவி என்ற ஒரு கொள்கை தெரிவிக்கப்பட்டது. ஆனல், வெறும் கொள்கையளவில் உள்ள விளக்கங்களை மனம் ஏற்க மறுத்தது. அதன் பயனுகப் பல சமயங்கள் எழுந்தன. சர்வ வல்லமையுள்ள, ஆனல் மனித உருவமாக, கற்பனையில் எழுந்த கடவுளின் தோற்றம் மாறி, அருள், அன்பு, கருணை, உண்மை என்ற பண்புகளின் உறைவிடம்தான் ஆண்டவன் என்ற கருத்துத் தோன்றியது. இறைவனை 'அருட்பெருஞ் சோதி' யாகக் கண்டார் வள்ளலார். உண்மையே கடவுள் என்று கொண்டார் காந்தியடிகள். 'அவன்' என்ற உருவம் போய், 'அது' என்ற தத்துவமாக மாறியது இறைவனைப் பற்றிய கற்பனை. இவ்வழியில் எழுந்த பல கொள்கைகள் மக்கள்முன் வைக்கப்பட்டன. ஆராயப்பட்டன. அந்த ஆராய்ச்சியின் பலன், "தனி மனிதனின் அறிவும் அமைதியும் அவன் மனத்தைத்தான் சார்ந்தவை," என்பதுதான். மனித மனம் பல சூழ்நிலைகளில் பலவாறு இயங்குகின்றது. மனத்தின் இயக்கம் எண்ணங்களாக மாறி, எண்ணங்கள் செயல்களாக உருப்பெறுகின்றன. ஒருவனுக்குத் தீச் செயலாகக் காணப்படும் ஒன்று, மற்ருெருவனுக்கு நற்செயலாகத் தென்படுகிறது.

ஒருவனுக்கு மன நிறைவைத்தரும் ஒரு நிகழ்ச்சி, மற்றொருவனுக்குப் பொருமையை உண்டுபண்ணுகிறது. மனத்தின் வெளித்தோற்றத்தை ஒதுக்கி, அதன் உணமையான உள்நிலை என்ன என்பதைத் தெரிந்துகொண்டால், மனத்தெளிவும் அமைதியும் பெறலாம் என்ற உண்மை பின்பு புலனுகிறது. நம்மைச் சுற்றி நடைபெறும் விஷயங்கள் அனைத்தும். பல மனிதர்களின் மனத்தில் தோன்றிய எண்ணங்களின் வழியே வந்த செயல்களால் உண்டானவை. பலதரப்பட்ட மனங்கள், பலதரப்பட்ட வகையில் ஏன் இயங்குகின்றன, அவற்றின் இயக்கங்கள் ஏதாவதொரு விதிக்குக் கட்டுப்பட்டிருக்கின்றனவா என்பது கேள்வி. பல கோணங்களிலிருந்து இதை ஆராயும்போது இதற்கும் விதி ஒன்றிருக்கவேண்டும் என்றுதான் தோன்றுகிறது.

'விதியை மதியால் வெல்லலாம்' என்பது ஒரு பழங்கூற்று. இதற்குச் சாதாரணமாகப் பொருள் கொள்பவர் சிலர், மதியின் வலிமையால் விதியின் போக்கையும் மாற்ற முடியும் என்று கூறுவர். ஆனல் ஆழ்ந்து நோக்கின், பலரால் அறியமாட்டாத விதியை, அதன் உண்மையை, நம் மதியின் வளர்ச்சியைக் கொண்டு அறியலாம் என்பதுதான் அதன் பொருள் என்று புலப்படும். விதியின் போக்கை நாம் நன்கு தெரிந்துகொண்டால், அதை வென்றவர்களாகிவிடுகிருேம். நம் அறிவின் வளர்ச்சியைக்கொண்டு இவ்விதியை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சமயத்துறையில் விஞ்ஞானிகளான பல சமயாசாரியர்கள் இந்த விதியைத்தான் தேடினர்கள், தேடுகிருர்கள்; தேடிக்கொண்டேயிருப்பார்கள். அதைத் தேடுவதில்தான் ஆன்மீக உணர்ச்சி வளர்கிறது.

அண்ட சராசரங்களின் கதியை நிர்ணயிக்கும் விதியைத் தேடிச்செல்லும் விஞ்ஞானிகளும், கோடானுகோடி மனித மனங்களை இயக்கும் விதியை நாடிச்செல்லும் சமயப் பெரியோர்களும் இருவேறு திசைகளிலிருந்து ஒரே மலையின் உச்சியைத்தான் அடைய முயற்சிக்கிருர்கள். மனத்திரையில் இக் காட்சியைப் பார்க்கும்போது, அருணகிரிநாதர் அருளிய கந்தர் அனுபூதியின் கடைசிப் பாட்டு நினைவுக்கு வருகிறது.

உருவாய், அருவாய், உளதாய், இலதாய்,
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்,
கருவாய், உயிராய், கதியாய், விதியாய்,
குருவாய், வருவாய், அருள்வாய் குகனே!

என்று பாடிமுடிக்கிருர் அவர். தம்மைச் சுற்றியுள்ளவற்றின் கதியும், அதை நிர்ணயிக்கும் விதியும், இரண்டும் சேர்ந்தே இறைவனுக அவர் உள்ளத்தில் நிரம்பியிருக்கிருன். இந்த நிலையை நன்குணர வேண்டுமெனத் தமக்கு அறிவு புகட்ட, குகன் தமக்குக் குருவாக வரவேண்டுமென்று அவர் இறைஞ்சுகிருர். மற்ற இடங்களில் இறைவனைத் தாயாகவும், தகப்பனுகவும் வர்ணித்து, அன்பையும், அருளையும் வேண்டி நின்ற அருணகிரிநாதர், இக் கடைசிப்பாட்டில், இறைவனைக் கதியும், விதியுமாக்கி, தமக்குக் குருவாக வந்து அறிவைத் தர வேண்டுகிருர். இது அவர் பாடல்களில் மிகவும் சிறப்பான ஓர் இடம். இது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. மனித சமுதாயம் தற்போது செல்கின்ற பாதையில், விஞ்ஞான அறிவும், ஆன்மீக உணர்ச்சியும் ஒருங்கே வளர்ந்தால்தான் தெளிவும், அமைதியும் காணமுடியும். அதற்கான ஓர் சூழ்நிலையை உருவாக்குவதில் நம் அனைவருக்கும் பங்கு உண்டு. அதை நிறைவேற்றுவது நம் கடமை.



With Compliments

of

M/s THE NANCO RUBBER &
PLASTICS LTD.,

A. T. T. COLONY,
COIMBATORE-18.

Manufacturers of :—

NDUSTRIAL PLASTICS, RUBBER HOSES etc.,
& TENNIS BALLS.

Only
'ASPRO'
is microfined
to draw out
pain FASTER
A NICHOLAS PRODUCT

[redacted]

சிலப்பதிகாரத்தில் ஊழ்

[சு. கணேச பாண்டியன்]

பதிகம்: சிலப்பதிகாரம் தோன்றியதன் நோக்கமாக அதன் பதிகம் குறிப்பிடுவது,

> ''அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
> உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
> ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்''

ஆகும். பொதுவாக எல்லாக் காப்பியங்களிலுமே ஊழ்வினை இடம்பெறுவது உண்டெனினும், சிலப்பதிகாரத்தில் அதன் செயலை உயர்த்திக் காட்டுவதன் காரணங்களை இங்கு ஆராய்வோம்.

ஊழ்: 'ஊழிற் பெருவலி யாவுள?' என்றார் வள்ளுவர். மேலும்,

> 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'

என்னும் குறள் ஊழின் வல்லமைக்குக் கட்டியங் கூறுகின்றது. இல்லறவியலில் வகுக்கப்பட்ட ஒழுக்கங்களையும் துறவறவியலில் தொகுக்கப்பட்ட வரைமுறைகளையும் உரிய காலத்து முறையே கடைப்பிடித்துவந்தும் ஒருவர்க்குத் தாம் விரும்பும் வாழ்வு கிட்டாது போகலாம் அல்லது அவர் தமக்குரிய நீதியென்று நினைத்திருந்த ஒரு முடிவு அமையாது போகலாம். அதனை அவர் துயர் முறுக்கி மனத்தில் கொள்வாரானால் மன நோய்க்கோ, இரத்தக் கொதிப்புக்கோ அவர் ஆளாக நேரிடும். அதனைத் தடுத்து அவருக்கு ஆறுதல் கூறவே வள்ளுவர் அறத்துப்பாலில் கடைசி அதிகாரமாக ஊழை நிறுத்தியுள்ளார்.

ஊழின் சிறப்பு: மேலும், தமக்கு நேர்மையாகக் கிட்ட வேண்டியது என்று எதிர்பார்த்தது கிட்டாத நிலையில் எவரும் குறை சொல்லத் தொடங்குவது கடவுளையே. தம்மைச் சுற்றியுள்ளவர்களின் தன்னலப் போக்கையும் உலகியலையும் ஒருவாறு புரிந்து கொண்ட பின் நியாயத்தையும் நீதியையும் (நேர்மையே உருவான) ஆண்டவனிடம் எதிர்பார்த்து அவனிடமும் அது கிடைக்கவில்லையென்றால் மனமுறிவே ஏற்பட்டுவிடலாம். அதற்கொரு முறிவே ஊழ்வினை அல்லது விதிப்பயன் என்னும் கொள்கை. நாம் செய்த செயல் சரியானதே என்ற நம்பிக்கையும் நாம் செய்த வழிபாடுகள் முழுமையானவையே என்ற அமைதியும் கொண்டிருந்தாலும் விளைவுகள் நமக்கு நிறைவளிக்கவில்லையாயின் அதற்கான காரணம் ஊழ் என்றமைவோம்; அதனால் மன அமைதி உண்டாம். இந்த ஒரு சிறப்பைத் தவிர வேறு எதுவும் ஊழ்வினைக்கு நாம் தரவேண்டாம். ஏனென்றால், எல்லாவற்றிற்கும் ஊழே காரணம் என்றிருந்துவிட்டால் உழைப்பின் உயர்வை மறந்து நாம் சோம்பல் வசப்பட்டுவிடுவோம்.

> "இறைவன் வகுத்தபடியே இவ்வுலகிலே எல்லாக் காரியங்களும் நடக்கின்றன வென்றும், அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் உறுதியாக நம்பினர். ஆதலின் கடவுளைப் பிரார்த்திப்பதிலேகூட 'எனக்கு இம்மாதிரி கருணை செய், இந்த பாக்கியத்தைக் கொடு' என்று கேட்பது அறியாமை என்று என் தந்தை மந்திர மூர்த்தி சொல்வார்."
>
> "அமரதாரா"
>
> —கல்கி

சிலப்பதிகாரத்தில் ஊழ்: சிலப்பதிகாரத்தில் ஊழ் வலியுறுத்தப்படும் இடங்கள் மூன்று. ஒன்று, மாதவியை விட்டுக் கோவலன் பிரிந்து சென்றது ஊழ்வினையின் விளைவு என்கிறார் இளங்கோ. இரண்டாவது, கண்ணகியுடன் கோவலன் மதுரைக்குப் புறப்பட்டது. மூன்றாவது, தீவினை முதிர்வலைச் சென்றுபட்டிருந்த கோவலன், பாண்டிய மன்னன் ஆராயாமல் செய்த முடிவின் விளைவாகக் கொலையுண்டது. சிலப்பதிகாரக் கதையின் இந்தக் கட்டங்களிலெல்லாம் ஊழ்வினையின் உதவி

இன்றியமையாதது என்று சொல்ல முடியாது; ஊழ்வினையின் உதவியின்றியே சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிகள் காரண காரியத் தொடர்பு சிதையாமல் நடப்பனவாகக் காட்டியிருக்கக் கூடும். அவ்வாறிருந்தும் கதையில் ஊழ் வலியப் புகுத்தப் பட்டிருக்கிறது; அதற்காகக் கதை ஒன்றும் கற்பிக்கப்பட்டிருக் கின்றது.

கதை: முன்னொரு காலத்தில் கலிங்க நாட்டிலுள்ள சிங்கபுரத்திலும் கபிலபுரத்திலுமிருந்த தாயவேந்தராகிய வசுவும், குமரனும் தம்முள் பகை கொண்டு ஒருவரையொருவர் வெல்லுதற்கு முயன்றுகொண்டிருந்தனர்; அதனால் இருவர் ஊர்களுக்கும் இடைப்பட்ட ஆறு காத எல்லையில் யாரும் இயங்காதிருக்க, சங்கமன் என்னும் வணிகன் பொருளீட்டும் வேட்கையால் தன் மனைவியோடு ஒளிந்து சென்று சிங்க புரத்தின் கடைவீதியில் அரிய கலன்களை விற்றுக் கொண்டிருந் தான்; அப்பொழுது அரசனிடத்துத் தொழில் செய்து கொண்டிருந்த பரதன் என்பவன் அவ்வணிகனைப் பகைவ னுடைய ஒற்றனெனப் பற்றிச் சென்று அரசனுக்குக் காட்டிக் கொன்றுவிட்டான்; கொல்லப்பட்ட சங்கமனின் மனைவி, நீலி, இட்ட சாபம்—''எமக்குத் துன்பஞ் செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தை யடைவாராக'' என்பது. அப்பரதன் இப்பிறப் பில் கோவலனாகப் பிறந்தான். ஆகவே, துன்பமடைந்தான் என்று கதையில் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

ஊழின் எல்லை: ஊழ்வினை காரணமாகத்தான் இப்பிறவி யில் ஒவ்வொரு காரியமும் நடைபெறவேண்டுமென்பது நியதியானால், கோவலன் நீங்கலாக மற்றப் பாத்திரங்கள் உற்ற துன்பங்களுக்கும் காரணம் கற்பித்தாக வேண்டும். இப்பிறவியில் கண்ணகி, மாதவி பட்ட துன்பம், பாண்டியன்— பாண்டிமாதேவி உயிர் துறந்தது எல்லாவற்றிற்கும் முற் பிறப்பில் காரணம் கற்பிக்கவும், அதன் தொடர்ச்சியாக முற் பிறப்பு நிகழ்ச்சிகளுக்கும், அதற்கும் முந்திய பிறப்புகளுக்கும் காரணம் காட்டவுமாகக் கதைகள் நீண்டு கொண்டே போகும். ஆகவே, தலையாய பாத்திரத்திற்கு நேருவனவற்றிற்கு மட்டும் காரணம் காட்டப்படுகிறது எனக் கொள்ளவேண்டும். அது போதுமானது. மேலும், மற்றவர்கள் கொண்ட துன்பம் கோவலன் பட்ட துயரங்களுக்குமுன் ஒரு பொருட்டல்ல; இணையல்ல.

காரணங்கள் :

காப்பியநயம்—இவ்வாருக, ஊழ்வினை கலக்கப்பட்டிருப்பது காப்பியத்திற்கு நயம் பயக்கின்றது. மேலும், சிலப்பதிகாரம் ஒரு துன்பியலாதலின் அவலச் சுவையை மிகுத்துக் காட்ட உண்மைக் காரணங்களைவிடக் கற்பனைக் காரணங்கள் நன்ருகப் பயன்படும். ஏனெனில், தெரியாத பழியொன்றைச் சுமத்திப் பாத்திரங்களைத் தண்டிப்பது எளிதன்ருே?

பத்தினிக்கு ஏற்றம்—ஆசிரியர், நூற்காரணமாகப் பதிகத்தில் குறிப்பிட்ட மற்றக் காரணங்கள் துலங்கவும் ஊழ்வினை பயன்படுகிறது. பத்தினித் தெய்வத்தின் உயர்வை விளங்க வைக்க இளங்கோ அவள் கணவனின் வாயைக் கட்டிவைத்து விட்டார். கோவலனது இறுதிக் காலத்தில் அவன் "தீவினை முதிர்வலைச் சென்று பட்டிருந்தான்" என்று கூறி விதியைப் பயன்படுத்திக் கொண்டுவிட்டார். இல்லாவிடில், அவன் காவலர் முன்னும் அரசனிடமும் பேசியிருக்கக்கூடும். பொன்னணியின் திறந்தெரிந்த அவன் தக்க ஏதுக்களை எடுத்துக் காட்டி, உண்மையை நிறுவி, தன்மீது சுமத்தப்பட்ட பழியைத் துடைத்துக் கொண்டிருப்பான். அவ்வாருயின், கண்ணகிக்கு ஆங்கென்ன வேலை? வழக்குரைத்து வென்று தன் கற்பின் திறத்தை அவள் எங்ஙனம் நிறுவுவாள்? கண்ணகியை உயர்த்திக் காட்டி நூற்காரணத்தை நிலைநாட்டத்தான் ஆசிரியர் கோவலனைப் பேசவிடவில்லை.

போராட்டம் - ஒரு போராட்டத்தைச் சித்திரிப்பது காப்பியம். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கும் ஊழுக்குமிடையே ஒரு போராட்டமே நிகழ்வதாக அழகாகக் குறிப்பிட்டுள்ளார் திருமிகு மார்க்கபந்து சர்மா அவர்கள், தமது 'சிலப்பதிகார ரசனை' என்னும் நூலில். ஊழானது முதன்முதலில் கோவலனைக் கண்ணகியிடமிருந்து பிரித்துச் சோதித்துப் பார்த்தது. கண்ணகியோ பொறுமையுடன் துயரத்தைத் தாங்கிக் கொண்டது மட்டுமன்றிக் கணவன் தன்னுடன் இல்லாதபோது மேம்பட்டும் காணப்பட்டாள். எனவே, அஃது அவனை மீண்டும் அவளிடமே சேர்த்து அவளை நிலைகுலைய வைத்தது. கோவலனைக் கொன்று, கொலைக்குக் காரணம் ஊழ் என்பதும் அவளுக்குத் தெரியாதவாறு கோவலனது பிணம் கொலையைப் பற்றி அவளுக்கு ஒன்றும் சொல்லாமல் விழவைத்ததும் ஊழ். பின்னர், மன்னனை வென்றது, மதுரையை எரியுண்ணச் செய்தது எல்லாம் தன் செயல் என்று கண்ணகி விம்மிதம்

கொண்டபோது மதுரைமா தெய்வம் தோன்றிப் பழங்கதையை அவளுக்கு உணர்த்தியது. ஊழின் வலிமையைக் கண்ணகி வெற்றிகொள்ளாவிட்டாலும், காப்பியத்தில் நடக்கும் அவர்கள் போராட்டம் சுவையாக உள்ளது.

சமணக் கொள்கை — ஊழ்வினையை இளங்கோவடிகள் மிக உயர்வாக வலியுறுத்தியதன் மற்றொரு காரணம் அவர் மேற்கொண்டிருந்த சமண சமயத்தின் கொள்கையுமாகும். சமணம் ஊழ்வினையை அளவிறந்து நம்பும். புதிதாக மதம் மாறினவர்களுக்கு இயல்பாக இருக்கக்கூடிய ஆர்வத்துடன், சமணத்தின் புகழ்பாடும் இளங்கோ, தமது திப்பிய காப்பியத்தில் சுவைமிக்க ஒரு பகுதியாக ஊழைப் புகட்டியிருக்கிறார் என்றால் அது மிகையாகாது.




DETERGENTS FOR
TOMORROW'S PEOPLE TODAY
FROM
HINDUSTAN LEVER
THE MAKERS OF
RIN AND SURF
LINTAS-HLL/PR.15-537

[redacted]

பழக்கம் மடிவதில்லை

[கஜமுகன்]

"சாந்தா"

"இதோ வந்தேன்..."

அவசர அவசரமாக எண்ணிக்கொண்டிருந்த ரூபாய் நோட்டுக்களை பர்சில் திணித்துப் பெட்டிக்கடியில் போட்டுவிட்டு, முகத்தைப் போகிறபோக்கில் நிலைக்கண்ணாடியில் ஒரு தடவை சரிபார்த்துக்கொண்டு வாசல் கதவைத் திறக்க ஓடினாள் திருமதி சாந்தா சத்யம்.

சத்யம் இரண்டு கைகளிலும் சுமக்கமுடியாத பாரத்துடன் பைகளையும் கைஇடுக்கில் ஒரு பாக்கெட்டையும் வைத்துக் கொண்டு நர்த்தனமாடிக் கொண்டிருந்தான்.

"அடேடே, சாமன்களைக் கீழே வைத்து விட்டு நிற்கக் கூடாதா?" என்று சாந்தா பரிவுடன் கேட்டுக்கொண்டே அவன் கை இடுக்கில் இருந்த பொட்டலத்தை வாங்கிக்கொண்டாள்.

"ராக்கெட்குறிதான் போ! பொணம் கனம் கனக்கிற பை ஒன்றை வாங்காமல் தனக்கு வேண்டியதை மட்டும் டபார்னு எப்படித்தான் பறித்துக் கொள்ளத் தோன்றியதோ!"

உள்ளே போய்ப் பைகள் இரண்டையும் கீழே வைத்து விட்டு, விரல்களையும் கைகளையும் உதறி வலியைப் போக்கிக் கொண்டான்.

"கதவு திறப்பதற்கு இத்தனை நாழிகை ஏன் சாந்தா?"

"என்னுடைய ஸேவிங்ஸில்" எத்தனை சேர்ந்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருந்தேன்; அதை எடுத்துப் பெட்டிக் குள் போட்டுவிட்டு ஓடி வந்தேன்..."

"வெளியில் வைத்தால் என்னவாம்?"

"உங்களுடன் யாராவது வந்திருந்தால் என்ன செய்வது...?"

"அதுவும் சரிதான். எவனாவது கைமாற்றுப் பேர்வழி வந்தால் என்ன செய்வது என்று நீ பயப்படுவது நியாயம்தான்! சாந்தா நீ கொடுத்த பணம் போதவே இல்லை. கடையில் கணக்கு வைத்துவிட்டு வரும்படி ஆகிவிட்டது!"

சாந்தாவின் முகம் ஜிவுஜிவு என்று சிவந்துவிட்டது.

"அதெப்படிப் போதாமல் போகும்? நான் எல்லாம் விலைப் பட்டியல் பார்த்துத்தானே கொடுத்தேன்..."

"அது போனமாதப் பட்டியல். இந்த மாதம் எல்லாம் விலை கூடிவிட்டது சாந்தா."

"என்ன உளறுகிறீர்கள்! நேற்றுத்தானே நான் கடைக்குப்போய் விலைகளையெல்லாம் விசாரித்து வந்து பட்டியல் போட்டுக் கொடுத்தேன்."

"நீ எந்தக் கடைக்குப் போனாயோ? நான் பஸ் ஸ்டாண்ட் பக்கத்துப் பெரிய கடையில்தான் எல்லாம் வாங்கினேன். உனக்குச் சந்தேகம் இருந்தால் போய் விசாரித்துக்கொள்...."

"ஆமாம், அதற்கு வேறு தண்டம் அழவேண்டுமாக்கும். உம்...நீங்கள் சம்பாதிக்கிறீர்கள். ...செலவு செய்கிறீர்கள். உங்களைக் கணக்குக் கேட்க நான் யார்...?"

"நீ என் மனைவி. குடும்பப் பொறுப்புள்ள தலைவி. இந்த வீட்டுப் பொருளாளர். உன்னிடம் கணக்குக் கொடுக்காமல் யாரிடம் கொடுப்பது... நீ இவ்வளவு கண்டிப்பும் கருருமாக இல்லாவிட்டால் நான் என்றைக்கோ கவிழ்ந்துபோயிருப்பேன் சாந்தா! நீ மட்டும் கணக்குப் பண்ணிக் கணக்குப் பண்ணி என்னிடம் செலவுக்குக் கொடுக்கவில்லையானால் சம்பளத்தை அப்படியே வேட்டு விட்டுவிட்டு வந்துநிற்பேன். என்னைப் போன்ற ஊதாரிக்கு இப்படி ஒரு நிதி அமைச்சர் வரவில்லையானால் என்கதி என்னவாயிருந்திருக்கும்!"

"இதோ பாருங்கள் இந்தத் துதியைக் கேட்டுக்கேட்டு என் காது புளித்து விட்டது. உங்கள் பேச்சில் மயங்கி உண்மை என்று நம்பியது ஒரு காலம் உண்டு. ஆனால் இப்போது உங்கள் முழு வண்டவாளமும் எனக்குத் தெரிந்துவிட்டது..."

"நீ என்ன சொல்கிருய் சாந்தா! உன் குரலின் சுருதியே சரியில்லையே..."

"என்னத்தைச் சொல்கிறது! ம்...சரி,வாருங்கள் டிபன் சாப்பிட்டுவிட்டு மற்றதைக் கவனிக்கலாம்.

"எனக்கு டிபன் வேண்டாம் சாந்தா."

"ஏன், என்மேல் கோபம் வந்துவிட்டதா?"

"இது என்ன புதிதா கோபித்துக் கொள்வதற்கு?"

"அதைத்தான் நானும் சொன்னேன். உங்கள் துதி புதிதல்ல, எப்போதும் சொல்வதுதான் என்று. சரி, இன்று ஏன் டிபன் வேண்டாம்...."

"அதுவா .. என்னுடைய பால்யத் தோழன் ராமுவைத் தெரியுமில்லையா உனக்கு?"

"உங்க சின்னம்மா வகையிலே உறவுன்னு சொல்லி அவரும் நீங்களும் இணைபிரியா வாழ்க்கை நடத்திக் குப்பை கொட்டினதை ஓயாமல் சொல்லிப் போரடிப்பேளே அவர் தானே?"

"அவனேதான்! அவனுக்கு இந்த ஊருக்கு மாற்றல் ஆயிடுத்து. எனக்கு எழுதவே இல்லை. திடீர்னு ஆபீஸ் வாசல்லே வந்து நின்ருன். வாடா ஓட்டலுக்குப்போகலாம் என்று இழுத்துக்கொண்டு போய்விட்டான்".

"ஏன், அவர் பெண்டாட்டி என்னவாளுள்?"

"எல்லாம் இருக்கா. இருந்தாலும் அவனுக்கு ஓட்டலிலே போய்த் தோசை சாப்பிடற மாதிரி இருக்காது. வீட்டிலே என்னதான் சுசிருசியாய் சமைத்துப் போட்டாலும் மலைக் கோட்டை கிருஷ்ண பவனுக்குப் போய் ஒரு தோசை அந்த வெங்காய கொத்சுவுடன் சாப்பிடாவிட்டால் அவனுக்குச் சாப் பிட்ட மாதிரியே இருக்காது. தோசை ராமுன்னுதான் நண்பர்களெல்லாம் அழைப்பார்கள். அதனுலே அவன்கூடப் போகாமல் என்னுல் தப்பிக்கமுடியல்லை."

"இத்தனை வயசுக்கப்புறமும் அந்தப் பழக்கம் அவரை விடல்லையா?"

"அதெப்படி சாந்தா...மனுஷன் பழக்கத்துக்கு அடிமை தானே?"

"ஆமாம்...ஆமாம்! நீங்களும் அப்படித்தானே..."

"நீ என்ன சொல்றே சாந்தா!"

"பழக்கம் உங்களையும் விடலிலங்கறேன். நண்பர் கூப்பிட்டவுடன் போகத் தோன்றிவிட்டதல்லவா?"

"ஓ! அதெச் சொல்றியா? சாந்தா, ராமு இருக்கானே ராமு, அவனைப்போல தங்கமான பிள்ளையைப் பார்க்க முடியாது. எனக்கு இன்னிக்கு அவனைப் பார்த்ததிலேயிருந்து ஒரே சந்தோஷம் சாந்தா! வீட்டுக்கு வாயேன் என்று ஆன மட்டும் கூப்பிட்டேன்.

"எல்லாம் வரேண்டா. முதல்லே ஓட்டலிலே போய் ஒரு தோசை. அப்புறம்தான் எல்லாம் என்று சொல்லிவிட்டான்."

"எத்தனை பில்?" "ஒரு நாலு ரூபாய்..."

"அதான் கணக்குச் சொல்லும்படி ஆயிடுத்தாக்கும்...."

"பேசப்படாது. பில் யார் கொடுத்தான்னு நினைச்சே! ராமுதான்..."

"ஓஹோ! உங்களைத் தேடிவந்த நண்பர்கிட்டேயே வாங்கிச் சாப்பிட்டுவிட்டு இவ்வளவு வக்கணையாய்ப் பேசறேனே உங்களுக்கு வெட்கமாய் இல்லையா?"

"அட பைத்தியமே! ராமு யார்னு நீ நினைக்கிறே! எங்களுக்குள்ளே அந்தக் காலத்திலேயிருந்தே ஒரு அக்ரி மென்ட் உண்டு. ஓட்டல் செலவு அவனைச் சேர்ந்தது. சினிமாச் செலவு என்னுடையது..."

"அப்போ மாட்னிக்குப் போயிட்டுத்தான் வரேளா?"

நோ...நோ.... சாந்தா இல்லாம எந்த ஷோவும் கிடையாதுன்னு ராமுகிட்டே சொல்லியாச்சு. சரி ஒன்பதரை மணிக்குப் போகலாம் என்றான். சரி என்று சொல்லியிருக்கேன். அவன் மிஸஸும் வருவாள்."

"அப்ப நாலு ரூபாய்க்கு வட்டி எட்டு ரூபாய் சேர்த்துக் கொடுக்கணும்ங்கறது உங்க திட்டம். அதுனாலே சாமான்

வாங்கற இடத்திலே க ண க் கு ச் சொல்லும்படியாய் ஆயிட்டது."

"அட ராகவா! இன்னும் டிக்கட் வாங்கவில்லை சாந்தா. உன் சாங்ஷன் இல்லாமல் சினிமாக் கொட்டகைப் பக்கம் போகமுடியுமா?"

"அப்ப உண்மையிலேயே சாமான்களெல்லாம் விலை ஏறிவிட்டதுன்னுதான் சொல்றேளா?"

"நீ என்ன சாந்தா இப்படிக் குடைந்து குடைந்து கேட்கிறே! உனக்குச் சந்தேகம் இருந்துதுன்னு ஒரு நடை போய்ட்டு வந்துடு...அது சரி, ராக்கெட்டாய்ப் பாய்ந்து பறித்தாயே அந்தப் பொட்டலத்தைப் பார்க்கவில்லையே!"

சாந்தாவுக்கு அப்போதுதான் அந்தப் பொட்டலம் நினைவுக்கு வந்தது. ஆவலுடன் பிரித்துப் பார்த்தாள். கண்ணைப் பறிக்கும் அழகுடன் 'காவி சில்க்' புடைவை ஒன்று அதில் அடங்கியிருக்கக் கண்டாள். சாந்தாவின் முகம் சற்று முன் இருந்த சுருக்கமெல்லாம் நீங்கி ஒளிர்ந்தது. "நான்... வாயில் புடைவைதானே கேட்டேன்...இதற்குப் பணம்...."

"ராமுவிடம் கைமாற்று வாங்கினேன். நீ கொடுத்த நாற்பது ரூபாயுடன் அவனிடமிருந்து..."

"எவ்வளவு? முப்பது ரூபாய் வாங்கினீர்களா?"

"நாற்பது ரூபாய்...",

"இது எழுபது ரூபாய்தானே..."

"அது வேறு ரகம். இதனுடைய நைஸ் அதில் இல்லை. ராமுதான் சொன்னான், இதையே வாங்குடா? பத்து ரூபாயில் என்ன வந்துடுத்து என்றான். நான் தயங்கினேன். 'உனக்கு வேண்டாமென்றால் நான் எடுத்துக்கொண்டுவிடுகிறேன்' என்றான். அந்த தைரியத்தில் வாங்கி வந்துவிட்டேன். உனக்கு வேண்டாமென்றால் சொல்...."

"இருந்துவிட்டுப் போகட்டும். இப்பதான் என் பணத்தை எண்ணிவைத்தேன். நாற்பது ரூபாய் தீர்ந்ததா?"

"போனால் போகட்டும் சாந்தா. இம்மாதிரிப் புடைவையில் உன்னைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு வெகு நாளாக ஆசை."

"ஐயே! ரொம்பதான் வழியறது?"

"சரி, சாந்தா! ராமுவும் அவன் மனைவி கௌரியும் எட்டு மணிக்கு வந்து விடுவார்கள். நாம் தயாராய் இருக்க வேண்டும்..."

"நீங்க இரண்டு பேரும் போயிட்டு வாங்களேன். நான் கௌரியுடன் வீட்டில் பேசிக்கொண்டிருக்கிறேன்."

"என்ன சாந்தா இது... இந்த புடைவையைக் கட்டிக்கிற 'சான்ஸ்' உடனடியாக வந்திருக்கு! வேண்டாங்கறயே!"

"பரவாயில்லே. நாளைக்குக் கட்டிண்டா போச்சு. நீங்கள் நண்பர்கள் இருவரும் ஜாலியாய்ப் போய்ட்டு வாங்கோ!"

"அப்ப என் வாக்குறுதி?"

"அதென்ன?"

"நீ இல்லாம நான் சினிமாவுக்குப் போறதில்லேங்கற...."

"அதை இன்னிக்கு தளர்த்திக்கலாம்."

சாந்தாவின் எண்ணம் சத்யத்துக்குப் புரிந்தது. நாலுபேர் போனால் பன்னிரண்டு ரூபாயாகிவிடும். அந்தப் பன்னிரண்டு ரூபாயும் அவள் சேமிப்பிலிருந்துதான் வரவேண்டும். ஏற்கனவே நாற்பது ரூபாய் எடுக்கும்படி வைத்துவிட்டான். ராமுவும் அவனும் மட்டும் போனால் ஆறு ரூபாயோடு போகும்...

-2-

ராமுவும் கௌரியும் எட்டு மணிக்கு வந்துவிட்டார்கள். இருவரும் கலகலப்பாய்ப் பேசினார்கள். சாந்தா அவர்களை இப்போதுதான் முதலில் பார்க்கிறாள். தன் கணவனுடன் அவனது இளமைப் பருவத்துச் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்ட தோழனுடன் பேசுவது முதலில் சங்கோஜமாக இருந்தாலும் சற்று நேரத்துக்கெல்லாம் சகஜமாகிவிட்டது. ராமு அவளை மிஸஸ் சத்தியம் என்று அழைத்து, சத்தியத்தின் பால்ய கால அசட்டுத்தனங்களையெல்லாம் சொல்லிச் சிரிக்க வைத்தான். இருவரும் சொந்தக்காரர் வீட்டிலிருந்து கொண்டு

காலணுவுக்கும் அரையணுவுக்கும் எவ்வளவு திண்டாட்டம் திண்டாடுவார்கள் என்பதைக் கதைகதையாய்ச் சொல்லிச் சிரித்தான். சாந்தாவுக்கு அதையெல்லாம் கேட்கக் கேட்க சிரிப்பு வந்தாலும் மனதுக்குள்ளே ஏதோ ஒரு வேதனை குமுறத் தொடங்கிவிட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள்.

"நீங்கள் செலக்ட் பண்ணின சாரி ரொம்ப ஜோர். நான் நாற்பது ரூபாய்க்குப் போதும் என்று சொன்னேன்..."

"ஓ! அந்த காலி சில்க்கைச் சொல்கிறீர்களா? நான்தான் வாங்கேண்டா என்று வற்புறுத்தினேன். அந்தக் காலத்தில் சினிமாபாட்டுப் புத்தகம் வாங்கினாலும் வாங்குவான் தோசைக்குக் காசு இல்லைன்னு சொல்லிவிடுவான். அதேபோல இப்பவும் நல்ல புடைவையாய் வாங்கு என்றால் வேறு ஏதோ செலவுன்னான். சரி சரி வீட்டில் வந்து கொடு...வாங்கு புடைவையை என்றேன். எழுபது ரூபாய்க்கு சீப்தானே!"

"டேய் ராமு! என்னடா பேத்தறே! எண்பது ரூபாய்ன்னு சொன்னான்..." என்று ஒரு சமிஞ்ஞையுடன் சத்தியம் அழுந்தச் சொல்லவே, ராமு சிரித்துக் கொண்டே, "ஆமாம்! மறந்தே போயிடுத்துடா. மிஸஸ் சத்தியம் வேறொரு புடைவை எழுபது ரூபாய். இது எண்பது ரூபாய் என்றான்."

கௌரி சிரித்துக் கொண்டே,

"சாந்தா, இவருக்கு கலர் குருடு. எதையாவது பார்த்துட்டு எதையாவது சொல்வார். எண்பது ரூபாய் புடைவையைப் பார்த்துட்டு எழுபது ரூபாய் புடைவையை எடுத்துண்டு வந்திருப்பார்."

"கௌரி, என் நண்பனுக்கு எதிரே நீ எனக்குக் குடுக்கற ஸர்டிபிகேட் பிரமாதம் போ! சத்தியம் கிளம்பலாமா?"

"ஒரு யோசனை," என்றாள் சாந்தா.

"என்னவோ!"

"நீங்க தோழர்கள் ரெண்டுபேரும் சினிமாவுக்குப் போயிட்டு வாங்கோ! நாங்க இரண்டுபேரும் கொஞ்சம் சாவகாசமாய்ப் பேசிண்டிருக்கோம். கௌரி! உங்களுக்கு ஆட்சேபனையில்லையே!"

“நான்கூட அதைத்தான் இவரிடம் சொல்லிக்கொண்டு வந்தேன். எனக்கு ரொம்ப சந்தோஷம்.”

“நீங்க ரெண்டுபேரும் அபூர்வப் பிறவிகள் தாம். என்று” கூறிவிட்டு ராமு, சத்யத்துடன் வெளியே கிளம்பினான்.

நண்பர்கள் இருவரும் வெளியே வந்ததும் “ராமு....” என்று சத்தியம் இழுத்தான்.

“என்னடா மட்டி” என்று தனது பழைய அன்புச் சொல்லை ராமு பிரயோகித்தான்.

“சினிமாவுக்குப் போகத்தான் வேண்டுமா ?”

“யார் சொன்னார்கள்....”

“நீ தோசை வாங்கிக் கொடுத்தாயே !”

ராமு ஹஹஹா என்று சிரித்தான்.

“என்னடா சிரிக்கிறாய் ?”

“ஏண்டா, இன்னுமா அந்த அக்ரிமென்ட்டை விடாப் பிடியாய் வச்சுண்டிருக்கே. உன் வழக்கம் எதுவுமே உன்னை விட்டுப் போகலையாடா ?”

“எப்படிடா போகும்...நல்லவேளை உனக்குப் பழைய சமிஞ்ஞை ஞாபகமிருந்ததோ புடைவை விவகாரத்தில் தப்பித்தேன்...”

“ஏண்டா சத்தியம் நாம அந்தக் காலத்திலே ஒவ்வொரு சாமான் வாங்கறபோதும் காலணா அரையணான்னு கமிஷன் அடிச்சு சினிமாவுக்குப் போறதும் தோசை வாங்கித் திங்கறதும் இன்னும் உன் மனசை விட்டுப் போகாததுடன், உன் பெண்டாட்டியிடமே கமிஷன் அடிக்கிறியே! எழுபது ரூபாய் புடைவையை எண்பது ரூபாய் புடைவைன்னு பொய் அடிச்சிருக்கியே! ஏண்டா நீ சம்பாதிக்கிற பணம்தானேடா அது ?”

“ராமு, வா நாம சினிமாவுக்குப் போகவேண்டாம், பார்க்கிலே உட்கார்ந்து பேசுவோம்.”

“நானும் அதைத்தான் சொல்லவந்தேன்.”

"என் மனைவி சாந்தா இருக்காளே ஒரு சிக்கனப்பிரியை. ஒரு பைசா அநாவசியமாய்ச் செலவழிக்கக்கூடாது. என்னைத் தான் உனக்குத் தெரியும். அதனாலே வரவுசெலவு பொறுப்பு பூராவும் அவள் கையில்தான். எல்லாவற்றுக்கும் கணக்காத் தான் பைசாக் கொடுப்பா. எனக்கோ அவ குடுக்கிற பணத்திலே செலவு செய்யத் தெரியறதில்லை. அதுவும் தவிர, நமக்கு அந்தக் காலத்திலே கமிஷன் அடிச்சுச் செலவு செய்யறபோது இருந்த மகிழ்ச்சி சம்பாதித்துச் செலவு செய்யறதிலே இருக்க வில்லை. பார்த்தேன், பழைய வழிக்கே திரும்பிவிட்டேன். மனைவியிடமே கமிஷன் அடிக்கிறேன். அதிலே எனக்கு ஒரு தனி மகிழ்ச்சி. என் மனைவிக்கு இது ஓரளவு தெரிஞ்சு ஏதாவது கோபித்துக் கொள்வாள். நான் ஏதாவது சொல்லி அவளை சமாதானப்படுத்துவேன்..."

> "நம் நாட்டின் சரித்திரமே, அப்பொழுது தோன்றுகின்ற பெரியவர்களையோ புரட்சி வாதிகளையோ கொள்கை, நியதி என்ற சிறைக்குள் தள்ளி, ஸ்தாபனம் என்ற குறுக்குச் சுவரெழுப்பி, அவர்கள் எதற்காக எதிர்க் குரல் எழுப்பினார்களோ, அந்தக் குரலை எல்லோரும் மறந்து போகச் செய்வதுதானே!"
>
> "தந்திர பூமி"
>
> —இந்திரா பார்த்தசாரதி.

"கமிஷன் அடித்த பணத்தை என்ன செய்வாய் ?"

"ஆபீஸில் ஒரு சேமிப்பு ஸொஸைட்டி இருக்கு. அதிலே கொஞ்சம் கட்டிவரேன். பாக்கி சாக்கியெல்லாம் நண்பர்களுக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்து செலவிட்டுவிடுவேன். என் மனைவிக்கு ஒரு கொள்கை. தானும் ஒருவருக்கும் கொடுக்கக் கூடாது. பிறரிடமிருந்தும் ஒன்றும் வாங்கக்கூடாது. இது இரண்டும் நமக்குப் பிடிக்காத கொள்கை. நீ எப்படிடா ?"

"என் மனைவி ஒரு ஊதாரி. அதனாலே சிக்கன வேலை என்னைச் சேர்ந்தது. உன்நிலை எனக்கு இல்லை."

நண்பர்கள் வீடு திரும்பியபோது பெண்கள் பேசிக்கொண் டிருந்தார்கள்.

"ஏன் சீக்கிரம் வந்து விட்டீர்கள்?" என்று சாந்தா கேட்டாள்.

"உங்களை விட்டுவிட்டு சினிமாவுக்குப் போக சத்யத்துக்கு இஷ்டமில்லை. அதனால் கொஞ்ச நேரம் பேசிவிட்டு வந்து விட்டோம். கௌரி போகலாமா?"

"காலையில் போகலாமே!" என்று சாந்தா சொன்னாள்.

"இன்னொரு நாள் வருகிறோம்," என்று இருவரும் பிடிவாதமாகக் கிளம்பிவிட்டார்கள்.

அவர்கள் போனவுடன், சாந்தா சத்யத்திடம் வந்தாள். அவள் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை அவன் புரிந்து கொண்டான். அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"சாந்தா, வாழ்க்கையில் ஒரு ரகஸ்யம் தேவை. அது ஒரு தனி மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால், அது கெடுதலாய் இருக்கக்கூடாது."

"புரிகிறது...நீங்கள் எழுபது ரூபாய்ப் புடைவையை நூறு ரூபாய் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள். நீங்கள் சம்பாதிக்கும் பணம்தானே! அதிலேயே கமிஷன் அடிப்பதில் உங்களுக்கு ஒரு ஆனந்தம் இருந்தால் அதை நான் ஏன் கண்டு கொள்ளவேண்டும்?"

அப்புறம் அவளை அவன் பேசவிடவில்லை.





From experience comes faith...

Watch a young boy comparing and selecting book after book.

They look much alike to him now. When he is older, through experience, he will have judgment. He will know books he can live by. The rest can gather dust on the shelf.

Life is like that. Out of each new experience, a man gathers wisdom. He learns to hold fast to things of proven worth.

By comparison, man also learns the value of things unseen, things in which he finally puts his faith.

The priceless ingredient of every product is the honor and integrity of its maker

SQUIBB® *A Century of Experience Builds Faith*

® represents the Registered Trademark of E. R. Squibb & Sons, Inc. of which Karamchand Premchand Private Ltd. are the Licensed Users.

SARABHAI CHEMICALS BARODA
Karamchand Premchand Private Limited
MANUFACTURERS OF SQUIBB MEDICINALS IN INDIA

The Kathakali Dancer and Indian Airlines

Flying Kathakali dancers ! In one town today and then flying to another 1000 miles away to present a performance tomorrow. Just one of the many important people to whom flying is vital. And we try to help with our vast network and convenient schedules. Bringing every interesting nook and corner of India within easy reach.



Indian Airlines

IA-626A/71-ACIL I

[redacted]

"நான் ஒரு மூடன்"

[சு. சமுத்திரம்]

1. அப்பல்லோ சந்திரனுள் நுழைந்த காலம்
அடியார்கள் கோவிலுக்குள் நுழைய லாமோ?
இப்போதோ அணுகுண்டே சிவனே யாகும்;
இச்சமயம் சிவனென்று வணங்க லாமோ?
கப்பலிலே ஆயுதங்கள் சுற்றுங் காலம்
கைவேலை ஆயுதமாய்க் கொண்ட வேலன்
எப்படிப்பா இறைவனாவன்? ஏறுமயில் ஏறுபவன்
ஏவுகணைக் காலத்தில் இருக்க லாமோ?

2. பகுத்தறிவுப் பேரினிலே பலரு ரைக்க
பக்தியாளர் மூடரென முடிவு கொண்டேன்;
வகுத்திட்ட வழிப்படியே நடக்கும் என்பீர்;
வடிவேலும் ஏவுகணைக் கிணையா? சொல்வீர்;
முகுந்தன்பால் மயில்கண்டு வணங்கு வோரே;
முழுவேக விமானத்திற் கிணையோ மயில்தான்?
புகுந்திட்டேன் பகுத்தறிவுள்; என்றென் உள்ளம்
புதுமைக்குப் புகலளித்து வாழ எண்ணும்.

3. வஞ்சத்தில் நெஞ்சமானோர் வரவும் வாழ்வில்
வரிக்குதிரை வேகத்தில் வறுமை சாடும்;
தஞ்சமென்று சொல்வதற்கோ ஆட்கள் இல்லை;
தளராத உடம்புக்குள் நோய்கள் பாயும்;
நெஞ்சத்தில் அமைதி இல்லை; நீண்ட நாளாய்
நினைவெல்லாம் அச்சமாகும்; முருகன் தோற்றம்
அஞ்சலென உரைப்பதுவாய் மனமும் சொல்லும்;
அறிவுக்குப் புறம்பென்று மூளை சொல்லும்.

4. மருத்துவரின் மருந்தெல்லாம் நஞ்சாய் மாறும்;
மருத்துவரே எமனைப்போல் காட்சி யாவார்;
ஒருமருந்தை முறிப்பதற்கு மறும ருந்தாய்
ஒருநோயின் மருந்துபல நோயின் வித்தாம்;
எருதின்னும் பயிரானேன்; எழுத வந்த
எழுத்தாணி கிழித்திட்ட ஓலை யானேன்;
கருதின்னும் தாயைப்போல் அறிவு தின்ன
கட்டலாழ் உணர்வுகளும் என்னை உண்ணும்.

5. மருந்துக்கு மருந்தான மாம ருந்து
மருத்துவர்க்கும் புரியாத அரும ருந்து
திருடர்க்கும் பொருள்கொடுக்கும் ஞான வேலன்
தீயோர்க்கும் அருள்காட்டும் சாமி நாதன்
கருதியதை முடித்துவைக்கும் பரம சித்தன்
கண்டறிந்தால் தொல்லையில்லை யென்றே எண்ணி
அருமருந்து முருகனைநான் வணங்க எண்ணிய
அவனிருக்க முடியுமோயென் றறிவு சொல்லும்.

6. அறிவிற்கு விடையளித்து முருகன் கோட்டம்
அணுகியேநான் ஆதரவைத் தேடி நின்றேன்;
பொறிகளெல்லாம் எனக்கடிமை ஆன தையா;
போனதெல்லாம் வட்டியுடன் வந்த தையா;
தறிகெட்ட உள்ளத்தில் அமைதி கண்டேன்;
தளர்ந்ததோர் மேனியிலே வைரம் பார்த்தேன்;
குறிகண்டேன்; விட்டகலேன்; முருக னென்ற
குணக்குன்றின் அருகினிலே அமர்ந்து விட்டேன்.

7. பாட்டொன்றைக் கேட்பதற்காய் ரேடி யோவின்
பக்கமொன்றைத் திருப்புகிறீர்; பாடல் கேட்டீர்;
கேட்டோரே; வானொலியின் நுட்ப மெல்லாம்
கேட்டறிந்தோ கேட்கின்றீர்? இல்லை; பக்தி
மீட்டரினுல் முருகனென்றும் ரேடி யோவில்
மீளாத பெருஞானம் கேட்டேன்; முருக
ஆட்டத்தின் நுட்பமேதும் அறியேன்; அதுவும்
ஆனந்த பேருணவை மறைக்க வில்லை.

8. அறிவுக்கே அறிவில்லை; அதனின் நோக்கம்
அகமகிழ்வே என்றிட்டால் அதனை ஈயும்
குறியான பக்திக்கு மாயை போட்டால்;
குறியாகேன்; குமரனிடம் தஞ்ச மானேன்;
நெறியாக முருகனுக்கு மாலை போட்டு
நித்தமுமே வணங்கிடுவேன்; இதனைக் கண்டே
அறியாதார் மூடனென்பார்; கவலை யில்லை;
அறிஞர்காள்; பேசுங்கள்: நானும் மூடனே.



M/s. BATHMA FINANCIERS,
(Managing Partner N. K. Ramasamy)
Financiers to

BATHMA INDUSTRIES & FINANCE (P) LIMITED,

Head Office : **78, Chinna Eragali South Street,**
Koranad, Mayuram.

Invites DEPOSITS FROM THE PUBLIC AT ATTRACTIVE RATES

Phone : 375 Estd. 1963 Tel : PADHMAM

BATHMA INDUSTRIES & FINANCE (P) LTD.,
Koranad, MAYURAM.

A BEST CHIT FUND ORGANISATION

Doing Chit Fund Business Serving to 6000 Members through its 16 branches.

K. M. THIRUGNANAM, ASSISTANT INCHARGE OFFICER.

K. R. SAMPATHKUMAR, INCHARGE OFFICER.

Grams : PAPERBAGS
Telex ; 040—205

Phones : 4384-86
2156

Lakshmi Paper Industries

38, Town Railway Station Road,

SALEM-1.

Packaging specialists, Specialists in Roll to Roll Printing on Cellophane, Polythene Paperbags, Foil, Waxed Paper and Manufacturers of Fine packaging Materials.

Merchandise Requires Careful Selection of Paper Packaging Materials to keep it Attractive and Preserve it in Good condition.

JustLet usAssist you
to Solve your Packaging Problems

[illegible]

"குழப்பம்"

[சூரி. கிருஷ்ணமூர்த்தி]

(பத்து நிமிடங்களில் நடித்தற்குரிய ஒரே காட்சியமைப் புடைய சிறு நாடகம். இதன் நோக்கம் நகைச்சுவை விளைவிப்பதே.)

(இடம்பெறுபவர்கள்: பஞ்சாபகேசன், அவர் மனைவி கல்யாணி, மகன் குமரன், நண்பர் நாகசாமி, ஆசிரியர் பாலய்யா ஆகியோர்.)

(பஞ்சாபகேசனின் வீடு - அவர் நாற்காலியில் அமர்ந்து செய்தித்தாள் படித்துக்கொண்டிருக்கிறார். - கல்யாணி தேநீர் கொண்டு வருகிறாள்.)

பஞ் : (தாளைப்புரட்டிப்பார்த்து) "அறுபது வயதுடைய இளம் வாலிபருக்கு இருபது வயதில் பெண் தேவை".

கல் : (வந்துகொண்டே) பத்திரிகையிலே என்ன படிக்கிறீங்க ....ஓ கோ...மணமகள் தேவையா.. குட்டிச்சுவருக் காருப்பலே வயசாச்சு....இன்னும் இதைப்போய்ப் படிச்சுக்கிட்டிருக்கீங்களே ... வெட்கமாயில்லே ...? சரிசரி...முதல்லே இதைக் குடியுங்க...எனக்கு ஏகப் பட்ட வேலே கிடக்குது....

பஞ் : இதிலே வெட்கப்படறதுக்கு என்ன இருக்கு...நெருப் புன்னு நாக்கு வெந்துபோவுமா... மணமகள் தேவை யைப் படிச்சா கல்யாணம் பண்ணிக்கணும்ணு ஏதா வது கட்டாயமா...உம் .. (தேநீரைப் பருகி முகம் சுளித்து) இது என்ன காப்பியிலே உப்புகரிக்குது.... ஞாபகமறதியா சாம்பார்லே போடற உப்பைக் காப்பியிலே போட்டுட்டியா...

கல் : யாருக்கு ஞாபகமறதின்னேன் ... உங்களுக்குத்தான் ஞாபக மறதி...அது காப்பியில்லே டீ.... காப்பிக் கொட்டை நேத்தியோட காலி...,

பஞ் : உன்கையாலே காப்பி குடிச்சுக்குடிச்சு, எனக்கு இரண்டுக்கும் வித்தியாசமே தெரியமாட்டேங்குது...

கல் : ரொம்ப அழகாத்தான் பேசறீங்க...போதும்....சீக்கிரம் குடியுங்க...அடுப்பிலே பாலே வச்சிட்டு வந்திருக்கேன்...

பஞ் : ஆங்...மறந்தே போச்சே....பள்ளிக்கூடத்திலேருந்து நம்ம பொண்ணு மீனுவோட 'கல்வி முன்னேற்ற அறிக்கை' வந்திருக்கே....பார்த்தியா...

கல் : கல்விமுன்னேற்ற அறிக்கையா...என்னங்க அது ?

விருப்பும் வெறுப்பும்

"நான் மிகவும் விரும்புவது காந்தியடிகளின் நெறி._ காரணம் : மக்கள் தொண்டில் தெய்வ ஒளி கொண்டதனுல் நான் வெறுப்பது : இக்காலத்தைத் தேர்தல் முறை : காரணம் : நமது பண்பாட்டை அடியோடு அழித்து விடுவதனுல்."

டாக்டர் மு. வ.

பஞ் : அதான் பிராக்ரஸ் ரிபோர்ட்....(பையிலிருந்து எடுத்துக் காட்டி) இதைப்பாரு... நல்லாப் பாத்துப்பிட்டு அது என்னன்னு கண்டுபிடி பார்ப்போம்...

கல் : (அதை வாங்கிப்பார்த்து) என்னுங்க இது...ஏதோ சூரிய மண்டலம் மாதிரில்ல இருக்கு...சூரியனேச்சுத்தி உருண்டை உருண்டையா கிரகங்கள் சுத்தறமாதிரி இருக்குதே...

பஞ் : ஆமாம்....கிரகம்...சுத்துது...இப்ப என் தலையைச் சுத்துது....அத்தனையும் சுழி...

கல் : இந்தப் பள்ளிக்கூடம் சுத்த மோசம்னு நான் அப்பவே சொன்னேனே கேட்டீங்களா....அந்தக் காலத்திலே நான் பள்ளிக்கூடத்திலே படிக்கறபோது இந்த மாதிரி சுழியே போடமாட்டாங்க....ஒண்ணு ரெண்டாவது போட்டுக் கொடுப்பாங்க....

பஞ் : இப்பத்தான் புரியுது...

கல் : என்ன புரியுது...

பஞ் : உன்பொண்ணு உன்னையே கொண்டு பொறந்திருக்கு...

கல் : என்னைக் கொள்ளல்லேன்னேன்... உங்களைத்தான் உரிச்சு வச்சிருக்கு...

பஞ் : சரிசரி....இப்போ இதுக்கு ஒருவழி பண்ணியாகணுமே... என்ன செய்யறது...

கல் : ஏதாவது யோசிச்சு செய்யுங்களேன்....

பஞ் : அதானே பார்த்தேன்...உன்னாலே யோசிக்க முடியாதுன்னு எனக்குத் தெரியுமே...அதனாலே நானே நல்லா யோசிச்சு குழந்தைக்குத் தனியா பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு வாத்தியாரை ஏற்பாடு பண்றதுன்னு தீர்மானிச்சுட்டேன்...

கல் : அய்யய்யோ....அடுப்பிலே பால் பொங்கிடுச்சு (ஓடுகிறாள்)

பஞ் : பால் பொங்கிடிச்சா...நல்ல சகுனந்தான்...அப்போ நம்ம பாலய்யாவை ஏற்பாடு பண்ணிடவேண்டியது தான்.

கல் : (திரும்பிவந்து) யாரு...யாரை ஏற்பாடு பண்ணப் போறீங்க ?...

பஞ் : நம்ம ஜஸ்டின் ஜகன்னாதன் இருக்காருல்ல...

கல் : அவர் பாடம் வேற சொல்லித் தராரா ?

பஞ் : பேத்தாதே...அவரு வீட்டுப்பின்பக்கம் குடியிருக்காரே பாலையா... அவரைச் சொல்றேன்...

கல் : பாலையாவா ? அவரு இந்தி வாத்தியார்னு சொல்லுங்களே ...

பஞ் : இருந்தா என்ன...அவருக்கு எல்லாப்பாடமும் அத்துபடியாமே...

கல் : பின்னே என்ன....உங்களை மாதிரி கொக்குக்கு ஒண்ணே மதின்னு இருப்பாங்களா என்ன...

பஞ் : பார்த்தியா...பாலையாவை விட்டுட்டு பஞ்சுவைப்பத்தி விமரிசனம் பண்றியே...

கல் : அது நமக்கு சரிப்பட்டு வராதுங்க...அவருக்கு மாசம் நூறுரூபா கொடுக்கணுமாம்....வாரத்திலே ஒரு நாள் வந்தா முப்பது ...ரெண்டுநாள் வந்தா அம்பது ....மூணுநாள் வந்தா எண்பது.... நாலுநாள் வந்தா நூறு....அப்படின்னு அட்டவணை போட்டுவச்சிருக்காராம்...

பஞ் : பலே...அவரைப் பத்தி நல்லாத் தெரிஞ்சுவச்சிருக்கயே... சரி...அவரை விட்டுடுவோம்....இதுவிஷயமா நம்ம நாகசாமிகிட்டேயும் சொல்லியிருக்கேன்....

"உலகமும் குடும்பமும்"

"அன்று குடும்ப எல்லை விரிவுடையதாக இருந்தது; செய்யும் கடமைகள் பலவும் குடும்ப எல்லைக்குள் இருந்து செய்ய வேண்டிய கடமைகளாகவே இருந்தன. உலகமோ அன்று எல்லை காண முடியாததாக இருந்தது; எவர்க்கும் எளிதில் எட்டாததாக இருந்தது. ஆதலின் மக்கள் குடும்ப வாழ்வில் நிலைத்து நின்று உலகை எட்டிப் பார்த்து வந்தனர்.

"ஒவச் செய்தி"
டாக்டர் மு. வ.

நாக : (வருகிறார்) வந்துட்டேன். நேக்கு ஆயுசு நூறு... என்னைப் பத்தித்தான் பேச்சு அடிபடறுப்பலே இருக்கு...

கல் : வாங்க ... வாங்க ... உங்களைப்பத்தித்தான் இவர் சொல்லிக்கிட்டிருந்தாரு...

பஞ் : கல்யாணி, இவருக்குச் சாப்பிட ஏதாவது கொண்டா...

கல் : கொஞ்சம் இருங்க...இதோ கல்லைப்போடறேன்...

நாக : அய்யய்யோ...கல்லா...நான் வரேன் (கிளம்புகிறார்)

பஞ் : அட உட்காருங்க...தோசைக்குக் கல்லைப் போட றேங்கரு...உங்க தலையிலே இல்லே...

நாக : அதானே பார்த்தேன்...(உட்காருகிருர்)

பஞ் : நான் சொன்னதைப்பத்தி ஏதாவது கவனிச்சீங்களா ?

நாக : எது ? ...ஓ....அதுவா...கவனிச்சுட்டேனே ....அதாவது அந்த வாத்தியாரம்மா விஷயந்தானே நல்ல அழகு... அற்புதமான குணம்...

பஞ் : சரி....அதைப்பத்தி என்ன இப்போ ?...

நாக : வயசு முப்பத்துமூணு....ஆனு இருபத்திஒண்ணுதான் மதிக்கலாம்....அவ்வளவு லட்சணம்...நல்ல நிறம்...

பஞ் : இருந்துட்டுப் போகட்டும்........விஷயத்துக்கு வாங்க....

நாக : ஆனந்தின்னு பேரு...நல்ல அடக்கம்....அவ அப்பாவை நேக்கு நன்னுத் தெரியும்...நல்ல பசையுள்ள இடம்...

பஞ் : அவங்க அப்பாவைப்பத்தி இப்போ யாருக்கய்யா கவலே ?...

நாக : என்ன அப்படிக் கேட்டுப்பிட்டேள்....ஆனந்தி டீச்சர்னு பள்ளிக்கூடமே அலறுமே...பாட்டு நாட்டியம் எல்லாம் நன்னு வரும்...

பஞ் : பாட்டும் கூத்தும் யாருய்யா கேட்டா ?

நாக : பின்னே என்ன வேணும் ?...ஓகோ...வரதட்சணையைப் பத்திக் கேட்கறேளா...அது ...

பஞ் : வரதட்சணையா? என்னங்க இது...?...வந்து....ஓ...நீங்க சம்பளத்தைப்பத்திச் சொல்றீங்களா ?....

நாக : சம்பளமா ? என்ன உளர்றீர் ?

பஞ் : யார் உளர்ரு ? நீர்னு வரதட்சணைன்னு பேத்தறீர்...

நாக : கல்யாணம்னு பின்னே வரதட்சணை வேண்டாமாய்யா...

பஞ் : கல்யாணமா ? யாருக்கய்யா கல்யாணம் ? உங்களுக்கு மூளைகீளை பிசகிப்போச்சா...

நாக: (கோபத்துடன்) யாருக்கய்யா மூளை சரியில்லை... நீர் தானே அய்யா நேத்திக்கி எங்க வீட்டிலே வந்து பத்திரிகையிலே மணமகள் தேவைன்னு படிச்சுண்டிருந்தீர்.... நல்ல டீச்சரா இருந்தாச் சொல்லும்னு சொன்னீரே ...

பஞ்: நல்ல ஆளுய்யா நீங்க... நான் என் பொண்ணுக்குப் பாடம் சொல்லித்தரதுக்காகல்ல கேட்டேன்... எனக்கு இன்னொரு கல்யாணமா?... கல்யாணி காதிலே பட்டதோ அவ்வளவுதான் உங்க தலையிலே கல்லையே போட்டுடுவாள்... (கல்யாணி தோசையுடன் வந்து இருவருக்கும் கொடுக்கிருள் - போகிருள்)

நாக: பொண்ணுக்குப் பாடம் சொல்லித்தரணு.... அவ்வளவு தானே... நீர் கவலையை விடும்.... இன்னிக்கே.... இப்பவே ஆரம்பிச்சுடறேன்....

பஞ்: யாரு? நீங்களா?.... நீங்க ஊதுபத்தி, அப்பளம்.... நல்லெண்ணெய் வியாபாரம்னு பண்றீங்க...

நாக: இருந்தா என்ன? வரன் பார்க்கறது, பாடம் சொல்லிக் கொடுக்கறது இதெல்லாம் நமக்குத் தண்ணீர் பட்ட பாடு....

பஞ்: அப்ப சரி... எதுக்கும் அவகிட்டே ஒரு வார்த்தை கேட்டுடறேன்...

நாக: இதைப்போய்க் குழந்தைகிட்டே என்ன கேள்வி... நீர் சரின்னு சொல்லுமேன்....

பஞ்: அட.... குழந்தைகிட்டே இல்லேய்யா... கல்யாணிகிட்டே ..கல்யாணி... கல்யாணி...

கல்: (வந்து) எதுக்குக் கூப்பிட்டீங்க.... நீங்க பேசிக்கிட்டிருந்ததெல்லாம் நான்கேட்டேன்... நாகசாமி, நீங்க இப்போ வீட்டுக்குப் போயிட்டுவாங்க.... நாங்க அப்பறமா சொல்லியனுப்பறேம்... (போகிருள்)

நாக: (எழுந்து) அப்போ... பஞ்சு... நான்வரட்டுமா... மாமி ரொம்ப கோபமாயிருக்காப்போல இருக்கு.... அப்பறம் வரேன்....

THE BENGAL SUITING LOOK
makes the going great
BNT
TERENE
BENGAL SUITING
GENT'S SUITING, SHIRTINGS, LADIES SLACKS & SKIRTS
The Bengal National Textile Mills Limited
k Mills Division 14/5, Mathura Road, Faridabad (Haryana)
lephone : 82-217 Cable : SYNTEX Telex : New Delhi 689
Head Office : 87, Dharamtolla Street, Calcutta-
Branches : Bombay, Delhi, Amritsar & Ludhian
manufactured according to foreign standards and technical know-how.

Amazing how millions of people have heard of us
when we don't make a sound

SKF

THE SKF BALL BEARING CO. PVT. LTD.
ASSOCIATED BEARING COMPANY LTD.

OBM

(எதிரில் பாலையா வருகிறார்)

நாக: ஓ....பாலையாவா ....வாரும்.....வாரும்.....சௌக்கியமா? உங்களைப் பார்க்கறது அத்தி பூத்தாப்போல இருக்கு ...எங்கே ரொம்ப நாளா தலையே காணுமே.... ஊரிலே இல்லையோ...

பாலை: என்ன நான் வரபோது நீங்க கிளம்பிட்டீங்க...

நாக: இல்லே...நான் கிளம்பறபோது நீர் வரீர்....நீர் வந்தப்புறம் இங்கே எனக்கு என்ன வேலை? (போகிறார்)

> ''அகமும் - புறமும்''
>
> ஒருவர் உடல் அமைப்பு, முகத்தோற்றம், கண்கள் முதலியவற்றிலிருந்து அவருடைய குண நலங்களை முடிவு செய்யலாமெனினும், சில நேரங்களில் இம்முறை பெரிதும் பிழைப்பட்டுவிடுகிறது. மிகக் கடுமையான புறத்தோற்றம் உடையவர் மிக இனிய பண்புடையவராய் இருத்தலும்; மிகவும் விரும்பத்தக்க புறத்தோற்றம் உடையவர் மிகக் கேடான பண்பாடுடையவராய் இருத்தலும் உண்டு. எந்தப் பொது நியதிக்கும் புற நடைகள் உண்டு என்பதை மறத்தலாகாது. இலக்கியத்திலும் இவ்விதப் படைப்புக்களைக் கவிஞன் படைக்கின்றான். அழகே திரண்ட உருவாய் அமைந்த கைகேயி தீயவள், ஆனால்......மீன் நாற்றம் மிகுந்த குகன் "தாயினும் நல்லான்"

பஞ்: வாங்க... வாங்க ...வணக்கம்... உட்காருங்க... என்ன விஷயம்....

பாலை: ஒண்ணுமில்லே...உங்க பையனுக்கு ஏதோ பாடம் சொல்லித்தரணும்னு கேள்விப்பட்டேன்...அதான் விசாரிச்சுட்டுப் போகலாமேன்னு வந்தேன்....... பையன் இப்போ என்ன பண்ணிக்கிட்டிருக்கான்?...

பஞ்: ஊரைச் சுத்திக்கிட்டு இருக்கான்...அவன் என்ன படிக்கிறான்னு எனக்கு ஒண்ணும் தெரியாது... எல்லாம்

பகவானுக்குத்தான் வெளிச்சம்......அவன் கிருதாவும், மீசையும், பரட்டைத் தலையும், யானைக்கால் பேண்ட்டும், தாடியும்....

பாலு : இந்தக் காலத்துப் பையன்களே இப்படித்தான்... மயிர் தான் இவங்க கையிலே அகப்பட்டுக்கொண்டு முழிக்கறது...நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க.... நான் எல்லாம் சரி பண்ணிப்பிடறேன்...

(மகன் குமரன் வருகிறான்)

கும : ஹல்லோ டாடி....என்னோட தாடியைப்பத்திப் பேசிக்கிட்டு இருக்கீங்களா... எல்லாரும் எங்களைப்பத்திப் பேசணுங்கறதுக்காகத்தானே நாங்க இந்த மாதிரி வைச்சுக்கிறோம் ஹல்லோ சார்...எப்படி இருக்கீங்க...உங்க இந்தி எப்படி இருக்கு....

பாலு : ஏண்டா தம்பி...இந்தக் குரங்கு வேஷத்தையெல்லாம் கலைச்சுட்டு நல்லாப் படிச்சு முன்னுக்கு வரக்கூடாதா ?...

கும : நான் நல்லாப் படிக்கலைன்னு யார் சார் சொன்னது ?.... எங்க அப்பாவா ?....அவர் ஒரு பைத்தியம் சார்... வரவங்க போறவங்க கிட்டேயெல்லாம் இந்த மாதிரி தான் உளறிக்கிட்டிருப்பார்...அவர் கிடக்கறார்.... நீங்க ஹரே ராமா ஹரே கிருஷ்ணா பார்த்தீங்களா ? நல்ல படம்... இல்லே...

பஞ் : நானுடா பைத்தியம்...உன்னைப் பெத்த வயத்திலே பெரண்டையைத்தான் வச்சுக் கட்டிக்கணும்...

கும : நீங்க கவலைப்படாதீங்க அப்பா ....அம்மாதானே அதைச் செய்யணும்...நீங்க ஏன் அலட்டிக்கிறீங்க...சார் யாருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப்போறீங்க...

பாலு : ஏண்டா இந்த மாதிரியெல்லாம் நடந்துக்கறே...நீயெல்லாம் நல்லாப் படிச்சு நிறைய மார்க் வாங்க வேண்டாமா ?...

கும : யார்சார் வாங்கமாட்டேங்கறு... வாத்தியாருங்கதான் போடமாட்டேங்கறுங்க... இப்போ உங்களையே எடுத்துக்குங்களேன்...நீங்க போடறீங்களா ? உங்க

உலகமே தனி...சும்மா படிப்பு மார்க்குன்னு சொல்லிக்கிட்டிருப்பீங்க.. எங்க உலகம் சுதந்திர உலகம்... சுதந்திரமான சமுகம்...கட்டுப்பாடு கிடையாது... அர்த்தமில்லாத அகம்பாவமெல்லாம் ஒண்ணும் கிடையாது...என்ன சார் படிப்பு...கல்வியைப்பத்தி உங்களுக்குத் தெரியுமா சார்...உங்க அரசாங்கத்தோட கல்விக்கொள்கை என்ன? அதுதான் நிரந்தரம் இல்லியே... பரீட்சை... மார்க்... வேறே என்னசார் இருக்கு அதிலே...அது கிடக்கட்டும் விடுங்க.. இதெல்லாம் உங்களுக்கு ஒண்ணும் புரியாது...நான் வரேன்... (உள்ளே போகிருன்)

"அன்று உம்மை மதியாமல்
இருந்தேனே பாவிநான்!
இன்று எண்ணி ஏங்குகிறேன்,
இத்தனைநாள் ஆன பின்னர்
ஓர் அருமைப் பிள்ளை என்று,
உலகமே நான் என்று
சீருடனே கொண்டாடிச்
சீராட்டிப் பேணுகையில்
அன்புக்கு அன்பு செய்யத்
தெரியாமல் இருந்தேனே
நன்றி இல்லாக் கல்லன் என்னை
மன்னிப்பீர் எந்தாயே."

—"சுந்தர"

பஞ் : பார்த்தீங்களா பையனேட லட்சணத்தை...

பாலு : லட்சணமா அது...அவலட்சணம்ணு ..நான் கிளம்பறேன்...

பஞ் : என்ன சார் அதுக்குள்ளே கிளம்பிட்டீங்க...பாடம் சொல்லித்தர விஷயமா ஒண்ணும் பேசல்லே...

பாலு : பாடமுமாச்சு... ஒண்ணுமாச்சு... உம்ம கரடிப்பையனுக்குச் சொல்லித்தர நம்மால் ஆகாது...அவன்

திரும்பி வரதுக்குள்ளே நான் இங்கேயிருந்து நழுவிடறேன்... (போகிருர்) (அப்போது குமரன் காப்பியுடன்வர, பாலையா ஓடுகிருர்)

கும: என்ன அப்பா...ஏன் இப்படி காப்பியைக் கண்டவுடனே ஓடருர்...நம்ம வீட்டுக் காப்பியைப்பத்தி அவருக்குத் தெரிஞ்சுபோச்சா...

பஞ்: அவர் காப்பியைப் பார்த்துட்டு ஓடலேடா...ஹிப்பியைப் பார்த்துட்டு ஓடருர்...எல்லாம் என் கிரகச்சாரம்...

கல்: (வந்து கொண்டே) கிரகச் சாரந்தான்...பொண்ணுக்குப் பாடம் சொல்லித்தரதைப்பத்திப் பேசாம, அவர் கிட்டே பையனைப்பத்திப் பேசினீங்களே...

பஞ்: எனக்கு மூளையே குழம்பிப் போச்சு...

கும: அம்மா, அப்பாவை நல்ல மனேதத்துவ நிபுணர்கிட்டே அழைச்சுக்கிட்டுப்போ... அப்பத்தான் குழப்பம் தீரும்...

பஞ்: ஏய்...இது எப்பவும் தீராத குழப்பம்டா...

(திரை)



Best For
South Indian Dishes

MADRAS HOTEL

MADRAS HOTEL AND RESTAURANT
23/90, Connaught Circus,
New Delhi–1.
Phone : 40595

விரைவாக – வேகமாக –
ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்
சேவை செய்கிறது

விரைவுக்கு
அனுமன்

கம்பர் சொன்னார் :
"எண்ணுக்கும் அளவிலாத அறிவினோர் இருந்து நோக்கும்
கண்ணுக்கும் கருதும் தெய்வ மனத்துக்கும் கடியன் ஆனான்."
எண்ணத்தைவிட அளவற்ற ஞானச் செல்வர்களின் யோகக் காட்சியைவிட தேவர்களின் மனத்தைவிட வேகமாகப் பாய்ந்து சென்றான் அனுமன்.

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்
226, டாக்டர் நஞ்சப்பா ரோடு, த. பெ. எண். 1414
கோயம்புத்தூர்-18.

VISITING DELHI
THEN
Remember us for
Excellent Boarding and Lodging in
South Indian Style

SOUTH INDIA BOARDING HOUSE

and
For Clean, Wholesale Delicious
South and North Indian Dishes

MODERN COFFEE HOUSE
OPPOSITE SUPER BAZAAR
M/40, Connaught Circus, New Delhi–1.
Phone : 48188 **Grams : SIBHOUSE**

INDEX TO ADVERTISERS

சென்டெக்ஸ், சென்னிமலை,	148
சௌத் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிமிடெட், திருச்சிராப்பள்ளி-17.	37
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், சென்னை-2. (அரசு சிமெண்ட்)	99
A B T Parcel Service	195
Alembic Chemical Works Company Ltd., Baroda-3.	56
All India Crimpers Association, Bombay-2.	38
Andhra Sugars Ltd., Andhra Pradesh	112
Aspro	160
A Well Wisher	81
Bathma Ind. & Finance Ltd., Mayuram.	182
Bengal National Textile Mills Ltd., Calcutta-1.	189
Bertrams-Scott (India) Limited, Calcutta-1.	151
Binny's Show Room, New Delhi-1.	140
Central News Agency, New Delhi-1.	130
Chloride India Limited, New Delhi-55.	84
Colour-Chem Limited, Bombay-20.	111
Crimplon Private Limited, Bombay-1.	102
Dinamani, Madras & Madurai	84
Directorate of Advertising & Visual Publicity (DAVP)	122
Easun Engineering Co., Madras-1.	1
Endee Woollen & Silk Mills Private Limited, Haryana	40
Enfield India Limited, Madras-19.	39
Esso Eastern Inc., New Delhi.	46
Garware Nylons Limited, Bombay-1.	23
Government of Tamil Nadu	63
Hindustan Lever	166
Hoechst Pharmaceuticals, Limited.	123
Hyderabad Asbestos Cement Products Ltd.,	6
I C I Group of Companies	82
Indian Airlines	178
Indian Bank, Madras-1.	112

Indian Overseas Bank, Delhi. 65
Indo-Swiss Synthetic Gem Manufacturing
Company Ltd., Mettupalayam. 128
Kailash Silk Mills, Bombay. 56
Kanoria Chemical & Industries Limited, Calcutta-1. 55
Khanna Rayon Industries, Bombay-2. 128
Lakshmi Paper Industries, Salem-1. 182
LUCAS - T V S Limited, Madras-50. 152
Madras Hotel, New Delhi-1. 195
Mafatlal Group 124
Maschmeijer Aromatics 4
Mehta Offset Works, Delhi-7. 82
Nanco Rubber & Plastics Ltd., Coimbatore-18. 159
National Seeds Corporation Ltd., New Delhi. 130
Nirlon Synthetic Fibres & Chemicals Ltd., Bombay-1. 66
ORWO Films 3
Parle Bottling Co. PVT. Ltd., Bombay-69. 129
Remy Perfumes Pvt. Ltd., Madras-1. 24
Sarabhai Chemicals 177
Seshasayee Papers And Boards Limited, Erode-7. 127
Shalimar Industries Private Ltd., Calcutta-13. 40
Silver Prince Stainless Steel Blade. 83
S. K. F., Poona 190
South India Boarding House, New Delhi-1. 195
Syndicate Bank, Mysore State 140
Tata Steel 101
Themis Pharmaceuticals, Bombay-29. 100
Tube Investments of India Ltd., Madras-53. 121
Tinopal 2
TT. (Private) Limited, Bangalore-16. 64
Warner-Hindustan Limited, Hyderabad-39. 24
XL Equipments Pvt., Ltd., Secunderabad-3. 64

DELHI TAMIL SANGAM

OUR PUBLICATIONS

1.	KAMBA RAMAYANAM - A STUDY by V. V. S. Aiyar	Rs. 7/-
2.	TAMIL – THE LANGUAGE & ITS LITERATURE	Re. 1/-
*3.	KAMBAN'S SITA by Valmiki	Re. 1/-
*4.	PATHWAY TO GOD THROUGH TAMIL LITERATURE (Through the Thiruvaachakam) by G. Vanmikanathan	Rs. 7/-
5.	MAXIMS OF TIRUVALLUVAR	Rs. 2/-
*6.	DELHI TAMIL SANGAM SILVER JUBILEE NUMBER (Tamil only)	Rs. 5/-
*7.	ENGLISH SUPPLEMENT TO SILVER JUBILEE NUMBER	Rs. 2/-
*8.	HINDI SUPPLEMENT TO SILVER JUBILEE NUMBER	Rs. 2/-
*9.	SILVER JUBILEE NUMBER - TAMIL, ENGLISH, & HINDI (BOUND)	Rs.10/-

Other Books available in the Sales section include:

*1.	THE TIRUKKURAL Translated into English by G. Vanmikanathan	Re. 1/-
*2.	TIRUKKURAL Translated into Hindi by M. G. Venkatakrishnan	Re. 1/-

* Marked books can be had from Delhi Tamil Sangam, Tamil Sangam Marg, Ramakrishnapuram, New Delhi-22.